# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30/= பக்கங்கள்: 56 | சுடர் 31 | கதிர் 234 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 02, ஞாயிற்றுக்கிழமை 17.07.2016



மகாராஜா பொதிகள் சேவை

DOOR TO DOOR SERVICE

ஜேர்மன் 700/= லண்டன் 600/= பிரான்ஸ் 700/=

உங்கள் வீட்டுக்கே சென்று கையளிக்கப்படும் சேவை

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024

www.parcel.lk


### யு.என்.டி.பி. நிதியில் 750 மில்லியன் டொலர் நல்லிணக்கத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17
இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் போருக்குப்பின்னரான வடக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பணியகத்தால் (யு.என்.டி.பி.) ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 ஆயிரம் மில்லியன் டொலர் நிதியில் 750 மில்லியன் டொலர் நிதி நல்லிணக்கச் செயலகத்துக்கு மாற்றப்பட்டது.

இந்த நிதியில் வடக்கு மாகாண அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது யு.என்.டி.பி. நிறுவனம், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அறிவுறுத்தல் கடிதம் ஒன்றை அனுப்பியது. அதற்கு முதலமைச்சரினால் யு.என்.டி.பி. அமைப்புக்கு பதில் அனுப் பக்.53

அடிதடியில் மாணவர்கள்...




## காங்கேசனில் குடியேற்றப்படும் மக்களுக்கு வீடுகள் கட்டும் பணிகளில் 1,400 படையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் காணியற்றவர்களை காங்கேசன்துறையில் குடியேற்றும் திட்டம் விரைவுபடுத்தப்பட்டது. 1,400 இராணுவத்தினர் இந்தப் பணிக்காகக் களமிறக்கப்பட்டுள்ளனர். ஒரு வீட்டிற்கு 14 கட்டுமாணப் பணியாளர்கள் என்ற ரீதியில் இராணுவத்தினர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் பணிகள் மிக வேகமாக நடைபெறுகின்றன. எனினும் இராணுவத்தினரின் வேகத்திற்கு ஏற்ற வகையில் மூலப் பொருள்களை ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்வதில் யாழ். மாவட்டச் செயலகம் இடர்களை எதிர்நோக்குவதாகத் தெரிகின்றது.

வலி. வடக்கில் பக்.52

# யாழ். பல்கலையை ஒரு வாரத்துக்கு மூடுவது குறித்து பிரதமர் ஆராய்வு

***சிங்கள - தமிழ் மாணவர்கள் அடிபிடியின் எதிரொலி***

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் ஒரு வார காலத்துக்கு மூடி வைப்பது குறித்து அரசு தீவிரமாக ஆராய்கிறது. விஞ்ஞான பீடத்தில் நேற்று சிங்கள - தமிழ் மாணவர்கள் இடையே ஏற்பட்ட அடிபிடியைத் தொடர்ந்து இந்த முடிவு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் நேற்று ஆராய்ந்தார்.

நிலமை தீவிரமாகி இரு இன மாணவர்களுக்கும் இடையிலான மோதலாகப் பிரச்சினை வளராமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் இந்த முடிவை எடுப்பது குறித்து பிரதமர் நேற்றிரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு பக்.53

### பிள்ளைகள்தான் எமக்கு வேண்டும்

***காணாமற்போனோரின் உறவுகள் வலியுறுத்து***

வாழ்வாதார உதவிகள் எவையும் எமக்குத் தேவையில்லை. அதனை நாம் ஏற்கப் போவதில்லை. எமக்கு எமது பிள்ளைகளே வேண்டும். இவ்வாறு நேற்று வற்புறுத்தினர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று மதியம் சந்தித்தனர்.

மகிந்த ஆட்சியில் போன்றே நல்லாட்சியும் காணமல் ஆக்கப்பட்டோர் விவரங்களை அறிவிப்பதில் பின்னடிக்கிறது. இன்னமும் இரகசிய முகாம்களில் எமது பிள்ளைகள் உள்ளனர். வன்னியில் இடம்பெற்ற இனப் படுகொலையை மூடிமறைத்து வெளிநாடுகளுக்கு அரசு ஏமாற்று வித்தைகளைக் காட்டுகிறது என அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். (விரிவு பக்கம் 08)

## நாடு முழுவதும் சமநிலை விலையில் உணவுப் பொருள்களை விற்க திட்டம்

***தனியாரை இணையுமாறு அரசு அழைப்பு***

யாழ்ப்பாணம், ஜூலை 17
நாடு முழுவதிலும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை சமநிலை விலையில் விற்பனை செய்வதற்கு அரசும் - தனியார் துறையும் இணைந்து மொத்த வியாபார நிறுவனத்தை நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசுடன் இணைந்து வியாபாரத்தில் ஈடுபட விரும்பும் தனியார் துறையினரை எதிர்வரும் 25ஆம் திகதி பக்.52

### இராணுவப் புரட்சியை முறியடித்த துருக்கி மக்கள்

இஸ்தான்புல், ஜூலை 17
துருக்கியில் முன்னெடுக்கப்பட்ட இராணுவப் புரட்சி மக்களின் ஆதரவுடன் முறியடிக்கப்பட்டது. 265 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்து 153 பேர் வரையில் காயங்களுக்கு உள்ளாகினர்.

துருக்கி ஜனாதிபதி எர்டோகனுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவத்தின் ஒரு பிரிவு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டது. இராணுவத்தின் ஆட்சிக் கவிழ்ப்புக்குத் துணை போகாத ஏனைய பிரிவுகள் மற்றும் பொலிஸார் இணைந்து புரட்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்று நள்ளிரவு என்றும் பாராமல் பொது மக்கள் பல லட்சம் பேர் வீதிக்கு இறங்கினர். தேசியக் கொடிகளை ஏந்தியவாறு இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் குதித்தனர். சில மணி நேரங்களில், இராணுவப் புரட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இராணுவ புரட்சிக்கு முயற்சித்த 3,000 படையினர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (விரிவு பக்கம் 50)




### வடக்கு தடகளப் போட்டிகளில் நேற்று மட்டும் 10 சாதனைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண பாடசாலை மட்ட தடகளப் போட்டிகளில் நேற்று மட்டும் 10 புதிய சாதனைகள் படைக்கப்பட்டன.

நேற்றுவரை இடம்பெற்ற தடகளப் போட்டி முடிவுகளில் மன்னார் கல்வி வலயம் 369 புள்ளிகளுடன் முதலாம் இடத்திலும் யாழ்ப்பாண கல்வி வலயம் 350 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன. (விரிவு பக்கம் 54)

## கூட்டாட்சியே தீர்வு என வலியுறுத்தினர் தமிழர்

**புதிய அரசமைப்புக்கான கருத்தறியும் குழுவின் உறுப்பினர்கள் தெரிவிப்பு;**
**தலைவரின் கூற்றுக்கும் மறுப்பு**

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு - கிழக்கு இணைப்புடனான கூட்டாட்சி முறைமையையேதமிழ்மக்கள்வலியுறுத்தினர். தமிழ் மக்கள் அவ்வாறு கோரவில்லை என்று புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேய நாயக்க தெரிவித்தமை பிழையானது.

இவ்வாறு தெரிவித்தனர் மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினர்களான சட்ட விரிவுரையாளர் செல்வக்குமாரன் மற்றும் வடக்கு மாகாண பக்.52

## நிர்வாகத்தில் அரசியல் தலையீடு நல்லாட்சி அரசிலும் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 17
கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் நிர்வாக விடயங்களில் காணப்பட்ட தேவையற்ற அரசியல் தலையீடு, நல்லாட்சி அரசிலும் தொடர்வதாக அரச பக்.52


ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு 11% கவர்ச்சிகர வருடாந்த வட்டி

(வ.தே.வ. 11%)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
நிபந்தனைகளுக்குட்பட்டது.

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி

Fitch Rating BB+ (stable). Reg. No: PB62PQ



யாழ். பல்கலைக்கழக மோதலில் காயமடைந்த மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதையும், பல்கலைக்கழகக் கட்டடம் மோதலினால் சேத மாக்கப்பட்டிருப்பதையும், தாக்குதலைத் தொடர்ந்து சிங்கள மாணவர்கள் நேற்று இரவு பொலிஸ் பாதுகாப்புடன் விடுதிகளிலிருந்து பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்படு வதையும் படங்களில் காணலாம்.

# பொருளாதார வலய அமைவிடம் விக்கியின் முடிவே இறுதியானது

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மீண்டும் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 17
வவுனியா பொருளாதார வலயம் தொடர்பில் ஜனநாயக ரீதியாக சுமுகமான ஒரு தீர்வை எட்டு வதற்கு அனைவரும் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும். வடக்கு மாகாண முதலமைச் சரின் முடிவுதான் இறுதியானது. இவ்வாறு மீண்டும் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான இரா.சம்பந்தன்.



வவுனியா பொருளாதார வலய அமைவிடம் தொடர்பில் விவ சாய அமைப்பு பிரதிநிதிகளும், வவுனியா உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங் கப்பிரதிநிதிகளும் தனித்தனியே நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந் தனைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது விவ சாய அமைப்புக்களின் பிரதிநிதி கள் வவுனியா பொருளாதார வல யம் ஓமந்தையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். வவுனியா பொருளாதார வலயம் தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்று உள்ளூர் விளைபொருள்விற்பனையாளர் சங்கப்பிரதிநிதிகள்சம்பந்தனிடம் வலியுறுத்தினர்.

நான் ஒரு ஜனநாயகவாதி. ஆயு தங்களைக் கையாண்டதில்லை. இந்த விடயத்தில் ஜனநாயக ரீதி யாக ஒரு முடிவினை விரைந்து எட்டுவதற்கு அனைவரும் ஒத்து ழைக்க வேண்டும். இறுதி முடி வொன்றை எடுக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கூறி விட்டேன். என எதிர்க்கட்சித் தலை வர் இரா. சம்பந்தன் இரண்டு தரப்பினருக்கும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்களில் தமிழர சுக் கட்சியின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டார். (வ-5)

### நாமலை பார்வையிட வருவோரைப் பதிய தனியான புத்தகம்



கொழும்பு, ஜூலை 17
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை பார் வையிட வருபவர்களைப் பதிவு செய்வதற்கு வெலிக் கடைச் சிறைச்சாலையில் தனியான புத்தகம் வைக் கப்பட்டுள்ளதாக சிறைச் சாலை வட்டாரங்கள் தெரி வித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை பார் வையிடுவதற்கு சிறைச் சாலைக்கு தினமும் பெரு மளவிலானோர் படை யெடுக்கின்றனர். நாமல் ராஜபக்சவின் உறவினர் கள், அரசியல் பிரமுகர்கள், நண்பர்கள் என்று நூற்றுக் கணக்கானோர் சிறைச் சாலைக்கு வருகின்றனர். இவ்வாறு வருபவர்கள் எல் லோரையும் உள்ளே அனு மதிக்கமுடியாதநிலைகாணப் படுகின்றது. இதனால் சிறைச் சாலை நிர்வாகம், சிறைச் சாலை நுழைவாயிலில் பதிவுப் புத்தகத்தை வைத் துள்ளது. நாமல் ராஜபக்ச வின் பாதுகாப்பு கருதி அவ ரைப் பார்வையிட அனுமதிக் கப்படாதவர்கள், தாம் வந்து சென்றதற்கு அடையாள மாக பதிவுப் புத்தகத்தில் பெயர் விவரங்களைப் பதிவு செய்து விட்டுச் செல்ல முடி யும். இந்தப் புத்தகங்கள் தினமும் இரவு, நாமல் ராஜ பக்சவிற்கு எடுத்துச் சென்று காட்டப் படுவதாக சிறைச் சாலை வட்டாரங்கள் தெரி வித்தன. (வ-5)

### நல்லூரில் இன்று பட்டிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை17
நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மன்றத்தின் திறந்த வெளியரங்கில் பண்டி தர் பொன்.சுகந்தன் தலைமை யில் மகிழ்வான வாழ்வினை பெரிதும் தந்த காலம் பண்டைய காலமா? இன்றைய காலமா? என்ற விடயம் குறித்த சிறப்புப் பட்டிமன்றம்நடைபெறும். இன்று இரவு 7 மணிக்கு இடம் பெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமை விருந்தினராகக் கலந்து கொள் வார். (வ-7)

# வர்த்தகர்களைக் கண்காணிக்க 200 புலனாய்வாளர்கள் களத்தில்

## நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
கட்டுப்பாட்டு விலைக்கு அத்திய வசியப் பொருள்களை விற் பனை செய்யாத வர்த்தக நிலை யங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதி கார சபையின் 200 புலனாய்வு உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் நுகர் வோர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே.டி.டி.டி. அரந்தர.

நாட்டின் அனைத்து மாவட்டங் களிலும் மாவட்டச் செயலகங் களில் இணைக்கப்பட்டுள்ள நுகர் வோர் அலுவல்கள் அதிகார சபை யின் உத்தியோகத்தர்கள் பணி யில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்தவுடன் சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். கட்டுப்பாட்டு விலைக்கு விற் பனை செய்யாத வியாபாரிகளை யும் வர்த்தக நிலையங்கள் குறித்தும் 1977 என்ற தொலை பேசி இலக்கத்திற்கு எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் அறி வித்து முறைப்பாடு செய்ய முடி யும்.

சுற்றிவளைப்புக்களை மேற் கொள்ளும் உத்தியோகத்தர்கள் பயணிக்கும் வாகனங்களில் ஜி.பி.எஸ். தொழில்நுட்ப உபகர ணங்கள் பொருத்தப்பட்டிருப்ப தால், தலைமையகத்திலிருந்தே நடவடிக்கைகளை அவதானிப் பதற்கு அதிகாரசபை உரிய நட வடிக்கை எடுத்துள்ளது என்றார் நுகர்வோர் அலுவல்கள் அதி கார சபையின் பணிப்பாளர் நாயகம். (வ-5)

# புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட் டில், சரவணபவன் அறக்கட்ட ளையும், புலமைச்சுடர் ஆசிரியர் குழுவும் இணைந்து நடத்தும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சைக்கான சிறப்பு இலவச வழி காட்டல் கருத்தரங்குகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமா கின்றன.

ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரி, பண்டத் தரிப்பு பெண்கள் உயர்தரப் பாட சாலை ஆகியவற்றில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணி வரையிலும், காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை பி.ப 2.30 மணி தொடக்கம் பி.ப. 5.30 மணி வரையிலும், நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை வட் டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 வரை யிலும் கருத்தரங்கு நடைபெற வுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் இலங்கை யின் முன்னணி ஆசிரியர்கள் பங்கேற்று பரீட்சை வழிகாட்டல் கருத்துரைகளை வழங்கவுள்ள னர். (வ-5)

### பண்பாட்டு மலர்ச்சிக்கூடத்தின் தொடக்கவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 17
பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தின் தொடக்கவிழா நாளைமறுதினம் 19ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு பழம் வீதி கந்தர்மடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு பல்கலைக் கழக முதுநிலை விரிவுரை யாளர் தலைமையில் நடைபெறவுள்ளது என அரங்க செயற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (வ)

# மைத்திரி நம்பிக்கையானவர் உள்ளக விசாரணையே போதும்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜூலை 17
மகிந்த மீது நம்பிக்கையில்லை. தமிழ் மக்கள் பன்னாட்டு விசா ரணை கோருவதற்கு இதுவே காரணம். மைத்திரி மீது தமிழ் மக்கள் முழு நம்பிக்கை கொண் டிருக்கின்றனர். உள்நாட்டு விசாரணையே போதுமானது.

இவ்வாறு தெரிவித்தார் அமைச் சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனா ரத்ன.

கொழும்புத் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மகிந்த அரசு நடுநிலைமையா கச் செயற்பட்டிருக்கவில்லை. இதனால் மகிந்த அரசு மீது தமிழ் மக்கள் அதிருப்தியில் இருந் தனர். நல்லாட்சி அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத் துள்ளனர். எனவே போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டுப் பங்களிப்போ-தலையீடோதேவை யில்லை.உள்நாட்டுவிசாரணையே போதுமானது - என்றார் அமைச் சர் ராஜித. (வ-5)

# 33 மில்லியன் ரூபா அரச நிதியை மோசடி செய்தார் பசில் ராஜபக்ச

## கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, ஜூலை 17

வாழ்வின் எழுச்சித் திட்டத்துக்குரிய 33 மில்லியன் ரூபா நிதியை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முறையற்று பயன்படுத்தியதாக, முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ச நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். இவ்வாறானதொரு நிலையிலேயே குற்றப்பத்திரம் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு உட்பட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்களத்துக்குரிய 33 மில்லியன் ரூபாவை மோசடியான வகையில் செலவு செய்தார் என்று முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ச உள்ளிட்ட 4 பேருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், பசில் ராஜபக்ச நாட்டில் இருந்து வெளியேறியிருந்தார். மோசடிக் குற்றச்சாட்டு வழக்கில் வாக்குமூலம் வழங்குவதற்கு கடந்த ஆண்டு மார்ச் மாதம் நாடு திரும்பியிருந்தார். பெரியளவிலான நிதி மோசடி விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் இதன் போது கைது செய்யப்பட்டு பிணையில் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தார். பசில் ராஜபக்ச, வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.கே.ரணவக்க ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். வழக்கை நீதிபதி என்.வி.கருணாதிலக்க எடுத்துக் கொண்டார். கடுவலை நீதிவான் மன்றினால் வழங்கப்பட்ட பிணையை உறுதி செய்தார். வழக்கு விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-5)

# கொழும்பு துறைமுக நகரத் திட்டம் செப்ரெம்பரில் மீள ஆரம்பிக்கப்படும்

## சீனாவுடன் புதிய உடன்படிக்கை

கொழும்பு, ஜூலை 17

இடைநிறுத்தப்பட்டுள்ள துறைமுக நகரத் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கான மறுசீரமைக்கப்பட்ட புதிய உடன்படிக்கை செப்ரெம்பர் மாதம் சீனாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயணம் மேற்கொள்ளும் போது கைச்சாத்திடப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆட்சியின் போது, இலங்கையில் சீனா மேற்கொண்டு வந்த சில அபிவிருத்தி நடவடிக்கைகளை 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமையப் பெற்ற நல்லாட்சி அரசு இடைநிறுத்தியது. இடைநிறுத்தப்பட்ட முக்கிய அபிவிருத்திகளான தாமரைக் கோபுரம் மற்றும் கொழும்பு துறைமுக நிர்மாணம் போன்ற திட்டங்கள் மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வருடம் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வருடம் ஏப்ரல் மாதம் சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதன்போது இடைநிறுத்தப்பட்டிருந்த அனைத்து சீன அபிவிருத்தித் திட்டங்களும் புதிய ஒப்பந்தங்களுடன் மீள ஆரம்பிக்கப்படும் என்று உறுதிமொழியளித்தார்.

அதன் பின்னர் துறைமுகநகரத் திட்டத்தில் காணப்பட்ட குறைப்பாடுகளை நீக்கி புதிய ஒப்பந்தத்தை இலங்கை அரசு தயாரித்தது. இந்த உடன்படிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கைச்சாத்திடவும் அரசு தீர்மானித்துள்ளது. (வ-5)

# கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் கிடைப்பதில்லை

கொழும்பு, ஜூலை 17

15 அத்தியாவசியப் பொருள்களுக்கு விதித்த கட்டுப்பாட்டு விலை தற்பொழுது நடைமுறையில் இருக்கின்றது. எனினும் அந்த விலைகளில் நுகர்வோருக்கு பொருள்கள் கிடைப்பதில்லை என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் தெரிவித்தது.

இந்த நிலமையில் தரம் குறைவான பொருள்கள் சந்தைக்கு வரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக அந்த இயக்கம் சுட்டிக்காட்டியது.

இதற்கு முன்னரும் அரசினால் 100 நாள் வேலைத்திட்டத்தின் போது வழங்கப்பட்ட சலுகைகளும் செயற்படுத்தப்படவில்லை என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் மேலும் தெரிவித்தது. (வ)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2783 திகதி: 2016-07-16
32 37 47 48 E 08
ரூ. 15,446,800/-

NOTICE
SUSPENSION OF ACADEMIC ACTIVITIES
FACULTY OF SCIENCE
UNIVERSITY OF JAFFNA

Academic activities of the Faculty of Science have been suspended until further notice. All the students of the Faculty of Science are requested to vacate the hostels immediately.

Registrar
University of Jaffna.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 524
சீட்டிழுப்பு திகதி 2016.07.16
வெற்றி இலக்கங்கள்
12 21 30 55 B
ரூ. 41,099,960/=

CargillsBank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி
"சேமித்தல் வாழ்க்கைக்கு மகிழ்ச்சி
சேமித்தால் கண்களுக்கும் மகிழ்ச்சி"



இதோ ஓர் மகிழ்ச்சியான செய்தி!
எமது மண்ணில்
கபாலி
இன்றே கார்கில்ஸ் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து,
விபரங்களுக்கு: 021 752 1562/563/564
கிறிஸ்டோபர்: 0772 716 443 - ஷோபினி: 0773 701 274
செந்தூரன்: 0773 701 510
CEYLON THEATRES
Since 1928

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி
British College Of Beauty Studies Olialankan Studio

* இலங்கையில் பெறுமதி வாய்ந்த சான்றிதழை வழங்கி வருவதில் பெருமை அடைகின்றோம்.
* அழகுக்கலையில் அறிமுகம் ஆகும் புதிய தொழிநுட்பங்கள் புதிய பாடத்திட்டங்கள் போன்றவற்றை யாழ் மண்ணில் அறிமுகப்படுத்தி வருகின்றோம்.
* வெளிநாடு செல்பவர்க்கென Special ஆக வடிவமைக்கப்பட்ட குறுகியகால பாடநெறி பயிற்சி வகுப்புக்கள்
* கேக் ஐசிங் & பூ செய்தல்
* தையற்பயிற்சி
* கணினிவகுப்புக்கள்

அழகுக்கலையில் பல பிரிவுகளை, புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.



* குறுகியகால பயிற்சி வகுப்பையும் பெறமுடியும்
* 3, 6 மாதகால முழுநேர பயிற்சி வகுப்புக்கள்
* 15000/- தொடக்கம் 120000/- ரூபா வரையான Basic & Advance பாடநெறி வகுப்புகளும் நடைபெறுகின்றன
* பாடநெறி முடித்து அல்லது படிக்கும் போதே பகுதி நேர வேலை வாய்ப்பையும் எங்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

076 7011645
British College Of Beauty Studies BCBS

SINGER FINANCE
முச்சக்கரவண்டிக்கான குத்தகை வசந்தகாலம்
பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டிகள் தொடர்பில்




தொடர்புகளுக்கு
077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124

## உடற்பருமன் கொண்டோருக்கு ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)

ஆண்,பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் திகழ

**ஆயுர்வேத ஹேர்வல் ஔடதம்**
**(பால்மா, குளிசை, டொனிக், கிறீம்)**
**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை கூட்டுதல், குறைத்தல், ஊளைச்சதை, மார்பு கூட்டுதல், குறைத்தல், வயிற்றுக் கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுர்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு

எங்களிடம்

மேலும், முகப்பரு, கண்கருவளையம், முகச்சுருக்கம், உதடு கறுப்பு, முதுகு, கழுத்து, கை, கால், கறுப்பு நீக்கும் கிறீம், முகம் தாடைகளில் தேவையற்ற ரோமங்கள் மற்றும் காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

**விலை 2500/= 5500/=**

**தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.**

**077 210 6155,**
221, நாவலர் றோட் (பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## நாகபூசணி திருமண சேவை

**மணமகன், மணமகள் அனைவருக்கும் பதிவுக் கட்டணங்கள் இலவசம் (17.07.2016 இலிருந்து 30.7.2016 வரை)**

டாக்டர், எஞ்சினியர்,எக்கௌண்டன், வங்கி உத்தியோகத்தர், சட்டத்தரணிகள் ,ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.

7 நாள்களும் திறந்திருக்கும்.

(22940)(12.16)

**383/14B , கோயில் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்**
**(நல்லூருக்கு வடக்குப் பக்கம்)**
**021 222 9306, 077 138 7596**
Email:- nakapoosanywedding@gmail.com

## பண்பாட்டு மலர்ச்சிக்கூடம் - தொடக்க விழா

தமிழ் சமூகத்தில் நிலவும் பண்பாட்டுச் சீரழிவைத் தடுத்து நிறுத்தி பண்பாட்டு மலர்ச்சியை ஏற்படுத்தவும் ஆளுமை மிக்க தமிழ்ச் சமூகத்தைத் தோற்றுவிக்கவும் பண்பாட்டு மலர்ச்சிக்கூடம் ஆரம்பிக்கப்படுகின்றது. இத்திட்டம் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் தலைமையில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் நடத்தப்படுகின்றது.

**இடம்:**
**இல. 07, பழம்வீதி (பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

**காலம்:**
**19.07.2016**

**நிகழ்ச்சி நிரல்**

**9.30 - 12.30** அரங்கின் சமூகப் பயன்கள் பற்றிய கருத்தாடல் அரங்கு
**4.00 - 7.00** ஆற்றுகை நிகழ்வுகள்

1. சிறுவர்களின் வில்லுப்பாட்டு
2. மட்டக்களப்புக் கூத்து - செயன்முறை விளக்கம்
   பேராசிரியர் சி.மௌனகுருவும் அவர்தம் குழுவினரும்.
3. 'உயிர்ப்பைத் தேடி' சக்தியைப் பகிரும் ஆற்றுகை நிகழ்ச்சி.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவிரும்புபவர்கள் **077 440 3955** என்ற இலக்கத்தில் அல்லது **tag.jaffna@gmail.com** என்ற மின்னஞ்சல் ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம்.

**பிரவேசம் இலவசம். எனினும் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

(Gm/2973)
(11.17.18)

## GREAT CAREER OPPORTUNITIES FOR SALES PROFESSIONALS

**As our Front line Sales Professional, you will**

* Work for a world class multinational in a B2B capacity
* Earn Rs.50,000 ++ (Salary + Incentives)
* Drive your own van while we pay the rent
* Handle globally recognized - brands Mauripan & Prime Instant Dry yeast, Simas Margarine, Amanda Bakers Fat
* Have a back up team of technical experts to help you manage your sales

Be a Proud member of our highly motivated and dynamic team of sales professionals to get all these benefits

**The company you will work for**

AB Mauri is a company that operates globally in yeast and bakery ingredient production with 52 plants in 26 countries. It is a subsidiary of Associated British Foods, a diversified international food, ingredients and retail group with sales of £13.3bn and over 113,000 employees in 47 countries.

**How to apply**

Please e-mail your application with passport size photograph to abmaurilk@gmail.com or post your application to reach the address below.

AB Mauri is an equal opportunity employer. Canvassing in any form will lead to automatic disqualification.

**AB MAURI**
Global Yeast & Bakery Ingredients Company

HR Manager
AB Mauri Lanka (Pvt) Ltd.
No.124, Templers Rd,Mt - Lavinia.
Tel: 011 - 273 1658

Web : www.abmauri.lk FB: www.facebook.com/abmauri.lanka.

## வருமான வரிக் கணக்கு எழுதுதல்


நீண்ட கால அனுபவமுள்ள கணக்காளரால் வருமான வரிக் கணக்கு ஒப்பந்த அடிப்படையில் (CONTRACT BASIS) உங்கள் திருப்திக்கு ஏற்ப, திறமையாக எழுதி பட்டயக் கணக்காளரால் (Charted Accountant)Audit செய்து தரப்படும்.

**077 889 7983**

## அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா மலர்




அழகிய தோற்கடதாசிப் பெட்டகத்தில் இரண்டு தொகுதிகளாக 1260 பக்கங்களுடன் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பல சிறப்பம்சங்களுடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா மலர் வெளிவந்திருக்கின்றது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரதிகள் மட்டுமே கையிருப்பில் இருப்பதால் உடன் வாங்கிப் பயன் பெறுங்கள்.



**ஒவ்வொரு இந்துவின் இல்லத்திலும், இந்து நிறுவன நூலகத்திலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம்!**




**நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 17-07-2016** ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணிமுதல் நடைபெறும் சுவாமி விபுலானந்தர் விழாவிலும், **கொழும்பில் 23-07-2016** சனிக்கிழமை மாலை 04.30 மணிமுதல் நடைபெறும் வே.பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரையுடன் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்களின் "நலன்கள் அறுபது" நூல்வெளியீட்டு நிகழ்விலும் சகாய விலையான **ரூபா 2000** ற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

***தலைமைச் செயலகம் :*** 91/ 5. சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி : 0112 434 990 தொலை நகல் : 0112 344 720 மின்னஞ்சல் : hinducongress@gmail.com
***யாழ். பணிமனை :*** 211/ 17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1075 தொலை நகல் : 021 221 7280 மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com



## வெப்பட்டியொல்லை செந்தில் முருகையா தேவஸ்தானம் வட்டுக்கோட்டை

## இகபர சௌபாக்கியத்தை வாரி வழங்கும் செந்தில் முருகையாப் பெருமானின் மஹோற்சவ சிறப்பிதழ் - 2016

இனிய அன்பினீர்!

**நிகழும் துர்முகி வருடம் ஆடி மாதம் 03 ஆம் நாள் 18.07.2016 அன்று திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.**

| | |
|---|---|
| சாந்தி | துர்முகி ஆண்டு ஆடித்திங்கள் 2 ஆம் நாள் 17.07.2016 ஞாயிறு இரவு 7.00 மணிக்கு நடைபெறும். |
| கொடியேற்றம் | துர்முகி ஆண்டு ஆடித்திங்கள் 3 ஆம் நாள் 18.07.2016 திங்கள் காலை 7 மணிக்கு அபிடேக ஆராதனை ஆரம்பமாகிக் கொடியேற்றம் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். |
| சப்பறத் திருவிழா | துர்முகி ஆண்டு 11 ஆம் நாள் 26.07.2016 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு |
| இரதோற்சவமும் சண்முகர் அர்ச்சனையும் | துர்முகி ஆண்டு ஆடித்திங்கள் 12 ஆம் நாள் 27.07.2016 புதன் கிழமை காலை 7 மணிக்கு அபிடேக ஆராதனை நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவம் (தேர்) நடைபெறும். பிற்பகல் ஒரு மணிக்கு சண்முகர் அர்ச்சனை நடைபெறும். |
| தீர்த்தோற்சவம் | துர்முகி ஆண்டு ஆடித்திங்கள் 13 ஆம் நாள் 28.07.2016 வியாழக் கிழமை காலை 8 மணிக்கு அபிடேக ஆராதனை ஆரம்பமாகி முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். |
| பூங்காவனம் | துர்முகி ஆண்டு ஆடித்திங்கள் 14 ஆம் நாள் 29.07.2016 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குப் பூங்காவன திருவிழா ஆரம்பமாகும். |

தினமும் காலை 7 மணிக்கு பூசை ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிக்கு மாகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும். இரவுப்பூசை தினமும் 5 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிக்கு நிறைவுபெறும்.

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ நவசொர்ண ஆகர்ன ஞான நவசுத சிவாச்சாரியார்
(அளவெட்டி ஞான வைரவர் ஆதீன கர்த்தா)

சிவஸ்ரீ நவராஜ உமாதீஸ்வரக் குருக்கள் (சாதக பூசணம்)
(நிரிமலை ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்)

**மங்கல வாத்தியம் : தவில் வித்துவான் வட்டூர் N. கணேசன்**

அடியார் பெருமக்களை மஹோற்சவ விழாக்களுக்கு வருகை தந்து செந்தில் முருகையனின் இஷ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- அறங்காவலர்.

(G/248207)(11.17.18)

**அனுசரணை கிருபா லேனர்ஸ்**

**226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353, 021 492 3200**

| ஆவரங்கால் | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி | முழங்காவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| 021 222 6688<br>077 242 2622 | 021 224 2022<br>071 454 6956 | 021 300 6550<br>071 454 6958 | 021 228 5505<br>071 454 6955 | 021 300 6544<br>071 454 6955 | 024 222 7777<br>077 710 0444 |
| கச்சேரி அருகாமை | சாவகச்சேரி | பருத்தித்துறை | விசுவமடு | பூநகரி | மன்னார் |
| 076 722 5292<br>071 777 5454 | 021 227 0700<br>071 454 6957 | 021 492 3201<br>071 454 6958 | 021 320 1515<br>071 454 6955 | 021 320 1818<br>071 454 6955 | 023 225 1656<br>077 847 2732 |

# சமூக நீதிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17

'போருக்குப் பின்னரான சர்ச்சைகளும் சவால்களும்' எனும் தொனிப்பொருளில் சமூக நீதிக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் காலை 9 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

போரால் ஏற்பட்ட அழிவுகள், மீள் கட்டுமான முயற்சிகளில் காணப்படும் பிரச்சினைகள், ஒடுக்கு முறைகளை உருவாக்கும் சமூகக் கட்டமைப்புகள் போன்ற காரணிகள் வட மாகாண அபிவிருத்தியிலும், பொருளாதாரத்திலும், சமூக வாழ்க்கைத் தரத்திலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. பால் வேற்றுமையும், சாதி ஒடுக்குமுறையும் தொடர்ந்தும் வட பகுதியில் மேலோங்கிக் காணப்படுகின்றன.

விவசாயம், மீன்பிடித்துறைகளில் அபிவிருத்தியின்மை மற்றும் பொருளாதாரக் காரணிகளினால் ஏற்படும் இடப்பெயர்வுகள் போன்றனவும் இந்தப் பிராந்தியத்தில் பல நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன. நீர், நிலம் போன்ற வளங்களின் மீது பல்வேறு சமூகங்கள் உரிமை கோருவதன் காரணமாக அந்தச் சமூகங்களுக்கு இடையில் போட்டிகளும் முரண்பாடுகளும் நிலவுகின்றன. இத்தகைய பொருளாதார சமூக விடயங்களைப் பற்றியும், அரசியல் தீர்வுக்கும் சமூக நீதிக்கும் உள்ள தொடர்பு பற்றியும் ஆழமான கலந்துரையாடல்களுக்கு இடமளிக்கும் வகையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

(ற-ரி)

# ஆயுளை அதிகரிக்கக் கோரினோம் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை

## மக்ஸ்வெல் பரணகம தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
காணாமல்போனோர் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக் குழுவின் ஆயுள்காலத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்திருந்தோம். அதற்கு அனுமதி வழங்கப் படவில்லை.
இவ்வாறு அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம தெரிவித்தார்.
ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கை விரைவில் அரசிடம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.
1983ஆம் ஆண்டில் இருந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் உரு வாக்கப்பட்ட இந்த ஆணைக்குழு வில் ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமை யில் மூவர் இருந்தனர். இந்தக் குழு இரு மாகாணங்களி லும் பல அமர்வுகளை நடத்தி சாட்சியங்களைச் சேகரித்தது. பின்னர் இந்த ஆணைக்குழுவின் விடயப் பரப்பை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விஸ்தரித்தார். மனித உரிமை மீறல்கள் குறித்து ஆணைக் குழு விசாரணை நடத்த வழியேற் படுத்தப்பட்டது. இது விடயத்தில் ஆலோசனை வழங்க டெஸ் மன் டி சில்வா தலைமையில் வெளிநாட்டு ஆலோசகர் குழுவும் நியமிக்கப்பட்டது.
மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக விசாரணை அறிக்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விசார ணைகள் குறுகிய காலம் நடத்தப்பட்டது. காணாமற் போனோர் குறித்த விசாரணைகள் தொடர்ந்தும் நடத்தப் பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் ஆணைக்குழு விசாரணைகள் நடத்த அனுமதிக்கப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக் குழுவுக்கு இரு தடவைகள் ஆயுள் காலத்தை நீடித்தார்.
ஆணைக்குழுவுக்கு சுமார் 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் சுமார் 4 ஆயிரம் இரட்டை முறைப்பாடுகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலான முறைப்பாடுகளில் ஒரு தரப்பு சாட்சியமே பதிவு செய்யப்பட்டுள்ளது.
தற்போது ஆணைக்குழுவின் ஆயுள்காலம் முடிவுக்கு வந்துள்ளது. அதன் ஆயுள்காலத்தை நீடிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது. காணாமற் போனோர் விவகாரத்தைக் கையாள் வதற்கு காணாமற் போனோர் பணியகத்தை நிறுவ அரசு தீர்மானித்துள்ளது. அதற்கான சட்ட வரைவு நாடாளுமன் றில் சமர்க்கப்பட்டுள்ளது. (ற-4)


## துயர் பகிர்கின்றோம்

### லயன். S. ஸ்ரீநிவாசன்



எங்கள் குடும்ப நண்பரும்.மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக ஸ்தாபக உறுப்பினராகவும், கழகத் தலைவராகவும் பின்னர் மாவட்டம் 306 B1 'கபினற்' உத்தியோகத்தராக பல வருடங்கள் சேவையாற்றி இறைவனடி சேர்ந்துள்ள நண்பரான லயன் S.ஸ்ரீநிவாசன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

லயன் S.S. தங்கராஜா PMJF
மாவட்ட ஆளுநர் 2012/2013, மாவட்டம் 306B1 இலங்கை
மருதமஹால், மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

### சரவணமுத்து ஸ்ரீ நிவாசன்



எமது ஆலயத்தின் முன்னாள் கௌரவ செயலாளரும் 3 ஆம் திருவிழா உபயகாரருமாகிய ச. ஸ்ரீநிவாசனின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாச்சிமார் முருகனை பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை
நாச்சிமார் முருகன் ஆலயம், நவாலி வடக்கு.

## †
## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04.01.1938
உதிர்வு 17.06.2016

### அமரர் வேலுப்பிள்ளை பிரான்ஸிஸ்

கடந்த 17.06.2016 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புத் தந்தை வேலுப்பிள்ளை பிரான்ஸிஸ் அவர்களின் 31ஆம் நாள் நிறைவு ஆராதனை இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா இளைப்பாறுதல் பிரார்த்தனையில் கலந்து பிரார்த்தித்து அதன் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

60 ஏக்கர்,
உக்குளாங்குளம், வவுனியா.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசேஸ்வரி அருளம்பலம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் மஸ்கேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேஸ்வரி அருளம்பலம் 15.07.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் அருளம்பலத்தின் அன்பு மனைவியும் சுஜீத்தா, வாகீசன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவானந்தனின் (கனடா) அன்பு மாமியாரும் அரியரத்தினம், அம்பிகாபதி, அருந்த தேவி, தனலட்சுமி, ஆனந்தராசா(காந்தி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை ஒருமணியளவில் நல்லையா - ஆனந்தராசா(காந்தி) என்பவரின் ஆவரங்கால் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பருத்தித்துறைவீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
நல்லையா ஆனந்தராசா
(காந்தி)

077 832 8944

### பழனிநாதன் நாமநிதி



பிறப்பு 1970.02.28
இறப்பு 2016.07.15

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முத்திரைச் சந்தி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பழநிநாதன் நாமநிதி 15.07.2016 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பழநிநாதன் மற்றும் பொன் னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களாகிய தாமோதரம்பிள்ளை - செல்லம்மா தம்பதியின ரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவ ரும் மேகலா, கஸ்மியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கவிதா, அனிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராசா, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (11/15, விவசாயக் கந்தோர்லேன், முத்திரைச்சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11/15, விவசாயக்கந்தோர்லேன்,
முத்திரைச்சந்தி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ம.உதயகாந்தன்

077 351 9636

## மரண அறிவித்தல்கள்

### R.புவனலோஜன்

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினரும், கைதடி தொழிற்பூங்காவில் வசிப்பவருமாகிய R. புவனலோஜன் 15.07.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - இராஜ லக்சுமி தம்பதிகளின் மூத்த மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை விபுலானந்தர் வீதி, மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.28, கோயில்வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(J/2984)
(11,17,18)

தகவல்:
விழிப்புலனற்றோர் சங்கம்

### திருமதி தியானேஸ்வரி தங்கராசா



3 ஆம் கட்டை, ஆனைக் கோட்டையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியானேஸ் வரி தங்கராசா 14.07.2016 வியாழக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ் சென்ற வர்களான குணரட்ணம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான அழகர் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஆனைக்கோட்டை எருக் கலம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### இராமநாதன் சுப்பிரமணியம்



யாழ். சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட இராமநாதன் சுப்பிரமணியம் கடந்த (14.07.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-சின்னப் பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்க ளான வெற்றிவேலு-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருகனும் இராஜமலரின் பாசமிகு கணவரும் மகேஸ்வரி (இலங்கை), யோகரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வநாயகி, பத்மலோசனி, தெய்வராணி, நல்லநாதன், சிவநேசன், கேதீஸ்வரி, சோதிநாதன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் சிவ பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாயினியின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி காலயன்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## பாம்பு தீண்டிய குடும்பத் தலைவர் சிகிச்சையில்

பாம்பு தீண்டிய குடும்பத் தலைவரும், கருங்குளவிகள் கொட்டிய குடும்பத் தலைவரும் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கோழி இறைச்சி விற்பனை நிலையத்தில் இரவு வேளை கோழிகள் சத்தமிட்டதைச் சென்று பார்த்தவரைப் பாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் கொடிகாமம் கச்சாய் வீதியில் நடந்தது.

பனையோலை வெட்டுவதற்காக மரத்தில் ஏறிய வரை கருங்குளவிகள் தாக்கின. இந்தச் சம்பவம் மிருசுவில் தவசி குளத்தில் நடந்தது.(ற-9)

**Study & Work Settle**

இலங்கையர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

**Malasiya**

பாடநெறி கட்டணத்தில் 80% கழிவு

துணையை அழைத்துச் செல்ல முடியும்

- Singapore
- New Zealand
- Australia
- Japan

**Eropean Union**

- LITHUNIA (Schenagen Visa)

After O/L OR A/L Only

**Malasiya**

- கற்கை நெறியின் போதே 50,000 - 100,000 வரை சம்பளம் (100% உத்தரவாதம்)
- After Course and Training Completed can go for the Professional work Visa
- 350,000/= மாத்திரமே செலவு New Zealand
- 200,000 உடன் பயணம்
- 2 மாதங்களில் Visa
- IELTS Must
- IELTS நிறுவனத்தால் ஏற்பாடு செய்து தரப்படும்.

VTL MANAGEMENT
No.380, Galle Road
Colombo - 3

**Cool line :**
0777 418 1919 /011 592 2125/
077 794 6185

**E-mail:**
vtlmgt@gmail.com

# மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குளப்பிட்டி, கொக்குவில், சாவற்காடு, ஆனைக்கோட்டை, காக்கைதீவு, நவாலி, அட்டகிரி, ஆஸ்பத்திரி வீதி, வேம்படிச் சந்தியிலிருந்து சத்திரச் சந்திவரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மாகாந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரிவீதிச் சந்தியிலிருந்து வின்சர்சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரியகடை வீதி, வேலக்கை, போதனா வைத்தியசாலை, யாழ். கொமர்சல் வங்கி, யாழ். தேசிய சேமிப்பு வங்கி, யாழ். இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதாரத் திணைக் களம், கார்கில்ஸ் பூட்சிற்றி, யாழ். வைத்தியசாலை (மூன்று மாடிக் கட்டடத் தொகுதி), அபி கட்டடம், யாழ்விடுதி, பல்கலைக்கழக தங்குவிடுதி, ஆகிய இடங்களிலும், வவுனியாவில் ஆதி விநாயகர் கோயில் பிரதேசம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்தகுளம் இராணுவமுகாம் ஆகியபிரதேசங்களிலும்மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ரி)




## மரக்கறி விலைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுகின்றன. பெரும்பாலான மரக்கறி வகைகள் கிலோ நூறு ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.

கடந்த மே மாதம் பெய்த மழையால் மரக்கறிப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்தன. இரண்டு மாதங்களுக்கு மேலாக மரக்கறி வகைகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மரக்கறி வகைகளின் பாவனை அதிகரித்திருப்பதாலும் மற்றும் சுபகாரியங்கள் ஆலய மகோற்சவங்கள் இடம்பெற்று வருவதாலும் மரக்கறிகளுக்குக் கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. (ற-17)

## விழிப்புலனற்றவர் திடீரென மயங்கி விழுந்து சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 17

விழுப்புண் அடைந்து யாழ். விழிப்புலனற்றோர் சங்க தொழிற் பூங்காவில் தங்கியிருந்தவர் நேற்றுமுன்தினம் காலை திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். மாதகலைச் சேர்ந்த புவனலோயன் (வயது - 35) என்பவரே உயிரிழந்தார்.

இவர் கடந்த 6 ஆண்டுகளாக கைதடியில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற் பூங்காவில் தங்கியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் விழிப்புலனை இழந்தவர் இறுதிப் போர் வரைக்கும் வன்னியில் வாழ்ந்து பின்னர் குறித்த இல்லத்தில் இணைந்து கொண்டார்.

விழுப்புண் காரணமாக அடிக்கடி தலைச் சுற்று உபாதைக்கு உள்ளாகிப் பெரும் சிரமத்தை எதிர்கொண்டிருந்தார். அதற்காகச் சிகிச்சையும் பெற்று வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை தேநீர் அருந்திய பின்னர் தலைசுற்றி மயங்கி வீழ்ந்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-4,9,10)

சொவ்ட்லொஜிக் நிறுவனம் வழங்கும்.

அரச ஊழியர்களுக்கான விசேட இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டம்.

விபரங்கள் வருமாறு.

| இலத்திரனியல் பொருள் | முதல் கட்டணம் | மாதாந்தக் கட்டணம் | மொத்தப் பெறுமதி | சலுகைகள் |
|---|---|---|---|---|
| 24'' TV & (Panasonic) | 4450.00 | 2800 X 12 | 38,049.00 | 3 வருட உத்தரவாதம் DVD உபகரணம் இலவசம். |
| 23'' TV (Samsung) | 3400.00 | 2802 X 12 | 37,024.00 | 3 வருட உத்தரவாதம். |
| 24'' TV (Softlogic) | 3400.00 | 2290 X 12 | 30,873.00 | 3 வருட உத்தரவாதம். |
| 32'' TV (Samsung & Panasonic) | 5800.00 | 3884 X12 | 52,399.00 | 3 வருட உத்தரவாதம். DVD உபகரணம் இலவசம். |
| 32'' TV Softlogic | 5800.00 | 2954 X 13 | 44199.00 | 3 வருட உத்தரவாதம். + 10000 ரூபா மாற்றீட்டுக்கழிவு |
| குளிர்சாதனப்பெட்டி (Single Door) Whirlfpool | 5000.00 | 2810 X 15 | 47,161.00 | 10 வருட உத்தரவாதம் Rice Cooker 18GS இலவசம். |
| குளிர்சாதனப்பெட்டி (Single Door) Samsung | 5000.00 | 2937 X 15 | 49,060.00 | 10 வருட உத்தரவாதம் Rice Cooker 18GS இலவசம். |
| குளிர்சாதனப்பெட்டி (Double Door) Whirlfpool | 6700.00 | 4615 X 15 | 75,927.00 | 10 வருட உத்தரவாதம் மின்விசிறி இலவசம். |
| குளிர்சாதனப்பெட்டி (Double Door) Samsung | 6700.00 | 4516 X 15 | 75,119.00 | 10 வருட உத்தரவாதம் மின்விசிறி இலவசம். |
| மடிக்கணினி Dell 3558 core i3 5th Gen | 6000.00 | 4791 X 14 | 73,074.00 | 2 வருட உத்தரவாதம் |
| மடிக்கணினி Acer Celeron 531 | 6000.00 | 4518 X 11 | 55,691.00 | 2 வருட உத்தரவாதம். |
| சலவை இயந்திரம். | 4000.00 | 2157 X 11 | 27,734.00 | 5 வருட உத்தரவாதம். |

- வட்டி இல்லை.
- இச்சலுகை இம்மாதம் 31ம் திகதி வரை மட்டுமே.



227 கே.கே.எஸ் வீதி
பெரியமதவடி
சுன்னாகம்.
0215674129 / 0778928168

காரைநகர் வீதி
(கொமர்ஷல் வங்கி முன்பாக)சங்கானை.
0212251266/ 0777348188

63, கன்னாதிட்டி றோட்
(சிவன் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
0215671108 / 0777991283

A9 றோட்,
கரடிப்போக்குச்சந்தி
கிளிநொச்சி.
0215671110 / 0771471462

பரந்தன் வீதி
(LB Finance முன்பாக)
புதுக்குடியிருப்பு
சந்தி,புதுக்குடியிருப்பு.
0212061571 / 0775057870

கண்டி றோட்
சாவகச்சேரி.
0215880900 / 0775474745

இல 335B
பருமேலவரை சந்தி
திருநெல்வேலி.
0215671118 / 0778347733

softlogic
BEST IN THE BUSINESS

Panasonic ideas for life · SAMSUNG · Whirlpool · Midea · CANDY · PHILIPS

# சாந்தபுரம் பாடசாலைக்கு மூன்று அதிபர்கள் நியமனம்

## அதிகாரிகளின் செயற்பாட்டுக்கு பிரதேச மக்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் இரு அதிபர்கள் கடமையாற்றிவரும் நிலையில் தற்போது மூன்றாவது அதிபரும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் பாடசாலை, வகை 2ஐச் சேர்ந்தது. அங்கு அதிபர் சேவை தரம் 2ஐச் சேர்ந்த பெண் அதிபர் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றுகின்றார். பிரதி அதிபராக அதிபர் சேவை தரம் 3ஐச் சேர்ந்தவர் கடமையாற்றுகின்றார். தற்போது அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்த ஒருவரும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கடமையாற்றும் அதிபர் சேவை தரம் 2ஐச் சேர்ந்தவருக்கு பன்னங்கண்டிப் பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அவர் அது குறித்து மேன்முறையீடு செய்துவிட்டு குறித்த பாடசாலையிலேயே அதிபராகத் தொடர்ந்து கடமையாற்றுகின்றார். புதிதாக நியமிக்கப்பட்டவரும் பாடசாலையில் ஒப்பமிட்டுள்ளார்.

"நான் அதிபர் சேவை தரம் 2ஐச் சேர்ந்தவன். இங்கு பணியேற்று 20 மாதங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் எனக்கெதிராகக் குற்றச்சாட்டு இருப்பின் கட்டாய இடமாற்றம் செய்யும் அதிகாரம் மேலதிகாரிகளுக்கு உண்டு. என்மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. நிர்வாக தேவையின் நிமித்தம் இடமாற்றம் செய்வதானால் ஒப்புதலைப் பெற்றிருக்கலாம் அல்லது மாற்று ஏற்பாடு குறித்துக் கேட்டறிந்திருக்கலாம். இவை எவையும் இன்றி வகை 3ஐச் சேர்ந்த பாடசாலைக்கு – அண்மையில் சர்ச்சையில் அகப்பட்ட பாடசாலைக்கு நியமனம் செய்துள்ளமை அதிகாரிகளின் அசமந்தப் போக்கைக் காட்டுகின்றது. எனக்கான நீதியைக் கோருவதற்காக செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வருகைக்காகக் காத்திருக்கின்றேன்"– என்று தெரிவித்தார் தற்போது அங்குள்ள அதிபர் சேவை தரம் 2ஐச் சேர்ந்த அதிபர்.

"நான் ஓர் பதில் பணிப்பாளர். இது தொடர்பில் பதிலளிக்க முடியாது. நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர் கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் இது குறித்துக் கேளுங்கள்"– என்று தெரிவித்தார் பதில் வலயக் கல்விப் பணிப்பாளர்.

வடக்கு மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தில் அதிகாரிகள் பலர் கல்விச் சுற்றுலா சென்றுள்ளனர். (ற–4,101)

# திருடனைப் பற்றித் தெரிந்தால் பொலிஸுக்கு அறிவியுங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. திருடன் மோட்டார் சைக்கிளைத் திருடிச் செல்வது பாதுகாப்புக் கமரா ஒன்றில் பதிவாகியுள்ளது. திருடன் பற்றிய தகவல் தெரிந்தால் அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

இந்தத் திருட்டு கடந்த புதன்கிழமை நடந்தது. மாதகலைச் சேர்ந்த ராஜேந்திரன் முகுந்தன் என்பவரின் NPWA 8172 என்ற இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் 9 லட்சம் ரூபாவாகும்.

மு.ப. 9.20 மணியளவில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு நீதிமன்றத்துக்குள் சென்று முற்பகல் 9.55 மணியளவில் திரும்பி வந்தபோது மோட்டார் சைக்கிளைக் காணவில்லை.

மோட்டார் சைக்கிளைத் திருடியவன் மோட்டார் சைக்கிள் திறப்பு இல்லாததால் உருட்டிச் சென்றுள்ளான். சிலரிடம் மோட்டார் சைக்கிள் ஸ்ராட் எடுக்கவில்லை. கராஜ் ஏதும் இருக்கின்றதா? என்று திருடன் விசாரித்துள்ளான். திருடன் மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்றமை வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

பொலிஸார் திருட்டுத் தொடர்பில் விசாரணை நடத்துகின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம் நகரில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. (ற–106)



வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று நடைபவனி நடைபெற்றது. அதில் மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், வட மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் வட மாகாண உறுப்பினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.(ற–402)

# கட்டுப்பாட்டை இழந்த கார் மின்கம்பத்துடன் மோதியது

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்



யாழ்ப்பாணம், ஜூலை 17

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் மின்கம்பத்துடக் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து புதூருக்கு அண்மையில் நடந்தது. நிகழ்வு ஒன்றுக்காக யாழ்ப்பாணம் வந்தவர்கள் கொழும்புக்குத் திரும்பும்போதே விபத்து ஏற்பட்டுள்ளது. தந்தை, தாய், இருபிள்ளைகள் காயமடைந்தனர்.

விபத்தால் மின் தடை ஏற்பட்டது. விசாரணைகளை கனகராயன் குளம் பொலிஸார் மேற்கொள்கின்றனர். (ற–4,101)

# அதிபர் நியமனம் தொடர்பில் கலந்துரையாடித் தீர்மானம்

## இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் தெரிவிப்பு

பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்ற தரம் 3 அதிபர்களுக்கு இதுவரை பொருத்தமான பாடசாலைகள் வழங்கப்படவில்லை. அது தொடர் பில் தீர்மானம் ஒன்று எடுப்பதற்காக கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் செய்திக் குறிப்பொன்றை அவர் அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அதிபர் தரத்துக்குத் தகுதியான பயிற்சிகளைப் பெற்றபோதும் அவர்கள் தற்போதும் ஆசிரியர்களாகவே கடமையாற்று கின்றனர். புதிய அதிபர்களின் நியமனம் தொடர்பாக அமைக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவும் புதிய நியமனம் பெற்ற அதிபர்களுக்குப் பொருத்தமான பாடசாலைகளை வழங்குவதில் கரிசனை கொள்ளாது அரசியல் நலன்களுக்காக தேவையற்ற விடயங்களிலேயே கரிசனை கொண்டுள்ளது.

எதிர்வரும் 22.07.2016 மீண்டும் அமைச்சரவை உபகுழு அதிபர் நியமனம் தொடர்பாகக் கூடி ஆராயவுள்ளது. தகுதியான அதிபர்கள் பாதிக்கப்படாத வண்ணம் தீர்மானம் எடுப்பதற்கு செய்யவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. வட மாகாணத்தில் உள்ள அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சை மூலம் சித்தியடைந்து பயிற்சிபெற்ற அனைவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியிலுள்ள ஈ–சிற்றி ஆங்கிலப் பாடசாலையில் ஒன்று கூடுமாறு வேண்டுகின்றோம் – என்றுள்ளது. (ற–4)

# கிராம அலுவலர்கள் அனைவரும் சமாதான நீதிவான்களாக நியமனம்

முல்லைத்தீவு, ஜூலை 17

கிராம அலுவலர்கள் அனைவரும் தாம் பணியாற்றும் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வகையில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து நீதி அமைச்சின் செயலாளரால் கடந்த மாதம் 6 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் பிரதேச செயலர்கள் ஊடாக கிராம சேவகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தின் பிரதிகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும், சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

நீதி அமைப்புச் சட்டத்தின் 45 ஆவது பிரிவுக்கு அமைவாக நீதி அமைச்சரால் 2016.02.18 ஆம் திகதிய இலக்கம் 1954/34 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிட்டவாறு நிரந்தர சேவையில் இணைந்திருக்கின்ற சகல கிராம அலுவலர்களும் அவர்களுடைய பிரிவுக்கு உரித்தான பிரதேச செயலர் பிரிவில் சமாதான நீதிவான் ஆக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதவி அதிகாரமான நியமனத்தின் பேரில் அவர்களுக்கு நீதிமன்ற சத்தியப்பிரமாணம் தேவையில்லை என்பதோடு பதவி அதிகாரத்தில் நியமனமாகின்ற சமாதான நீதிவான்களின் பொருட்டு அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

சமாதான நீதிவான் பதவியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது உள்நாட்டலுவல்கள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுமதிக்கு அமைவாக முதலாவது வரியில் கிராம அலுவலரின் பெயர், அடுத்த வரியில் கிராம அலுவலர் /சமாதான நீதிவான், அடுத்த வரியில் கிராம அலுவலரின் பிரிவு நிலைய இலக்கம், அதனைத் தொடர்ந்து பிரிவு நிலையப் பெயர் அதற்கு அடுத்த வரியில் பிரதேச செயலாளர் பிரிவு எனக் குறிப்பிட்டு அவர் சேவையாற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் என்பன பொறிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட இறப்பர் முத்திரையைப் பாவிக்க முடியும்.

இது தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்குமுரிய அனைத்து கிராம அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துக என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

நீதியமைச்சின் செயலாளரால் தயாரிக்கப்பட்ட கடிதமானது தனிச் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(ற–4,102)



வவுனியாவில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் தர்மலிங்கம் வீதியிலுள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சிலைக்கு அருகில் நேற்று நடை பெற்றன. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி விளையாட்டுத்துறை அமைச்சர். குருகுலராசா, வவுனியா மாவட்ட மேலதிக செயலர் த. திரேஸ்குமார், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், சமூக ஆர்வலர் சந்திரகுமார் (கண்ணன்) வர்த் தக சங்கத் தலைவர் ரி.கே. இராஜலிங்கம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தி யானந்தன் என பலரும் கலந்து கொண்டனர். (4)

# ஓமந்தை உழவர் சந்தைக் கட்டடத்தை இயங்க வைக்குமாறு கோரிக்கை

வவுனியா, ஜூலை 17

ஓமந்தையில் கட்டப்பட்ட உழவர் சந்தைக் கட்டடம் இதுவரை பாவனைக்கு விடப்படவில்லை. அது கால்நடைகள் தங்குமிட மாகவே காணப்படுகின்றது.

அதனை பாவனைக்கு விட நடவடிக்கை வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

உலக வங்கியின் நிதிப் பங்க ளிப்புடன் உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்தச் சந்தைக் கட்டடம் கட்டப் பட்டது. இதுவரை எந்த வியா பார நடவடிக்கைகளும் ஆரம் பிக்கப்படவில்லை.

விவசாயிகளும் பிரதேச மக்க ளும் நன்மைபெறக்கூடியவகை யில் ஆவன செய்ய உரியவர் கள் உடன் முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட் டது.

(ற-101)

# வாழ்வாதார உதவி வேண்டாம் எமது பிள்ளைகளே வேண்டும்

## காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்து

வவுனியா, ஜூலை 17

வாழ்வாதார உதவிகள் எவை யும் எமக்குத் தேவையில்லை. அதனை நாம் ஏற்கப்போவ தில்லை. எமக்கு எமது பிள்ளை களே வேண்டும்.

இவ்வாறு காணாமல்ஆக்கப் பட்டோரின் உறவுகள் நேற்று வற்புறுத்தினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்க ளின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில நேற்று மதியம் சந்தித்து தமது பிரச் சினைகளைச் பன்னாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கான கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தனர். அதில் 60 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்திலிருந்து காணமல் ஆக்கப்பட்டோர் விவ ரங்களை அறிவிப்பதில் அர சுகள் பின்னடித்து வருகின்றன. இன்னமும் இரகசிய முகாம்க ளில் எமது பிள்ளைகள் உள்ள னர். நல்லாட்சி என்று பெருமி தம் பேசும் இந்த அரசு எமது பிள்ளைகளை விடுவிக்க நடவ டிக்கை எடுக்கவில்லை. வன்னி யில் இடம்பெற்ற இனப்படு கொலையைமூடிமறைத்துவெளி நாடுகளுக்கு அரசு ஏமாற்று வித்தைகளைக் காட்டுகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர் களை நாம் தேடியலைகிறோம். போராட்டங்களை நடத்துகின் றோம். ஆனால் இதுவரை அரசு உருப்படியான எந்தத் தீர் வையும் பெற்றுத் தரவில்லை. மாறாக எம்மை ஆற்றுப்படுத் துவதாக வெளிநாடுகளுக்கு பரப்புரை செய்து வெளிநாட்டு நிதிகளைப் பெற்று பல்வேறு உளச் செயற்றிட்டங்களில் எம்மை கலந்து கொள்ளச்செய் கிறது. அவற்றின் மூலமாக எமக்கு அரசு பல்வேறு வடிவங் களில் மூளைச்சலவை செய் கின்றது.

இரட்டை அர்த்தங்களில் எமக்கு புரியாத மொழிகளில் காணா மல் ஆக்கப்பட்டவர்களின் விவ ரங்களைக் கோரி கையொப்பம் பெறுகின்றனர். வாழ்வாதார உதவி தருகின்றோம் எனக்கூறி ஆடு, கோழி தந்து அரசு எம்மைத் தொடர்ந்து ஏமாற்று கிறது. வாழ்வாதார உதவிகள் எமது உளத்தை திருப்திப் படுத்தாது. எமது பிள்ளைகள் கிடைக்கும்வரை போராடு வோம்- என்று அவர்கள் தெரிவித்தனர்.

(ற-4,402)






பிரசித்திபெற்ற முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத் திருவிழா நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமானது. தான்தோன்றீஸ்வரர் பாரம் பரியமாக வேட்டையாடும் இடத்துக்குச் சென்று வேட்டையாடி மாலை 6 மணிக்கு மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தார். (ற-4,ரி7)

# பெண்ணின் உடல் மீட்பு

தென்மராட்சி, ஜூலை 17

தென்மராட்சி தெற்கு, மறவன் புலோ கடலேரியில் பெண் ஒரு வரின் உடல் கரையொதுங்கி யுள்ளது.



சுமார் 30 முதல் 35 வயதுடைய பெண்ணின் உடல் பழுதடைந் ததால் அடையாளம் காண முடியாதுள்ளது. நேற்றுக் காலை பொலிஸாருக்குப் பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இது தொடர்பாக பொலிஸார் நீதி வானிடம் அறிக்கை சமர்ப் பித்தனர். சாவு தொடர்பான விசார ணையை பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார். (ற-9)


marico
Parachute
ADVANSED
Jasmine
மல்லிகையின் குணநலன்களுடன் சுத்தமான தேங்காயின் போசாக்கும் அடங்கிய ஒட்டும் தன்மையற்ற எயார் ஒயில்
பெரசூட் எட்வான்ஸ்ட் ஜெஸ்மின் மூலம்
சோர்வான தன்மையை நீக்கி கூந்தலை நமக்கேற்றவாறு சுதந்திரமாய் வாரும் விதத்தில் மின்னிடும் கூந்தலை பெற்றுத்தரும்.
Parachute
ADVANSED
Jasmine
NON-STICKY COCONUT HAIR OIL
Distributed by:
Ceylon & Foreign Trades PLC.
No. 414/18, K.Cyril C. Perera Mawatha, Colombo 13. Tele: 0114 343 444
Ayurvedic Board Approval Number: 02/01/PE/12/396
Available in Supermarkets, Groceries and Pharmacies Islandwide

# கூட்டு எதிரணியில் இருந்து உறுப்பினர்கள் விலகல்

கூட்டு எதிரணியில் இருந்து இரு உறுப்பினர்கள் வெளியேறவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிபால கம்லத்தும், பிரேமலால் ஜயசேகரவும் கூட்டு எதிரணிச் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியுள்ளனர் என்று தெரியவருகின்றது. கண்டியில் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் ஆரம்பிக்கவுள்ளநடைபவனி முன்னேற்பாட்டுக்கூட்டம் பத்திரமுல்லையில் நடை பெற்றது. அதில் குறித்த இருவரும் கலந்து கொள்ளவில்லை. பத்திரமுல்லைக் கூட்டத்திலும் இது பேசப்பட்டுள்ளது. அவர்கள் எதிர்வரும் நாள்களில் அரசுடன் இணைய வுள்ளனர் என்றும் மகிந்தகுழுவில் உள்ள மூத்த உறுப்பினர் ஒருவர் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)




உலகளாவிய "Great Place to Work" குறியீட்டினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பெரிய நிறுவனமாகிய சிங்கர், தொழில் தேடுவோரினால் விரும்பி நாடப்படும் இடமாகும். நம்பிக்கையான தரச்சிறப்பை 160 ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கும் பாரம்பரியத்தைக் கொண்ட சிங்கர் தனது தொழில் ஸ்தலத்தில் நம்பிக்கைக் கலாசாரத்தை விதைத்துள்ளது. சிங்கர், சிசில், சோனி, சம்சுங், டெல், ஹுவாவி, ஹித்தாச்சி, பிலிப்ஸ், வேர்ல்பூல், கென்வூட் போன்ற புகழ்பெற்ற வர்த்தகப் பெயர்களிலான சாதனங்களை விநியோகிப்பதில் எமது ஊழியர்கள் பெருமையடைகின்றனர். தொழிற்றுறையின் அதிசிறந்த தகவல் தொடர்பு அமைப்பு முதல் சூழல் நலமான உற்பத்தி வசதிகள் வரை சகலவற்றிலும் புத்தாக்கமும் நிலைபெறு தன்மையும் எமக்கு உந்துதலாக அமைகின்றன. நாட்டிலேயே மிகப் பெரிய எமது விற்பனை மற்றும் சேவை வலையமைப்பினால் இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்கள் நன்மையடைகின்றனர். எமது வலையமைப்பில் 410 விற்பனை நிலையங்கள், 12 சேவை நிலையங்கள் மற்றும் 20 சிங்கர் ஃபினான்ஸ் கிளைகள் இடம்பெறுகின்றன. அவற்றில் சமூகத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இலங்கையின் பத்து தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளுள் ஒன்றாகவும் இலங்கையின் மிகச் சிறந்த வர்த்தகப் பெயராகவும் சிங்கர் விளங்குகின்றது.

## விற்பனை ஊக்குவிப்பு அலுவர்கள்

**எதிர்பார்க்கபடும் தகுதிகள்**

- க.பொ.த. (உயர்தர மற்றும் சாதாரணதர) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள்.
- சந்தைப்படுத்தல் தொடர்பான தகைமை விரும்பத்தக்கது.
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சரளமாகப் பேச வேண்டும்.
- சிங்கள அறிவு அனுகூலமானது.
- விளையாட்டு போன்ற புற நடவடிக்கைகளில் திறமை அனுகூலமானது.
- வயது – 20க்கும் 26க்கும் இடையே.
- மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் அவசியம்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு கவர்ச்சியான ஊதியத் திட்டமும் நிறுவனத்தின் ஏனைய வழமையான சலுகைகளும் காத்திருக்கிறன.

## தொழில்நுட்பவியலாளர்கள் - மின்சார சாதனங்கள்

**எதிர்பார்க்கபடும் தகுதிகள்**

- க.பொ.த. (சாதாரணதர) தகைமை.
- குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி இயந்திரத் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய சான்றிதழ் கற்கை நெறியின் NVQ 03ஆம் மட்டத்திலான தகைமையை அல்லது NAITA, ATI, CGTTI அல்லது தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பத் தேர்ச்சிச் சான்றிதளைக் கொண்டிருப்பது மிகவும் அனுகூலமானது.
- வளிசீராக்கி மற்றும் ஏனைய மின்சார சாதனங்களின் பழுதுபார்ப்பில் குறைந்தபட்சம் 01 வருடகால அனுபவம்.
- மின்சார சாதனங்களின் விபரத்தொகுப்பு மற்றும் விபரக்குறிப்புக்களை வாசித்து விளங்கிக்கொள்ளும் திறமை.
- வயது – 22க்கும் 35க்கும் இடையே.

தெரிவு செய்யப்படுபவர்கள், நியமிக்கப்படுவதற்கு முன்னர் பொது முகாமைத்துவச் செயற்பாடுகளில் பயிற்சி பெறுவார்கள்.

சரியான விண்ணப்பதாரர்களுக்குக் கவர்ச்சியான ஊதியத் திட்டம் காத்திருக்கிறது.

உங்களுக்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கான தகுதிகள் இருந்தால், உங்கள் உறவினரல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களையும் உள்ளடக்கிய உங்கள் விண்ணப்பத்தை அடுத்த 7 தினங்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது **shehanw@singersl.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயக் கட்டத்தில் குறிப்பிடவும். **www.singersl.com** என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் நீங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

GREAT PLACE TO WORK
Best companies to work for 2016
Sri Lanka

SINGER
Trusted Excellence

உதவி முகாமையாளர் - மனித வளங்கள்
சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. | 80, நவம் மாவத்தை, கொழும்பு 2.

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

## திருமதி தனேஸ்வரி லோறன்ஸ்

(B.A, Dip. in Edu.)




உப அதிபர் - யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

**சேவை விவரம்:**

- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை
  14.12.1987 - 12.03.1989
- யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
  13.03.1989 - 15.07.2016

ஆசிரியப் பணியில் 29 வருடங்கள் அரும்பணியாற்றி எமது பாடசாலையில் 27 வருடங்கள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக தன்னை அர்ப்பணித்து மாணவர் உயர்வில் ஒளி தீபமாய் விளங்கிய எமது உப அதிபர் 15.07.2016 வெள்ளிக்கிழமை தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்று இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை மணிவிழா காணும் விழா நாயகியை இனிதே வாழ்த்தி ஓய்வுகாலம் சிறப்புற அமைய இறையருள் வேண்டி ஆசித்து நிற்கின்றோம்.

**வாழ்த்துவோர்:** பாடசாலைச் சமூகம், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

**யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**
**யாழ்ப்பாணம்.**

(சி.24208) (13.18)

செலிங்கோ லை.்.ப் பிரணாம வீரர்கள்

## செலிங்கோ லை.்.ப் உடன் வெற்றி பெறுவதற்கான வரத்தை உங்கள் பிள்ளைக்கும் பெற்றுக்கொடுங்கள்

இம் முறை 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு உங்கள் பிள்ளை தோற்றுவதாயின், எங்களுடன் பதிவு செய்து விஷேட வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுங்கள்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் அனைத்து பிள்ளைகளுக்கும் செலிங்கோ லை.்.ப் இடமிருந்து பெறுமதிமிக்க சான்றிதழ்.

செலிங்கோ லை.்.ப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுக்கொள்பவர்களின் பிள்ளைகளுக்கு விஷேட பரிசுகள்.

அகில இலங்கையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் 10* மாணவர்களுள் ஒருவராக உங்கள் பிள்ளையும் இருப்பின் அவருக்கு கல்வியைத் தொடர்வதற்காக ரூ. 50,000 வரை புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

பதிவு செய்வதற்கு அல்லது மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள் (011) 2 461 461 இல்லையெனில் அருகிலுள்ள செலிங்கோ லை.்.ப் கிளைக்கு செல்லுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

வாழ்க்கை, பாசம், பாதுகாப்பு.



தொடர்ச்சியாக 10 வருடங்களாக மக்கள் அபிமானம் பெற்ற காப்புறுதி நிறுவனம்

PHOENIX OGILVY

## செலிங்கோ லை.்.ப்




செலிங்கோ லை.்.ப் காப்புறுதி நிறுவனம், செலிங்கோ லை.்.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PB5183 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com

## விற்பனையாளர் தேவை

மீன்பிடி வலைகள், மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடிக்குரிய கயிறுகள் உற்பத்தியாளர்களாகிய மல்பா றோப்ஸ் நிறுவனத்துக்கு மீன்பிடி உபகரணங்கள் விற்பனை அனுபவம் உள்ள விற்பனையாளர்கள் தேவை. சம்பந்தப்பட்டவர்கள் மீனவ சமுதாயத்துடன் தொடர்புடையவர்கள் விரும்பத்தக்கது. குறிப்பாக நாவாந்துறை, குருநகர், பாஷையூர், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, மாதகல், சேந்தாங்குளம், கீரிமலை, தாளையடி, உடுத்துறை, செம்பியன்பற்று, மருதங்கேணி போன்ற இடங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிப்பவர்கள் சுயவிவரக்கோவையுடன் 212, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

**குறிப்பு: தயவு செய்து தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.**

**யாழ்.பிராந்திய முகாமையாளர்: 077 730 2164**

## வேலைவாய்ப்புக்கள் - யாழ்ப்பாணம்



# LAB SUPERVISOR/ LAB IN CHARGE

- BSc (MLS)/ Diploma -MLT SLMC இல் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் குறித்த துறையில் 3-5 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல்.
- க.பொ.த.(உ/த) இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல், சார்ந்த துறையில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
- கணினி அறிவில் உயர்தேர்ச்சி பெற்றிருத்தல்
- சுதந்திரமாக வேலை செய்யக் கூடிய ஆற்றல்.

# MEDICAL LABORATORY TECHNICIANS

01. BSc (MLS)/Diploma- MLT உடன் SLMC உம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
02. MLT பயிலுநர் - க/பொ/த (உ/த) உயிரியல் விஞ்ஞானத்தில் 2 பாடங்கள் சித்தி
03. விண்ணப்பதாரிகள் ஆய்வுகூட வேலையில் முன்னனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

- வேலைவாய்ப்புக்கள் யாழ்ப்பாணத்தில்
- கவர்ச்சிகரமான சம்பள அளவுத்திட்டங்களும் விசேட சலுகைகளும் வழங்கப்படும்.
- நல்ல வேலை அனுபவமுள்ளவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

◆ **தயவுசெய்து விளம்பரம் கிடைக்கப்பெற்று 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.**

HR Department
NAWALOKA METROPOLIS LABORATORIES (PVT)LIMITED
NO.25, NARAHENPITA ROAD, NAWALA
E-Mail: hrc.nm@metropolisindia.com
NAWALOKA METROPOLIS

## யாழ்ப்பாணம் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிரதேச அலுவலகத்திற்கு கட்டடத்தை வாடகைக்கு பெறுவதற்கு விலை மனுக் கோரல்

தெரிவு செய்யப்படும் கட்டடமானது குறைந்தது இரண்டு வருட காலத்திற்கு ஒப்பந்தத்திற்கு உட்பட்டதாக அமையும். யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்கள் விரும்பத்தக்கது. கட்டடம் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு கொண்டிருத்தல் வேண்டும். தனியான மின்மானி பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டடம் தாபித்திருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.தெரிவு செய்யப்படும் கட்டடமானது அரச மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். வாடகைக்கு விட விரும்புவோர் பின்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினை நிரப்பி **உதவி ஆணையாளர், காணி உரித்து நிர்ணயத்திணைக்களம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு **8ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 2016** இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.

உதவி ஆணையாளர்,
காணி உரித்து நிர்ணயத்திணைக்களம்.
பலாலி வீதி, திருநெல்வேலி.
17.07.2016

### மாதிரி விண்ணப்பப் படிவம்

கட்டட உரிமையாளர் விவரம்
1) முழுப்பெயர்:
2) முகவரி:
3) தொலைபேசி இலக்கம்:
4) தேசிய ஆள் அடையாள இலக்கம்:

கட்டடம் தொடர்பான விவரம்
1) மாதாந்த வாடகைத் தொகை:
2) தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:
3) உரிய நகரத்தில் இருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ:
4) இடத்தின் விஸ்தீரணம்:
5) கட்டடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள்:
6) பாதுகாப்பு எல்லை தொடர்பான் விவரம்(மதில் / கம்பி வேலி)
7) வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கக் கூடிய வசதி:

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

## பதவி வெற்றிடங்கள்

**இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் Education நிறுவனத்தின் யாழ். கிளைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

Marketing Executive (School Leavers)
Senior Marketing Executive (within 1year Experience)

**Qualification**
* 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
* GCE (O/L, A/L)
* சிறந்த தொடர்பாடல் திறன் (தமிழ்/ஆங்கிலம்)

**Benefits**
- Basic Salary
  *Marketing Executive - 15,000/= +++
  *Senior Marketing Executive - 23,000/= +++
- Commision Payment
- Traveling Allowance
- Telephone Facilities
- Bike Allowance
- Incentives and over seas Trip
- Career Development (Managment Position within 6 months, After promotion salary package 42,500/=)

Contact : Branch Manager
Mr.G.Anthany
077 356 6835, 021 567 1130
www.pioneerhouselearning.com

Address:-
Pioneer house,
No.100,2nd Floor,
Manipay Road,Jaffna.

## ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCIES

**Graduates from recognized universities with teaching experience may apply.**

- Biology A/L - Tamil Medium
- Chemistry A/L - English/ Tamil Medium
- Physics A/L - Tamil Medium - (Contract)
- Science 6-11 - English Medium
- Bio System Technology A/L - Tamil Medium

Please send your Complete CV including the contact details of two non- related referees by post on or before 25th July 2016 to the address below. only shortlisted candidates will be called for an interview. Knowledge of IT will be an added qualification.

The Principal
St.John's College
Jaffna

## THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY & ST.JOHN'S COLLEGE, JAFFNA.

1. English Language Development Programme.
   A three month foundation course in english, covering the four skills of the Language
   Classes : Weekdays 3.30 p.m - 5.30 p.m
   Commencement : 25th July 2016
2. Pre-school & Primary Teacher Training (with Games, IT, English & Sinhala)
   A one year Diploma Course(250 hrs)
   Classes : 2nd & 4th Saturdays of each month, 8.00 a.m - 4.30p.m &Workshops during school vacations.
   Commencement : 25th July 2016
3. TKT (Teaching Knowledge Test) Cambridge University.
   TKT is a leading international qualification for teachers in english. Whether you teach English as a subject, or teach other subjects in the english medium, TKT will help you to improve your skills.
   Classes : Weekdays 3.30pm - 5.30pm
   Commencement : 25th July 2016
4. Sinhala Language
   (A) Spoken Sinhala - Level 1- (6 Months Course)
   (B) Second Language Sinhala for G.C.E (O/L) Examination.
   Covering G.C.E (O/L) syllabus & discussion of past question papers.
   Classes : Weekdays4.30p.m - 5.30p.m
   Commencement : 25th July 2016

Applications closing date on or before 23rd July, 2016
For more information contact:

The Revd.N.J.Gnanaponrajah
Principal,
St.John's College,
Jaffna.
Tel: (0094) 021 222 2432

S.Gobinath
Director,
The Jaffna Academy and School of Technology
Tel: (0094) 021 321 6006

# நாடகப் போட்டியின் நிறைவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும் சிறுவர் நாடகப் போட்டியின் நிறைவுப் போட்டி நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது என்று பாடசாலை அதிபர் எழில்வேந்தன் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நிகழ்வு றொமன்குக் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

தலைமைவிருந்தினராககுழந்தைம.சண்முகலிங்கம் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## விபுலானந்தர் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

சுவாமி விபுலானந்தர்விழா நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3மணிக்கு நடை பெறும்.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் இதனை ஏற்பாடு செய்துள்ளது என்று மன்றத்தின் பொதுச் செயலர் சி.தில்லை நடராஜா தெரிவித்தார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் 'உள்ளக்கமலம்' என்ற பொருளிலும், யாழ்.பல்கலைக்கழகவிரிவுரையாளர் சி.ரமணராஜா 'அன்பெனப்படுவது' என்னும் பொருளிலும், சைவப்புலவர் திருமதி சி.ஞானசூரியம் 'சைவசித்தாந்த' நோக்கில் விபுலானந்தரின் சிந்தனைகள் என்னும் பொருளிலும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செயலாளர் மதிசுதன் "இளம்சந்ததியினரின் நல்வாழ்வுக்கு விபுலாணந்தரின் அறிவுரைகள்"என்னும்பொருளிலும் சிறப்புரையாற்றுவர். மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் நாடாளுமன்றஉறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்டு இந்து ஒளிசுவாமிவிபுலாணந்தர்சிறப்பிதழை வெளியிடுவார். (ற-ரி)

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொட்டடி ,சீனிவாசகம் றோட்டில் 7 ¼ பரப்பு வெற்று ஆதனம் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

**077 171 1386**

### விற்பனைக்கு
மீசாலை மேற்கு பங்களா வீதியில் சுற்றுமதிலுடனும் சகல வசதிகளுடனும் கொண்ட ஆறு அறைகள் கொண்ட வீடும் 5¼ பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.

**076 703 1495**

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம்,வட்டுக்கோட்டை கிழக்கு, தாவளையில் உள்ள 5½ பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உள்ளது.

**078 817 0437, 076 728 8703**

### வீடு விற்பனைக்கு
சேச் ஒழுங்கை, அராலி வடக்கு, வட்டுக்கோட்டைப் பகுதியில் அமைதியான சூழலில் அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.

**077 248 4360**

### விற்பனைக்கு
நியூசிலாந்து நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த கதவுகள், மின்சார உபகரணங்கள் விற்பனைக்கு உள்ளன. (J.2967)(12.18.)

**076 688 0867, 077 220 8414**

### காணி விற்பனைக்குண்டு
கோப்பாய், இராச வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பெற்றோல் செற் அல்லது கடைகட்ட உகந்த இடம்

**076 558 7107**

### வீடு விற்பனை
யாழ், கே.கே.எஸ் வீதி கொக்குவிலில் 2 பரப்புக் காணியுடன் கூடிய மாடிவீடு உடன் விற்பனைக்கு உண்டு.

**076 726 9953**

FLEX Graphic

## தேவை

### வீடு வாடகைக்குத் தேவை
அரச உத்தியோகத்தர்களான சிறுகுடும்பத்திற்கு வசதியான வீடு வாடகைக்குத் தேவை. உடுவில், இணுவில்,உரும்பிராய், கோண்டாவில் விரும்பத்தக்கது.

**077 614 6361**

### மணமகள் தேவை
இந்து குடும்பம்,1982 திருவாதிரை 2 ஆம் பாதம் 7 இல் செவ்வாய்.67 பாவம் (மூன்று சுற்று) வங்கியில் கடமைபுரியும் மணமகனுக்கு அரச உத்தியோகமுடைய மணமகள் தேவை. பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**077 909 7055, 021 205 7055**

### தையல் பெண்கள் தேவை
கொக்குவில் பகுதியில் உள்ள பெண்களால் நடத்தப்படும் வீட்டில் இயங்கும் தையலகத்திற்கு நன்கு பயிற்சியுள்ள தையல் பெண்கள் தேவை.(கட்டிங் தெரிய வேண்டிய அவசியமில்லை)

**076 639 9277**

### வீட்டுப்பணிப்பெண் தேவை
வட - கிழக்கு முறையில் சமையல் செய்யக் கூடிய இரு பணிப்பெண்கள் உடன் தேவை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாங்கள் தற்போது கொழும்பில் வசிப்பதால் சமைப்பதற்கும் சுத்தம் செய்யவும் இரு பெண்கள் உடன் தேவை. தனியறை வசதியுடன் தகுதிக்கேற்ப நல்ல சம்பளம் வழங்கப்படும். வயது 20- 58

**011 529 9148** (4/24429)(11.18)

### மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த பரணி நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற கிரக பாவம் 60 உடைய பட்டதாரி ஆசிரியை மணப் பெண்ணிற்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 125 0002**

### வேலையாள்கள் தேவை
இரும்புக்கடை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. கொக்குவில்,தாவடி,இணுவில் ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

**0767528957**

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1982 உத்தரட்டாதி 7இல் செவ்வாய், சனி உடைய உயரம் - 160CM , கிரகபாவம் 24 ஆசிரியர் (BSc, M.Sc) மணமகனுக்கு அரச தொழில்புரியும் மணமகள் தேவை. 1986 இற்குப் பின் பிறந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: **077 227 7309**

### மணமக்கள் தேவை
36 வயது. யாழ்.இந்து கௌரவ குடும்பம், என்ஜினியர் மணமகன் Denmark Citizen / 31 வயது Accountant மற்றும் / சொந்த வியாபாரம் 32 வயது (8இல் செவ்வாய்) ஆகிய Canada Citizen அழகிய மணமகன்களுக்கு உள்நாட்டில் மணமகள்கள் தேவை.Sponsor செய்யப்படும்.

33 வயது Canada Citizen Doctor (28வயது) Accountant Canada PR ஆகிய மணமகள்களுக்குப் பொருத்தமான பட்டதாரி மணமகன்கள் உடன் தேவை.

**077 552 8882/ 066 571 1555**

## ஏனையவை

### வாடகைக்கு
பலாலிறோட், பரமேஸ்வரா சந்திக்கு அருகில் அறைகள் வாடகைக்கு உள்ளன.

**077 570 1963**

### வாடகைக்கு அறைகள்
யாழ் வளாகத்துக்கு அண்மையில் ஆண் மாணவர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உண்டு (J.2917)(14,17,18)

தொடர்பு: **076 803 5262**

### வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பம் வசிப்பதற்கு தெல்லிப்பழையிலும் அதனை அண்டிய பிரதேசத்திலும் வீடு வாடகைக்குத் தேவை.

**077 348 5856 , 072 752 1718**

### Laconda - Gathering Machine
Laconda- ஒன்று சேர்க்கும் இயந்திரம். 12 தானியங்கி நிலையங்களைப் பயன்படுத்தும் கடதாசி சேகரிக்கும் இயந்திரம். (Collator). Size - 14"x 19"

**077 736 6946** (4/24486)(11.17.18)

### SORK Printing Machine
SORK- அச்சு இயந்திரம் சாம்பல் நிறம். Original Heidelberg 19" x 25 ½" நிற அச்சு இயந்திரம் குரோம் சிலிண்டர் உடையது.

**077 736 6946** (4/24485)(11.17.18)

### ஜோதிடம்
மலையாள மாந்திரீகம் 65 வருட நம்பகரமான சேவை (100% கெரண்டி உத்தரவாதத்துடன்) வீடு,தொழில், வியாபாரம் விருத்தி பெற ஆண்/பெண் வசியம், பிரிந்து சென்ற காதலனை/ காதலியை உங்கள் வசம் கொண்டுவர செய்வினை வெட்டுதல், காணி விரைவாக விற்க, வீட்டில் ஒற்றுமையின்மை அனைத்திற்கும் தீர்வு நிச்சயம்.

ஓம் சக்தி Galle Road Wellawatte
076 652 7979

### வீட்டுபணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. (J.2985)(14,17,18)

தொடர்பு: **077 986 5777**

### வீடு வாடகைக்கு
மானிப்பாய் வீதியில் ஐந்து சந்தியில் 6 பெரிய அறைகள், பெரியஹோல் உடைய வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். வாகன தரிப்பிடங்கள் உள்ளபடியால் தனியார் நிறுவனங்களுக்கும் ஏனைய காரியாலயங்களுக்கும் உகந்த இடம் (J.2939)(14,17,18)

**077 511 0620**

### வேலைவாய்ப்பு
முன்மாதிரியான பொய்யின்றி உழைப்புக்கேற்ப சம்பளம் பெற ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு உண்டு. நூடில்ஸ், பால்மா, டொபி, டிபிடிபி ஆகிய பிரிவுகளுக்குச் சம்பளம் (25,000- 35,000) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். வயது 18-50. OT உடன் நாள்சம்பளம் 1500/=

**072 223 1518, 076 701 5219**

எமது நாட்டின் தலைநகரான கொழும்பு, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கிளீனிங் கேட்டரிங், லோன்றி, கிச்சின் போன்ற பகுதிகளுக்கு ஆண்,பெண் இருபாலாரும் தேவை. முற்கொடுப்பனவு ரூ.25,000- 30,000 வரை. மூன்று மாத காலங்களின் பின்னர் நிரந்தரமாக்கப்படுவதுடன் ரூ.45,000 - 75,000 வரை சம்பளம் வழங்கப்படும். வயதுஎல்லை 18 - 40 வரை.

**075 718 4659, 071 921 5892**

இலங்கையில் பிரசித்திபெற்ற பிரபலமான நிட்டம்பு, பஸ்யால, தெமட்டகொட, வத்தளை, பாணதுறை, சீதுவை போன்ற தொழிற்சாலைகளுக்கு உடனடி வேலையாள்கள் தேவை. உணவு, தங்கும் வசதிகள் இலவசம். நாள்சம்பளம், கிழமை சம்பளம், மாத சம்பளமாக ரூபா.38,000 பெற்றுக்கொள்ள முடியும். வந்தவுடனே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

**072 389 6106, 077 636 3156**

உழைப்புக்கு முதனிடம். வருமானம் பெருகீடும். 1000/=, 1500/= நாள், கிழமை, மாத சம்பளம். நண்பர்கள், தம்பதிகள் ஒரே இடத்தில் தொழில் புரியலாம். பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் (லேபல் / பேக்கிங்) சாரதி.Hotel O/L, A/L தகைமைகளுக்கு ஏற்ப தொழில். தங்குமிடம், சாப்பாடு இலவசம். வயது 18 - 50. ஆண்/ பெண் இருபாலாரும்.

**072 726 7508**

பிஸ்கட், சோசஜஸ், தேங்காய் பால்மா, சொக்லட் ஆகிய பிரசித்திபெற்ற தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும் கடவத்த, ஓரண, பஞ்சிகாவத்த, தெமட்டகொட, வத்தல, ஞாயல ஆகிய பிரதேசங்களில் வந்த நாளிலே வேலை, உணவு, தங்குமிடம், போக்குவரத்துச் சேவை ஆகியன குறைந்த விலையில் நாள் சம்பளம்,1100/=, 1200/=, 1300/=, 1500/=. (18-60 ஆண், பெண்)

**076 571 5235** (Gm/2957)(11.17.18)

### தவறிவிட்டது
புளியங்கூடல், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தி.அருளானந்தம் என்பவரின் தேசிய அ.அ. (610804365V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் 14.07.2016 அன்று ஆஸ்பத்திரி வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

**077 074 7624**

### தோட்ட வேலை
ஓமந்தையில் உள்ள தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்ய ஒருவர் தேவை. அனைத்து வசதிகளும் உண்டு.

**077 772 9721**

### Majestic Cineplex Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் -போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்

CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

### Olanro Hotel Negombo
1. இங்கிருந்து வெறும் 15 நிமிடங்களில் கட்டுநாயக்க விமானநிலையத்துக்குச் சென்றடையலாம்.
2. நீச்சல் தடாகங்களுடன் கூடிய 10 குளிரூட்டப்பட்ட அறைகள்
3. சுவையான உணவு
4. வசதியான இடம்
5. விமான நிலையம் அழைத்துச் செல்வதற்குச் சிறப்பான விகிதங்கள் / குறுகிய போக்குவரத்துக்களும் ஏற்பாடு செய்து தரமுடியும்.
6. தாமதமாக வந்து ஓய்வெடுக்க சிறந்த இடம் / புறப்படும் முன் உங்கள் நீண்ட பயணத்தைத் தொடங்க.

பதிவுகளுக்கு: **031 223 3950, 071 7508485**
hotelo@gmail.com
Olanro Hotel, No.105,Anderson Road, Negombo

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி விஜயலக்சுமி கணேசமூர்த்தி

யாழ்.வடபால், பருத்தித்துறை, தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும், பண்டாரிக்குளம், வவுனியா நகரில் வசித்து வந்தவருமாகிய திருமதி விஜயலக்சுமி கணேசமூர்த்தியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்னார் காலஞ்சென்ற கணேசமூர்த்தி (கொழும்புத்துறைமுகக் காரியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயசங்கர், விஜயசங்கர், இராஜசங்கர் ஆகியோரின் தாயாருமாவார்.


அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் 15.07.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் வவுனியா பண்டாரிக்குளம் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல.19, பண்டாரிக்குளம்,
வவுனியா.

க. ஜெயசங்கர் (மகன்), க.விஜயசங்கர் (மகன்),
க.இராஜசங்கர் (மகன்)

# மரண அறிவித்தல்

## திருமதி சிதம்பரநாயகி கார்த்திகேசு



சிறுப்பிட்டி கிழக்கு, அரசன்திடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரநாயகி கார்த்திகேசு 15.07.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கைலாயம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, முத்துப்பிள்ளை மற்றும் இரத்தினசபாபதி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, மூத்ததம்பி, சபாபதி, சோதிப்பிள்ளை மற்றும் தங்கமலர், மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,கமலாதேவி, திருச்செந்தூர்நாதன், கணேசலிங்கம், சூரியகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேந்திரம், தயாளினி, யோகேஸ்வரி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசுயந்தன், திலக்சன், திவாகரன்,பிரவீன், தர்சிகா, சயன், பானுப்பிரியன், சரண்யா, காருண்யா, தாருண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்தன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு,
அரசன்திடல், நீர்வேலி.

(J/2986 (11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 424 1926**

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



## வைத்திலிங்கம் இலட்சுமணன் (பனங்கட்டி)

[17.07.2016]


ஐயா !
வாழ்வாங்கு வாழ உயிர் தந்தாய்.....
உறவென்னும் உடல் தந்தாய்.....
கல்வியெனும் சிறகு தந்தாய்.....
பண்பெனும் மாலை தந்தாய்.....
அன்பெனும் ஆடை தந்தாய்.....
ஹற்றம் எனும் ஏணி தந்தாய்.....
ஐயா உருவத் தெய்வமாய் எம்முடன் இருந்தாய்.....
அருவத் தெய்வமாய் சடுதியில் வானுறைந்தாய்.....
மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்...
ஏழேழு ஜென்மங்களிற்கும் உம்....
மக்களாய் தோன்றும் வரம் தருவாய் ஐயா.....

*தந்தை காலடி எமது கோயில்*

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
இலட்சுமணன் காட்வெயார்.
**கோயில் வீதி,மல்லாகம்.**

பிறப்பு
28.07.1939

இறப்பு
17.07.2011



பிரேஸில் நாட்டின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் டவினோ சேனாவும், கிழக்கு மாகாண முதலைமைச்சர் ஹபீஷ் நஸீர் அகட்டும் கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேசினர். சந்திப்பு கிழக்கு முதமைச்சர் பணிமனையில் நடந்தது. மாகாணசபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வரும், முதலமைச்சரின் செயலாளர் சந்திப்பில் இருந்தனர். கிழக்கு மாகாணத்துக்கான முதலீடுகள், திருகோணமலை மாவட்டத்தில் செய்யப்பட இருக்கின்ற அபிருத்திகள் குறித்து அதில் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-40)

## அறிவிக்கப்பட்ட விலைகளில் பொருள்கள் கிடைப்பதில்லை

### நுகர்வோர் உரிமையை பாதுகாக்கும் தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 17

16 அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த விலைகளில் நுகர்வோருக்குப் பொருள்கள் கிடைப்பதில்லை.

இவ்வாறு நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் குற்றச்சாட்டுகின்றன.

இந்த நிலைமையால் தரம் குறைந்த பொருள்கள் சந்தைக்கு வரும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது. முன்னரும் அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் பல சலுகைகள் வழங்கப்பட்டன. அவை செயற்படுத்தப்படவில்லை- என்று அந்த இயக்கம் தெரிவித்துள்ளது. (ற-4)

BRITISH COUNCIL
அட்வென்ஜர் இங்கிலீஷ் கிட்ஸ் அன் டீன்ஸ்
UK Express இல் ஏற தயாராகுங்கள்
ஆவணி 3 தொடக்கம் ஆவணி 28 2016 வரை
AUG 2016
www.britishcouncil.lk

இலங்கையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும்
ஓர் சிறந்த வாய்ப்பு
வட்டி இல்லை ஜொலி அதிகம்
இக்கொடுப்பனவு அனைத்து பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள், பல்கலைகழகங்கள் மற்றும் பணிப்புரிந்துக் கொண்டே கல்வி கற்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.
4 0% 36
LAPTOP + TABLET
Windows 10
PREDATOR
acer
TABLET + PC IN ONE DEVICE
Abans

# சட்டவிரோத வர்த்தகம் வர்த்தகர்கள் கைது

மட்டக்களப்பு, ஜூலை 17
மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் தராசுகளைப் பயன்படுத்தி வர்த்தகத்தில் ஈடுபட்ட 20 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏழு வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றுஅளவீடு மற்றும் எடை அளக்கும் கருவிகள் தொடர்பான திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் ஏ.எல். நௌசாத் தெரிவித்தார்.

திணைக்களத்தின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்த வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் கூறினார். (ற)

# தகவல் அறியும் சட்டம் பொது மக்களுக்கானது

## தகவல் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
தகவல் அறியும் சட்டத்தால் ஊடகவியலாளர்களுக்கு எந்தப் பலனும் இல்லை.

இவ்வாறு அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
தகவல் அறியும் சட்டம் ஊடகவியலாளர்களுக்கானது என்று தவறான தகவல்கள் வெளியாகியது.

அது பொதுமக்களுக்காவே சட்டமாக்கப்பட்டது. மக்களே தகவல்களைக் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

ஊடகவியலாளர்கள் வழமை போன்று எவ்வாறாவது தகவல்களைப் பெற்றுக்கொள்வார்கள். தகவல் அறியும் சட்டத்தின் மூலம் ஒரு தகவலைப் பெற 14 நாள்கள் எடுக்கும்.

இதனால் ஊடகவியலாளர்களுக்கு நன்மையில்லை.

தமது பிள்ளையை ஏன் பாடசாலையில் இணைத்துக் கொள்ளவில்லை?, இந்த பாதையை நிர்மாணிக்க எவ்வளவு செலவானது?, வைத்தியசாலைக்கு எவ்வளவு செலவானது? மத்தள விமான நிலையம் மூலம் என்ன பிரயோசனம்? போன்ற, மக்களின் வரிப் பணத்தின் மூலம் அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார்.(ற-4)

# மக்கள் கவனத்தைக் கலைக்க கைதுகள் செய்கின்றது அரசு

## சாடுகின்றார் மகிந்த எம்.பி.

கொழும்பு, ஜூலை 17
அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவில் இருந்து மக்களின் கவனத்தைத் திருப்பவே அரசியல்வாதிகளின் கைது நடைபெறுகின்றது.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச.

அவர் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசுக்கு எதிராகச் செயற்படும் அரசியல்வாதிகள் கைது செய்யப்படுகின்றனர். இன்று எவர் கைது செய்யப்படுகின்றார்?, நாளை எவர் கைது செய்யப்படப் போகின்றார்?, அவரைப் பிடிப்பார்களா? இவரைப் பிடிப்பார்களா? என்று மக்கள் இப்போது நினைத்தவாறு உள்ளனர். அவர்களின் கவனத்தைக் கலைப்பதற்கு அரசு செய்யும் சதியே கைதுகள்- என்றார். (ற-4)

# மீனவர் பிரச்சினையை ஆராய மகிந்தவுக்கு இந்தியா அழைப்பு

கொழும்பு, ஜூலை 17
இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது தொடர்பில் பேச்சு நடத்த, மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது என்று தெரியவருகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான 9ஆவது கூட்டு ஆணைக்குழு மாநாடு கொழும்பில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றது. மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது என்று இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் அந்தச் சந்தர்ப்பத்தில் தீர்மானம் எடுத்திருந்தனர்.

இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர அழைக்கப்பட்டு, மீனவர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தப்பட்டது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச் சாளர் ரி விகாஸ் ஸ்வரூப் தற்போது தெரிவித்தார்.

இலங்கை – இந்திய மீனவர்களின் இருதரப்புப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து இந்த விவகாரத்தில் உரிய தீர்வுகாண’முயற்சி எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# நடைபவனிக்கும் சு.கவுக்கும் எந்தவொரு தொடர்புமில்லை

## கட்சியின் செயலாளர் துமிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி நடை பெறவுள்ள நடைபவனிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வதந்திகளை நம்ப வேண்டாம்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
அரசுக்கு எதிராகவோ, சார்பாகவோ எந்தவொரு நடைபவனியையும் நடத்துவதற்கு கட்சி தீர்மானம் எடுக்கவில்லை. கூட்டு எதிர்க் கட்சியில் உள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பொய்ப் பரப்புரைகளைச் செய்கின்றனர். கட்சிக்கும் நடைபவனிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை- என்றார். (ற-4)

# துருக்கியில் உள்ள இலங்கையர் விவரங்கள் அறிய தொடர்பு எண்

கொழும்பு, ஜூலை 17
துருக்கியில் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக துருக்கிக்கான இலங்கைத் தூதரகம் தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிவித்துள்ளது.

00905340102105 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து, நிலைமைகளை அறிந்து கொள்ள முடியும் என்று தெரிவித்தது.

துருக்கில் இராணுவப் புரட்சி ஏற்பட்டதை அடுத்து, அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. தலைநகர் அங்காராவில் துப்பாக்கிச் சூடுகளும், பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டது என்று தற்போது துருக்கி அரசு அறிவித்தது. அங்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

அங்கு சமூக வலைத் தளங்கள் முடக்கப்பட்டன. அங்குள்ள இலங்கையர்களைப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று இலங்கை அரசு அறிவுறுத்தியது. (ற-4)

STUDY IN
MOST POPULAR
DESTINATIONS
ADVENTUS
EDUCATION
Infinite Opportunities

USA
The land of opportunities, get scholarships and up to 3 years of post study work visa.
UK
Earn your prestigious degree in UK, a high-quality education that will open doors for your future and benefit your career
CANADA
Innovative and Abundant Research Opportunities in Canada and post study work visa up to 3 years.
EUROPE
Europe provides an affordable education system for international students comparing to other commonwealth countries.
Contact us to get your admissions for next intake
ADVENTUS EDUCATION
445A, 4th Floor, A T Caoray Building,
Galle Road, Colombo 3
www.adventuseducation.com
Rinali- 077 0771222
studentadvisor@adventuseducation.com
Hindusha- 077 7794377
studynorthamerica@adventuseducation.com

# தமிழ் மக்களது நிலங்களை பேரினவாத அரசு சூட்சுமமாய் அபகரிப்பு

முட்கம்பிகள் அமைத்திருந்தாலும், சில இடங்கள் சூனியப்பிரதேசம்போல் அமைந்துள்ளது. படையினர் அந்த இடங்களின் உரிமையாளர்களை அங்கு வீடமைக்க அனுமதிக்கவில்லை.

இவ்வாறு ஏ-9 வீதியில் முறிகண்டிக் காட்டை அண்டிய பகுதியின் பல ஆயிரம் ஏக்கர் காட்டுப்பகுதி நிலத்தை அபகரித்துள்ள படையினரின் பயன்பாட்டுக்கென காட்டின் நடுவே நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்கள் சீனாவின் பொருத்து வீட்டுத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ளதோடு, பலதார் வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்துடன் சகல விதமான வசதிவாய்ப்புக்களும் நடுக்காட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளுக்குள் ஒருபகுதி சிங்கள மக்களும் அடிக்கடி வந்து செல்கின்றனர். இதனால், இங்கு சிங்களக் குடும்பங்களும் குடியமர வந்துவிட்டனவா? என்ற பெரும் அச்சம் சூழ்ந்துள்ளது. இத்தகைய அச்சம், பெரும் அபாய எச்சரிக்கையாகவும் உள்ளது. நடுக்காட்டில் போதிய வசதி வாய்ப்பை உண்டுபண்ணியுள்ளோர் பிரதான வீதிகளில் இருந்து இறங்கும் வீதிகளை மட்டும் கிரவல் கொண்டே அமைத்துள்ளனர். இவ்வாறு செல்லும் குறுக்கு வீதியில் ஓர் குறுக்கு வீதி, முறிகண்டி குளத்தின் ஊடாகச் செல்வதனால் அக்குளத்தின் நீர் சற்றேனும் தேங்கி விடக்கூடாது என்பதற்காகவே குளக்கட்டை நடுவில் உடைத்து வெள்ள நீரை தமிழர்கள் குடியிருப்புக்குள் செல்ல வைத்துள்ளது இராணுவம்.

இவ்வாறு இடம்பெறும் சிங்கள மயமாக்கல் பகுதிகளை தமிழர்கள் எட்டியும் பார்த்து விடக்கூடாது என்பதற்காக காட்டைச் சுற்றி முட்கம்பி வேலி அமைத்துப் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.



இவற்றுக்கு அப்பால் வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களின் 613 ஏக்கர் நிலத்தைக் கடற்படையினரும் அதன் அருகில், வான்படையினரால் சுமார் 180 ஏக்கர் நிலமும் அபகரிக்கப்பட்டுள்ளமைபோன்று, இந்த மாவட்ட தமிழ் மக்களின் பூர்வீக நிலமான கேப்பாபிலவு கிராமத்தில் 700 ஏக்கர் நிலம் இன்றுவரை படையினரின் அபகரிப்பில் உண்டு. இங்கு வாழ்ந்த 313 குடும்பங்கள் அருகில் இருந்த காட்டுப்பகுதியில் அமைந்துள்ள மாதிரிக் கிராமத்தில் வாழ்கின்றனர்.

இவ்வாறு ஆண்டான் குளத்தில் 39 குடும்பங்களது 94 ஏக்கரும், திருக்கோணம்பட்டியில் 04 குடும்பங்களுக்கு 26 ஏக்கர் நிலமும், விண்ணகம் வயல்வெளியில் 3 குடும்பங்களது 18 ஏக்கரும், ஆத்தங்கடவைப் பிரதேசத்தில் 17 குடும்பங்களின் 124 ஏக்கர் நிலமும் படையினர் வசம் உள்ளதோடு மருதடிக்குள் வயல்வெளியில் 9 குடும்பங்களது 48 ஏக்கர் நிலமும் ஆலங்குளத்தில் 14 குடும்பங்களின் 74 ஏக்கர் நிலமும் படையினரின் அபகரிப்பிலேயே உள்ளது.

இதேபோன்று சாமிப்பில் கண்டலில் 26 குடும்பங்களின் 143 ஏக்கர் நிலமும் , ஈரக்கொழுந்தன் வெளியில் 8 குடும்பங்களுக்குச் சொந்தமான 71 ஏக்கரும் அபகரிக்கப்பட்டுள்ளதோடு, படலைக்கல்லில் 7 குடும்பங்களுக்கு உரித்தான 48 ஏக்கரும் , குந்தைகைக் குளத்தில் 24 குடும்பங்களது 48 ஏக்கரும் , செம்மலை புளியமுனையில் 125 குடும்பங்களின் 276 ஏக்கர் நிலப்பரப்பும் படையினர் வசமேயுள்ளது.

இவற்றைப் போன்றே நீராவியடியில் 36 குடும்பங்களுக்குச் சொந்தமான 163 ஏக்கரும் , உலாத்து வெளியில் 15 ஏக்கருடன் , நீராவி வயலில் 20 ஏக்கர் வயல் நிலமும் , வட்டுவனில் 10 ஏக்கர் நிலமுமாக மொத்தம் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

**அழிக்கப்படும் காட்டு வளமும் தென்னிலங்கைக்கு மரக் கடத்தலும்**

அபிவிருத்தி, பேச்சுச் சுதந்திரம், நிர்வாகச் சுதந்திரம் என மாயை காட்டும் இந்த சொல்லாட்சி அரசில், நல்லாட்சி என்ற போர்வையில் ஒரு மாவட்டமே விலைபேசி விற்பனை செய்யப்பட்ட வண்ணமுள்ளது.

இதற்கும் அப்பால். ஓர் அரசியல் வாதியின் ஆசீர்வாதத்துடன் காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு மரங்கள் தென்னிலங்கைக்கு கடத்தப்படுவதோடு இன்னொரு பகுதியின் ஆசீர்வாதத்துடன் தென்னிலங்கை மீனவர்களினால் இந்த மாவட்டத்தின் கடற்கரையின் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்படுகின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் போர் என்ற கண்ணுக்குத் தெரிந்த ஒரு எதிரியை தாம் துணிந்து எதிர்கொண்ட இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள், இன்று கண்ணுக்குப் புலப்படாத விதத்தில் எதிரிகளால் பல வழிகளிலும் ஆக்கிரமிப்பு, கொள்ளை , அடாத்தென ஆட்சியாளர்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெறும் மறைமுகப் போரை எதிர்கொண்டு தமது வாழ்வியலை கொண்டுநடத்த முடியாமல் தவிக்கின்றனர்.

அரசியல்வாதிகளாலும் ஒன்றுமே உருப்படியாக சாதிக்க முடியவில்லை. சர்வதேசமோ அல்லது இது தொடர்பில் புலம்பும் பொது அமைப்புக்களோ எதனையும் சாதிக்கவும் இல்லை. இதனால் இந்த மக்கள் முள்ளிவாய்க்காலின் அவலத்தை இன்றும் அனுபவித்த வண்ணமே உள்ளனர்.

இந்த அளவு நிலங்களையும் விழுங்கியுள்ள சிங்களம், தாம் வடக்கு மாகாணம் முழுவதுமே படையினரின் நித்திய பாவனைக்கான சிறுபகுதி நிலத்தை மட்டுமே வைத்துள்ளதாக வழமையான பொய்யுரைப்பை தொடர்ந்த வண்ணமே யுள்ளது.

---

## கூட்டுறவுச் சங்கம் இழுத்து மூடப்பட்டதேன்?

வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வகையில் யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வந்தது.

மேற்படி சங்கம் கடந்த 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக்கட்டியமைக்கப்பட்டு பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமாக மீண்டெழுந்து மிளிர்ந்து, தற்போது மீண்டும் பழையபடி இழுத்து மூடப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேற்படி சங்கம் கடந்த ஒருவருட காலமாக மீண்டெழ முடியாத அளவில் நஷ்டமடைந்ததுடன் சங்கத்தின் பல இலட்சம் ரூபா நிதிக்கு என்ன நடந்தது என்பது கூடத் தெரியாத நிலையில், கூட்டுறவுக் கணக்காய்வுப் பகுதியின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

பல ஊழியர்களது சம்பளம் வழங்கப்படவில்லை, வாகனங்கள், தளபாடங்கள், கால்நடைகள், நிலையான சொத்து, வங்கிஇருப்பு, நிலையான வைப்பு என்பவற்றுக்கு என்ன நேர்ந்தது என தெரியாதுள்ளமை மர்மமாக உள்ளது.

நான் அடிக்கடி புறோயிலர் கோழி கொள்வனவு- விற்பனவுக்காக அங்கு சென்று வருபவன். கடந்த வாரம் முழுவதும் குறித்த சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இயங்காத நிலையைக் (மூடிய நிலை) காணுகின்றேன்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நன்றாக இயங்கிய சங்கம், கடந்த வருடம் முழுவதுமாக நஷ்டத்தில் இயங்குவதற்கும் - நலிவு நிலையேற்படுவதற்கும் யார் காரணம்?

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், கூட்டுறவுப் பிரிவின் கணக்காய்வாளர், வடக்கு கூட்டுறவு அமைச்சர் என்போர் இதற்கு வகை கூறவேண்டும்.

மேலும் இதில் மோசடி, ஊழல் என்பவை இடம்பெற்றிருந்தால் இதனை ஆய்வு செய்து சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும். மோசடிகாரர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்து, இதற்கு முடிவு கட்டுவதுடன், 500 க் கும் மேற்பட்ட பண்ணைப் பயனாளிகளுக்கு வகை சொல்ல வேண்டும்.

**சிவ. ரங்கராஜன்.**
**சங்கானை கிழக்கு.**

## அம்மன் மனம் கொள்ளவேண்டும்

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயச் சூழலில் உட்கட்டுமானம் செய்வதற்கு நான் வெளிநாட்டில் இருந்து வந்து முயற்சித்தும் பிரயோசனம் ஏற்படாது போயுள்ளதை எண்ணி மனம் வருந்துகின்றேன்.

ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் சில கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அனுமதிகோரி மானிப்பாய் பிரதேச சபையை நாடிச் சென்றேன்.

அங்கிருந்த அதிகாரிகள் களையோடை கண்ணகை அம்மனது ஆதனங்கள் பதியப்பட வேண்டும் - என்றனர்.

ஆலய தர்மகர்த்தாவினதும், ஆலய பரம்பரை குருவினதும் அனுமதியுடன் வருமாறு என்னைத் திருப்பி அனுப்பி விட்டனர்.

எனவே இந்து கலாசார அமைச்சு, பிரதேச செயலகம், பிரதேசசபை என்பவை எனது ஊரிலுள்ள அம்மன் கோயிலின் கட்டுமானப் பணியை மேற்கொள்வதற்கான எனது விருப்பம் நிறைவேற உதவும் விதத்தில், ஆலய பரம்பரை குருவின் அனுமதி கிடைக்க வழியமைத்து உதவவேண்டும்.

**யு.கே.தாசன், மூளாய்**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.



# நல்லதொரு உலகம் செய்வோம்

தமிழர்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற வழி தவறிப்போகும் இளைஞர் சமுதாயத்தின் நிலை சிந்திக்கவே கவலைதரும் ஒன்றாக உருவெடுத்துள்ளது.கொடூர சிந்தனையுடன் சமுகத்துக்கு உதவாத வேலைகளைச் செய்யும் இந்த இளைஞர்கள், திடீரெனத்தோன்றியவர்கள் அல்லர்; இத்தகையவர்களை உருவாக்கிய பொறுப்பு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதற்குப் பின்னர் அவர்கள் வாழ்ந்த சமூகம் போன்றவற்றையே சாரும்.

"இன்றைய இளைஞர்கள் ஆடம்பரத்தையே விரும்புகிறார்கள். பெரியவர்களை மதிப்பதில்லை, பெற்றோருடன் வாதிடுகின்றனர். ஆசிரியர்களை மதிப்பதில்லை. வீண்வாதம் செய்கின்றனர்"

பெரும்பாலான இளைஞர்கள் மீது பெற்றோர், பெரியோர்கள், ஆசிரியர்கள் கூறும் குற்றச்சாட்டுக்கள் இவை. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் இளைஞர்கள் மீது சுமத்துவது சரியா? பேச்சு, நடத்தை, செயல், பண்பாடு அடிப்படையில் பல குற்றச்சாட்டுக்களை நாம் கூறினாலும், அவை நம் இளைஞர்களின் பிறவிக் குணமல்ல. இளைஞர்கள் மீதான இந்தக் குற்றச்சாட்டுக்கள் சரியென்றால், இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்துக்கு எவர் அடிப்படைக் காரணம்? அவர்களிடம் வேறு எந்த நற்குணங்களும் இல்லையா? என்ற இந்த இரண்டு கேள்விகளை நாம் கேட்க வேண்டியுள்ளது.

### பெற்றோரின் கடமை

"வீடு நல்ல முறையில் இருக்க தாய், தந்தையர் பங்கே முக்கியம். சமுதாயம் சிறந்திட ஆசிரியர்கள் மற்றும் பெரியோர்களே சிறந்த ஆதாரம். நாடு நல்ல நிலையில் வளர்ந்திட இளைஞர்களே ஆதாரம்" என்கிறார் விவேகானந்தர்.மொத்தத்தில் இளைஞர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்ற இந்த மூவர் கூட்டணிதான் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு ஆதாரம். குழந்தைகளைப்பெற்று வளர்க்கிறோம். ஆனால் நாம் நல்ல பெற்றோர்களாக இருக்கிறோமா? நன்றாகப் படித்து ஆசிரியராகிவிட்டேன்; ஆனால் நான் நல்ல ஆசிரியராக இருக்கிறேனா? நல்ல கல்வி கற்று நிறையச் சம்பாதிக்கிறேன்; ஆனால்நான் சமூக அக்கறையுடைய இளைஞனாக இருக்கிறேனா? இது போன்ற அடிப்படைக் கேள்விகளை நாம் நம்முள் கேட்கத் தவறியதால் தான், இன்றைய இளைய சமுதாயம் சீரழிந்துவிட்டது என நம்மால் சட்டெனச் சொல்லிவிட முடிகிறது. முதலில் நம்மை சுயபரிசோதனை செய்து கொள்ளாமல் இருப்பதினால்தான், சுலபமாக எந்தப் பிரச்சினைக்கும் மற்றவர்களைக் கைகாட்டி தப்பித்துவிட முடிகிறது.

பெற்றோர்கள் தங்கள் கடமை, எழுத்துச் சொல்லித்தரும் பள்ளி முதல், வாழ்வாதாரத்துக்குத் தேவையான தொழிற்கல்வி கற்றுத்தரும் கல்லூரி வரை, பணத்தை செலவழித்து நல்ல கல்வியை பிள்ளைகளுக்குக் கொடுப்பது என எண்ணுகின்றனர்.

இன்றைய கணினி யுகத்தில் என்ன படிப்பு வேண்டுமானாலும் படிக்கலாம். ஆனால், புத்தகப் படிப்பைத் தாண்டி தனித்திறன் உள்ளவர்களுக்கே வேலை. எனவே கல்வியை மட்டும் தம் பிள்ளைகளுக்கு வழங்குவதுடன் நின்றுவிடாமல், அவர்களின் தனித்திறனைக் கண்டறிந்து அதனையும் வளர்க்கப் பெற்றோர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

நல்ல கல்வியோடு உடல் ஆரோக்கியம், உறவுகளின் மகத்துவம், தியாகம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பகிர்ந்துண்ணுதல் போன்ற நற்குணங்களைப் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். அப்போதுதான் அந்தப் பிள்ளைகளின் சமுதாயம் பின்னாளில் நல்லதொருஇளைஞர்சமுதாயமாகஉருவாகும்.

### ஆசானின் கடமை

நான் சொல்வதுதான் சரி, நான் சொன்னதைச் செய், நான் சொன்னதை மட்டும் படி, கேள்விகள் எதுவும் கேட்காதே என போதிப்பவர் திறமையான ஆசிரியரா? அவ்வாறு போதிக்கும் ஆசிரியரின் பெயர் கூட விரைவில் மாணவர்களின் மனதிலிருந்து மின்னலாய் மறைந்து விடும். ஏனெனில், இன்றைய இளம் மாணவர்கள் எதிலும் எதையும்கேள்விகேட்டு-நன்குதெரிந்த பின்னரே அவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களிடம் அளவற்ற ஆற்றல்கள் உள்ளன.

அவற்றை வெளிப்படுத்த உதவும் ஒரு தடமே ஆசிரியர். மாணவர்களிடம் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்வி கேட்கும் திறனை வளர்க்கும் ஆசிரியர், மாணவர்கள் மனதில் அழுத்தமான தடத்தைப் பதிப்பதோடு, மாணவனின் வாழ்நாள் குருவாகவும் உயர்கிறார். மாணவர்கள் கேள்வி கேட்பதைப் பிடிக்காத ஆசிரியர்களும், அதேவேளையில் வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவனுக்காகவும் தனித்தனியாகச் சிந்திக்கும் உயர்ந்த ஆசிரியர்களும்இருக்கவே செய்கின்றனர்.

"ஆசிரியர் பணியே அறப்பணி; அதற்கு உன்னை அர்ப்பணி" என்ற சொல்லிற்கேற்ப புத்தகப் படிப்பைத் தவிர; விளையாட்டு, பேச்சு, எழுத்து, ஓவியம், நடனம் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கும் மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஊக்கப்படுத்தி சாதனையாளராக்க, அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களால்தான் முடியும். அத்தகைய ஆற்றல்மிக்க இளைஞர்களை இந்த சமூகத்துக்கு வழங்கும் தலையாய பணியும் ஆசிரியர்களுடையதே.

சாதியுணர்வு, மதபேதம், பயங்கரவாதம் போன்ற ஆழிச்சுழல்களில் சிக்காமல் இந்த இளைஞர்களைக் காக்க வேண்டியவர்களே இன்றைய தேவை.

சமூகப்பொறுப்புள்ள இளைஞர்களுக்கு ஊக்கமளித்து, கேள்விக்குறிகளாக நாம் பார்க்கும் இந்த இளைஞர் கூட்டத்தை, நாளை இவ்வுலகம் ஆச்சரியக் குறியாகப் பார்க்க வைக்கக் கடமையாற்றுவோம். அன்பு நிறைந்த உள்ளத்தையும், உலகை மாற்றவல்ல தன்னம்பிக்கையையும், இளைஞர்களிடத்தில் கொண்டு செல்ல நம்மால்தான் முடியும் என்று நம்புவோம். தடம் மாறும் இளைஞர்களுக்கு ஏணியாகவும், தோணியாகவும் இருப்போம்.



> நல்ல கல்வியோடு உடல் ஆரோக்கியம், உறவுகளின் மகத்துவம், தியாகம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பகிர்ந்துண்ணுதல் போன்ற நற்குணங்களைப் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். அப்போது தான் அந்தப் பிள்ளைகளின் சமுதாயம் பின்னாளில் நல்லதொரு இளைஞர் சமுதாயமாக உருவாகும்.

வீட்டிலிருந்தே
எந்தவொரு
வலையமைப்பிற்கும்
RELOAD
செய்திடுங்கள்.

**8822** இற்கு **SMS** செய்து
இருக்கும் இடத்திலிருந்தே தொலைபேசிக்கு ரீலோட் செய்திட தற்போது சம்பத் ரீலோட்.
நீங்கள் எங்கு இருந்தாலும், எந்த நேரத்திலும், இருக்கும் இடத்திலிருந்தே உங்களது அல்லது உங்களது நண்பர்களின் எந்தவொரு தொலைபேசி வலையமைப்பிற்கும் ரீலோட் செய்ய முடியும்.
நீங்கள் செய்யவேண்டியது.
ரீலோட் செய்யவேண்டிய தொகையை குறிப்பிட்டு **8822** ற்கு **SMS** செய்யுங்கள்.

வேறொருவரின் தொலைபேசிக்கு ரீலோட் செய்துகொள்வதற்கு
இரகசிய இலக்கம் (இடைவெளி) தேவையான பணத்தொகை (இடைவெளி) குறித்த தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 8822 ற்கு அனுப்புங்கள்.
உ-ம்: **1234 100 07xxxxxxxx**

airtel Dialog etisalat HUTCH Sri Lanka Telecom Mobitel

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி வலையமைப்புகளுக்கு இச்சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சேவையை பெற்றுக்கொள்வதற்கு இன்றே சம்பத் வங்கிக் கிளையில் பதிவு செய்திடுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Sampath Reload
ரீலோட் செய்திடும் புதிய வழிமுறை
Like us on facebook.com/Sampathbankplc
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk

Grant McCann

LG
Life's Good
LG நிறுவனம் உலகின் முன்னணி
Mosquito Away துருப்பிடிப்பதை பாதுகாக்கக்கூடிய, ஸ்மார்ட் இன்வேட்டர்
வளிச்சீராக்கி
வட்டி இல்லை ஜொலி ஜிகம்

LGயின் நவீன தொழிநுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள இன்வேட்டர் வளிச்சீராக்கி தனிச்சிறப்புமிக்க சிறப்பம்சங்களை கொண்டுள்ளதுடன் **உங்களது குடும்பத்தை,** நுளம்பு மூலம் ஏற்படும் நோய் அச்சுறுத்தலிருந்து அதாவது **மலேரியா,டெங்கு** போன்ற கடுமையான நோய்த்தாக்கத்திலிருந்தும் உயிர் அச்சுறுத்தலிருந்தும் பாதுகாக்கின்றது. பூச்சிக்கொல்லி மருந்து வகைகளையோ அடிப்படையாகக் கொண்டோ அல்லது புகை மூலம் தடுத்து நிறுத்தக்கூடியவற்றுக்கு அப்பால் **LG Mosquito Away** வளிச்சீராக்கி புற ஊதாகதிர் அசைவாட்டத்தைக் கொண்டு நுளம்புகளை அகற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் உங்களுக்கு **பாதுகாப்பானதும்** அமைதியானதும் **நிம்மதியானதுமான** இரவு நித்திரைக்கு உதவுகிறது.




நுளம்பை விரட்டக் கூடியவகையில் வளிச்சீராக்கியில் அடங்கியுள்ள தனிப்பட்ட சிறப்பம்சங்கள்

- 30kHz முதல் 100kHz வேகத்தில் புற ஊதாக்கதிர்கள் செயல்பட்டு நுளம்புகளை விரட்டுகிறது.
- நுளம்புகள் மூலம் ஏற்படக்கூடிய நோய்களைத் தடுக்கின்றது.
- இரசாயனப் பொருட்கள் அற்றதும் ஒன்சயற்றதும்.
- மின்சாரம் விநியோகம் நிறுத்தப்பட்ட போதிலும் எரிசக்தி சேமிப்புடன் தொடர்ந்து இயங்கக் கூடியது.
- சர்வதேச இன்டர்டெக் சான்றிதழைப் பெற்றது.
- தயாரிப்புக்களின் பரிசோதனை UK இல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அங்கீகாரப் பிரகடனம் TUV நோர்ட் ஜேர்மனியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- CE சான்றிதழ் அங்கீகாரம் ஐரோப்பிய ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டியில்லை 15 கொடுப்பனவு

CERTIFICATES
PERFORMANCE
Intertek
பாதுகாப்பு
CE ஐரோப்பியன் கொன்போமிட்டி இலத்திரனியல் பாதுகாப்பு
TUV NORD புறஊதாகதிர் ஓசை அழுத்தம் மனித பாதுகாப்பானது.
ACADEMIC PUBLICATION
ESA Entomology Society of America
விசேட பிரத்தியோக விசை பொத்தான் (Button) செயலாற்றல்.

12,000 BTU | 18,000 BTU | 24,000 BTU பெற்றுக்கொள்ளமுடியும். 134,500 ரூபாவிலிருந்து

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

• யாழ்ப்பாணம் A - 021 2220981 • யாழ்ப்பாணம் B - 021 3202421 • யாழ்ப்பாணம் அவுட்லெட் - 021 2220009 • முல்லைத்தீவு - 021 2290147 • பொயின்ட் பெதுரு - 021 2262456 • நெல்லியடி - 021 2264934 • கொடிகாமம் - 077 1093730 • சுன்னாகம் - 021 2240440
• செங்கலடி - 021 2250106 • மானிப்பாய் - 021 2255259 • அச்சுவேலி - 021 3202027 • சாவகச்சேரி - 021 2270005 • கிளிநொச்சி - 021 5776120

us at www.facebook.com/abans நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
Abans

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை அரசும் ஒபாமா ஆட்சியும் "சேம் சைட் கோல்" போடும் போக்கிலா...?

உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்று பேச்சு வழக்குத் தமிழில் ஒரு சொற்றொடர் உண்டு. அதனைத் தமிழர்கள் சம்பந்தப்பட்ட, தொடர்புடைய விடயங்கள், விவகாரங்களில் இலங்கையின் ஆட்சித் தலைவர்கள் அடிக்கடி கனகச்சிதமாக கையில் எடுப்பது இந்த நாட்டின் அரசியலில் ஒரு வகையான சம்பிரதாயம் ஆகிவிட்டது!

ஆகப்பிந்தி, போர்க்குற்ற விசாரணைகளில், சமகாலத்தில் அனைத்துலக நீதிபதிகளின் பங்களிப்பை, உதறித் தள்ளுவது என்று இலங்கை அரசு வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் (15.07.2016இல்) அரசு வெட்டித் தள்ளிவிட்டது.

நல்லாட்சி அரசின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அதனை உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டார்.

அனைத்துலக நீதிபதிகள், போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு, எந்தச் சந்தர்ப்பத்திலும் அழைக்கப்படவே மாட்டார்கள். ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நிலைப்பாடு அதுவே என்றும் பகிரங்கப்படுத்தி உள்ளார்.

ஒரு சில நாள்களுக்கு முன்னர் தான், விசாரணைப் பொறிமுறையில், வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடம் எதுவும் இல்லை என்று, ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவித்து வந்த கருத்துக்கள் அரசின் இறுதி முடிவல்ல என்று அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தாம் பதவியில் அமர்ந்திருக்கும் வரை விசாரணைப் பொறிமுறையில் அனைத்துலக நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்கள் என்று,

ஜனாதிபதி அறுத்து உறுத்துக்கூறி இருந்தமையும் இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டியதே.

அமைச்சர் மங்கள சமரவீர பாவம். வேண்டா நிலைப்பாட்டின் இரண்டு உயர் தலைவர்களையும் மிஞ்சி நல்ல கருத்தைக் கூறியதால், இப்போது சங்கடப்பட வேண்டியதாயிற்று. இதனை நன்மைக் குக் காலம் இல்லை என்ற வரிசையிலும் சேர்க்கலாம்.

அண்மைக் காலம் வரை, பொறுப்புக் கூறல் மற்றும் மறுசீரமைப்பு விடயத்தில் (விவகாரத்தில்) ஜெனிவாவின் தீர்மானத்தோடு, ஒரு நிலையில் நின்ற அவர் அதிலிருந்து விலகி இருப்பதை உள்வீட்டுச் சதி என்று கொள்வது தப்பன்று.

அமெரிக்க அதிகாரிகளின் சமீபத்தைய இலங்கைப் பயணத்தின் பின்னர், இப்போதைய தலைகீழ் மாற்றம் முளைத்து எழுந்திருக்கலாம் என்ற சந்தேகம் தமிழர் தரப்பில் இராஜதந்திர மட்டத்தில் உயர்வதற்கு வாய்ப்பு வரலாம்.

அமெரிக்காவின் "த வயர்" என்ற ஊடகம், அந்நாட்டின் ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகம் இலங்கை விவகாரத்தில் அதிருப்திக்கு உரியதான கொள்கையை பின்பற்றுவதாகக் குற்றஞ்சுமத்தி உள்ளமையும் இவ்வேளை தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

போரால் பாதிப்புற்ற மக்களின் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்கு உகந்த முக்கியத்துவம் வழங்கவில்லை என்றும், அந்த ஊடகம் சுட்டிக் காட்டி உள்ளது. அது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இலங்கையின் நல்லாட்சி அரசும், ஒபாமா அரசும் "சேம்சைட் கோல்" போடும் போக்கு மிக வெளிச்சமாகி வருகிறது.

மொத்தத்தில்--

ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் வெறும் கனவாகி விடுமோ என்ற மன ஆதங்கமும் கனத்துப் பெருத்து வருகிறதே; வலிக்கிறதே.



ந.லோகதயாளன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சத்தம் சந்தடி இன்றி பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலம் சிங்களமயமாக் கப்பட்ட வண்ணமேயுள்ளன. இவற்றைத் தட்டிக் கேட்கவேண்டிய அதிகாரிகள் அந்தப் பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. தடுக்க வேண்டிய அரசியல்வாதிகள் உருப்படியாக ஏதும் நிறைவேற்றுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு 127 கிராம சேவகர்கள் பிரிவுகளையும், 115,024 மக்கள் தொகையையும் உள்ளடக்கிய 5 பிரதேச செயலாளர் பிரிவு களைக் கொண்டது முல்லைத்தீவு மாவட்டம்.

2614 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்த மாவட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதி நிலங்களை சிங்களம் விழுங்கி விட்டது.

இந்த மாவட்டத்தின் தென் பகுதியில் இருந்து, தமிழ்மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வளம் மிக்க பகுதிகளென சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் 1980ஆம் ஆண்டுக்கு முன்பு அபகரிக்கப்பட்டு 6 கிராமசேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இந்த மாவட்டத்தின் ஆறாவது பிரதேச செயலாளர் பிரிவாக நிர்வகிக்கப்படுகின்றது.

ஆறாவதாக உருவாக்கப்பட்ட இந்தப் பிரதேச செயலகம். முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என பொது நிர்வாக உள்நாட்டுஅமைச்சின்சுற்றறிக்கை குறிப்பிட்டபோதிலும், இந்தப் பிரதேச செயலா ளர் பிரிவு முல்லைத்தீவு மாவட் டத்தின் கீழ் இயங்குமென எந்தவித வர்த்தக மானி அறிவித்தலும்வெளியிடப்பட்டிருக்கவில்லை.

### குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு அரசினால் பல்வேறு சலுகைகள்

இவ்வாறு உருவாக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற சிங்கள பிரதேசசெயலாளர்பிரிவில் இன்று 9 ஆயிரத்து 560 சிங்கள மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்துக்கான தொழில் வாய்ப்புக்களுக்காக தமிழ்மக்களின் 6 ஆயிரம் ஏக்கர் நிலம், அபகரிக்கப்பட்டு மூவாயிரம் ஏக்கர் வீதம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு டொலர் பாம், கென் பாம் என்ற இரு மிகப்பெரும் பண்ணைகள் உருவாக்கப்பட்டு இவர்களுக்கான தொழில் மையங்களும் உருவாக்கப்பட்டன.

ஆனால், இன்று இந்தப் பிரதேசங்கள் மிகவும் வளர்ச்சி கண்டு உட்கட்டுமான வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டு பாடசாலைகள் முதல், சந்தை வாய்ப்புக்கள் வரையும் முல்லைத்தீவு நகரத்தையும் மிஞ்சி நிக்கின்றன. இதன் பிற்பாடு இறுதி போர்க் காலத்திலும் இதனை அண்டிய பகுதிகள் மற்றும் ஒதியமலையை அண்டிய பகுதிகள் உள்ளடங்கலாக மேலும் 3 ஆயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழ்மக்களின் வாழ்விடங்களும் வாழ்வாதார நிலங்களும் அபகரிக்கப்பட்டுள்ளதுடன், வனப்பகுதிகளாக இருந்த இந்த மாவட்டத்தின் எல்லைப் புறங்களும் அளவு கணக்குத் தெரியாமல் அபகரிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் டொலர்பாம் , கென்பாம் எனவும் வெலிஓயா எனவும் ஒரு பெரும் பகுதியை ஏப்பம் விட்ட சிங்கள பேரினவாதம், தற்போது கொக்குளாய் , கொக்குத்தொடுவாயின் ஒருபகுதி நிலமும், இங்கே செல்லும் வீதியோரம் உள்ள காடுகளில் வீதியோரக் காடுகளை வெளியில் காடுகளாக தோற்றமளிக்க விட்டுவிட்டு உட்புறம், சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் பெரிய குடியிருப்புக்களை அமைத்துள்ளனர்.

இதேபோன்று அம்பகாமம் இரணைமடு பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காடுகளையும் வயல்களையும் ஆக்கிரமித்துள்ள இராணுவம் குளங் களைக் கூட விட்டுவைக்கவில்லை.

இரணைமடு அம்பகாமம் பகுதிகளில் மட்டும் நான்கு குளங்கள் இன்றுவரை படையினரின் முற்றுகைக்குள் உள்ளன. இதில் மட்டும் 8 ஆயிரம் ஏக்கர் நிலம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்தப் பகுதியில் அம்பகாமம் , புலிமச்சிநாதகுளம் , கூழாமுறிப்பு போன்ற பகுதிகளை உள்ளடக்கிய வகையிலேயே குறித்த பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதில் மக்களின் வாழ்வாதார வயல் நிலங்கள் பல ஆயிரம் ஏக்கர் உண்டு. இந்த வயல்களையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்த சுமார் 1500 குடும்பங்கள் இன்று வரை அடுத்தவர் தயவை நம்பி வாழும் நிலையில் உள்ளன.

இவற்றைவிடவும் விசுவமடு, தர்மபுரம், கேப்பாபிலவு, கோம்பாவில், வட்டுவாகல் உள்ளிட்ட இடங்களில் பெரிய அளவிலான பிரதேசங்களும், ஏனைய இடங்கள் பலவற்றில் சிறு சிறு துண்டுகளாகவுமென மொத்தம் 40 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை சிங்களப்படைகள் ஆக்கிரமித்து முழுமையாக சுருட்டி வைத்துள்ளனர். இவற்றுக்கு அப்பால். மகாவலி 'எல்' வலயம் என இன்னொரு பகுதியும் பறிபோன வண்ணமே உள்ளது.

### தொடரும் இராணுவத்தினரது நில அபகரிப்பு

இவை அனைத்தையும் போன்று ஏ-9 வீதியில் இரணைமடுச் சந்திக்கு அப்பால் முல்லைமாவட்டம் ஆரம்பிக்கும் பிரதேசத்தில் இருந்து கொக்காவில் பிரதேசம் வரையான சுமார் 7 கிலோமீற்றர் தொலைவு கொண்ட பகுதியில் வீதியின் முகப்பில் காடுகள் அப்படியே காட்சியளிக்க, புற்றுநோய் இங்கேயும் ஆக்கிரமித்து விட்டது. நீளம் ஏழு கிலோமீற்றர் எனின், அகலம் எத்தனை கிலோமீற்றர் என்பதை வரையறுத்துக்கூற முடியாதவாறு காடு முழுமையாக இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டதுடன், முறிகண்டி, வசந்தநகர் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களும் விரட்டப்பட்டு படையினரால் அந்தப் பகுதிகளில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இங்கு மொத்தம் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் படையின ரின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன் முறிகண்டிக்குளமும் இன்றுவரை படையினரின் கையகப்படுத்தலிலேயே உள்ளது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் தமிழ்மக்கள் 2002 ஆம் ஆண்டு சமாதான காலத்திலேயே புதிதாக வீடுகள் அமைத்து மீளக் குடியமர்ந்தவர்கள். இவ்வாறு புதிதாக வீடுகளை அமைத்தவர்களின் சுமார் 150க்கும் மேற்பட்ட வீடுகள் தற்போது படையினரின் பிடியில் உள்ளதால் அவற்றின் உரிமையாளர்கள் சிதறுண்டு போய் உள்ளனர். இவர்களின் பல காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் மட்டும் உரிமையாளர்களின் கைவசம் உள்ளன.

இதில் பல காணிகளைச் சுற்றி



# சூரியகாந்தி

உதயன்


## போரின் வடு: நடத்தை கெட்டவள்

துயரப்பட்டபோது உதவிக்கு வராத சமூகம் இன்று வஞ்சிக்கிறது.



**முரளிதான் முதல் எதிரி**





## அதிர்ச்சி
### பிரான்ஸில் தொடரும் தாக்குதல்

பிரான்ஸின் தென்பகுதி நகரான நீஸில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற தேசிய தின நிகழ்வுகளில்கலந்துகொண்டிருந்த பெருந்திரளான மக்கள்மீது பயங்கரவாதியொருவர் கனரக வாகனத்தைவி செலுத்தித் தாக்கியதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 90 இற்கும் மேற் பட்டவர்கள் உயிரிழந்துள் ளனர். அத்துடன், 100இற் கும் மேற்பட்டோர் காயம டைந்துள்ளனர். இவர்களில் கணிசமானோரின்நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

உலக நாடுகள் பலவற்றை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள இந்தச் சம்பவமானது நாடு களின் பாதுகாப்பு விடயத் தில் அதிக அக்கறை கொள்ள வும் வைத்துள்ளது.

39

# சரிவு

# அரசு மீதான தமிழர் நம்பிக்கை தள்ளாட்டம்



அன்ரன்

இலங்கை அரசியலில் 2001ஆம் ஆண்டு நிலமை மீண்டும் ஏற் படாமல் இருப்பதை அயலுற வுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர ஒருவாறு உறுதிப்படுத்தி விட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுடன் முரண்படும் போக்கை அவர் கைவிட் டுடன், அவரது கருத்திலிருந்து தான் முரண்படவில்லை என்றும் வெளிப்படுத்தி னார். இதன்மூலம் போர்க்குற்ற விசா ரணை விவகாரத்தில் அரசுக்குள் கருத்து மோதல்கள் - பிளவுகள் - இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனை வருமே வெளிநாட்டு நீதிபதிகளை ஏற்க வில்லை என்ற நிலைப்பாடு எட்டப்பட் டுள்ளது.

போர்க்குற்ற விசாரணை என்று தமிழர்கள் கூறும் மனித உரிமைகள் மீறல் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான செயல்களை விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்படும் என இலங்கை அரசு ஒத்துக்கொண்ட விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதில்லை என்பதுதான் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் தெளிவான நிலைப்பாடு என்று அறிவித்து, அந்த முடிவுடன் தனக்கும் எந்தப் பிரச்சினைகளும் இல்லை என்றும் தெரிவித்ததன் மூலம் சர்ச்சைகளை ஓய்வுக்கொண்டுவந்திருக்கிறார் மங்கள.



**மைத்திரி - ரணில் அரசு பிளவுபட்டுக் கவிழ்ந்து போனால் அது மகிந்தவுக்கு மீண்டும் வாய்ப்பளிப்பதாக அமைந்துவிடும் என்று அமெரிக்கா அஞ்சியது. அதனால், அந்த நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வாலும் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரம் தொடர்பான உதவிச் செயலர் டொம் மெலினோஸ்கியும் கொழும்புக்கு விரைந்தனர்.**

### சந்திரிகா - ரணில்

2001ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அமைதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில்கையெழுத்திட்டார்அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. தேர்தலில் வென்று தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. அப்போது அரசுத் தலைவராக (ஜனாதிபதியாக) இருந்தவர் அம்மையார் சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரரணதுங்க. இரண்டே வருட காலத்தில் ரணிலின் அரசைக் கலைத்தார் சந்திரிகா.

ரணில் தன்னிடம் கேட்காமல், கலந்தாலோசிக்காமல் புலிகளுடனான பேச்சுக்களிலும் ஒப்பந்தங்களிலும் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார் என்று அதற்குக் காரணம் சொல்லப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ரணில் அதிகம் விட்டுக் கொடுத்தார் என்று நம்பினார். அதனால் அரசைக் கலைத்தார். அப்போதும் சந்திரிகா சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராகவும் ரணில் விக்கிரமசிங்க ஐக்கியத் தேசியக் கட்சி கட்சியைச்சேர்ந்தவராகவும் இருந்தனர். அதேபோன்றதொரு நிலை மீண்டும் உருவாகுவதற்கான சாத்தியங்கள் கடந்த சில மாதங்களாகத் தென்பட்டு வந்தன. அதனால் இந்த அரசும் கவிழ்ந்துவிடும் அல்லது கலைக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் பரவியிருந்தது. ஆனால் நிலைமை இப்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது.

### ஐ.நா. தீர்மானம்

சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டதீர்மானத்தைத்தொடர்ந்து அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டது. அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் சில இணைந்து கொண்டு வந்த அந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியது.

அந்தத் தீர்மானம் தமிழர்கள் எதிர்பார்த்த எல்லாவற்றையும் கொண்டிருக்கவில்லையாயினும், ஏற்றுக்கொள்ளக்கூடிய சில அம்சங்களை யாவது உள்ளடக்கியிருந்தது. அதில் முக்கியமானது போர்க் குற்றங்கள் குறித்து எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத்தொடுநர்கள் போன்றோரை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றங்களை உருவாக்கவேண்டும் என்பது. இந்தத் தீர்மானத்துக்கு முன்னதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்சையிட் அல் ஹுசைன் ஆற்றிய உரையில், இந்தப் பொறிமுறை கலப்பு நீதிமன்றமாக (ஹைபிரிட்) அமையவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தார்.

தமிழர்கள் சர்வதேச நீதிவிசாரணை மட்டுமே வேண்டும் என்றும் சிங்களவர்கள் உள்ளூர் விசாரணை மட்டுமே போதும் என்றும் எதிர் எதிர்த் திசைகளில் நின்றபோது இரண்டையும் உள்ளடக்கி, மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான வழியாகக் கலப்புநீதிப்பொறிமுறையை ஹுசைன் பரிந்துரைத்தார்.

ஆனால், கலப்பு நீதிமன்றம் என்ற பதம் ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் தீர்மானத்தின் உள்ளடக்கங்கள் அவ்வாறானதொரு கலப்பு நீதிமன்றத்தையே பரிந்துரைத்தன. பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டவாளர்கள் இலங்கை அரசின் நீதிப் பெறிமுறைக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் தெரிவித்தது. இதன் பொருள் அமையப் போகும் நீதிப்பொறிமுறை கலப்பு நீதிப் பொறிமுறையாக இருக்கும் என்பதுதான்.

### மைத்திரியின் நிராகரிப்பு

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதற்குப் பின்னர் அதில் தனக்கு உடன்பாடில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்தார். இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கும். என்ற விடயம் தன்னிடம் முன்கூட்டியே சொல்லப்படவில்லை என்றும், கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு ஒருபோதும் தான் இணங்கப் போகப் போவதில்லை என்றும் போர்க்கொடி தூக்கினார். அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் தன்னிச்சையான செயற்பாடுகள் இவை என்றே ஜனாதிபதியால் கணிக்கப்பட்டன. இதையடுத்து வெளிநாட்டு நீதிபதிகள் இலங்கையின் நீதி விசாரணைப் பொறிமுறையில் உள்ளடக்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி பொது நிகழ்வு ஒன்றில் பகிரங்கமாகத் தெரிவித்தார். தனது நிலைப்பாடு பற்றி அயலுறவுத்துறை அமைச்சருக்கும் அவர் அறிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் மைத்திரிக்கும் மங்களவுக்கும் இடையே மனக் கசப்புகளும் எழுந்தன. அதன் விளைவாக, மைத்திரியின் உத்தியோகபூர்வப் பயணங்கள் சிலவற்றில் அயலுறவுத்துறை அமைச்சர் என்ற வகையில் இடம்பெற்றிருந்திருக்க வேண்டிய மங்கள தவிர்க்கப்பட்டார். ஆனாலும், இது ஒரு சிறுபிள்ளைத் தனமான கோபம் என்று கருதிய ரணிலும்மங்களவும்விடயத்தை ஆறப்போட்டால் சரியாகிவிடும் என்று கருதினர்.

தங்கள் பக்கத்தில் தவறில்லை என்பதே அவர்களின்வாதம். ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்குவதற்கு முன்பாக அந்தத் தீர்மானத்தின் பிரதியும் அது பற்றிய விவரங்களும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டு, அவரது ஒப்புதல் பெற்றப்பட்டது. தீர்மான வரைவு ஆங்கிலத்தில் இருந்தது. ஜனாதிபதிக்கு ஆங்கிலம் வாசிப்பதில் இருந்த சிரமம் காரணமாக, ஆவணங்கள் சிங்கள மொழியில் பெயர்க்கப்பட்டுக் கையளிக்கப்பட்டன. ஆங்கில மொழியில் இருந்த ஆவணத்தில் அனைத்து விடயங்களும் தெளிவாகச் செல்லப்பட்டிருந்தன என்கிறது மங்கள தரப்பு. ஆனால், மொழி பெயர்ப்பில் சில விடயங்கள் விடுபட்டுப் போயிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஏனெனில் சிங்களத்தில் இருந்ததையே மைத்திரி வாசித்தார். அதனடிப்படையிலேயே தீர்மானத்துக்கு அனுமதியும் வழங்கினார். தனக்குத் தரப்பட்டதில் என்ன இருந்ததோ அதனை மட்டுமே ஏற்பது என்பது மைத்திரியின் வாதம். தாங்கள் கொடுத்ததில் எல்லா விவரங்களும் சொல்லப்பட்டிருந்தன. எனவே தவறு தங்களுடையது இல்லை என்பது அயலுறவுத்துறை அமைச்சகத்தின் வாதம். எனினும் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்தார். வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதில்லை என்பதை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

### மீண்டும் எழுந்த சர்ச்சை

இந்த விடயம் இராஜதந்திரிகள் மற்றும் ஊடகங்களின் கவனத்தைக் கவர்ந்தாலும், தெற்கிலுள்ள மகிந்த ஆதரவு அணியினரையும் தீவிரப் போக்காளர்களையும் சமாளிப்பதற்காக ஜனாதிபதி இந்தவிதம் கூறி வருகிறார் என்று அப்போதைக்குக் காரணம் கற்பிக்கப்பட்டு விடயம் ஆறப்போடப்பட்டது. ஒரு வருடம் கடந்த நிலையில் கடந்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதன் ஆணையாளர், இலங்கை தொடர்பிலான தனது வாய்மூல அறிக்கையை வெளிப்படுத்திய போது இந்த விவகாரம் மீண்டும் பூதாகரமாகியது.

மனித உரிமைகள் சபையில் பதிலுரையாற்றிய அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, விசாரணைப் பொறிமுறை பற்றிய விடயத்தில் எந்தவிதமான இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை - என்றார். அது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்தாலும் தொடர் கலந்துரையாடல்கள் மூலமாக இந்த விடயத்தில் ஒரு முடிவை எட்ட முடியும்– என்றார். அவர் இலங்கை திரும்பியதும் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்த விடயம் கிளறப்பட்டது. அப்போது, ஜனாதிபதி கூறியது அவரது தனிப்பட்ட கருத்து என்றார்– மங்கள. அதற்குப் பதிலளிக்கும் விதமாக மைத்திரிபால சிறிசேன பாணந்துறையில் நடந்த பொது நிகழ்வில் தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார். தான் பதவியிலிருக்கும் வரையில் இலங்கையின் உள்நாட்டு நிர்வாகத்திலோ நீதித்துறையின் செயற்பாடுகளிலோ பன்னாட்டு நீதிபதிகளோ அல்லது பன்னாட்டு நீதித்துறை சார்ந்தவர்களோ தலையிடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்– என்றார். அவர் கடந்த ஒரு வருட காலத்தில் 5 தடவைகள் இந்த விடயத்தை அழுத்திக் கூறியுள்ளார்.

இது, ஜனாதிபதிக்கும் ரணில் தலைமையிலான அரசுக்கும் இடையில் இந்த விடயத்தில் தெளிவான பிளவு ஒன்று விழுந்ததை எடுத்துக் காட்டியது. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டத்தைப் போலவே தனக்கு உடன்பாடில்லாத விடயத்தை ரணில் அரசு செய்கிறது என்று மைத்திரி எண்ணத் தலைப்படுகிறார் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியது. இந்த விடயம் மேலும் வளர்ந்து எங்கு நல்லாட்சி அரசின் முடிவுக்கு வித்திட்டு விடுமோ என்ற அச்சத்தை அது வளர்த்தது.

### அமெரிக்கத் தலையீடு

இந்த நிலையில்தான் அமெரிக்க உதவிச் செயலாளர்கள் இருவரின் பயணமும் இடம்பெற்றது. மைத்திரி - ரணில் அரசு பிளவுபட்டுக் கவிழ்ந்து போனால் அது மகிந்தவுக்கு மீண்டும் வாய்ப்பளிப்பதாக அமைந்துவிடும் என்று அமெரிக்கா அஞ்சியது. அதனால், அந்த நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் நிசா பிஸ்வாலும் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரம் தொடர்பான உதவிச் செயலர் டொம் மெலினோஸ்கியும் கொழும்புக்கு விரைந்தனர். அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்தனர். இந்தச் சந்திப்புக்களினதும் அதன் பின்னர் அவர்கள் பத்திரிகைகளிடம் தெரிவித்த கருத்துக்களினதும் அடிப்படையில் இலங்கை அரசு மீதான அமெரிக்காவின் அழுத்தம் வலுவிழந்து வருகிறது என்றதான விமர்சனம் எழுந்தது. நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு விடயங்களில் கொழும்பு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று அமெரிக்க உதவிச் செயலர்கள் பாராட்டினார்கள். அத்தோடு போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவது பற்றிய விவகாரத்தையும் அடக்கியே வாசித்தார்கள்.

இலங்கை மக்களின் மனங்களை நெருங்கிச் செல்வதற்கான முயற்சிகளையும் அமெரிக்கா இந்தத் தடவை வெளிப்படுத்தியது. தெற்கில் அரச தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சமையல் செய்து அசத்தியதன் மூலம் சிங்கள மக்களின் மனதில் அமெரிக்கா ஒரு ஆதிக்க சக்தி என்ற நினைப்பை அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று கிழக்கில் திருக்கோணேஸ்வரர் கோயிலில் வழிபாடு நடத்தியதன் மூலம் தமிழர்களையும் நெருங்கிச் செல்ல முயற்சிக்கப்பட்டது.

(37 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் காங்கிரஸ் தலைமை

# கிழக்குக்கு வேண்டுமா?

**அனார்க்கலி**

இலங்கைமுஸ்லிம்களின் தனிப்பெரும்கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று உட்கட்சிப் பூசல்களாலும் முரண்பாடுகளாலும் நிறைந்திருப்பதை உணர முடிகின்றது.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நியமனம் தொடர்பிலும் கட்சியின் செயலாளர் நாயகத்தின் பதவிக்குறைப்புத் தொடர்பிலும் நிலவும் விமர்சனங்கள், அந்தக் கட்சியின் உள் முரண்பாடுகள் தொடர்ந்த வண்ணமிருப்பதை வெளிப்படுத்துகின்றன.

பத்தி எழுத்தாளர்களெனக் கூறிக் கொள்ளும் சிலருக்கு இந்த நிலைமை வாய்க்கு அவலாக மாறியுள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் பழைய முழக்கமொன்று புதிய வடிவில் கிழக்கில் கிளம்பியுள்ளது.

ஆம்! "முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்குக்கு வேண்டும்" என்ற இந்தக் கோரிக்கை மீண்டும் கிழக்கில் தலைதூக்கியுள்ளது. முன்னர் அறிக்கைகளிலும் விமர்சனங்களிலும் எதிரொலித்த இந்த முழக்கம் கோரிக்கையாக இப்பொழுது மாறி சுவரொட்டி வடிவம் எடுத்துள்ளது.

**வெற்றி தரும் முழக்கமா? வெற்று முழக்கமா?**

> முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்துடனும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பொருளாளர் வபா பாறூக் என்பவரின் படத்துடன் கூடிய 'எங்கள் தலைவர்' எனும் ஆங்கில வாசகத்துடனும் காணப்படும் இச்சுவரொட்டிகளில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கிழக்கிற்கு வேண்டும் எனும் வாசகமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸை கிழக்கில் தோற்றுவித்து இலங்கை முஸ்லிம்களுக்கு முகவரியைப் பெற்றுத்தந்த மாமனிதர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் தலைமைத்துவக் காலம் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கும் பொற்காலமென்றே கூற வேண்டும்.

ஆனாலும் தனக்குப் பின்னர் கட்சியையும் சமூகத்தையும் வழி நடத்தக்கூடிய தன் போன்ற தலைமையொன்றை உருவாக்கவோ, மக்களிடையே இனம் காட்டவோ அவர் முனையவில்லை.

ஆனாலும் அவரது மறைவுக்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்கிலேயே இருக்க வேண்டுமென்ற முழக்கம் வெளிக் கிளம்பியிருந்தது. அதைத்தொடர்ந்து ரவூப் ஹக்கீமின் தலைமையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் இயங்கி வருகிறது.




ஹக்கீம் வெளிமாவட்டத்தவராக இருந்த போதிலும், கிழக்கு முஸ்லிம்கள் மட்டுமன்றி, ஏனைய முஸ்லிம்களும் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், உயர்பீட உறுப்பினர்களும் சலனமின்றி அவரது தலைமையை ஏற்றனர். தலைமையில் நப்பாசை கொண்டிருந்த சிலர் உட்கட்சிப் பூசல்களை ஏற்படுத்தித் தாமாகவே கட்சியை விட்டும் வெளியேறினர்.

அவர்கள் தமக்கென வேறுகட்சிகளை ஆரம்பித்து அதன் மூலம் தமது தலைமைத்துவப் பதவி ஆசைக்குத் தீனியும் போட்டுக் கொண்டுள்ளமை கண் கூடானதாகும்.

இத்தகைய நிலையில்தான் 'கிழக்கின் எழுச்சி' எனும் போர்வையில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்குக்கு வேண்டும் என்ற முழக்கம் புதிதாக சுவரொட்டிகள் மூலம் பறைசாற்றப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்துடனும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பொருளாளர் வபா பாறூக் என்பவரின் ஒளிப்படத்துடனும் கூடிய 'எங்கள் தலைவர்' எனும் ஆங்கில வாசகத்துடன் காணப்படும் இச்சுவரொட்டிகளில் "முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கிழக்கிற்கு வேண்டும்" எனும் வாசகமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் சந்து, பொந்துகளெங்கும் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகள் சற்றுப் பரபரப்பை ஏற்படுத்தாமலுமில்லை.

தலைவர் அஷ்ரபின் மறைவுக்குப் பின் தலைமைப் பதவியைக் கைப்பற்றவென நடக்கும் நான்காவது சதி முயற்சியின் வெளிப்பாடுதான் இந்தச் சுவரொட்டி என வர்ணித்த முஸ்லிம் காங்கிரசின் மூத்த உறுப்பினர் ஒருவர் வழமை போல் இந்த முயற்சி பகற்கனவாக முடிந்து, மற்றொரு புதிய கட்சிக்கு வித்திடுமெனவும் ஆரூடம் கூறினார்.

வேதாந்தம் பேசுவோர் மட்டுமன்றி இன்னும் சில முக்கிய புள்ளிகளும் ஆசீர்வாதம் வழங்கி இதன் பின்னாலுள்ளமை எமக்குத் தெரியுமெனவும் மேலும் கூறினார். "முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கிழக்குக்கு வேண்டுமென்பது வெற்று முழக்கம். பதினெட்டு மாதங்களுக்கு ஒரு தடவை நடக்கும் முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கு முதல் நாள் நடக்கும் கட்டாய உச்ச பீடக் கூட்டத்திலேயே 23 நிர்வாகிகளும் தலைவர், செயலாளர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவர். கட்சிக்குக் கட்டமைப்பு என்று ஒன்று உண்டு. எமது கட்சியின் சின்னத்தைக் குறித்த சுவரொட்டியில் பொறித்துள்ளமை சட்டத்துக்கு மாறானது. எம் தலைமையை அசைக்க முடியாது. ஹக்கீமின் தலைமையில் நாம் முழு நம்பிக்கை கொண்டுள்ளோம். எம் மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர்'' என்றுள்ளார், முஸ்லிம் காங்கிரஸின் மூத்த பிரதித் தலைவரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ஏ.எல். அப்துல் மஜீத் பிரதி விளையாட்டுத்துறை அமைச்சரும், முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ்.

"குறித்த சுவரொட்டி தொடர்பில் நாமோ, எமது கட்சியோ அலட்டிக்கொள்ளவே இல்லை. இதனை ஒரு பொருட்டாகவே நாம் கருதவில்லை. முஸ்லிம் சமூகம் குறுகிய நிலை இச்சைகளை ஒருபோதும் விரும்பப் போவதுமில்லை.

பல விமர்சனங்களுக்கும் அப்பால், ரவூப் ஹக்கீம் மிக நேர்த்தியாக முஸ்லிம் சமூகத்தை வழி நடத்தி வருகின்றார்.

எது எப்படியிருப்பினும் முஸ்லிம் காங்கிரஸை நோக்கி வீசப்படும் நச்சு அம்புகள் தொடர்பில், கிழக்கிலிருந்து கிளம்பியுள்ள ஆறிப்போன இந்த முழக்கம் தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் விழிப்புடன் செயற்பட வேண்டும்" என்றார் அவர்.

தேசியப் பட்டியல் நியமனம், செயலாளர் நாயகத்தின் பதவியை மீண்டும் முழுமையாக வழங்கல் போன்ற விடயங்களை இன்னும் இழுத்தடித்துக் கொண்டு செல்லாமல் காத்திரமான நடவடிக்கைகளை உடன் எடுப்பது இந்த முழக்கத்தைத் தணிப்பதற்கு வழி செய்யும். அவ்வாறு செய்யாத சில தருணங்களில் இந்த முழக்கம் தொடர்ந்து நிலைக்கும் ஒன்றாக மாறினாலும் சந்தேகமில்லை.

# சமூக வலைத்தளங்களில்



# விசமிகள்

ரமணி பிரபா தேவி

புதிய சமூக ஊடகங்களின் வருகையாலும் மக்கள்அவற்றைப் பயன்படுத்துவது அதிகரித்து விட்டதாலும் இணையக் குற்றங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. "சைபர் வேட்டையாளர்கள்" எனப்படும் இணைய விசமிகள் இதில் குறிப்பிடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

முகம் தெரியாத ஒருவர் இணையம், மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் போன்ற மின்னணுத் தகவல் முறைமைகள் வழியாக, விருப்பம் இல்லாத ஒருவரைத் தொடர்பு கொள்வது, தொந்தரவு செய்வது, மிரட்டுவது போன்ற செயல்களை இணைய வேட்டையாடல் எனலாம். இணைய விசமி ஒருவர், சமூக ஊடகமொன்றின் வழியாக குறுஞ் செய்திகள், கவிதைகள், படங்களைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருப்பார். நாம் பதில் அனுப்பினால்தான், முகம் தெரியாத அந்த நபர் தன் தொந்தரவைத் தொடர்வார் என்றில்லை. நாம் பதிலளிக்காமல் இருந்தாலும், அவர் நம்முடைய நண்பர்களை அறிந்துகொண்டு அவர்களுடன் பழகத் தொடங்கி விடுவார். பின்னர் அவர்களிடம் எம்மை அறிமுகப்படுத்தி வைக்குமாறு கேட்பார்.

புற்றீசலாகப் பெருகிவரும் இதுபோன்ற விசமிகளால் சமூக ஊடகங்களில் பகிரப்படும் படங்களும், தனிப்பட்ட தகவல்களும் களவாடப்படுகின்றன. முக்கியமாகப் பெண்களின் ப்ரொபைல் படங்களால் கவரப்படுபவர்கள், அவர்களுக்குத் தொடர்ந்து குறுஞ்செய்திகளை அனுப்புகிறார்கள். அவர்களின் புகைப்படங்களை வைத்து, அவர்களையே மிரட்டுகிறார்கள்.

பெண்கள் செய்தியையோ, படத்தையோ தாங்கள் பயன்படுத்தும் சமூக ஊடகப் பக்கத்தில் பதிவு செய்வதற்கு முன், ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தான் பயன்படுத்தும் சமூகஇணையத்தில் போதுமான அளவு பாதுகாப்பு வசதிகள் இருக்கின்றனவா என அறிந்து கொண்டு தங்கள் ஒளிப்படங்களை பதிவேற்றம் செய்யவேண்டும்.

**சமூக ஊடகங்களில் எதைப் பகிர வேண்டும்?**

நாம் எதைப் பகிர வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்கும் சுதந்திரத்தை, இணைய சமூகம் நமக்குக் கொடுத்திருக்கிறது. இதில் நாம் பார்க்க விரும்பாத நபர்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். அவ்வாறில்லாமல் தொந்தரவு நீளுமானால் அவர்களின் மேல் சமூக ஊடகத்திடம் முறைப்பாடு செய்யலாம்.

இணைய உலகத்தைப் பொறுத்தவரை நம்பிக்கையே அதனை ஆட்சி செய்கிறது.



நமக்கு எதுவும் நேராது; நாம் பாதுகாப்பான வலயத்துக்குள்தான் இருக்கிறோம் என்ற எண்ணமே, பயனாளிகளைச் சுதந்திரமாக இயங்கச் செய்கிறது. ஆனால் தவறுகள் நிகழும்போது அதைத் தடுக்கும் வகையிலான தொழில்நுட்ப வசதிகள் வரைமுறைக்கு உட்பட்டதாகவே இருக்கின்றன.

சில வரம்புமீறல்கள் சட்டத்துக்கு உட்பட்டதாகவும், சில உட்படாமலும் இருக்கின்றன. ஆனால், இணையக் குற்றங்களுக்கு சட்ட நடவடிக்கைகள் இருக்கின்றன. இன்று சமூக ஊடகங்களில் நண்பர்களாக மாறுபவர்கள், உண்மை உலகில் சந்திப்பதும் வழக்க மாகி வருகிறது. சமூக வலைத் தளங்களில் நண்பர்களாக இருந்தவர்கள் இப்போது மெய்யான உலகத்திலும் நண்பர்களாக மாறி வருகின்றனர். கடந்த ஐந்து வருடங்களில் இந்தக் கலாசாரம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அது தொடர்ந்து பேணப்படுமேயானால் இத்தகைய சமூக வலைத் தளங்களின் பாவனை நன்மை தருவனவே.

**இணைய விசமிகளை எப்படித் தடுக்கலாம்?**

எமது பதிவுகள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, எங்களது தனிப்பட்ட அமைப்புக்களை மற்றவர்கள் பார்க்க இயலாதவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கான வசதிகளும் சமூக வலைத்தளங்களில் உண்டு.

சமூக ஊடகங்களில் ஆர்வம் காட்டும் குழந்தைகளைப் பெற்றோர்கள் தம் கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டும். அவர்கள் பகிரும் தகவல்கள் சரியானவையா என்று பார்க்க வேண்டும்.

இணையக் குற்றங்கள் என்றால் என்ன என்பது குறித்த தெளிவான அறிவு அவர்களுக்கு இருக்க வேண்டும். இவ்வாறு சமூக வலைத்தளங்களை மிக அவதானமாகப் பயன்படுத்தினால் விசமிகள் அதில் ஊடுருவாமல் பாதுகாத்துக்கொள்ளலாம்.

# பழி தீர்க்க வேண்டும்....



"கல்வி கற்க வந்த மாணவியை
கட்டிப்பிடித்துக் களிப்படைய
முனைந்த ஆசிரியர் கைது"
பத்திரிகைச் செய்தியிது

எதிர்காலத் தலைவர்கள்
கல்வி கற்கும் பாடசாலையில்
இப்படிச் சில விஷங்களும் வாழ்வதா?
சீ... ஆசிரியர் குலத்துக்கே அவமானம்

ஆறுமா மனம் ஆண்டுகள் கடந்தாலும்
அவர்களை விட்டு வைக்கவும் முடியுமா?
பதவி துறந்து பரிதவிக்க விடவேண்டும்
பாவியர்கள் பாடாய் பட வேண்டும்

பயத்தினால் இருக்கும் பாலகரைப்
பந்தாடுவோரை
பழி தீர்க்க வேண்டும்

*- தனம்*




# தில்லுக்கு துட்டு

## வீண்பொழுதுக்கு பரவாயில்லை

தனக்குப் பிடிக்காத இளைஞனை (சந்தானம்) தன் மகள் (சனாயா) காதலிப்பதைக் கண்டு ஆத்திரப்படும் ஒரு பணக்காரர் (சவுரவ் சுக்லா), அந்தப் பையனைத் தீர்த்துக் கட்ட நினைக்கிறார். வெளியூரில் திருமணம் என்று சொல்லி ஆள் நடமாட்டம் இல்லாத பங்களாவுக்குள் வரவழைத்து, பேய் அடித்து விட்டதாகச் சொல்லிக் கொலை செய்வது அவரது திட்டம். கூலிப் படைத் தலைவனின் (மொட்டை ராஜேந்திரன்) கைங்கரியத்தில் போலிப் பேய்கள் தயார்ப்படுத்துகின்றன. ஆனால் ஏற்கனவே அந்த பங்களாவுக்குள் உண்மையான பேய்களும் இருக்கின்றன. இதனால் ஏற்படும் குழப்படி கலாட்டாக்கள்தான் தில்லுக்கு துட்டு.

ஆவிபோல் நடிப்பவர்களுக்கு மத்தியில் உண்மையான ஆவிகளும் உலாவினால் என்ன ஆகும் என்ற கதை பேய்ப் படங்களின் வரிசையில் புதிது. இதை வைத்துக்கொண்டு திகிலையும் நகைச்சுவையையும் கலந்து விளையாடியிருக்கிறார் லொள்ளு சபா புகழ் இயக்குநர் ராம்பாலா.

பங்களாவில் வசிக்கும் ஆவிகளின் பின்னணிக் கதையை நீட்டிக் கொள்ளாமல் பின்னணிக் குரலில் விவரித்த விதம் பேய்கள் குறித்த எதிர்பார்ப்பை ஆரம்பத்திலேயே ஏற்படுத்திவிடுகிறது. பேயை விரட்ட திபெத்திலிருந்து வரும் சாமியாரின் பங்கும் படத்துக்கு சுவாரஷ்யம் சேர்க்கிறது. அதன் பிறகு சந்தானம் சனாயா காதலுக்கு இடம்பெயரும் திரைக்கதையில் கற்பனை வளமோ சுவாரஷ்யமோ இல்லை.

ஏழைப் பையன் பணக்காரப் பெண் காதல், அப்பாவின் எதிர்ப்பு ஆகிய வழமையான தமிழ் சினிமாக் காட்சிகள் சலிப்படைய வைக்கின்றன. பெண்ணின் தந்தை சந்தானத்தைக் கொல்ல சதித் திட்டம் தீட்டிய பிறகு கதை வேகமெடுக்கிறது.

இடைவேளையை அண்மித்த காட்சி எதிர்பார்ப்பை எகிறச்செய்கிறது. இரண்டாம் பாதி அதற்கேற்ப திகிலும் சிரிப்புமாய் நகருகிறது. கடைசியில் சங்கிலித்தொடர் போன்ற அமளிகளால் திரையரங்கம் அதிர்கிறது.

அதிரடியான அறிமுகப் பாடல், புத்திசாலித்தனமான சண்டைக் காட்சிகள், கவர்ச்சியான தோற்றம் என்று வர்த்தக நாயகனாக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதில் ஈடுபாடு காட்டிவரும் சந்தானத்தை இந்தப் படத்திலும் பார்க்க முடிகிறது. எந்த வகைக் கதையாக இருந்தாலும் அவரது பலம் நகைச்சுவை வசனங்கள்தான். அது இந்தப் படத்திலும் அவருக்குக் கைகொடுக்கிறது. மனிதர்கள், பேய்கள் என்று எல்லோரையும் கலாய்க்கும் சந்தானம் நடனம், சண்டை, நாயகனுக்கான தோற்றம் ஆகியவற்றிலும் தேறுகிறார்.

அறிமுக நாயகி சனாயா அவரது பெண் கதாபாத்திரத்துக்குக் கச்சிதமாகப் பொருந்துகிறார். எனினும் அவரது பாத்திரமோ நடிப்போ சொல்லிக்கொள்ளும்படி இல்லை.

மொட்டை ராஜேந்திரனின் நடிப்பு படத்துக்குப் பெரிய பலம். தனது உதவியாளர்களை ஆவிகளாக நடிக்க வைக்கும் இவர், உண்மையான ஆவியிடம் சிக்கிக்கொண்டு படும்பாடு ரகளை. கருணாஸ், ஆனந்த்ராஜ் போன்றவர்கள் படத்தைக் கலகலப்பாக்கப் பெரிதும் உதவுகிறார்கள்.

தீபக்குமாரின் ஒளிப்பதிவு, காதல், ஆவி, சதி, சண்டை என எல்லாம் கலந்த கதைக்கு முது கெலும்பாக இருக்கிறது. குறிப்பாகக் காட்டுப் பகுதியில் பேய்கள் துரத்தும் காட்சியில் ஒளிப்பதிவு சிறப்பு. பழைய காலத்து மாளிகை, சென்னையின் நவீன மாளிகை, நாயகனின் குடியிருப்பு, திபெத்திய சாமியாரின் குடில் ஆகியவற்றைச் காட்சிப் படுத்தும் விதத்தில் படத்துக்கு நம்பகத்தன்மையைக் கொண்டு வருகிறார் கலை இயக்குநர் ஏ.ஆர்.மோகன் இரண்டாவது பாதியில் கோபி கிருஷ்ணாவின் படத்தொகுப்பு கச்சிதம். பின்னணி இசையில் கார்த்திக் ராஜா மிரட்டுகிறார். தமன் இசையமைத்த பாடல்களில் சிறப்பில்லை. நகைச்சுவையையும் பீதியையும் கலந்து தரும் படங்களின் வரிசையில் வித்தியாசம் காட்டியிருக்கும் இயக்குநர். முதல் பாதியில் கவனம் கூட்டியிருந்தால் சிறந்த பொழுதுபோக்குப் படமாக இருந்திருக்கும்



## அபாய அறிவிப்பு

'ஐக்கிய இலங்கைக்குள்'
அகதி யென்ற நிலையெமக்கு
போர் அடங்கிவிட்ட பிற்பாடும்
அச்ச நிலை அவர்களுக்கு.
இனவாதம் கக்கும்
நிலைமாறி கனவு மனம்
பிறக்கும் வரைக்கும்
நாட்டுக்கு
கஷ்டமும் கரிநாளும்
நீளும் என்பதை
நினைவினில் கொள்.


அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு



# பாதங்களை புத்துணர்வூட்ட...

பெரும்பாலான நாயகியர், மிக அழகாக உடையணிந்து, நகை அலங்காரம் செய்து, முக ஒப்பனை செய்து, பார்க்க இலட்சணமாக இருப்பர். ஆனால், அவர்களின் பாதங்கள் சோர்ந்து, களையிழந்து, வெடிப்புகளும் தோன்றியிருக்கும். இதனால் வெளியில் கால் காட்ட முடியாமல் சங்கடப்படுவர். இதற்கு மிகவும் எளிமையான தீர்வு ஒன்று உள்ளது. தினமும் ஒரு மணி நேரமாவது, தொலைக்காட்சியின் முன் அமர்வீர்கள் இல்லையா? அந்த நேரத்தில், ஓர் அகலமான பாத்திரத்தில், வெதுவெதுப்பான நீரை ஊற்றி, ஒரு கைப்பிடி அளவு உப்பு, இரண்டு சொட்டு ஷாம்பு, சில சொட்டுகள் எலுமிச்சைச் சாறுவிட்டுக் கலக்கி, இரு கால்களையும் அதனுள் ஊற வைத்து விடுங்கள். நன்றாக ஊறிய பின்னர் பிரஷ் மூலம் தேய்த்து தோல்கள் அழுக்குகளை அகற்றி, நகங்களை வெட்டி, நகங்களுக்குள் இருக்கும் அழுக்குகளை நீக்கியவுடன்... கால் பாதங்களின் வலி, அந்த நீரில் கரைந்து போவதை உங்களால் உணரமுடியும். பார்க்கவும் பளபளப்பாக இருக்கும். இப்போது அழகாகிவிட்ட உங்கள் பாதங்களை மறைக்கத் தேவையில்லை.





# மகத்துவம் நிறைந்த தேங்காய்!

நம் அன்றாட சமையலில் தேங்காய்க்கு முக்கிய இடம் உண்டு. சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் தேங்காய் பல்வேறு நோய்களையும் குணப்படுத்தும் வல்லமை படைத்தது. ஞாபகசக்தி பெறுவதற்கு தேங்காய், பாதாம்பருப்பு, வேர்க்கடலை போன்றவற்றை அவ்வப்போது சாப்பிட்டு வந்தால் பயன் கிடைக்கும். இதேபோல் வாய்ப்புண், வயிற்றுப்புண்ணால் அவதிப்படுபவர்கள் காலை உணவுக்கு முன்னதாகத் தேங்காயை வெறுமனே சாப்பிட்டு வந்தால் அந்தப் புண்கள் குணமாகும். தேங்காய்ப்பாலுடன் எலுமிச்சை சாறு கலந்து குடித்து வந்தால் உடல் உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு போன்றவை நீங்கும். கொழுப்புக் குறைய வேண்டுமானாலும் தேங்காய்ச் சொட்டைச் சாப்பிட்டால் பயன் கிடைக்கும்.

நீரிழிவு, இதயநோய், குருதி அழுத்தம் உள்ளவர்கள் தேங்காயை அதிகமாக சாப்பிடுவது நல்லதல்ல. மற்றபடி குருதியைச் சுத்திகரிக்கவும், எலும்பு வளர்ச்சியைத் தூண்டவும், நரம்புத்தளர்ச்சிப் பாதிப்பை போக்கவும் தேங்காய் நல்ல பயன் தரக்கூடியது.




# மரவள்ளிக் கிழங்கு வடை

**தேவையான பொருள்கள்:**

மரவள்ளிக் கிழங்கு - 500 கிராம்
மிளகாய்த்தூள் - 1 கரண்டி
வேர்க்கடலைப் பவுடர் - 50 கிராம்
உப்பு - தேவையான அளவு
பெருங்காயப் பொடி - அரைக்கரண்டி
எண்ணெய் - அரை லீற்றர்

**செய்முறை:**

மரவள்ளிக் கிழங்கைத் தோலுரித்துக் கழுவிவிட்டு துருவிக் கொள்ளவும். அதில் மிளகாய்த் தூள், உப்பு, வேர்க்கடலைப் பொடி,' பெருங்காயப் பொடி ஆகியவற்றைக்கலந்து கொதித்தஎண்ணெய்யில்வடைகளாகத்தட்டிப்போட்டு வெந்தவுடன்மறுபக்கமும்திருப்பிப் போட்டு தங்க நிறத்திற்கு வந்ததும் எடுக்கவும். இப்போது மரவள்ளிக் கிழக்கு வடை தயார்.



# மூட்டுவலியை விரட்டும் முடக்க(று)த்தான்

முடக்கறுத்தான்.... இதை முடக்கத்தான், மொடக்கத்தான் என்ற வேறு பெயர்களிலும் அழைப்பார்கள். முடக்கு + அறுத்தான். அதாவது, வாதநோயால் கை, கால்களில் ஏற்படும் பிடிப்பு, வாதக்கோளாறுகளைச் சரிசெய்வதால் இந்த மூலிகைக்கு அந்தப் பெயர் வந்தது. வேலியோரங்களிலும், சாலையோரங்களிலும் தானாகவே வளரக்கூடிய இந்த முடக்கத்தான், கீரை வகையைச் சேர்ந்தது. இதை சாம்பார், குழம்பு அல்லது புளிக்குழம்புகளில் சேர்த்து சமைத்துச் சாப்பிடுவதால் உடல்வலி, பிடிப்பு, வீக்கம் போன்றவை குணமாகும்.

வாதப்பிடிப்பு, இருமல், மூலம், பித்தம் போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் முடக்கத்தான் கீரையை நீர் விட்டுக் காய்ச்சி, தினமும் 2 தடவை தொடர்ந்து 3 நாள்கள் சாப்பிட்டு வந்தால், உடனடி பயன் கிடைக்கும். இதேபோல் முடக்கத்தானை ரசம் வைத்தும் சாப்பிடலாம். தோசை மாவுடன் அரைத்த முடக்கத்தான் கீரையைக் கலந்து தோசை வார்த்துச் சாப்பிட்டு வந்தாலும் பயன் கிடைக்கும். உடல் வலி உள்ளவர்களுக்கும், மூட்டு வலியால் அவதிப்படும் முதியோருக்கும் இந்த முடக்கத்தான் கீரை உணவுகள் சிறந்த பயன் தரும்.

# அழகைத் தக்க வைத்துக் கொள்ள...



ஒரு நாளுக்கு 3 லீற்றர் தண்ணீராவது அருந்த வேண்டும்.

மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அதிக குளிரூட்டிய பானங்கள், உணவுப் பொருள்கள், எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகள், கொழுப்புச் சத்து அதிகம் உள்ள பொருள்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மென்மையான உணவுகளை அதிகம் சாப்பிடவேண்டும். (பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும்)

தினமும் இருமுறை குளிக்க வேண்டும். (சோப்புகளை அடிக்கடி மாற்றக் கூடாது. இவை உடலில் ஒவ்வாமையை ஏற்படுத்தும்)

கோபம், மன அழுத்தம் இவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும். யோகா, தியானம் செய்தால் உடலின் இரத்த ஓட்டம்சீராகுவதுடன் இவைதானாகவே குறைந்துவிடும். இவற்றைச் சரியாகக் கடைப்பிடித்தால் உடல் அழகையும் மனதையும் சீராகப் பேணிக்கொள்ள முடியும்.




# ஓவியங்களில் 'ரஸம்'

ந. ஜெயதாஸ்

கலைப்படைப்பை நுகரும் நுகர்வோனின் அனுபவித்தல் நிலைகள் மூலம் ரஸம் தோற்றுவிக்கப்படுகின்றது. இதன்படி உணர்ச்சிகளே ரஸத்தை (பாவங்களை) தோற்றுவிப்பதற்குக் காரணமாகின்றன. கலை என்ற பார்வையில் இதனை முதலில் முன்வைத்த பரதர் விபாவம், அனுபாவம், வியாபிசாரிபாவம் என்ற மூன்று விடயகாரணிகளும் ரஸத்தை உற்பவிக்கின்றன என்கிறார்.

'விபாவானுபாவ.வியபிசாரி சம்யோகாத்
ரஸநிஷ்பதி"

(நாட்டிய சாஸ்திரம்.6ஆம் அத்தியாயம்.33ஆம் சூத்திரம்)

இந்தமூன்று காரணிகளும் சேர்ந்தே ரஸம் தோற்றுவிக்கப்படுகின்றது. ஆதலால் ரஸம் ஒரு தோற்றுவிக்கப்படும் அனுபவமாகும்.

இது காதல் வயப்பட்ட கிருஷ்ணர், ராதை ஆகிய பாத்திரங்களின் சித்திரிப்பாகும். ஐக்கியம் அல்லது ஒற்றுமை என்ற கருப்பொருளில் ஓவியமாக்கப்பட்டுள்ளது. நீர் நிலைகளால் சூழப்பட்ட மரங்கள் நிறைந்த நிலப்பகுதி ஒன்றில் ராதையும் கிருஷ்ணரும் அமர்ந்திருக்கும் காட்சி. அதில் பசுமைப் பேதங்களாகத் தோற்றமளிக்கும் மேட்டு நிலங்களும் செழித்து வளர்ந்த மரங்களுடன் கூடிய இயற்கைப் பிரதேசமும் ஓவியமாக்கப்பட்டுள்ளது. அவற்றின் நடுவே கிருஷ்ணரின் இடப்பக்கத்தில் ஆடைகளற்ற நிலையில் ராதையும் அவளை நோக்கியவாறு அவளுக்கு வலப்பக்கத்தே கிருஷ்ணரும் வரையப்பட்டனர். இவ்விரு பாத்திரங்களிடையேயும் தோன்றும் காதல் (சிருங்காரம்) என்பது ஆடையற்றிருக்கும் ராதையை சிருங்கார ரஸம் நிறைந்த பார்வையான "காந்தாத் ருஷ்டி" புலப்பட கிருஷ்ணர் நோக்குகின்றமை நேரடியாகவே புலனாகிறது. அது "வியபிசாரி த்ருஷ்டி" எனப் பெயர்படும். அந்தப் பாத்திரம் மூலம் வெளிப்படும் மனநிலையையும் உணர்வையும் வெளிப்படுத்தும் பார்வையாக இது வெளிப்படுகிறது. இந்தப் பார்வையில் சிருங்கார ரஸம் வெளிப்படுவது. மற்றவரைக் காமவிகாரத்தோடு புருவங்களை உயர்த்திக் கடைக்கண்ணால் பார்த்து கவரக்கூடிய பார்வை. இந்த ஓவியத்தில் கிருஷ்ணரின் மூலம் வெளிப்படுகின்றது. (அந்த ஓவியத்தின் பின்பக்கத்திலுள்ள செய்யுள் வரி)

"தலைமயிர்ச் சுருள் குழம்பியதால் கலைந்திருந்தது. அவளது கன்னங்கள் வியர்வைத் துளிகளைச் சுமந்திருந்தன.

அவளது சிவந்த உதடுகளின் பளபளப்பு மங்கியிருந்தது. அவளது மார்பின் அழகு முத்துப் பதித்த அட்டியலின் அழகைத் தோற்கடித்துக் கொண்டிருந்தது.

அவள், இப்போது கைகளை மார்புகளுக்குக் குறுக்காகக் கட்டித்தனது மார்புகளை மறைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் காதல் ஒளிபரப்பிக் கொண்டு என்னை நாணத்துடன் விட்டு விட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்" என்றுள்ளது. இதன்படி ஓவியத்தின் காண்பிய மூலக் கூறுகளில் ஒன்றான உருவம் இதில் சிருங்கார ரஸத் தன்மை பொருந்திய பார்வையை வெளிப்படுத்துகின்றது. இது வைஷ்ணவத்தில் ஆன்மா கடவுள் மீதான விருப்பத்தை வெளிப்படுத்தும் தன்மை என்றும் - தன்னையே அதில் அர்ப்பணிப்பது என்றும் கடவுள் மீதுள்ள மிகுந்த காதலைக் கொண்டாடுகின்றது. இந்தச் செய்யுள் கிருஷ்ணனின் கூற்றாக இடம்பெறுகின்றது. இதில் ராதையின் நிலை; உடலில் தோன்றும் மாற்றங்களால் உணர்ச்சியாக்கப்பட்டுள்ளது. இவை தொல்காப்பியர் கூறும் அகமரபுக் களவு நிலையில் தோன்றும் மெய்ப்பாடுகள், காதல் அவஸ்தை எனவும் களவு நிலையில் தலைவனும் தலைவியும் சந்தித்ததிலிருந்து புணர்ச்சிக்குப் பின் இடம்பெறும் மெய்ப்பாடுகள் எனவும் கூறுகின்றார்.

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கின்மையொடு
தகுமுறை நான்கே யொன்றென மொழிப

(தொல்.மெய் சூத்.13)

இது புகுமுகம் புரிதல் எனும் உலகியல் அகமரபுக் களவு நிலை. தலைவன் பார்ப்பதை விரும்பும் தலைவியின் நிலை கூறப்படுகின்றது. இதனால் அவளது உடலில் ஏற்படும் மாற்றங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்த ஓவியத்தில் கிருஷ்ணன் நோக்கிய வழி நாணம் ஏற்பட நெற்றி வியர்த்தல் காட்டப்பட்டுள்ளது. இது ராதையின் உடலிலிருந்து வெளிப்படும் உணர்ச்சி. தலைமயிர்ச் சுருள் குழம்பியதால் அவளது கன்னங்கள் வியர்வைத் துளிகளைச் சுமந்திருந்தன என்று செய்யுள் வரியில் குறிப்பிட்டுள்ளமை இந்த அர்த்தத்தையே தருகின்றது. அதன்பின் உட்லில் ஏற்படும் மாற்றமாக (அவஸ்தைகளாக) தொல்காப்பியர் குறிப்பிடுவது; உடல் தீண்டிய வழி மெல்லிய நங்கையர் உள்ளத்தில் மாற்றங்கள் ஏற்படும். இவற்றை மறைத்தலினால் உடலுடன் தொடர்புடைய தலைமுடி நெகிழும் எனவும் கூறுகின்றார். இவை தொல்காப்பியர் கூறும் உணர்ச்சி வெளிப்பாடு ஆகும். இவற்றையே பரதர் அடிப்படை உணர்ச்சிகளாகக் கூறி அந்த உணர்ச்சிகள் பாவங்களின் மூலம் ரஸத்தைத் தோற்றுவிக்கின்றன- என்கிறார். இதனால் உடலியல் இரகசியங்கள் மேன்மைப்படுத்தப்படுகின்றன. இந்த ஓவியங்களில் அவை வெளிப்படும்போது பக்தி சார் காதலாகின்றன. அவற்றில் தீயஒழுக்கங்கள் இல்லை. காதலுடனான பால் உணர்ச்சி வெளிப்பாடு பரவசமான சமய உணர்வாகவே கருதப்படுகின்றது.

(தொடரும்)





# இயற்கை கொடுத்த அற்புதம்

ஒவ்வோர் ஆண்டும் பல இலட்சக்கணக்கான மோனார்க் வண்ணத்துப் பூச்சிகள், கனடாவில் இருந்தும் அமெரிக்காவில் இருந்தும் மெக்ஸிக்கோ காடுகளை நோக்கிப் படையெடுக்கின்றன. உலகிலேயே மிக நீண்ட பூச்சிகளின் இடப்பெயர்ச்சி இதுதான். சுமார் 2,500 மைல்கள் தூரம் கடந்து மெக்ஸிக்கோவின் மிசோகன் காடுகளை அடைகின்றன. இங்கே எண்ணிலடங்கா வண்ணத்துப்பூச்சிகள் சேர்ந்து அடர்த்தியான மரங்களிலும் தரைகளிலும் ஓய்வெடுக்கின்றன. அவை கம்பளம் விரித்தது போல காட்சியளிக்கின்றன. வண்ணத்துப் பூச்சிகளில் மிக அழகானவை மோனார்க் வண்ணாத்துப்பூச்சி இனங்களே.

சின்னஞ்சிறு பூச்சிகள் ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து, பல்வேறு பருவ நிலைகளைச் சந்தித்து, மெக்ஸிக்கோவுக்கு வந்து சேர்கின்றன. இங்கே நெருக்கமாக மரங்களிலும் கிளைகளிலும் 5 மாதங்கள் வரை தங்குகின்றன. மனிதர்களின் இடையூறுகள், சட்டத்துக்குப் புறம்பாக மரங்களை வெட்டுதல் போன்ற காரணங்களால் மோனார்க் வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்விடம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. மெக்ஸிக்கோவின் மிகப் பெரிய சுரங்க நிறுவனம் ஒன்று 25 ஆண்டுகளுக்கு முன்பு இங்கே ஒரு சுரங்கத்தை அமைத்தது.

அது அங்கு வந்து தங்கும் மோனார்க் வண்ணத்துப் பூச்சிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்ததால், பலரின் போராட்டங்களுக்குப் பிறகு சுரங்கம் மூடப்பட்டது. ஆனால், இன்று மீண்டும் சுரங்கம் அமைக்கும் பணி தீவிரமடைந்திருக்கிறது. சுரங்கம் வந்தால் மோனார்க் வண்ணத்துப்பூச்சிகளின் மாயா ஜால உலகம்; தன் அற்புதத்தை இழந்துவிடும். இது மட்டுமல்ல அமெரிக்காவில் மரபணு மாற்றப்பட்ட சோளம், சோயா பீன்களைப் பயிரிடுவதாலும் களை கொல்லிகளின் அதிகரிப்பாலும் முட்டையிலிருந்து பூச்சியாக மாறும் மோனார்க் வண்ணத்துப்பூச்சிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியிருக்கிறது.



# போரின் வ

சக்தீனா குணசேகரன்

அந்தப் பெண் துவண்டு, மடிந்து விம்மியழுது கொண்டிருக்கிறார். அவரை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் நான் கல்லாய் சமைந்து அமைதியாய் மௌனமாய் அமர்ந்திருந்தேன். என் நிலையை நான் உணர்ந்தபோது, அவர் அழட்டும் என்று விட்டுவிட்டேன். பலவருடங்களாக யாரிடமும் பேசாமல் அடக்கியே வைத்திருந்த சோகம் அது. இப்போதாவது அது வெளிப்பட வேண்டும் தானே!

இந்தச் சமூகம் தன்னை 'நடத்தை கெட்டவள்' என்று கூறி ஒதுக்கி வைத்துவிட்டது என்று அவர் என்னிடம் கவலைப்பட்டிருந்தார். தன்னை அந்த நிலைக்கு ஆளாக்கியதே இந்தச் சமூகம்தான் என்பதையும் அவர் தெளிவாகவே தெரிந்து வைத்திருக்கிறார். ஆனால், அதைச் செய்ததற்காக இந்தச் சமூகத்தின் மீது அவர் கோபப்படவில்லை. "என் உடலுக்குக் கடன் சொல்லிப் போகுமளவுக்கு இழிவானது" என்று இந்தச் சமூகத்தை மேரி கனிஸ்டா இலகுவாகவே புறமொதுக்கிறார்.

போர் தின்று தீர்த்த கணவன்களின் குடும்ப நிலை பற்றிய ஆய்வுக்காக நான் அந்தக் கடற்கரைக் கிராமத்திற்குப் போயிருந்தேன். போர் முடிந்து 7 ஆண்டுகளாகின்றன. விதவைகள் அல்லது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்று அதிகாரிகள் வகைப்படுத்தும் இந்தப் பெண்களின் நிலமை குறித்து அரசியல் தலைமைகள் தம் வளர்ச்சிக்காக அதிகம் பேசினாலும் அடிமட்டத்தில் இருக்கும் அவர்களின் வாழ்க்கை கையறு நிலையிலேயே இருக்கிறது. வடக்குக் கிழக்கில் கிட்டத்தட்ட 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட "புருசனை இழந்தவர்கள்" இருக்கிறார்கள் என்கின்றன அரச தரவுகள். அரச திட்டங்களும் இவர்களுக்கான உதவிகள் குறித்து இன்னமும் பேசிக்கொண்டே தான் இருக்கின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள் சில உதவிகளைச் செய்திருக்கின்றன. ஆனால், அவர்களின் வறுமையிலிருந்து முழுமையாக அவர்களை மீட்டெடுக்க அந்த உதவிகளால் முடியவில்லை.

வடக்கு இலங்கையின் மேற்குக் கரையோரமாகவுள்ள அந்தக் கிராமத்துள் நான் நுழைந்தபோது அங்கு சுமார் 30 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருந்தன. மொத்தமாக அந்தக் கிராமத்தில் 300 குடும்பங்கள்தான் வசிக்கின்றன. மீன்பிடித் தொழில்தான் அவர்களின் முக்கியமான வருவாய் வழி. அதுவேதான் அந்தப் பெண்களின் கணவன்மார் இறப்பதற்கான வழியாகவும் இருந்திருக்கிறது. இந்த 30 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுமே மீன்பிடித் தொழிலின்போதுதான் குடும்பத் தலைவர்களை இழந்திருக்கின்றன.

போர்க் காலத்தில் கடற்றொழிலுக்குச் சென்ற ஆண்கள் திரும்பிவரவில்லை. சிலரது சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் பல நாள்களுக்குப் பின்னர் கரையொதுங்கியிருக்கின்றன. ஏனையவர்களின் சடலங்கள்கூடக் கிடைக்கவில்லை. "கடற்படையினர் அவர்கள் இருந்த படகை நோக்கித்தான் சுட்டார்கள்" என்று கூடச் சென்றவர்கள் சொல்லக் கேட்டதுடன் சரி.

இப்படித் துன்பத்தையே வாழ்க்கையாக்கிக் கொண்டவர்களைச் சந்திப்பதற்காக நான் அந்தக் கிராமத்திற்குள் சென்றபோது, அனேகமாக எல்லோருமே என்னை ஒரு வீடு நோக்கிச் செல்வதைத் தவிர்க்கக் கேட்டனர். எனக்கு ஆச்சரியமாகிப் போனது. ஆர்வத்தையும் தூண்டியது. "அது ஏன்?" என்று நான் அவர்களிடம் கேட்டேன். அவர் 'நடத்தை கெட்டவர்' என்ற பதிலைத்தான் அந்தச் சமூகம் எனக்கும் சொல்லியது. அவரைச் சந்தித்தே ஆகவேண்டும் என்ற ஆர்வத்தை அதுதான் என்னிடம் தூண்டியது.

தன்னை 'நடத்தை கெட்டவள்' என்றுகூறி அந்தச் சமூகம் ஒதுக்கி ஓரங்கட்டி வைத்திருப்பது பற்றி அந்தப் பெண் கவலைப்படவில்லை. "அதெல்லாம் பழகிப்போய்விட்டது" என்கிறார். "இந்தச் சமூகம் அன்று என் குடும்ப நிலையை மாற்றியிருந்தால் இன்று நான் இப்படி மாறியிருக்க மாட்டேன். என் பிள்ளைகளும் அவப் பெயரைக் கேட்காமல் இருந்திருப்பார்கள்" என்று புறங்கூறுபவர்களை ஒதுக்கித் தள்ளுகிறார். ஆனால், தன்னை இந்தச் சமூகம் இப்படி ஓரங்கட்டி நடப்பதால், தன்னுடைய பிள்ளைகளின் வாழ்வு பாதிக்கப்படுவது குறித்து அவர் அதிகம் கவலைப்படுகிறார்.

> "பாவம் செய்யாத யாராக இருந்தாலும் இந்தப் பெண் மீது கல்லெறியட்டும்" என்பது பொருந்தும் சமூகத்தில்தான் நான் வாழ்கிறேன் என்றார் மேரி.

"நான் நினைக்காதது எல்லாம் நடந்து முடிஞ்சிற்று. இப்பொழுது வெறும் பிணமாகவே வாழ்கிறேன்" என்ற பெருமூச்சுடன்தான் அவரது கதையை என்னிடம் கூறத் தொடங்கினார். தன்னைப் போன்ற பெண்களுக்கும் இந்தச் சமூகத்துக்கும் இது ஒரு படிப்பினையாக இருக்கட்டும் என்பதற்காகத்தான் அவரது கதையை நான் ஊடகங்களில் வெளியிடுவதற்கும் அவர் இணக்கம் தெரிவித்திருந்தார். அவர் மேரி கனிஷ்டா.

## விளையாட்டு வீராங்கனை

"நான் சின்ன வயசில் நல்லா விளையாடுவன். ஒரு விளையாட்டு வீராங்கனையாகத்தான் என்னைப் பாடசாலையில எல்லாருக்கும் தெரியும். படிப்பைவிட விளையாட்டிலதான் எனக்கு விருப்பம் அதிகம். அப்பா சின்ன வயசிலேயே இறந்திட்டார். நான் முதலாம் வகுப்பு படிக்கும்போது இலங்கை 'கிபிர்' வானூர்திக் குண்டு வீச்சில அப்பா செத்தவர். என்னையும் எனது சகோதரர்களையும் வளர்க்க அம்மா பெரிதும் கஷ்டப்பட்டவர். அண்ணன்கள் வளர்ந்து கடல் தொழிலுக்குப் போகும் வரையில் எங்கட அம்மா ஊரில எல்லாருக்கும் ஒரு கடன்காரியாத்தான் இருந்தா. அந்தக் கஷ்டத்துக்கு மத்தியிலயும் எங்கையெல்லாம் விளையாட்டுப்போட்டி நடக்குதோ அங்கயெல்லாம் நான் போயிடுவன். திரும்பி வரேக்க என்ரை கையில வெற்றிக் கிண்ணந்தான் இருக்கும். அம்மா பேசுவா, பொம்பிளப்பிள்ளை உனக்கேன் இந்த விளையாட்டெல்லாம் என்று. ஆனால் எனக்கு விளையாட்டிலதான் விருப்பம் இருந்தது. நல்லாப் படிக்கப்பார் எதிர் காலத்திலேயாவது நல்லாய் இருப்பாய் என்பா அம்மா."

மேரி கனிஷ்டா நிறுத்திக்கொள்கிறார். தலை தானே கவிழ்ந்துகொள்கிறது. அவரது சிறுவயது வாழ்க்கை அவர் மனதைத் தைத்திருக்கும். தலையை நிமிர்த்தியபோது அவர் கண்கள் குளமாகியிருக்கின்றன. அதை மறைக்க என்னைப் பார்த்து புன்னகைக்கின்றார். என்னால் அந்த வலி நிறைந்த புன்னகையை எதிர்கொள்ள முடியவில்லை.

கதையைத் தொடர வேண்டி "எப்ப கலியாணம் செய்தனீங்கள்?" என்றேன். "எங்கட ஊரில வேலைக்கு என வந்திருந்த ஒருத்தரை காதலிச்சுக் கலியாணம் செய்தன். என்னுடைய கணவர் மிகவும் நல்லவர். என்னையும் எனது குழந்தைகளையும் கஷ்டம் தெரியாமல் வளர்த்தவா அவர்தான். பிள்ளைகளை நல்லாப்படிக்க வைக்கவேணும் என்று ஒவ்வொரு நாளும் சொல்லுவார். திருமணம், மனைவி, குடும்பம், வாழ்க்கை என்பனவெல்லாம் ஒழுங்குமுறையாக இருக்கவேண்டும் என்றும் நினைப்பார். எமது ஊரில் கணவனை இழந்த பெண் ஒருவர் இரண்டாவது திருமணம் செய்தபோது அவரைக் கேவலமாகத் திட்டிக்கூட இருக்கிறார். நல்ல இலக்கணமான மனிதர். ஆனால் இன்று என்நிலையைப் பார்த்தால்....."

இப்போது அவரால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விக்கி விக்கி அழுகிறார். அழுகையை அடக்க

## ‘நடத்

முயற்சித்துத் தன் சோகங்களையும் சேர்த்தே விழுங்குகிறார். இந்தத் தடவை நான் எந்தக் கேள்வியும் இன்றி அவரையே பார்த்துக் கொண்டிருந் தேன். கதவுக்கு வெளியே அனல் கொளுத்தும் வெயிலின் கண்களைக் கூசச் செய்யும் ஒளியை வெறித்தவர் திரும்பி என்னைப் பார்த்துத் தொடர்ந்தார்.

"கடைசிச் சண்டையில புருசன் செத்துப்போனார். ஷெல் விழுந்து அந்த இடத்திலேயே ஆள் சரி. 7 பிள்ளைகளையும் வைச்சு எப்படிக் காப்பாற்றப் போகிறேன் என்று ஒவ்வொருநொடியும் அழுவன். அப்ப யாரும் உதவிக்கு வரேல்ல. சண்டை



# துயரப்பட்டபோது உதவிக்கு வராத சமூகம் இன்று ஒரு தலைப்பட்சமாக வஞ்சிக்கிறது

# த கெட்டவள்’

முடிய பிள்ளையளோட அகதி முகாமில அடை பட்டம். அப்ப மூத்தமகன் ஓ.எல். படிச்சுக்கொண்டி ருந்தவன். பள்ளிக்கூடம்விட்டு வந்ததும் முகாமில கடலை விக்கப் போவான். அதால கொஞ்சப் பணம் வரும். அதிலதான் முகாம் வாழ்கை கழிஞ்சது. பிறகு ஊருக்கு வந்தம். பிள்ளையளை வளர்க்க என்ன செய்யப் போறேனோ என்று பயப்பிட்டன். மகன் படிப்பை விட்டிட்டு நண்பர்களோட சேர்ந்து தொழிலுக்குப் போகத் தொடங்கினான். இனிமேல் அவன் காப்பாத்து வான் என்று நினைச்சன். ஆனால் அந்த நினைப்பு நீடிக்கேல்லை. கெதியிலயே அவன் திருமணம் செய்தான். அவனுக்கென்றொரு குடும் பம் வந்ததும் எங்களைக் கவனிக்கிறத விட்டிட் டான். அவன்ர உழைப்பு அவனுக்கே பத்தாது."

மீண்டும் சின்ன அமைதி. சில விடயங்களைஅவர்மென்றே விழுங்கிக் கொள்கிறார் என்பது புரிந்தது.

**பிழைப்புக்கு வழி?**

"அப்பா இல்லாமல் பிள்ளையளுக்காகநான் பட்ட கஷ்டத்தை என்ர பிள்ளைகள் உணரவேயில்லை.அதுதான்கவலை. வவுனியா முகாமில் இருக் கேக்கை பிள்ளையள் பள்ளிக்கூடம் போனாப் பிறகு நான் அப்பம், இடியப்பம் சுட்டு விற்பன். பிள்ளைகளுக்கு நான்படுற கஷ்டம் தெரிய வேண்டாம் என்று நினைச்சு அவையள் பள்ளிக்கூடம்போனாப் பிறகுதான் அதுகளைச் சுட்டு விற்பன்.

நெருப்பில் காஞ்சு பிள்ளையளுக்காக என்னையே உருக்கி னன். இப்பவும் என்ர பிள்ளைகளுக்காகத்தான்...." மீண்டும் அமைதியாகி நிலத்தை வெறித்துப் பார்த்தபடியே அமர்ந்திருக்கிறார்.

கடந்த 7 வருட வாழ்க்கையின் துயரங்களை சில மணித் துளிகளில் அவரால் மீட்டுச் சொல்லிவிட முடியாதுதான். ஆனாலும் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார் மேரி. "மூத்தவன் திருமணம் செய்தாப் பிறகு என்னோட கதைக்காமலே விட்டிட் டான். நான் பட்ட துயரத்துக்கு அளவேயில்லை. மற்றதுகள் எல்லாம் பொம்பிளைப் பிள்ளையள். கடைசிக்கு இப்ப ஏழு வயது. அவர் சாகிறபோது அவன் நாலுமாசம் வயித்தில இருந்தது. என்ர பிள்ளையளுக்காக நான்தான் ஏதாவது செய்ய வேணும். வேறவழி....? தொழில்செய்கிறதென்றாலும் எதைச் செய்யிறது என்ற நிலை. கணவனில்லாத வீடு, ஆண் துணையில்லாத வீடுதானே எண்டு நிறையப்பேர் வந்தினம். முதலில் எதிர்த்தேன். மானத்தைக் காப்பாற்ற என் நம்பிக்கை மட்டுமேபோதுமென்றிருந்தன். ஆனால்என் கஷ்டம் என்னை அப்பிடிக் கனகாலம் நம்பிக்கையோட இருக்க விடேல்ல. புருசன் இல்லாத பெண்ணுக்குதான் இன்னொரு பெண்ணின் மனசு புரியும்" என்கிறார் மேரி.

"சமூகம் ஏற்றுக்கொள்ளாத ஒரு செயலைச் செய்துஇன்று அனைவராலும்தெரிந்துகொள்ளக் கூடியவளும் ஆகியிருக்கிறேன். எனது ஊர் என்னை ஒதுக்கி வைத்துவிட்டது. நடத்தை கெட்டவள் என்று என்னைத் தம்மிலிருந்து தூரமாக்கி வைச்சிருக்கு. இன்று ஓரங்கட்டி வஞ்சிக்கும் இந்தச் சமூகம் அன்று என் குடும்ப நிலையை மாற்றியிருந்தால் இன்று நான் இப்படி நடத்தை கெட்டவளாகியிருக்கமாட்டேன். என் பிள்ளைகளும் அவப் பெயரைக் கேட்காமல் இருந்திருப்பார்கள். மூத்தமகன் அடிக்கடி சொல்லுவான், அம்மா நான் வேலைக்குப் போனபின் உங்களை அப்பம் சுடவிடமாட்டன், நீங்கள் நெருப்பில் இனி நிற்கமாட்டீங்கள் என்று சொல்லுவான். தனக்கென்றொரு வாழ்வு வந்ததும் அம்மாவையே மறந்துவிட்டான். இருமகள்களும்திருமணம்செய்து விட்டார்கள். இப்போது அவர்களுக்கும் தங்களுடைய அம்மா நடத்தைகெட்டவள். வழியில் கண்டாலும் யாரோ போல் விலகிச் செல்கிறார்கள். சமூகம் இனி விடாது

கடைசியாக அவர் தன் மொத்தத் துயரத்தையும் வெளியே கொட்டி அழுகிறார். இயேசுநாதர் சொன்ன மாதிரி "பாவம் செய்யாத யாராக இருந்தாலும் இந்தப் பெண் மீது கல்லெறியட்டும்" என்பது பொருந்தும் சமூகத்தில் தான் நான் வாழ்கிறேன் என்றார் மேரி. சமூகம் தன்னை ஏன் அப்படிப் பார்க்கின்றது என்பது தனக்குத் தெரிகிறது. என்றும் தான் செய்வது பிழையானதுதான் என்றும் கூறும் மேரியின் சமூகத்திற்கான ஒரே பதில் "என்னோடு இப்பஇருக்கிற பிள்ளைகள் நால்வரும் படிக்க வேணும் அதற்கு என்னிடம் வேறு வழியில்லை" என்பதுதான். அவருடைய உடல் மூலம் ஒரு நாளைக்கு அதிகூடியட்சம் ஐந்நூறு, ஆயிரம் ரூபா கிடைக்கக்கூடும். அதுதான் தனது அதிகூடிய வருமானம். இதற்காகத்தான் இவ்வளவு பழியும் அவச்சொற்களும் கேட்கவேண்டியிருக்கிறது என்று கவலைப்படுகிறார். ஆனால் அந்தச் சிறு தொகையைக்கூட அந்தப் பெண்ணுக்குக் கொடுக்க முன்வராத இந்தச் சமூகம் அவரை இன்னமும் இன்னமும் படுகுழிக்குள் தள்ளிக் கொண்டே இருக்கிறது.

"சிலவேளைகளில் என் உடம்புக்கு கடன் சொல்லியும் சென்றிருக்கிறார்கள். இதெல்லாம் இப்ப எனக்கு பழகிப் போயிற்று. இப்படி நடப்பது என் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதித்துவிடுமோ என நினைத்து விலகி இருந்தாலும். சமூகம் என்னை இனி விடாது. நான் படுகிற கஷ்டம் எனக்கு மட்டும்தான் தெரியும்." அவரது கண்ணீர் தொடர்கிறது.

உண்மைப் பெயர் மாற்றப்பட்டிருக்கிறது



# வேண்டாமே மண(ண)ன முறிவு 2



அராலியூர் எஸ்.மல்லிகா

என்னதான் கணவன் மத்தியில் நியாயம் இருப்பினும், அவர் தன்னை அடித்துவிட்டார், இனி அவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று பிடிவாதம் பிடிக்கின்றனர் பெண்கள். உண்மையில் பெண்களைக் கொடுமைப் படுத்தும் ஆண்களும் உள்ளனர்தான்.

அவ்வாறு சேர்ந்து வாழ முடியாது என்று கூறும் பெண்களுக்கு நான்கு நாள்கள் குடும்பநல ஆலோசனைகள் இடம்பெறும்.

அதற்குப் பெண் இணங்காத பட்சத்தில், "அவளின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இந்த விவாகரத்தை மன்று வழங்குகின்றது" என்று நீதிபதி தீர்ப்பளிப்பார். இதன் பின்னரான பெண்களின் பாதுகாப்பை , வாழ்க்கைப் போக்கை அந்தச் சட்டமும் சிந்திக்க மறுக்கின்றது.

சமூகம் என்ற கட்டமைப்புத் தோன்றிய காலம் முதல் இன்றுவரை அதையும் குடும்பத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன் ஆண். அன்றிலிருந்து இன்றுவரை ஆண்களின் குடும்பப் பொறுப்பு என்றால் பணம் ஈட்டுவது மட்டும் என்றே இருக்கின்றது. பத்து மாதம்தான் பெண் பிள்ளையைச் சுமக்கிறாள். ஆனால், கணவன் தன்பிள்ளையையும் மனைவியையும் ஆயுள்காலம் வரை சுமக்கப் பணமீட்டுகிறான். இதில் யாரிடத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. குடும்பத்துடன் மனம் விட்டுப் பேசவும் குடும்ப அங்கத்தவர்களின் அபிலாசைகளைத் தெரிந்துகொள்ளவும் இன்றைய அனேக ஆண்கள் நேரம் ஒதுக்குவதில்லை. அதே நிலை வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு உள்ளது. முன்னைய காலங்களில், "படித்து என்ன ஆகப்போகிறாய்? எப்படியும் சட்டி பானைதான் கழுவப் போறாய்" என்று சொல்லிப் பெண்களைப் படிக்கவிடாது முன்னோர்கள் தடுத்தனர். இதனால், திருமணத்தின்பின் பெண்கள் வீட்டின் பொறுப்புக்களைச் சுமப்பவர்களாக வளர்க்கப்பட்டனர். அவர்கள் படிக்காவிட்டாலும் குடும்பக் கலை, குழந்தை வளர்ப்புக்கலை என அத்தனை வித்தைகளையும் வீட்டிலிருந்த வண்ணம் கற்றனர்.

பள்ளிக்கூடம்சொல்லித்தராத சில தனிப்பட்ட பண்புகளையும் தம் அன்னையரிடமிருந்து பெற்றனர். எதிலும் ஒரு நிதானம், பொறுமை என்பன அன்றைய பெண்களிடம் இருந்தன. பண்பட்ட அவர்கள் தனித்து வாழும் சூழலில் மணமுறிவுகள் இருக்கவில்லை.

ஆனால், இன்று நிலமை அவ்வாறில்லை.அனைத்திலும் பெண்களுக்குச் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளது. கல்வி, பொருளாதாரம், அரசியல் என்று சமூக மட்டத்தில் பெண்களும் முன்னிலைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. முன்புபோல பெண்கள் எந்த விடயத்திலும் ஆண்களைச் சார்ந்து இருக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கும்போதுதான் இடைவெளி இல்லாது இருக்கும். இது இல்லற வாழ்க்கை சிறக்க உதவும்.

ஆண்களில் அனைத்தையும் புரிந்து நடப்பவர் துணையாக எல்லாப் பெண்களுக்கும் கிடைப்பதில்லை. பெண் தலைமைத்துவத் தம்பதிகளில் பிணக்கு வரும் சமயம், "படித்து வேலைக் குச் சென்று விட்டாலும் நீ பொம்பள தானே? புருசனுக்கு அடங்கித்தானே நீ நடக்க வேண்டும்" என்று ஆண்மகன் பேசும்போது அதற்குப் பெண், "நான் எந்த விதத்தில் உமக் குக் குறைந்து விட்டேன்?" என்று ஆரம் பிப்பாளாயின், நீளும் வாக்குவாதத்தின் இறுதியில் இரு வரும் எடுக்கும் முடிவாகவும் விவாகரத்து உள்ளது. இவ்வாறான கருத்து மோதல்கள் தனிப் பட்ட இருவரது விட்டுக்கொடுப் பின்மையால் ஏற்படுவது. இவ்வாறு எதிர்காலத்தைச் சிந்திக் காமல் இவர்கள் எடுக்கும் முடிவுகள் இவர்களை மட்டுமன்றி இவர்களின் பிள்ளைகளையும் பாதிக்கின்றன. இவ்வாறு பிரிந்த பெற்றோர்கள் மறுமணம் செய்யும் பட்சத்தில், மறு உலகில் வாழ்வது போன்ற பிரமையில் தங்களதும் தங்கள் குழந்தைகளினதும் வாழ்க்கையைத் தொலைத்து நிற்கின்றனர். ஆனால் இவ்வாறான மணமுறிவு பெறும் பெற்றோர்கள் அவ்வேளை தங்கள் குழந்தைகளின் நிலமை பற்றிப் பெரிதும் கவலைப்படுவதில்லை. அப்போது பணமிருந்தால் போதும் என்ற மனோநிலையில்தான் இருக்கின்றனர். ஆனால், இவ்வாறு மண முறிவு பெறுபவர்கள் ஏதோ ஓர் எண்ண அலையால் அலைக்கழிக்கப்படுவார்கள். அதுதான் அவர்கள் செய்த குற்றவுணர்ச்சி.

(தொடரும்....)

> "படித்து வேலைக் குச் சென்று விட்டாலும் நீ பொம்பிள தானே? புருசனுக்கு அடங் கித்தானே நீ நடக்க வேண்டும்" என்று ஆண்மகன் பேசும் போது அதற்குப் பெண், "நான் எந்த விதத்தில் உமக்குக் குறைந்துவிட்டேன்?" என்று ஆரம்பிப் பாளாயின், நீளும் வாக்குவாதத்தின் இறுதியில் இரு வரும் எடுக்கும் முடிவாகவும் விவா கரத்து உள்ளது.



## ஆத்மாவின் மடல்

அப்பா என்
சுட்டுவிரல் பிடித்து
'அ' எழுதிக் காட்டிய
முற்றமும்

முதன் முதலாய்
உச்சரித்த 'அம்மா'
என்ற உயிர்ச்
சொல்லும்

இலட்சியத்துக்காய்
கால் பதித்து
நடந்த தேச வெளிகளும்...

அடிக்கடி
ஏறி இறங்குகின்ற
நாவல் விளாத்திகளும்
நுங்கு பறிக்க
ஏறுகின்ற யாழ்ப்பாணத்து
பனை மரமும்
என்னைத் தேடக் கூடும்

என் பாதங்களை
ஆசையோடு வருடிய
முல்லைத்தீவுக் கடலும்
என்னைத் தேடக் கூடும்

இலட்சியத்துக்காய்
பயணித்தவர்களில்
நானும் ஒருவன்

பூச்சியம் ஆகிவிட்டதா...?
எங்கள்
இலட்சியம்

நான் எப்படி
வருவேன்..?
பச்சோந்திகள்
வாழும் உலகத்தில்

ஆ.முல்லைதிவ்யன்

## எழுத்தாளன்

பத்தி எழுத்தால்
பண்புள்ளவனாய் மாற்றி
புத்தி புகட்டிய எழுத்தாளன்
நீ ஒரு பகுத்தறிவாளன்,
நீதியற்றவனை
பாசக்கயிற்றால் கட்டியவன்
பாம்பான மனிதர்களின்
படத்தை எக்ஸ்ரே எடுத்துக்காட்டியவன்
படங்கு போட்டு சூரியனை மறைத்து
விலங்கு போட்டு குற்றமற்றவனை
பழிவாங்கிய போதும்,
பறந்து வானில் நின்று
பல செய்திகள் சேகரித்து
பலிக்கடாக்களை எல்லாம்
பாவியரிடமிருந்து காப்பாற்றி
பாவ புண்ணியமெல்லாம் தேடி
பாற்சோறு ஊட்டியதால் - நீ ஒரு படைப்பாளன்
அவன்தான் அந்த எழுத்தாளன்.




மாவையூர் கவி



தமிழில்: சாரி

# இருபெரும் நபர்கள் புரிந்த குற்றம்





ஈராக் மீது படையெடுப்பது என்ற முடிவு தொடர்பாக வெளியான பல்வேறு தகவல்களை விசாரித்த சேர் ஜோன் சில்காட் தலைமையிலான குழுவின் முக்கிய கண்டுபிடிப்பு, அப்போதைய பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எழுதிய தனிப்பட்ட முறையிலான ஒரு கடிதம் தான். 2002 ஜூலையில் எழுதிய அந்தக் கடிதத்தில் பிளேயர் குறிப்பிட்டிருந்தார், "நான் உங்களுடன் இருப்பேன் - எது நடந்தாலும்" என்று.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடத்தப்பட்ட 2001 செப்ரெம்பர் 11 முதல் பிரதமர் பதவியிலிருந்து அவர் பதவி விலகிய 2007 ஜூன் 27 வரையில் முறையற்ற முடிவுகளையே ரொனி பிளேயர் எடுத்து வந்தார். அக்கடித வாசகங்கள் பிளேயரின் உள் நோக்கத்தையும் ஈராக் போரில் அவருக்கிருந்த பங்களிப்பையும் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுவதாக இருக்கின்றன.

### தவறுக்காக வருந்தவில்லை

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, இறையாண்மை மிக்க ஒரு நாடான ஈராக் மீது பிரிட்டன் ஆக்கிரமிப்புச் செய்தது. ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹுசைன் எவருக்கும் உடனடி அச்சுறுத்தலாக இல்லாதபோதும் பிரிட்டன் அந்த முடிவை எடுத்தது. அதைச் சில்காட் அறிக்கை பட்டவர்த்தனமாகச் சுட்டிக்காட்டிய பிறகு பிளேயர் அளித்துள்ள பதில், தான் செய்த தவறுக்காக அவர் இப்போதும்கூட வருந்தவில்லை என்பதையே காட்டுகிறது.

பெருமளவில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் ஈராக் வசம் இருப்பதாகக் கிடைத்த உளவுத்துறையின் தகவல்கள் சரியானவை என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன; ஆனால் அந்தத் தகவல்கள் சரியானவையல்ல என்பது பின்னர் தெரியவந்ததாக செய்தியாளர்களுடனான சந்திப்பொன்றில் கூறியிருக்கிறார் பிளேயர். "அந்தத் திட்டமிடலிலும் செயற்படுத்தலிலும் சிறிய தவறுகள் இருந்தன என்பது உண்மையே. நாங்கள் சரியான முடிவைத் தான் எடுத்தோம். அதனால்தான், இன்று உலகம் பாதுகாப்பாகவும் நல்ல நிலையிலும் இருக்கிறது என்று கருதுகிறேன். அப்போது கிடைத்த தகவல்கள் இப்போது கிடைத்தாலும் அப்போது எடுத்த முடிவைத்தான் எடுப்பேன்" என்றும் கூறியிருக்கிறார்.

> பெருமளவில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் ஈராக் வசம் இருப்பதாகக் கிடைத்த உளவுத்துறையின் தகவல்கள் சரியானவை என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும், ஆனால் அந்தத் தகவல்கள் சரியானவையல்ல என்பது பின்னர் தெரியவந்ததாகவும் பத்திரிகை நிருபர்களுடனான சந்திப்பொன்றில் கூறியிருக்கிறார் பிளேயர்.

ஈராக் மீது பன்னாட்டுப் படைகள் படையெடுத்ததால் படையினரும் அப்பாவிப் பொதுமக்களும் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்தனர். ஈராக் மக்களின் இறப்பு 160,412 முதல் 179,327 வரையில் இருக்கும் என்று தெரிகிறது. எல்லாத் தரப்பிலும் சேர்த்து இறந்த படையினரின் எண்ணிக்கை மட்டும் 251,000 க்கும் அதிகம். ஈராக் சுகாதார அமைச்சகத்தின் உதவியுடன் அமெரிக்கா, கனடா, ஈராக்பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் நடத்திய ஆய்வுகளில் இந்த எண்ணிக்கை தெரியவந்துள்ளது.

போரின்போது நடந்த அன்னியர் ஊடுருவல், பன்னாட்டுப் படையினரின் படையெடுப்பு, சமூகங்களில் ஏற்பட்ட பிளவு, போருக்குப் பிறகு வெவ்வேறு இனங்களுக்கிடையே மூண்ட மோதல்கள் போன்றவற்றால் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். ஈராக் மக்களின் உயிரிழப்பு, சொத்து இழப்பு, சமூக வாழ்விழப்பு போன்ற சேதங்கள் அளவிட முடியாதவை. அவை இப்போதும் தொடர்கின்றன.

### குற்றஞ்சாட்டும் சில்காட்

பன்னாட்டுப் படையெடுப்பின் விளைவாக ஈராக் மிகப் பெரிய அளவில் பாதிப்படைந்திருக்கிறது என்று சில்காட் அறிக்கை கடுமையான குரலில் குற்றஞ்சாட்டுகிறது. 26 லட்சம் வார்த்தைகள், 12 தொகுதிகள் கொண்ட இந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டுமே 100 பக்கங்களையுடையது. பிரிட்டனின் முன்னாள் பிரதமர் கார்டன் பிரவுன் 2009இல் நியமித்த இந்த ஆணையம் 7 ஆண்டு விசாரணைக்குப் பிறகு அறிக்கை அளித்திருக்கிறது.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் மீது அல்-குவைதா அமைப்பு விமானம் மூலம் தாக்குதல் நடத்தியபோது, பயங்கரவாத சக்திகளை அடக்கவேண்டும்" என்று மட்டுமே பேசிவந்த பிளேயர், அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்குக் கடிதம் எழுதிய 2002 ஜூலையில், ''நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் உங்களோடு இருப்பேன்" என்று உறுதிகூறும் அளவுக்கு மனமாற்றம் அடைந்திருக்கிறார். அவரை (சதாம் ஹுசைன்) அகற்றுவதற்கு உங்களுக்குப் பன்னாட்டுக் கூட்டுப்படை தேவைப்படுகிறதா? பிரிட்டனின் உதவியுடன் அமெரிக்காவால் மட்டுமே இதை நிகழ்த்திவிட முடியாதா? இந்த மாதிரி விடயங்களில் உள்ள ஆபத்து என்னவென்றால், நாம் விரும்பாத சில முடிவுகள் வந்துதொலைக்கும் என்றும் எழுதியிருக்கிறார்.

### ஆதாரம் இல்லாமல் போர்

ஜோர்ஜ் புஷ்ஷுக்கு, பிளேயர் எழுதிய கடிதத்தை பிரிட்டன் பிரதமர் அலுவலக அதிகாரிகள் மட்டுமே வாசித்திருக்கின்றனர். அப்போதைய பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜாக் ஸ்டிரா, பாதுகாப்பு அமைச்சர் ஜியாப் ஹுன் ஆகியோர் பார்த்ததுகூடக் கிடையாது.

தன்னுடைய சொந்த நாட்டைச் சேர்ந்த இராணுவத்துக்கு அமைச்சர்களுக்குக் கூட எதையும் தெரிவிக்காமல் மறைத்து, அமெரிக்க நாட்டின் அதிபரிடம் எல்லாவற்றையும் விவாதித்திருப்பதை இந்தக் கடிதம் காட்டுகிறது. தன்னுடைய முடிவு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில்தான் இதைச் செய்தார் எனத், தன்னை ஒழுக்கசீலரைப் போலக் காட்டிக் கொள்ள முற்பட்டிருக்கிறார் பிளேயர். தன்னுடைய முடிவில் தவறு இருக்கலாம், பொய் சொன்னதாகவோ, ஏமாற்றியதாகவோ தன் மீது குற்றஞ்சாட்ட முடியாது என்றிருக்கிறார். ஆனால், சில்காட் அறிக்கையோ அவருடைய சமாதானங்கள் உண்மையானவை அல்ல என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி இருக்கிறது.



ஈராக் தலைவரிடமிருந்து உடனடியான அச்சுறுத்தல்கள் ஏதும் வெளிப்பட்வில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு ஆணையத்தில் இருந்த உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை, ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றனவா என்பதை ஐ.நா. ஆயுத ஆய்வாளர்கள் முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றே கருதின. ஆனால் ஈராக்கால் ஆபத்து என்று எந்தவித ஆதாரமும் இல்லாமலேயே பிளேயர் அறிவித்தார்.

ஆயிரக் கணக்கில் மக்களைக் கொல்லக்கூடிய இரசாயன, உயிரியல் ஆயுதங்களை சதாம் ஹுசைன் தயாரித்துவருகிறார் என்ற உளவுத் தகவல்களும் சந்தேகத்துக்கு இடமில்லாத ஆதாரங் களுடன் முன்வைக்கப்படவில்லை. படையெடுப்புக்கு முன்னால் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பேசிய பிளேயர், இந்த உண்மைகளைத் தெரிவிக்காமல் மறைத்துவிட்டார். ஈராக் மீது பிரிட்டன் படையெடுத்ததற்குச் சட்டபூர்வமான முகாந்திரம் எதுவுமே கிடையாது என்று சில்காட் அறிக்கை பட்டியலிடுகிறது. சதாமைப் பதவியிலிருந்து அகற்றிய பிறகு, ஈராக்கின் எதிர்காலம் எப்படியிருக்க வேண்டும் என்று முறையாகச் சிந்தித்து நடவடிக்கை எடுக்காததால், ஈராக் சீரழிந்துகொண்டிருக்கிறது. எந்த மாற்று ஏற்பாட்டையும் செய்யாமல் ஆக்கிரமித்து நாசப்படுத்தியதுடன் போர் ஓய்ந்ததாக அறிவித்துவிட்டு வெளியேறிய செயல், ஈராக்கைப் படுகுழியில் தள்ளிவிட்டது. ஈராக்கை ஆக்கிரமித்ததன் பின் செய்ய வேண்டியவை என்று தனக்குள் ஏற்படுத்திய சில குறிக்கோள்களைக்கூட பிரிட்டன் அரசு செய்து முடிக்க வில்லை. இந்தச் செயல்களின் விளைவாக200-க்கும் மேற்பட்ட பிரிட்டன் குடிமக்கள் (ராணுவத்தினர் தவிர்ந்த) 2009 ஜூலைக்குள் இறந்தனர். 150,000 ஈராக் மக்கள் சாவைத் தழுவினர். 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வாழ்விடங்களை இழந்து இடம்பெயர்ந்தனர். இந்த நிலை தற்போதும் மாறவில்லை. இந்த உண்மைகளை இல்லை என்று பிளேயரால்கூடக் கூற முடியாது.

சில்காட் விசாரணை என்பது நீதிமன்ற விசாரணை அல்ல. எனவே, ஆக்கிரமிப்பு செய்ய முடிவெடுத்த பிளேயர் மீதும் அதிகாரிகள் மீதும் வழக்கு தொடுக்க இந்த விசாரணை மட்டும் போதாது. தான் செய்தது சரி என்று உறுதியாக நம்பும் பிளேயர், இறந்த பிரிட்டிஷ் படையினரின் குடும்பத்தார் உட்பட அனைவரையும் சந்தித்து இதைக் கூறவும் தயார் என்று மார் தட்டுகிறார். நியாயமற்ற ஒரு போரின் விளைவாக அந்த நாட்டு மக்கள் தினந்தோறும் புதுப்புது வேதனையை அனுபவித்துக்கொண்டிருக் கிறார்கள். தவறான அனுமானங்களின் பேரில் தங்கள் நாட்டின் மீது நிகழ்த்திய படையெடுப்பும் அதையொட்டிய போரும் இன்றளவும் ஏற்படுத்திவரும் துயரங்களைப் போக்க எந்தவொரு செயலும் நியாயத்தையோ நிவாரணத்தையோ வழங்கிவிடாது என்பது ஈராக் மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

நன்றி: தி இந்து.

# இறைச்சியிலும் இனிப்பு!



பொதுவாக இறைச்சியைப் பயன்படுத்தி இனிப்புகள் செய்வதில்லை. ஆனால் துருக்கியில் மட்டும் 'டவக் காக்சு' என்ற இனிப்புப் பொருள் பல நூற்றாண்டுகளாகக் கோழி இறைச்சியில் செய்யப்பட்டு வருகிறது. இந்த இனிப்புத்தயாரிப்பில் கோழி இறைச்சியே முதன்மை. ஒட்டோமான் பேரரசில் மன்னர்கள் நடு இரவில் இனிப்புச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒரு நாள் அரண்மனையில் இனிப்புகள் தீர்ந்துவிடவே இனிப்புச் செய்ய வந்த சமையற்காரருக்கு அரண்மனைச் சமையலறையில் கோழிகளைத் தவிர வேறு உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. பால், சர்க்கரை, கோழி இறைச்சியை வைத்து ஓர் இனிப்பைப் புதிதாக உருவாக்கிவிட்டார். அந்த இனிப்பு அரசருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் பிடித்துப்போனது. கோழியில் செய்யப்பட்ட இனிப்பு என்று சொன்னால் மட்டுமே தெரிய வரும். மற்றப்படி யாராலும் அது கோழியில் செய்யப்பட்டது எனக் கண்டு பிடிக்கவே முடியாது.

இது இன்று துருக்கியின் மிக முக்கியமான இனிப்புக்களில் ஒன்றாக இருக்கிறது. இஸ்தான்புல்லில் ஓஸ்கோனாக் என்ற உணவு விடுதியில் கடந்த 50 ஆண்டுகளாக இந்த இனிப்புச் செய்யப்பட்டு வருகிறது. 3 லீற்றர் பாலில் அரைக் கிலோ சர்க்கரையைச் சேர்த்து நன்றாகக் காய்ச்ச வேண்டும். பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளில் இருந்து, எலும்பில்லாத இறைச்சியை எடுத்து, மெல்லிய துண்டுகளாக நறுக்கி வேக வைக்கவேண்டும். இதைப் பாலில் சேர்த்துக் குளிர வைக்கவேண்டும். பிறகு மீண்டும் 20 நிமிடங்கள் அடுப்பில் வைக்க வேண்டும். கலவை கெட்டியாக வரும்போது, உலோகத் தட்டுகளில் ஊற்றி, ஆறிய பிறகு வெட்ட வேண்டும். யார் வேண்டுமானாலும் செய்து பார்க்கலாம். ஆனால் எங்கள் சுவைக்கு ஈடாக அதை எவராலும் செய்ய முடியாது. "கோழி இறைச்சியால் செய்த இனிப்பு என்றதும் விருப்பம் இல்லாமல் சுவைப்பார்கள். ஆனால் சுவைத்த பிறகு அதன் சுவைக்கு அடிமையாகி விடுவார்கள்" என்கிறார் விடுதியின் உரிமையாளர். இந்த இனிப்பு சமீப காலமாக உலக அளவில் புகழ் பெற்று வருகிறது.



# சிரிக்கச் சிந்திக்க சில வரிகள்



கலாபூசணம் மு.மாசிலாமணி

ரெடி, ஸ்ராட், கமெரா, அக்ஷன் இது சினிமா பாஷை. அத்துடன் கட்கட் என இடைக்கிடையே இயக்குநர் சொல்வதெல்லாம் நடிகர்களைக் கட்டுப்படுத்தும் மொழிப் பயன்பாடு. இதை ஏன் சொல்ல நினைக்கிறேன் என்றால் எமது சமூக விழாக்கள், கொண்டாட்டங்கள் என்பனவற்றின் இயக்குநர் வீடியோ படப்பிடிப்பாளர் தான். சினிமாவிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் இயக்குநர் எப்படி நடிகர்களை ஆட்டிப் படைக்கிறாரோ அதுபோல் நிஜ வாழ்வில் நடக்கும் மங்கலகரமான நிகழ்வுகளை இந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள் குறிப்பாக மணப்பெண்களை தங்கள் இஷ்டப்படி கமெராவுக்குள் பதிவுசெய்யப்படாதபாடு படுத்துகிறார்கள். கலியாணமாக இருந்தால் மணமகள் வீட்டில் இருந்து மண மேடைக்கு வரமுன்பே அப் பெண்ணை பல கோணங்களில் நிற்க வைத்தும் பெண்ணின் பெற்றோர்களை துணைநடிகர்களாக்கியும் படுத்தும்பாடு பெரும்பாடு. கவுண்டமணியின் பாஷையில் சொன்னால் "போதுமடா சாமி".



மணமேடையிலும் வீடியோ இயக்குநர்தான் கட்டுப்பாட்டாளர். முன்பெல்லாம் கன்னிக்காலைச் சுற்றி மாவிலை, தோரணங்கள், மாலைகள் என அலங்கரித்து மண மேடை அழகாகவிருக்கும். மணமேடை ஐயரின் கட்டுப்பாட்டில் இருந்தது. காலம் செல்லச்செல்ல, மெல்ல மெல்ல மாலையும் தோரணமும் கமெராவுக்கு இடைஞ்சலாக இருக்குமென வீடியோ இயக்குநரால் அகற்றப் பட்டுவிட்டது. ஐயரும் இதைப்பற்றி கேள்வி எழுப்ப வில்லை. இலட்சக் கணக்கில் செலவு செய்து திருமணம் நடத்தும் பெற்றோரும் இந்தச் செயலைத் தட்டிக் கேட்க வில்லை.

திருமணத்தையோ பூப்பெய்த சடங்கையோ பார்த்து ஆசீர்வாதம் செய்ய அழைக்கப்படுபவர்கள், மேடையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கின் கமெராமென், லையிற் பிடிப்பவர்களை "சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்று கூற இயலாதுள்ளது. என்னதான் நடக்குது நடக்கட்டுமே என இருந்து விடுவார்.

சடங்குகள் முடிவுற்று அறுகரிசி போடும் போட்டி பெரும் போட்டி. விருந்தினர் தமது வரவைப் பதிவு செய்ய (வீடியோவில்) முண்டியடித்து நிற்பர். அறுகரிசி போட்டு மண மக்களின் கையில் என்வெலப்பைத் திணித்துவிட்டு அடுத்த கட்ட கியூவுக்கு ஓடி இடம் பிடித்து வயிற்றுக்கு வஞ்சகம் செய்யாது பார்த்துக் கொள்வர்.

எனக்குத்தெரிந்த அன்பர் ஒருவர் ஊரில் நடக்கும் கல்யாணம், பூப்பெய்த சடங்கு, பிறந்தநாள் கொண்டாட்டம் என ஒன்றையும் தவறவிடாது போய் இருப்பர். அவர் கொடுக்கும் என்வெலப்பில் பணம் இருக்காது என்ற இரகசியம் எனக்கு மட்டுமே தெரியும். தயவுசெய்து இந்த இரகசியத்தை ஒருவருக்கும் சொல்லிவிடாதீர். இலட்சக்கணக்கில் செலவு செய்து நடத்தும் விழா உபயகாரர்கள் குத்துவிளக்கில் கணக்குப் பார்க்க நேரிடும்.

# நாமல் ராஜபக்சவுக்கு

## ஒரு பகிரங்க மடல்!



அன்புள்ள நாமல் தம்பிக்கு வணக்கம்!

"எப்பிடித் தம்பி சுகமாய் இருக்கிறியளோ" எண்டு கேக்கிறது, சத்தியமாய் நக்கலுக்கு இல்லை. கனகாலமா உமக்கு ஒரு காகிதம் வரைய வேணுமெண்டு இருந்தனான். இப்பதான் அதுக்கு காலம் கனிஞ்சிருக்கு. ஆனால் அதுக்குள்ள நீரெல்லோ மறியலுக்குள்ள போட்டீர். மறியலுக்குள்ள இருந்தாலும் ஒரு சில வசதிக்குறைவோட வீட்டுச் சாப்பாட்டோட வடிவா இருப்பீர் எண்டு நம்புறன். உங்கை உம்மோட கூட இருக்கிறவைக்கு யோகா சொல்லிக் கொடுக்கிறீராம் எண்டும் கேள்விப்பட்டனான். அதைத் தொடரும். அதுதான் உடலுக்கும் மனதுக்கும் நல்லம்.

சின்னப்பிள்ளையள் மணல் வீடு கட்டி அதில கள்ளன்- பொலிசு விளையாட்டு விளையாடுற மாதிரி கொஞ்ச நாளைக்கு முன்னம்தான் நீங்கள் ஏதோ நிழல் அமைச்சரவையோ என்ன இழவோ அமைச்சிருக்கிறதாயும், அதில உமக்கு வெளிநாட்டு அமைச்சர் பதவி தந்திருக்கிற மாதிரியும் அறிஞ்சனான். அது என்னவெண்டு விளக்கமாய் ஒருக்கா விசாரிப்பம் எண்டு பாக்குறதுக்குள்ள உம்மை அப்பிக்கொண்டு போட்டாங்கள்.

ஏனடா இந்த ரக்பி விளையாடுற தம்பியைக் கம்பிக்குப் பின்னால தள்ளினவை எண்டு பாத்தா. தம்பி தகாத வேலையெல்லோ செய்திருக்குது. கைக்கு வந்த 70 மில்லியன் ரூபாய்க்குக் கணக்குக் காட்ட முடியாமல் முழுசினனீராம் எண்டு கதை அடிபடுகுது. அந்தக் காசை ரக்பி போட்டிக்கு பாவிச்சது எண்டு கரடி விட்டனீராம். அதுவும் எடுபடேல்லயாம். ஏன் தம்பி உமக்கு இந்த வேலை?

> கைக்கு வந்த 70 மில்லியன் ரூபாய்க்குக் கணக்குக் காட்ட முடியாமல் முழுசினனீராம் எண்டு கதை அடிபடுகுது. அந்தக் காசை கால்டன் ரக்பி போட்டிக்கு பாவிச்சது எண்டு கரடி விட்டனீராம். அதுவும் எடுபடேல்லயாம். ஏன் தம்பி உமக்கு இந்த வேலை.

உம்மட தம்பி யோஷித கைதான நேரம் கிடைச்சமவுசுநீர் கைதான நேரம் கிடைக்கேல எண்டதை நினைக்கேக்க கொஞ்சம் கவலையாத்தான் கிடக்கு. ஏன் உம்மட தாய், தேப்பன் கூட நல்லா பிந்தி வந்துதான் மறியலில உம்மைச் சந்திச்சிருக்கினம். இதுவும் கொஞ்சம் எங்கயோ இடிக்குது.

உம்மட கூட்டாளியள் எல்லாம் உம்மட கைதுக்குப் பின்னால அரசியல்தான் விளையாடியிருக்குது எண்டு சொல்லுகினம். ஆனால், அஜித் பி.பெரேரா, நாட்டில நடக்கிற சட்டத்தின்ர ஆட்சிக்குச் சாட்சியா உம்மட கைது நடந்திருக்கு எண்டு சொல்லியிருக்கிறார். நீர் கைதாகப் போற விசயம் உமக்கு முதலே தெரியும் எண்டும் அதை மறைமுகமா சொல்லுற மாதிரி ருவிட்டரில பதிவும் போட்டனீராம் எண்டும் சொல்லுகினம் உதைத் தான் தம்பி குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக் கும் எண்டு சொல்றது.

இதெல்லாம் இப்பிடியே இருக்க, உம்மைக் கைது செய்யுறதுக்கு இந்தக் குற்றச்சாட்டு மட்டும் தானோ சட்டத்தரப்பாருக்குக் கிடைச்ச துரும்பு? எண்டும் கேள்வி வருகுது. வீடெரிக்கிற ராசாவுக்கு கொள்ளி எடுத்துக் குடுக்குற மந்திரி போல நீர் இருந்த நேரத்தில, ஏதோ இளைஞர்களுக்கான நாளை எண்டெல்லாம் அமைப்பு வைச்சு ஓடுப்பட்டு திரிஞ்சனீர். அந்த அமைப்பு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில தாறுமாறா பரப்புரையில ஈடுபட்டும் இருந்தது. அதைப்பற்றி இப்ப ஒரு அசுமாத்தத்தையும் காணேல்ல? இதுக்குள்ள, நீர் எழுதின சட் டக்கல்லூரி கடைசிப் பரீட்சையிலயும் ஏதோ கசமுசா நடந்ததெண்டு தகவல். மற்றது, உம்மட தகப்பன் பெரியவரா இருந்த காலத்தில, வரையறை இல்லாமல் அவரோட வெளிநாட்டு 'றிப்' எல்லாம் போய் வந்தனீர். அதுகளைப் பற்றியெல்லாம் உந்த 'யகபாலனயகாரர்' கிளற மாட்டினமோ அல்லது எப்ப கிளறப் போயினமாம்? போனமுறை நாடாளுமன்றத் தேர்தலில உம்மட வேண்டுகையைஏற்றுக்கொண்டு வேட்பாளர் பட்டியலில இடம் தந்தவை அதுதான் கொஞ்சம் யோசனையாக்கிடக்கு.

காலாகாலத்தில கலியாணத்தைக் கட்டிப் பிள்ளை குட்டியோட இருக்கிற வழியைப் பார்த்திருக்கலாம். ஆனா அதைப்பற்றி ஒரு பரபரப்பையும் காணயில்ல. முந்தி ஒருக்கா விஜயகலா அக்காவுக்கு உமக்கு யாழ்ப்பாணத்தில பெம்பிளை தேடுற பிளான் ஒண்டு இருந்தது. இப்பதானே எல்லாம் தலைகீழா மாறீட்டுது. நீர் என்ன பிளானில இருக்கிறீர் எண்டும் வடிவாய்த் தெரியேல்ல. நல்ல காரியங்களைப் பின்னுக்குப் போடக்கூடாது எண்டு சொல்லுறவை. அதையும் ஒருக்காக் கவனிச்சுக்கொள்ளும்.

சர்வகலாசாலையளில சட்டம் படிச்சு நாடாளுமன்றத்துக்குள்ள புகுந்த உமக்கு, அதுக்குள்ள இருக்கிற ஓட்டையளைப் பாவிச்சு வெளியால வரத்தெரியாமலே இருக்கப் போகுது. எண்டாலும் அதுக்கு மறுத்தான் விடவும் சட்டத்தரப்பு தயாராய்த்தான் இருக்கும். நாளைக்குத் திரும்பக் கோர்ட்டுப் பக்கம் வரவேணும்தானே பிணையில எடுக்கிறதுக்கு காரியம் பாத்திருப்பீர் எண்டு நினைக்கிறன். உந்தக் குற்றச்சாட்டுக்குப் பிணை தாறாங்களோவும் தெரியேல்ல எதுக்கும் பிணையில முதலில வெளியில வாருமேன், பிறகு யோசிப்போம்.

நன்றியுடன்,
ஸ்டோ ஸ்வாமி





# சந்தனம் மெத்தினால்...

செ.மகேஷ்

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

14

மக்கள் நடமாட்டமே இல்லாத அந்தப் பற்றைக் காட்டுப் பாதை ஓரத்திலே பார்வையிலே படத்தக்கதாக அந்தப் பெரிய கட்டடத்தைக் கட்டியிருக்கிறார்களே? என்ன தேவையோ தெரியவில்லை. எத்தனை லட்சம் செலவு செய்து கட்டினார்களோ தெரியவில்லையே!" என்று முணுமுணுத்தார் சிவபாதத்தார்.

அந்த முணுமுணுப்புக்குக் காது கொடுத்த செல்லத்தம்பியரின் மனக்கண்ணில் ஊர் முழுக்க ஆங்காங்கே விளைந்திருந்த மக்கள் குடியேறாத அந்தக் கட்டடக் கூட்டங்களெல்லாம் காட்சிகளாய் வந்து போயின. வீட்டுத் திட்டமென்றும் விடுதிகளென்றும் அரச கட்டடங்களென்றும் எம்மால் கணக்கிடமுடியாத நிதியில் முளைத்த பல வீடுகள், கட்டடங்கள் என்பன ஊர் நிலங்கள் பலவற்றில் நிரம்பியிருப்பது தெரிந்தது.


வீட்டுத்திட்டத்தில் முளைத்த வீடுகள் பலவற்றில் எவருமே குடியிருப்பதைக் காணாமையால் விளைந்த துயரம் செல்லத்தம்பியருக்கு நிறையவே உண்டு. மக்களுக்காகக் கட்டப்பட்டவை என்று சொல்லப்படுபவை பலவும், குறித்த மக்களின் கைக்குப் போகாமல் கிடக்கிறதோ தெரியவில்லை. இந்த வீட்டுத் திட்டங்கள் பற்றியும் அந்த வீடுகள் பற்றியும் செல்லத்தம்பியரின் காதில் விழும் செய்திகளெல்லாம் அவரை வேதனைப் படுத்தவே செய்தன. உண்மையாக வீடின்றித் தவிக்கும் குடும்பங்கள் பல இன்னமும் ஓட்டைக் குடிலுக்குள் ஒழுக்குத் திண்ணையில் கிடக்கின்றன. காணிகள் நிலங்கள் உள்ளவனுக்குத்தான் வீடு கட்ட உதவுகிறார்கள் என்று பார்த்தால் அவருக்குத்தான் இரண்டிடத்தில் வீடு கிடைக்கிறதோ? ஐயங்கள் நிறையவே உள்ளன. ஒரு வீட்டில் அவன் வாழுகின்றான் மற்றையது மேலதிகமாக சும்மா கொடுத்த காசில் கட்டிய வீடுதானே! அது சும்மா வந்ததுதானே என எண்ணிச் சும்மாவே கிடக்க விட்டுவிட்டார்களோ தெரியவில்லை. வீடு ஒன்றேனுமின்றி அலையும் மக்கள் பாவம்! அவர்களுக்கு இந்த நாட்டிலுள்ள அரசியல் பிரமுகர்கள் ஒருவரையும் தெரியாது போலும்! செல்லத்தம்பியர் நினைத்துக் கொண்டார்.

> உண்மையாக வீடின்றித் தவிக்கும் குடும்பங்கள் பல இன்னமும் ஓட்டைக் குடிலுக்குள் ஒழுக்குத் திண்ணையில் கிடக்கின்றன. காணிகள் நிலங்கள் உள்ளவனுக்குத் தான் வீடு கட்ட உதவுகிறார்கள் என்று பார்த் தால் அவருக்குத்தான் இரண்டிடத்தில் வீடு கிடைக்கிறதோ? ஐயங்கள் நிறையவே உள்ளன.

அது மட்டுமா ஒவ்வொரு பிரதேசத்திலும் புதிது புதிதாய் விழாவெடுத்து கட்டடங்களுக்கு அத்திபாரமிட்டார்களே அவற்றில் முளைக்காதவை போக முளைத்தவை சில இப்பொழுது பயன்பாடுகளின்றிக் காய்ந்தவையாகி கவனிப்புகளின்றிச் சிதைந்து போவதையும் பார்க்கலாம். "அரசின் சொத்துக்கள் எங்களின் சொத்துக்கள்" என்ற எண்ணம் ஏனோ எம்மிடத்தில் இல்லாமலே போய்விட்டது. அவை யாவும் எமது உழைப்புகளே. அனைத்துக் கட்டடங்களும் நமக்காகக் கட்டப்பட்டவை. அவற்றைப் பாதுகாப்பதும், குறித்த தேவைக்குப் பயன்படுத்துவதும் அவசியமாகும். அவற்றை பராமரிக்காமல், பயன்படுத்தாமல் அழிய விடுதல் எங்களின் மிகப்பெரிய தவறாகும். நிவாரணங்களும் அவ்வாறே சும்மா தருகிறார்கள் என்பதாக எண்ணுவதே தவறாகும். அதேவேளை, அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது மிகப் பெரிய தவறாகும். இத்தனை உண்மைகளையும் சொல்ல நினைத்த செல்லத்தம்பியருக்கு வீணாகப் பகையைத் தேடும் விருப்பமில்லை.

எல்லாவற்றையும் சும்மா சும்மா பெற்று, அளவுக்கு அதிகமாகப் பெற்றால் என்ன செய்வது என அங்கலாய்ப்போருக்கு என்ன சொல்லலாம். இவர்கள் எல்லோரும் சோம்பிருந்து கொண்டே உழைப்பவர் பொருளைத் திருடுபவர்களே!

எங்களின் தேவையும் பயன்பாடும் மக்களின் வாழ்வை வளம் செய்பவையாக அமைவதே மேலானது. ஆனால், இங்கே அவசியமற்ற - பொருத்தமற்ற வகையில் பொருளையோ பணத்தையோ பெற்றுக் கொள்வது பற்றியும் அவை எம்மால் வீணாக்கப்படுவது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டாமோ! எவையெனினும் அவை அளவோடு பெறப்படுவதும் அவை பொறுப்போடு பாதுகாக்கப்படுவதும் நல்லதல்லவா? சந்தனம் மெத்தினால்......! என்றொரு தொடரிசைக்கும் வாய்மொழியை எம்மவர் பலரும் பழமொழியாகச் சொல்வார்களே! அவ்வாறு சொல்லப்படும் சொற்களுக்குள் பொதிந்திருக்கும் பயனற்ற செயற்பாடு பற்றிய சிரிப்புக்கு இடமான ஒரு செய்கையை நோக்கலாம். அவ்வாறே எமது செய்கைகளும் நகைச்சுவைக்கானதாக மாத்திரமல்ல, எமது அழிவுக்கும் காரணமாகலாம் அல்லவா? இவ்வாறு சமூகத்தின் பரந்துபட்ட சேவைகளும் தேவைக்கு அதிகமாக வழங்கப்படும் பொருள்களும் வீணே அழிவுறுதல் நியாயமில்லை. மக்கள் சிந்தித்துச் செயற்படுவார்களா? செல்லத்தம்பியர் நினைத்தார் சொல்லவில்லை.



# பழமை சொல்லும் பாடம் 'மண் பாத்திரங்கள்'

மண் சட்டியில் வைத்த மீன் குழம்புக்கும் மண்பானையில் சமைத்த பச்சை அரிசிச் சோற்றுக்கும் ஈடாக வேறெதுவும் உண்டா? அதை ருசித்து வாழ்ந்த நம் முன்னோருக்குக் கிடைத்த ஆரோக்கியம், நாம் சமைக்கும் இன்றைய உலோகப் பாத்திரங்களில் கிடைப்பதில்லை. சாப்பிடும் உணவுக்குத் தரும் முக்கியத்துவத்தைப் போன்றே உணவைத் தயாரிக்கப் பயன்படும் பாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தனர் நமது மூதாதையர்கள். வாழையடி வாழையாக மண் பாண்டத்தில் உணவைச் சமைத்து, அதை வாழை இலையில் இட்டு, தரையில் சப்பாணியிட்டு அமர்ந்து சாப்பிட்டவர்களின் தொடர்ச்சிதான் நாம். பத்தாண்டுகளுக்கு முன்புவரைகூட, தண்ணீர்ப் பந்தல்களில் மண் பானையில் குடி தண்ணீரை வைத்து ஆரோக்கியமாக நம்முடைய தாகம் தீர்த்த இடத்தை, இன்றைக்கு இறப்பர் கொள்கலன்களே நிரப்புகின்றன.

ஒரு காலத்தில் உழவுக்கு, தோட்டத்துக்கு, சமையலுக்கு என மனித வாழ்வின் ஓர் அங்கமாக இருந்தவை மண்பாண்டங்களே. ஆனால் இப்போது மக்களிடம் மண் பாண்டங்களின் பாவனை குறைந்துள்ளது. நம் ஆரோக்கியத்தைத் தீர்மானிப்பதில் உணவுப் பொருள்கள் மட்டுமல்ல, அவற்றைச் சமைக்கப் பயன்படுத்தும் பாத்திரங்களும் மிக முக்கியமானவை. இயற்கையாகவே உணவுக்குச் சுவை, மணத்துடன் ஆரோக்கியத்தையும் அளிக்கின்றன இந்த மண் பாண்டங்கள்.

சமையல் செய்யும் பாத்திரங்கள், தட்டு, தேநீர்க் கோப்பைகள், மண்சட்டிகள், நீர்கொள்ளும் கலன்கள், பானைகள் என மக்கள் பாவிக்கும் அனைத்து உலோக பாத்திரங்கள் போன்று மண் பாத்திரங்களும் காணப்படுகின்றன.

### கவனம் தேவை

மண் பாண்டங்களைப் பயன்படுத்தும்போது கவனம் தேவை. அலைபேசிகள், மடிக்கணினிகள் போன்றவற்றைக் கவனமாக வைத்துக் கொள்வது போலத்தான் மண் பாத்திரங்களையும் பாவிக்கவேண்டும். பாத்திரங்களைச் சுத்தம் செய்யும்போதும் கவனம் தேவை. ஒரு வேளை கைதவறி விழுந்து உடைந்தாலும் உடைந்த மண் பாண்டங்கள் சுற்றுச்சூழலுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.

மண் பாண்டங்களில் நன்மைகள் கொட்டிக் கிடக்கின்றன. மக்களுக்கு இவற்றைக் கொண்டு சேர்ப்பதும் அவை பற்றிய நன்மையைப் புரிய வைப்பதும் அவசியம். மக்களிடையே நாளுக்கு நாள் மண்பாண்டங்களின் பயன்பாடு குறைந்துவருவதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன. மண்பாண்டங்களில் சமைத்து உண்பதன் மூலம் நம் உடலில் தங்கியிருக்கும் நச்சு எச்சங்கள் நீங்கும். உலோகப் பாத்திரங்களைவிட இயற்கை ஆரோக்கியம் இவற்றில் உண்டு. களிமண்ணை உடலில் பூசுவதை ஒரு சிகிச்சையாகக் கூட வெளிநாடுகளில் செய்யப்படுகின்றனர்.

# என்ன கொடுமை சேர்...!

மானிப்பாய் சுதன்

அலுவலகத்துக்குள் வந்து ஆசனத்தில் அமர்ந்தபோதுதான் என் அன்புக்காதலி இயற்கை என்னை அழைக்கத் தொடங்கி னாள். இன்று அவசர அவசரமாக வந்ததன் விளைவு. அவசரமாக மலசலகூடத்தை நோக்கி ஓடினேன். என்ன கொடுமை மலசலகூடக் கதவு இறுகப்பூட்டியிருந்தது. தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கமைய எனது அவசரத்தை வெளிக்காட்ட இருமுறை தட்டி விட்டு அலுவலகத்தைச் சுற்றி நடக்கத் தொடங்கினேன்.

பொழுது விடிந்தது. என்னைத் துயிலெழுப்புவதில் மனைவியின் குரலில் ஒரு அவசரம் தெரிந்தது. அதிகாலையில் எழுந்துவிடும் மனைவி தனது சமையல் வேலைகளின் மத்தியிலும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் என்னைப் பார்த்தவுடன் எரிபற்று நிலையை அடைந்து எரிச்சலாகி விடுவாள். எரிச்சலான அவளது திருப்பள்ளி எழுச்சியைக் கேட்டுத் துயிலெழுவதில் ஒரு சுகம். திருமணமான புதிதில் மனைவியின் இந்த திருப்பள்ளி எழுச்சி எனக்கு எரிச்சலாக இருந்தாலும் பின்னர் அது பழகி விட்டது. இப்போது அந்தக் கோபமான எழுச்சி இல்லாவிட்டால் ஏதோ மாதிரி இருக்கும், அந்தளவுக்கு முன்னேறி இருந்தேன் நான்.

“எழும்புங்கோ இண்டைக்கு உங்கட அலுவலகத்தில அந்தக் கோதாரி விழுந்த மெசினெல்லே பூட்டியிருக்கினம் வேளைக்கு போகவேணும் என்று சொன்னனீங்கள், நீங்கள் எழும்பி இனி எத்தின தரம் அதுக்குள்ள போய் வரப்போறி யளோ தெரியாது, பிறகு நேரம் போயிற்றுது என்று கத்தக்கூடாது..” எனக்கு மனைவியின் ஆதங்கம் புரிந்தது நான் என்ன விரும்பியே அடிக்கடி அதுக்குள்ள போகிறேன். அது அடிக்கடி வருகிறது, போகிறேன். என்ன செய்கிறது ஜீன்ஸை போட்டு சப்பாத்தையும் போட்டபிறகு கூட மனம் ஒருக்கா போகவேணும் என்று நினைக்கும். போகாவிட்டால், அன்றைய தினம் சொல்ல வார்த்தைகள் இல்லை. உங்களுக்கு இன்னும் விளங்கவில்லை என்று நினைக்கிறேன். அது என்னவென்று சொன்னால் என்னையும் உங்கட சங்கத்தில் சேர்த்துவிடுவீர்கள். காலையில் எழும்பி இயற்கையின் அழைப்புக்காக மலசலகூடத்துக்கு ஒரு மூன்று நான்கு தரம் போகாமல் விட்டால் அன்றைய நாள் எனக்கு உருப்பட்டமாதிரித்தான். இயற்கையை அதிகமாக நான் நேசிக்கிற தால தான் இயற்கையும் என்னை அடிக்கடி அழைக்கிறது போல. தயவு செய்து உங்கட அடிக்கடி இயற்கை அழைப்போர் நலன்புரி சங்கத்தில் சேர்த்திடாதேயுங்கோ; என்னைவிட சீனியர்களா பார்த்து சேருங்கோ அது வேற பிரச்சினை.

பிறகு! சிந்தனையை சிதறடித்தது மனைவியின் குரல். “ம்... போட்டியளே இனி வந்தமாதிரித்தான்” என்ற மனைவிக்கு, “எனக்கும் அப்படித்தான் தோணுது இனிவந்தமாதிரித்தான்” என்று கூற “உதுக்குள்ள இருந்து கத்தாம நேரத்துக்கு அலுவலகத்துக்கு போகப் பாருங்கோ உங்கள கட்டி நான் படுகிறபாடு” மனைவியின் புலம்பலால் எல்லாமே நின்றுவிட அவசரஅவசரமா குளிப்பதற்குச் செல்லும்போது “அப்பா! ஏழு இருபது நேரம் போகுது...” மகளின் வார்த்தை அவளின் பாடசாலை செல்லும் அவசரத்தைக் கூற.. காக்கா குளியல் குளித்து வெளிக்கிட்டேன். போட்டு விட்டேன் ஜீன்ஸையும் சப்பாத்தையும்.

“இண்டைக்குப் பிள்ளையளை இறக்கிவிட்டு அப்படியே போனீங்களெண்டால் தான் வேளைக்குப் போய் அந்த கோதாரி விழுந்த பிங்கர் பிறின்டில் கையை வைக்கலாம்” மனைவியின் ஆலோசனை நன்றாகத்தான் இருந்தது. இருந்தாலும்! இவ்வளவு காலமும் அலுவலகத்துக்கு எத்தனை மணிக்குப் போனாலும் எட்டு மணி என்றுதான் கையெ முத்துப் போடுவன். பிங்கர் பிறின்ட் மெசினில அந்த விளையாட்டு விட ஏலாது. இன்றிலிருந்து அந்தத் தொல்லை. புது வருட ராசி பலனிலேயே போட்டிருந்தது, சனி திசை மோசமாக இருக்குமெண்டு. எங்கட அலுவலகம் ஒன்றும் பெரிய தலைமை அலுவலகம் இல்லை. சிறிய அலுவலகம் தான். ஒரு பத்துப் பேர் வேலை செய்யிறம். ஒற்றுமையாக எங்களுக்குள்ள ஒரு அட்ஜஸ்மென்டில் வேலை செய்து கொண்டிருந்தனாங்கள். அதைப் பொறுக்க முடியாம உவங்கள் மேலதிகாரிகள் வைச்சிட்டாங்கள் ஆப்பு.

அலுவலகம் சகல வசதிகளும் பொருந்தியது என்று சொல்வதற்கு முடியாவிட்டாலும் அடிப்படைவசதிகள் எல்லாம் இருக்கிறது. எங்கட அலுவலக வளாகத்துக்குள்ளேயே இரண்டு கிணறுகள், ஆனால் குடிப்பதற்கு தண்ணீர் ரோட்டில இருக்கிற பொதுக்கிணற்றிலதான். எங்கட சொத்தை நாங்க பாதுகாக்க வேணும்தானே! அதுதான் எங்கட தண்ணியை நாங்க பாவிக்கிறதில்லை. நீங்க ஒன்றும் கனக்க யோசித்துப் போடாதேயுங்கோ! முக்கியமானதைச் சொல்லவேணும், ‘மலசல கூடம்’ அதுவும் இரண்டு இருக்கிறது. அதுக்கு ரோட்டுக்கு போவதில்லை. எங்களதையே பாவிக்கிறோம். அவ்வளவு சுகாதாரமானது. என்ன வாளிக்குக் கைபிடி இல்லை. தண்ணீர்க் குழாயில் தண்ணீர் சும்மா சொல்லக்கூடாது சீறிக்கொண்டு வரும். அதிலும் ஒரு சிக்கல் அடிக்கடி மோட்டர் பழுதாகிவிடும். அவ்வளவு தான். இன்று அலுவலகத்துக்குள் நுழையும் போதே எல்லோரும் வந்துவிட்டது தெரிந்தது. வழமையாக நான் வரும்போது எவரும் நிற்கமாட்டார்கள். அலுவலகத்தை திறப்பவர் மட்டும் கதவைத் திறந்து விட்டு திரிந்து கொண்டிருப்பார். இன்று வழமைக்கு மாறுதல் ஏற்பட்டிருந்தது. அலுவலகத்தின் பொறுப்பதிகாரி அலுவலகத்தைச் சுற்றியபடி இருந்தார், இருப்புக் கொள்ளாமையினால்.

நானும் அவசர அவசரமாக ஓடிச் சென்று கைப்பெருவிரலை அழுத்தினேன் என் பலம் கொண்ட மட்டும். ஆனால் அது என்னை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இது தானுங்கோ அந்தக்காலத்தில கைநாட்டு வைக்கும்போது இப்படிப் பிரச்சினை இல்லை. விஞ்ஞான வளர்ச்சி கூடி எல்லாவற்றிலும் பிரச்சினை இப்பவும் கைநாட்டுதான். ஆனால் மெசினில் வைக்கிறோம். நாங்க படிச்ச கைநாட்டுக்கள். பிங்கர்பிறின்ட் மிசின் ஏற்றுக் கொள்ளவில்லை என்று மற்றவர்களுக்கு தெரிந்தவுடன் எல்லோருக்கும் ஒரு தனிச் சந்தோசம். ஆனாலும் முகத்தினில் அதனைக் காட்டிக் கொள்ளாது “அண்ணை மெதுவாக வையுங்கோ நேற்று வைச்ச மாதிரி வையுங்கோ”ஆளாளுக்கு அறிவுரைகள் தந்த வண்ணமிருக்க எனக்கோ ஒருமாதிரியாப் போய்விட்டது. நவீனங்களை கையாளத்தெரியாத கைநாட்டான் ஆக விழிபிதுங்கி நின்றேன். ஒருவாறாக என்னை அந்த பாழாப்போன பிங்கர் பிறின்ட் ஏற்றுக்கொண்டது. இவ்வளவு சந்தடியிலும் பொறுப்பதிகாரி மட்டும் பட்டும் படாமலும் அலுவலகத்தைச் சுற்றியபடி இருந்தார். பாவம் மனுசன் வயதான காலத்தில் ஆறுதலாக ஒன்பது மணிக்கு ஆடி அசைந்து நிதானமாக வருபவர் இன்று ஏனோ தெரியவில்லை நிலை கொள்ளாமல்..!

(43 ஆம் பக்கம் பார்க்க)



# முக்காலமும் குளித்தாலும் காகம் கொக்கு ஆகாது!

தெய்வ நம்பிக்கையும் கருணை உள்ளமும் கொண்ட ஒரு பெரியார் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது வாட்டச் சாட்டமான தோற்றமுடைய ஓர் இளைஞன் பெரியவரை வழி மறைத்து அவரிடமிருந்த பொருளை அபகரிக்க முயன்றான்.

அவனைக் கருணையோடு நோக்கிய பெரியவர் "குழந்தாய்! என்னிடம் உள்ள பொருள்கள் மிகவும் அற்பமானவை. அவற்றை நீ அபகரித்தால் உன் அரை வயிறு சாப்பாட்டுக்குக் கூடப் பிரயோசனப்படாது. ஆனாலும் நான் உனக்கு ஏதாவது உதவி செய்யக் கூடும். உனக்கு உண்மையாகவே பசியாக இருந்தால் என்னுடன் வா. திருப்திகரமான சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்கிறேன்" - என்றார்.



இளைஞன் கொஞ்சம் யோசித்தான்.

அப்போது அவனுக்கு நல்லபசிதான். மௌனமாக இருந்தான்.

"குழந்தாய்! என் உறவினர் வீட்டுத் திருமணத்துக்குச் செல்லுகிறேன். நீயும் வா. அங்கே என்னுடன் சேர்ந்து நீயும் சாப்பிடலாம்"என்றார்பெரியவர்.

இருவரும்நடந்துசெல்லும்போது பெரியவர் இளைஞனுடைய வாழ்க்கை வரலாற்றை விசாரித்தார்.

அவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். ஆனால், சோம்பேறி. கல்வி கற்கவோ உழைத்துப் பிழைக்கவோ அவன் விரும்பவில்லை. ஊரில் அவன் செல்லுமிடமெல்லாம் சண்டை சச்சரவாகத்தான் இருந்தது.

அந்த நிலையில் அவனுக்கு ஆதரவாக இருந்த பெற்றோர் மறைந்து விடவே உற்றார், உறவினர் அவனுக்கு உதவ மறுத்து விட்டனர்.

சின்ன வயதிலிருந்தே திருட்டுத் தொழில் செய்து வயிறு வளர்த்து வந்தான்.

அவனுடைய திருட்டு வாழ்க்கை ஒரு போதும் சுகமாக இருக்கவில்லை.

பல தடவை பலரிடம் அடி உதை வாங்கியிருக்கிறான். சில முறை சிறைவாசமும் செய்து வந்திருக்கிறான்.

இந்தக் கதைகளையெல்லாம் கேட்ட பெரியவர்அந்தஇளைஞன்மீதுகருணை கொண்டு கசிந்து மனமுருகினார்.

அவனுடைய வாழ்க்கையைச் சீர் செய்து நல்ல வழி காண்பிக்க எண்ணினார்.

"குழந்தாய்! திருமண வீட்டிலிருந்து திரும்பும்போது என்னுடனேயே என் வீட்டுக்கு வா. உனக்கு ஒரு நல்ல வேலையைப் பார்த்துக் கொடுக்கிறேன். உழைத்து சம்பாதித்து பணம் சேர்த்து உனக்கென நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள். காலாகாலத்தில் திருமணம் செய்து குடும்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொள். நாளடைவில் நீயும் உலகத்தில் ஒரு கண்ணியமான மனிதனாகத் தலைநிமிர்ந்து உலாவ முடியும். இவ்வாறெல்லாம் பெரியவர் இளைஞனுக்கு வழி நெடுகப் புத்திமதிகளைக் கூறிக்கொண்டே வந்தார்.

இளைஞனும் அவர் கூறுவதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டே வந்தான்.

அவர் சொன்ன மாதிரியே மனந்திருந்தி புதிய வாழ்க்கையை மேற்கொள்வதாகவும் அந்த இளைஞன் உறுதியாகக் கூறினான்.

தடம்புரண்டு தவறான வழியில் நடந்து கொண்டிருந்த ஓர் இளைஞனைத் திருத்தி நல்வழிப்படுத்தி விட்டோம் என்ற திருப்தியும் மகிழ்ச்சியும் பெரியவருக்கு ஏற்பட்டது.

பெரியவரும் இளைஞனும் திருமண வீட்டுக்குச் சென்றனர்.

திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் இளைஞனைப் பற்றி விசாரித்தனர்.

"இவன் எனக்கு மிகவும் நெருங்கிய உறவுக்காரப் பையன்" என்று பெரியவர் அவனைப் பற்றி அறிமுகம்செய்தார். திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமண விருந்து நடைபெற்ற போது பெரியவர் இளைஞனைத் தனக்கு அருகே அமரவைத்துக் கொண்டார்.

இருவரும் திருப்தியாக விருந்து சாப்பிட்டனர்.

விருந்து முடிந்ததும் பெரியவர்சற்றுகண்ணயர்வதற்காக ஓரிடத்தில் படுத்தார்.

அரைகுறை உறக்கத்திலிருந்தபோது திருமண வீட்டில் ஏதோ பரபரப்பும் கலவரமும்நிறைந்த சூழ்நிலை நிலவுவதைக் கண்டு பெரியவர் திகைப் படைந்தவராக எழுந்து உட்கார்ந்தார்.

திருமண வீட்டுக்காரர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.


ஒருவரை நிறுத்தி "என்ன நடந்தது" என்று பெரியவர் வினவினார்.

"நீங்கள் அழைத்து வந்தீர்களே ஒரு பையன்அவன்மணமகள்கழற்றிவைத்த விலை உயர்ந்த நகைகள் சிலவற்றைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டான்" என்று கூறிவிட்டுத் திருமண வீட்டுக்காரர் ஓடினார்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தனர். அவனைக் காண்பவர்கள் எல்லாம் அந்தப் பையனுக்குத் தலைக்கு ஓர் அடிகொடுக்கத்தவறவில்லை. திருடிக்கொண்டு ஓடிய நகையுடன் இளைஞனைப் பிடித்துக் கொண்டு வந்த கூட்டத்தினர் பெரியவர் முன்னால் அவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

உடையெல்லாம் கிழிந்து நைந்து தொங்க அடிபட்ட உடல்காயங்களில் இரத்தம் வழிய கண்ணீர் மல்க நின்றிருந்த வாலிபனை மிகவும் வேதனையோடு பார்த்தார் பெரியவர்.

"குழந்தாய்! முக்காலமும் காகம் முழுகிக் குளித்தாலும், அது கொக்கு ஆகிவிட முடியாது என்று முன்னோர் கூறுவார்கள். அதாவது சிலஜீவன்களின் இயல்பை மாற்றவே முடியாது என்பது இந்தப் பழமொழியின் கருத்து. உன் விடயத்திலும் அது உண்மையாகிவிட்டதே!" என்று வேதனையோடு கண்ணீர் சொரிந்தார் பெரியவர்.



பா.அகிலேஷன்,
தரம் - 2,
யா/புனித ஜோன் பொஸ்கோ மகா வித்தி.



பி.குருசரன்,
தரம் - 6
யாழ்.மத்திய கல்லூரி.

# வரலாற்றில் இன்றைய தினம்



180 - வட ஆபிரிக்க சிலியம் வாழ் மக்கள் 12 பேர் கிறிஸ்தவர்கள் என்பதற்காக சாவுத் தண்டனைக்குள்ளாகினர்.

1856 - ரயில் மோதிக் கொண்டதில் வோஷிங்டன், பெனிசில்வேனியாவில் 60 பேர் உயிரிழப்பு.

1867 - அமெரிக்காவின் முதலாவது பல் மருத்துவ கல்லூரி மசா சூட்ஸ் பொஸ்டனில் ஸ்தாபிக்கப்பட்டது.

1902 - நியூயோர்க், பவ்லோவில் வில்லிஸ் கரியரால் முதலாவது வளிசீராக்கி - எயர் கண்டிஷனர் உருவாக்கப்பட்டது.

1918 - ஆர்.எம்.எஸ். டைட்டானிக் கப்பலிலிருந்து 705பேரைக் காப்பாற்றிய கப்பல் அயர்லாந்தில், ஜேர்மனியரின் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டதில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

1944 - அமெரிக்கப் போர் விமானம் பி-38 இன் விமானிகளால் முதன் முதலாக நேபாம் எரிகுண்டு பிரான்ஸ் செயின்ற் லோக்கு அருகில் எரிபொருள் களஞ்சியத்தின்மீது போடப்பட்டது.

1955 - கலிபோர்னியாவில் வோல்ற் டிஸ்னியால், டிஸ்னி லாண்ட் திறந்து வைக்கப்பட்டது.

1968 - ஈராக்கில் அப்துல் ரஹ்மான் ஆறீப் பதவி கவிழ்க்கப்பட்டு பாத் கட்சி ஆட்சிக்கு வந்ததையடுத்து புரட்சி ஏற்பட்டது.

1973 - ஆப்கானிஸ்தான் அரசர் மொஹமட் ஸாஹிர் ஷா இத்தாலியில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டிருந்த வேளையில் அவரது ஒன்றுவிட்ட சகோதரர் மொஹமட் தாவுத் கானால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

1945 - இரண்டாம் உலக மகா போர்: கூட்டுநாடுகளின் மூன்று முக்கிய தலைவர்களான வின்சன் சேர்ச்சில், ஹாரி எஸ் ரூமன் மற்றும் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அதன் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்க ஜேர்மனின் போஸ்ட்டாமில் கூடினார்.

1948 - தென் கொரிய அரசியலமைப்பு முன்மொழியப்பட்டது.

1976 - கிழக்கு திமோர் இந்தோனேஷியாவின் 27 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.

1979 - நிக்கரகுவா சர்வாதிகாரி ஜெனரல் அனஸ்டாசிலோ சமோஸா டிபெய்ல் பதவி விலகிவிட்டு புளோரிடாவின் மியாமிக்குத் தப்பியோடினார்.

1986 - பஸ் மீது உலங்கு வானூர்தி சுட்டு 15 பயணிகள் சாவு. நெடுங்கேணியில் சம்பவம்.

- மூதூர் படுகொலைச் சம்பவத்தில் சாவடைந்த 35 பேரின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு. 30 சடலங்கள் பற்றித் தகவல் இல்லை.

1996 - பாரிஸ் நோக்கிப் பறந்த TWA போயிங் 747 விமானம் நியூயோர்க் லோங் தீவுக் கரையில் வெடித்துச் சிதறியதில் விமானத்திலிருந்த 230 பேர் உயிரிழப்பு.

2002 - சமாதானத்தை எட்டுவதற்கு தேசிய கருத்துப் பரிமாற்றம் வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா யோசனை.

- நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனுக்கு 40 கோடி ரூபா. நீதிமன்றில் அரசு தரப்பு தகவல்.

2005 - பேரினவாதத்துக்கு எதிராக ஹற்றனில் ஆர்ப்பாட்டம்.

- அண்ணாவியார் முருகவேள் தமது 80 ஆவது வயதில் வட்டுக்கோட்டையில் காலமானார்.

# அம்மா

அம்மா உன்னை நினைக்கையிலே
ஆனந்தம் தான் பெருகையிலே
இன்று எண்ணும் போதினிலே
ஈன்றவள் நினைவு நெஞ்சினிலே
உலகை எனக்கு காட்டையிலே
ஊட்டி உணவும் கொடுக்கையிலே
ஐயா இவர் எனச் சொல்கையிலே
ஒருமுறை கண்கள் பார்கையிலே
ஓடி முத்தம் கொடுக்கையிலே
ஔவழி அவரும் அணைக்கையிலே
அஃதே ஆனந்தத்தில்
நான் மிதக்கையிலே



# விடுகதைகள்



1. அமைதியான பையன்... அடிக்காமல் அழுவான். அவன் யார்?
2. இலை இல்லை, பூ இல்லை, கொடி உண்டு! அது என்ன?
3. அதிவேகக் குதிரை, ஆடியபடி செல்லும் குதிரை. போட்ட கோட்டைத் தாண்டாமல் ஓடும் குதிரை... அது என்ன?
4. எங்க அம்மா போட்ட சிக்கலை யாராலும் பிரிக்க முடியாது! அது என்ன?
5. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான், மற்றவன் நடப்பான். யார் இவர்கள்?
6. உருளும் வீட்டைச் சுற்றி கறுப்பு வேலி! அது என்ன?
7. இவன் வலை தயாரித்து விரித்து வைப்பான்! ஆனால் மீன் பிடிக்க மாட்டான்! இவன் யார்?
8. தலை மட்டும் கொண்டு, ஊரெல்லாம் சுற்றும். ஆனால் சிறகில்லை... அது என்ன?
9. ஆயிரம் பேருக்கு ஓர் இடைக்கச்சை... அது என்ன?

விடைகள்:
1. ஐஸ்
2. கைரேகை
3. புகை வண்டி (ரயில்)
4. இடியப்பம்
5. கடிகார முட்கள்
6. கண் இமை
7. சிலந்தி
8. தபால் தலை
9. துடைப்பம்

# அதிர்ச்சி

## பிரான்ஸில் தொடரும் தாக்குதல்



அதிரன்

நீஸ் நகரில் தேசிய தினக் கொண்டாட்டதுக் காக மக்கள் திரண்டிருந்த கடற்கரையோரப் பகுதியில் சுமார் 2 கிலோ மீற்றர் வரை கடும் வேகத்தில் தீவிரவாதி வாகனத்தைச் செலுத்திப் பேரழிவை உண்டு பண்ணி யுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

மிக வேகமாக வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஒருவர் அங்கு திரண்டிருந்த மக்களை இலக்குவைத்து வாகனத்தைச் செலுத்திய தாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் வாண வேடிக்கைகள் முடிவடைந்த கையோடு திடீ ரென அசுரவேகத்தில் வந்த கனரக வாகனம் மக்களை இடித்துமோதிக்கொண் டும், நசித்தபடியும் பலமைல் தூரம் சென்ற தாகவும் பின்னர் பொலிஸார் வாகனத் தைச் செலுத்திவந்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்து அவரைக் கொன்றதாக வும் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் காணப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

"நான் பலரின் கதறல்களைக் கேட்டேன். மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடினார்கள். என்ன நடைபெறுகின்றது எனத் தெரியாத நிலையில் திடீரென என்னை நோக்கி நம்பமுடியாத வேகத்தில் வாகனமொன்று வந்தது. எப்படி அதிலிருந்து உயிர் தப்பி னேன் என்பது எனக்குத் தெரியாது" என்று வாகனத்தால் தாக்கப்படுவதிலிருந்து தப்பிய ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் மட்டுமின்றி உலகம் முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள இத்தாக்கு தலில், 90 க்கும் மேற்பட்டோர் உயி ரிழந் துள்ளனர். ஏராளமானோர் காயமடைந் துள்ளனர் எனப் பிரான்ஸ் உள்துறை அமைச்சர் பேர்னார்ட் தெரிவித்தார். காயமடைந்தோரில் 18 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

### அதிபர் விரைந்தார்

நீஸ்நகரத்தாக்குதல்பற்றிக்கேள்விப்பட்டதும் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹொலண்டே தெற்கு பிரான்சில் மேற் கொண்டிருந்த தனது பயணத்தைப் பாதி யிலேயே நிறுத்திவிட்டு உடனடியாகத் தலை நகர் பாரீஸ் திரும்பினார். நாடு முழுவதும் 2 வாரங்களில் முடிவடைய இருந்த அவசரகால நிலைப் பிரகடனம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்படு கின்றது என்று அவர் அறிவித்தார். 3 நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது.

### பயங்கரவாதச் செயல்

தாக்குதல் நடத்தப்பட்ட சிறிது நேரத்தில் தொலைக்காட்சியில் உரையாற்றிய அதி பர் பிராங்கோயிஸ் ஹொலண்டே, இந்தப் புதிய துயரம் பிரான்ஸை வேதனையால் நிரப்பி உள்ளது. உயிர் இழந்தவர்களில் குழந்தைகளும் அடங்குவர். இது நிச்சய மாகப் பயங்கரவாதச் செயல் அன்றி வேறெதுவும் இல்லை என்று குறிப்பிட்டார். சிரியாவிலும், ஈராக்கிலும் பயங்கரவாதத் துக்கு எதிரான நடவடிக்கைகளைப் பிரான்ஸ் எப்போதும் தொடரும் என்றும் அவர் கூறினார். தற்போதைய தாக்குதலின் எதிரொலியாக நாட்டில் மேலும் 3 மாதங் களுக்கு அவசர நிலை நீடிக்கப்படும் என் றும் ஹொலண்டே தெரிவித்தார்.

### துனீசியாவைச் சேர்ந்தவர்

லொறியை ஓட்டிச் சென்ற நபர், பிரான்ஸ் குடியுரிமை பெற்ற துனீசிய நாட்டு இளை



ஞர் என்பதும், அந்த லொறியில் துப்பாக்கி கள், பெரிய ஆயுதங்கள் இருந்ததும் முதற் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாகப் பொலிசார் கூறுகையில், அந்த நபர், நைஸ் நகரில் தான் வசித்து வந்துள்ளார். அவருக்கு எதிராகச் சிறிய அளவிலான குற்ற வழக்குகள் இருக்கின் றன–என்றனர். எனினும், அந்த இளைஞ ரின் பெயர் விவரத்தை அவர்கள் வெளி யிடவில்லை.

### 18 மாதங்களில் மூன்றாவது தாக்குதல்

உலகின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங் களில் ஒன்றாக விளங்கும் பிரான்ஸ் தலை நகர் பாரிஸில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 130 பேர் உயிரிழந்தனர். பாரீஸில் உள்ள சார்லி ஹெப்டோ பத்தி ரிகையின் தலைமையகத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் உயிரி ழந்தனர். இந்நிலையில், கடந்த 18 மாதங் களில் மூன்றாவது பெரிய தாக்குதலாக நீஸ் நகரில் நடந்த தாக்குதல் உள்ளது.

### ஐ.எஸ். கைவரிசை

இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. தாக்குதலை நடத்தி யவர் தமது அமைப்பின் போராளி என அவர்கள் தமது இணையத் தளத்தில் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தை ஐ.எஸ். இயக்கம் வரவேற்றுக் கொண்டாடியிருப்பதாக சமூக ஊடகங் களில் தகவல் வெளியாகி உள்ளது

பிரான்ஸ் உள்துறை அமைச்சகத் தின் செய்தித் தொடர்பாளர் பியர்ரி ஹென்றி கூறுகையில், பயணக் கைதிகள் பிடித்து வைத்தது போன்ற நிலைமை எதுவும் நீஸ் நகரில் இல்லை. எனினும் தாக்கு தல் நடத்தியவரின் நோக்கம் என்ன என்பது இதுவரை தெளிவு இல்லாமல் உள்ளது- என்றார்.

ஆயினும் நீஸ் நகரில் பாதுகாப்புப் படையினரின் சோதனையை மீறி லொறி கூட்டத்துக்குள் எவ்வாறு புகுந்தது என்று அந்த நாட்டு மக் கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக ஐரோப் பிய நாடுகளில் பாதுகாப்பு பல மடங்கு அதி கரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரான்ஸில் உள்நாட்டுப் பாதுகாப்புப் பணியில் ராணு வத்தினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

தேசிய தினத்தையொட்டி நீஸ் நகரில் கடந்த வியாழன் இரவு வாண வேடிக்கை நிகழ்ச்சி தொடங்கியது. அப்போது கடற் கரைப் பகுதி வான்பரப்பு முழுவதும் சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக வண்ண மயமாக ஜொலித்தது. சுமார் 10.30 மணி அளவில் வாண வேடிக்கை நிகழ்ச்சி நிறைவு பெற்றது. அப்போதுதான் கடற்கரை பகுதி யின் வீதியில் லொறி அதிவேகமாக வந்து பொதுமக்கள் மீது மோதியது.

பொதுவாக பிரான்ஸில் முக்கிய விழாக்கள் நடைபெறும் பகுதிகளில் வாகனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அதன்படி நீஸ் நகரக் கடற்கரை வீதிகளில் பிற்பகல் 3 மணிக்கே வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. கார் உள்ளிட்ட வாக னங்களைக் கூட பொலிசார் அனுமதிக்க வில்லை.

தீவிரவாதி முகமது ஓட்டி வந்த லொறியை பொலிசார் நுழைவாயிலிலேயே தடுத்து நிறுத்தியுள்ளனர். ஆனால் அங்குள்ள கடைகளுக்கு ஐஸ்கிரீம் எடுத்துச் செல் வதாக முகமது கூறியுள்ளான். இதை நம்பிய பொலிசார் லொறியைக் கடற்கரை வீதிக்குள் அனுமதித்துள்ளனர். நுழை வாயிலிலேயே முறையாகச் சோதனை நடத்தித் தடுத்திருந்தால் உயிரிழப்புகளைத் தடுத்திருக்கலாம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

### சி.சி.ரி.வி கமரா ஆய்வு

தீவிரவாதி எவ்வாறு கூட்டத்தில் புகுந்து தாக்குதல் நடத்தினான் என்பது குறித்து அங்குள்ள 1200 சி.சி.ரி.வி கமராக்களின் பதிவுகளை வைத்துப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அதிக உயிரிழப்பு களை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத் தில் வீதியில் தாறுமாறாகத் தீவிரவாதி லொறியை ஓட்டியுள்ளான். சுமார் 70 கிலோ மீற்றர் வேகத்தில் லொறி சென்றதாக நேரில் பார்த்த சாட்சிகள் தெரிவித்தனர்.

### பல்வேறு நாடுகளில் அஞ்சலி

அதேநேரம் உலகின் பல்வேறு நகரங் களில் நீஸ் தாக்குதலில் உயிரிழந்த மக் களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆஸ்தி ரேலியாவின் சிட்னி துறைமுகப் பாலத்தில் பிரான்ஸ்தேசியக்கொடிபறக்கவிடப்பட்டது. அமெரிக்காவின் நியூயோர்க், டல்லாஸ் நகரின் உயர்ந்த கட்டடங்களில் பிரான்ஸ் தேசிய கொடி ஏற்றப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் துக்க நிகழ்ச்சிகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | 2 | 6 | |
| 6 | | 1 | | 8 | | | | |
| 3 | | | | | 6 | 8 | | 7 |
| | 4 | 6 | 1 | 5 | | 9 | | |
| | 3 | | | | | | 5 | |
| | | 5 | | 9 | 7 | 6 | 4 | |
| 8 | | 7 | 5 | | | | | |
| | | | | 7 | | 4 | | |
| 4 | 6 | 3 | | 2 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 2 | 9 | 6 | 5 | 3 | 1 | 8 |
| 6 | 3 | 9 | 2 | 8 | 1 | 4 | 5 | 7 |
| 8 | 1 | 5 | 7 | 4 | 3 | 6 | 2 | 9 |
| 3 | 2 | 8 | 1 | 5 | 6 | 9 | 7 | 4 |
| 9 | 6 | 4 | 8 | 2 | 7 | 5 | 3 | 1 |
| 1 | 5 | 7 | 4 | 3 | 9 | 2 | 8 | 6 |
| 4 | 7 | 1 | 3 | 9 | 2 | 8 | 6 | 5 |
| 5 | 9 | 3 | 6 | 7 | 8 | 1 | 4 | 2 |
| 2 | 8 | 6 | 5 | 1 | 4 | 7 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.










## ஒரு நேர்முகத் தேர்வு

WhatsApp

**பொறியியலாளர்:** சார், உங்க நிறுவனத்தில எனக்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பீங்க?

**முகாமையாளர்:** ஆரம்பத்தில 5000 ரூபா கொடுப்போம். பிறகு போகப் போக சம்பளத்தைக் கூட்டுவோம்

**பொறியியலாளர்:** அப்படினா, நான் இந்த நிறுவனத்திலிருந்து எங்க வீடு வரைக்கும் போனா எவ்வளவு கூட்டுவீங்க?

**முகாமையாளர்:**
சனியனே...!
சனியனே...!

படித்ததில் பிடித்தது

## •• நட்பின் நாயகன் ••

**பணக் காகிதத்தில் மனதை மடித்து வாழ்க்கையை அடமானம் வைத்து பயணிப்பது ஒரு விதமான பிச்சை தான்...**




ராகவாலாரன்ஸ் இயக்கம் மற்றும் நடிப்பில் கடந்த வருடம் வெளிவந்த காஞ்சனா படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இந்தப் படத்தைத் தொடர்ந்து ராகவா லாரன்ஸ் ஒரே நேரத்தில் மொட்ட சிவா கெட்ட சிவா, நாகா ஆகிய படங்களில் நடிக்க ஒப்பந்தமானார்.

இதில், முதலில் மொட்ட சிவா கெட்ட சிவா படத்தின் படப்பிடிப்பு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இந்த நிலையில் தற்போது இந்தப் படத்தின் படப்பிடிப்புக்கள் முடிவடைந்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளது. இதைத் தொடர்ந்து இந்தப் படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தொடங்க விருக்கின்றன.

இந்தப் படத்தில் ராகவாலாரன்ஸ் உடன் நிக்கிசல் ராணி, சத்யராஜ், வம்சி கிருஷ்ணா, கோவை சரளா, மனோபாலா, சதீஷ் உள்ளிட்டோரும் நடித்துள்ளனர். சாய் ரமணி இயக்கியுள்ளார். இவர் ஏற்கனவே, ஜீவா நடிப்பில் வெளிவந்த சிங்கம் புலி படத்தை இயக்கியவர். சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் இந்தப் படத்தை பிரம்மாண்டமாகத் தயாரித்துள்ளது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறைச் சரி செய்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிரியால் இருந்த தொல்லை குறையும்.

**இடபம்:** நேர்மை மிக்கவராகச் செயற்படுவீர்கள். சிறிய பணியிலும், பல மடங்கு நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த தடை விலகும். இலாபம் படிப்படியாக உயரும். தாயின் ஆசி பெறுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். வாகனப் பயணத்தில் மிதவேகம் அவசியம்.

**சிங்கம்:** நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். உணவு ஒவ்வாமையால் அஜீரணம் ஏற்படலாம். பெண்கள், வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**கன்னி:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். சமூகப்பணி புரிவதில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். இலாபம் உயரும். குடும்ப விவகாரத்தில், சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**துலாம்:** சிலர் உங்களுக்குத் தவறான ஆலோசனை வழங்கலாம். தொழில், வியாபாரத்தில், விடாமுயற்சி தேவை. சுமாரான இலாபம் கிடைக் கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பின் விளைவை உணர்ந்து பேசுவது நல்லது. நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்புத் தேவைப்படும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**தனுசு:** எளிதான பணிகூட, சுமைபோல தோன்றும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். நிலுவைப் பணத்தை வசூலிப்பதில் நிதானம் தேவை. பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை.

**மகரம்:** தாமதமான செயல், இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாமன், மைத்துனருக்கு தேவையான உதவி செய்வீர்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். எந்தச் செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு, சிலர் பொறாமைப்படுவர். கூடுதல் உழைப்பால், வியாபாரத்தில் இலாபம் காண்பீர்கள். பெண்கள் சிக்கனத்தால் சேமிப்பர். பணியாளர்கள் விழிப்புடன் செயற்படுவது அவசியம்.



அது மாற்றுத்திறனாளியான ஒரு பெண். தோற்றத்தில் உயரம் குறைந்தும் வயது முதிர்ந்தவருமான அவர் உட்பட அந்தக் கிராமத்தில் குடும்பச் சுமைகளாலும் வறுமையாலும் அல்லல்படும் பெண்களுமே இவர்கள் என்பது அவர்களின் வாட்டம் நிறைந்த முகங்களில் இருந்து தெளிவாகியது.

# உதவினால் உயருவோம்

ஜெ.காயா

சர சரத்த ஓலைச்சத்தங்களும் தத்தமக்கென அமரும் இடங்களைத் தேடுவதற்கான பேச்சுக்களுமாய் நிறைந்திருந்த இடம் சிறிது நாழிகையின் பின் அமைதி கண்டது. அந்தக் கிராமப் பெண்கள் தமக்குள் உரையாடும் குரல்களிலிருந்து அவர்கள் தங்கள் வேலைகளில் காட்டுகின்ற ஈடுபாடு இப்போது எனக்குப் புலனாகின்றது. அது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் ஒன்று சேர்க்கப்பட்டு சுயமாகத் தொழிலில் ஈடுபடக்கூடிய வகையில் பயிற்சியளிக்கப்படும் அந்தக் கிராமத்திலுள்ள பெண்களின் வேலைத்தளம்.

தீவுப்பகுதியைச் சேர்ந்தது அந்தக்கிராமம். உள்ளூரிலேயே கிடைக்கின்ற பனை சார் மூலப்பொருள்களிலிருந்து செய்யக்கூடிய கைவினைப் பொருள்களைப் பின்னுவதே அந்தப் பெண்களுடைய வேலை. அண்ணளவாக 25 வரையான பெண்கள் அங்கே பரவியிருந்தனர். அவர்களருகே அவர்களுக்குரிய வார்ந்தெடுக்கப்பட்ட ஓலைகள், வர்ணச்சாயங்களிடப்பபட்ட ஓலைகள், சீவிச் சீராக்கப்பட்ட ஈர்க்குகள் போன்ற பனம் மூலப்பொருட்களும் இருக்கின்றன. திருமணமான, திருமணமாகாத, மாற்றுத்திறனாளிகள் அடங்கிய பெண்கள் குழாமாக அவர்கள் கலந்து காணப்பட்டனர்.

சந்தைக்கூடை - அளவுகளிலும் வடிவங்களிலும் வேறுபடுகின்ற கூடைகள், பெட்டிகள், தட்டுக்கள், பாய்கள், நீத்துப்பெட்டிகள், இடியப்பத்தட்டுக்கள் மற்றும் மாலைகள், தூக்கணங்கள் போன்ற அலங்காரப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான பொருள்களைப் பின்னி சேமித்தும் வைத்திருந்தனர்.

"ஒருநாளைக்கு என்னென்டாலும் ஒரு சாமான் பின்னிப்போடுவம் சின்னனுகள் எண்டா ரெண்டு, மூண்டு வரைக்கும் பின்னுவம்' என்றது அந்தக்கூட்டத்திலுள்ள ஒரு குரல். அது மாற்றுத்திறனாளியான ஒரு பெண். தோற்றத்தில் உயரம் குறைந்தும் வயது முதிர்ந்தவருமான அவர் உட்பட அந்தக்கிராமத்தில் குடும்பச் சுமைகளாலும் வறுமையாலும் அல்லல் படும் பெண்களுமே இவர்கள் என்பது அவர்களின் வாட்டம் நிறைந்த முகங்களில் இருந்து தெளிவாகியது"

"விடிய ஒம்பது மணிக்கு வாறனாங்கள் இடையில ஒருக்க மத்தியானம் சாப்பிடப்போவம் பிறகு வந்து இருந்தமெண்டா நாலு மணிக்கு வேலை முடிச்சுக் கொண்டு போவம்" என்றும் கட்டுப்பாடுகள் இல்லாமல் சுதந்திரமாகத் தாம் அதில் ஈடுபடுவதையும் மாதமொன்றுக்கு தாம் எட்டாயிரம் ரூபா வரைக்கும் வருமானம் பெறுவதாகவும் தங்களுக்குப் பிரயோசனமாக அமைந்த இது தங்கள் குடும்பச்செலவுகளில் சிறிதளவை ஈடுசெய்ய உதவுவதாகவும் கூறினர். அங்குள்ள ஏனைய தளர்ந்த குரல்கள். இந்தப் பனைசார் கைவினைப் பொருட்களுக்குரிய கேள்வியும் சந்தை வசதியும் அதிகரிக்குமிடத்து தனித்தனியாக இத்தொழிலில் ஈடுபடவும் தினமும் வறுமையால் வாடும் அவர்களின் குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் முடியும் என்பது முயற்சியும் திறமையும் கொண்ட அந்தப் பெண்களின் எதிர்பார்ப்பாயுள்ளது.







## தகர்வு...

(21-22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு அமெரிக்கா உதவக்கூடிய வழிவகைகள் பற்றியும் உதவிச் செயலர்களின் இந்தப் பயணத்தின்போது ஆராயப்பட்டது. இவையெல்லாமே கொழும்பு மீது அதிக அழுத்தத்தை கொடுப்பதிலிருந்து அமெரிக்கா நழுவுகிறது என்கிற போக்கையே வெளிக்காட்டின. ஆனால் இந்த விமர்சனங்களை உதவிச் செயலர்கள் இலங்கையில் இருந்து புறப்படுவதற்கு முன்னதாக ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறார்கள். வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்கள் சிலரை அவர்கள் கொழும்பில் சந்தித்தபோது இந்த விடயமும் முக்கியமாகப் பேசப்பட்டது. நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் மீதுதான் தமது கவனம் குவிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்த நிசா, இருந்தாலும் யதார்த்தத்தைப் புரிந்தவர்கள் என்ற ரீதியில் பொருளாதார விருத்தியிலும் தாம் அக்கறை காட்டினார்கள் என்று தெரிவித்தார். பொருளாதார அபிவிருத்தியின்றி நாட்டில் நிலையான அமைதியைத் தக்க வைக்க முடியாது என்றார் அவர். மீண்டும் பழைய நிலமைக்குத் திரும்பிச் செல்வதை ஏற்க முடியாது என்பதையும் அவர் உணர்த்தினார். அவர் பழைய நிலைமை என்றது மகிந்த ராஜபக்சவின் காலத்தையே. அமெரிக்காவின் ஒரேகுறியாக மகிந்த மீண்டும் பதவிக்கு வந்து விடக்கூடாது என்பதுதான் இருக்கிறது என்பதால், அது கொழும்பின் மீது அதிகளவுக்கு அழுத்தங்களைக் கொடுக் காது என்று நம்பலாம். எனவே வெளிநாட்டு நீதிபதிகள் விடயத்திலும் அதேநிலமைதான் இருக்கும்.

"வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல்போன மிக நீண்ட வரலாறு இலங்கைக்கு இருக்கிறது என்பதை அமெரிக்கா தெரிந்தே வைத்திருக்கிறது. அதிலிருந்தே சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் இப்போதும் தொடர்கின்றன. அந்த வரலாற்றினுள் வாழ்ந்த மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையிலான செயல்கள் மீது அரசு அர்ப்பணிப்புக் காட்டவில்லை" என்று கூறிய உதவிச் செயலர் மலினோஸ்கி, அதற்காக எதையும் நாம் எமக்கான அனுமதியாக எடுத்துக்கொள்ள முடியாது என்றார். இதனுடைய அர்த்தமும் என்னவென்றால், இலங்கை அரசுகள் முன்னர் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதற்காக இப்போதைய அரசும் வாக்குறுதியை நிறைவேற்றாது என்ற அடிப்படையில் அவசரப்பட்டு அழுத்தம் கொடுக்க முடியாது என்பதுதான். அதேநேரத்தில் முற்றுமுழுதாக அழுத்தத்தை அமெரிக்கா கைவிடாது என்பதையும் மலினோஸ்கி வெளிப்படுத்தினார். ஏனைய நாடுகளில் இப்படி நடந்தபோது அங்கு நடந்த நீதி நடைமுறைகளில் தனது நிபுணத்துவ சேவையை இலங்கை வழங்கி அதனால் பயனடைந்திருந்தது. எனவே போர்க்குற்றவிசாரணையில் சர்வதேசப் பங்களிப்பு என்பது ஏதோ புத்தம்புதிய விடயம் அல்ல என்றும் அவர் கூறினார். அத்தோடு, தனது இறைமைக்குள் வெவ்வேறு மட்டங்களிலான சர்வதேச பங்களிப்போடுகூடிய வழிவகைகளை நடைமுறைப்படுத்துவதாக இலங்கை உறுதியளித்திருக்கிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எப்படியிருப்பினும் இப்போதைக்கு இந்த விடயத்திலோ அல்லது வேறு எந்த விடயத்திலோ அமெரிக்காவின் அழுத்தம் கொழும்பு மீது தீவிரமாக இருக்காது என்பது உறுதியானது. இந்த நிலமை பன்னாட்டு நீதிபதிகளை நிராகரிக்கும் கொழும்புத் தலைமைகளுக்கு மேலும் உரமூட்டக்கூடியது. அது தமிழர்கள் மத்தியில் இந்த அரசு மீதான நம்பிக்கையை நிச்சயம் தகர்க்கச் செய்யும்.

அமெரிக்க உதவிச் செயலர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று, ஐ.நா. தீர்மானம் மற்றும் அதில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டே தயாரிக்கப்பட்டவை. அதிலிருந்து கொழும்பு பின்வாங்கும்போது, இந்த அரசின் மீதான நம்பிக்கையும் தமிழர்களிடம் தகர்வது தவிர்க்க முடியாது.

இந்த விடயத்தில் இப்போதைக்கு அவசரப்பட்த் தேவையில்லை என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடாக உள்ளது. போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் தேவை என்ற தமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லாதபோதும், நீதிமன்றம் அமைக்கப்படும்போது அரசு சொன்னதைச் செய்கிறதா இல்லையா என்பதைப் பார்க்கலாம் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு. ஒரு வேளை அப்போதும் அரசு தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்து வாக்குறுதியை மீறினால் என்ன செய்வது என்பது பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்குக் கூட்டமைப்பு தயாராக இல்லை. கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு அரசு மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையைத் தக்க வைப்பதற்கு ஒருபோதும் உதவாது.




# அருமருந்தாகிவிட்ட அதிகாலை

"கொக்கரக் கோ..." சாமக்கோழி கூவுகின்றது. என் வீட்டுச் சேவல் விடிவெள்ளியைக் கண்டவுடன் சடசடவென இறக்கையை அடித்துச் சோம்பல் முறித்து உரக்கக் கூவுகின்றது. பக்கத்து வீடு அதுக்கடுத்த வீடு எனக் கூடிக் குறைந்த ஒலியாய் தொடர்ந்து கேட்கும் இசையால் விடிகின்றது அதிகாலைப் பொழுது. அடுத்த வீட்டின் பின்புறம் ஒரு மாமரம் இருந்தது. அதில் ஒரு குயில் தம்பதி குடியிருந்தது. கிழக்கு வெளுக்கத் தொடங்கியவுடன் அவை பாடத் தொடங்கும். தன்னம்பிக்கையின் குறியீடாக அது புலப்படும். இருளின் அடர்த்தி குறைவதையும் ஒளி வளர்வதையும் கண்டு உற்சாகமும் ஊக்கமும் அவற்றின் தொண்டையிலிருந்து பீறிட்டுக் கிளம்பும். ஒன்றன்பின் ஒன்றாக வேறு பல பறவைகளும் அவற்றுடன் சேர்ந்து கொள்ளும். அந்தக் காலைப் பொழுதுகள் மெல்ல வருடித் தூக்கம் கலைய இதமாய் இருந்த காலம். பறவைகளின் வைகறை இசையைப் போல மனதுக்குச் சுறுசுறுப்பூட்டுவது வேறெதுவுமில்லை. அதில் எண்ணற்ற சொற்கட்டுக்களும், சங்கதிகளும், இராகங்களும், சுரங்களும் வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடும். அது ஒரு மொழி. அதில் சொற்கள் இல்லாதிருந்தாலும் பொருள் செறிந்திருக்கும். அந்தப் பொருள் எமக்கு விளங்காமல் போனாலும் அந்த இசை வசந்த காலத்தின் வருகைக்குக் கட்டியம் கூறுவதால், எமது மனதிலும் மகிழ்ச்சியுண்டாகும். இவற்றை இரசிக்கும் மனமிருந்தால் அது சாத்தியம்.

## பறவைகள் ஏன் பாடுகின்றன?

பறவைகள் ஏன் பாடுகின்றன என்று கேட்டால், அதற்குக் காரணம் அவை அதற்காகவே படைக்கப்பட்டவை என்றுதான் சொல்ல முடியும். மனிதர்கள் மற்றும் விலங்குகளின் குரல்வளை அமைப்பிலிருந்து பறவைகளின் குரல்வளை வேறுபட்டது. அது மென்மையான தசை நார்களால் ஆனது. குருவி போன்ற சிறிய உடலுள்ள பறவைகளுக்கு அது சிறியதாக இருப்பதால், உயர் அதிர்வெண் சுருதிகளுள்ள ஒலிகளை மட்டுமே அவற்றால் வெளிப்படுத்த முடியும். பெரிய பறவைகளின் குரல் தடித்ததாக இருப்பதற்கு அவற்றின் குரல்வளை பெரியதாயிருப் பதே காரணம். தான் கூடு கட்டியிருக்கும் இடம், தனக்குரிய சமஸ்தானம் என்று மற்றைய பறவைகளுக்கு அறிவிக்கவே ஒரு பறவை பாடுகிறது எனச் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பறவைகளைப் போல இசையொலி மூலம் தமது இணைகளை கவர்ந்திழுக்கக் கூடிய உயிரினங்கள் வேறு இல்லை.

இவை இனப் பெருக்கத்துக்காக மித வெப்பப் பகுதிகளை நாடுகின்றன. இவற்றுள் ஆண் பறவைகளே தமது கூடுகளைக் கட்டு கின்றன. கூடுகளைக் கட்டி முடித்ததும் அவை உரத்த குரலில் பாடி, வீடு தயார் என்று இணை களுக்கு அறி விக்கின்றன. வேறு ஆண் பறவை ஏதாவது அக்கம் பக்கத்தில் இருந்தால், அவற்றை எச்சரித்து வேறு இடத்துக்குப் போகும்படி கோபமாக மிரட்டவும் ஆண் பறவை குரலை உயர்த்திப் பாடும். ஓர் இணை கிடைத்து, அது கூட்டில் முட்டையிட்டு அடைகாக்கும்போதும் ஆண் பறவை பாடுகிறது. அது பெண் பறவையை மகிழ் விப்பதற்காக இருக்கலாம். அதை விடவும், அந்த நேரத்தில் அதன் உடலும் மனமும் உச்சக்கட்ட ஆற்றலு டன் இருப்பதே அதன் தொண்டையிலிருந்து இசை பீறிட்டெழு வதற்குக் காரணம். கூடுகளில் அடைக்கப்பட்டு வளர்க்கப்படும் பறவைகள், அருகே இணை ஏதும் இல்லாத நிலையிலும் வசந்தத்தின் இனப்பெருக்க காலத்தில் உரத்த குரலில் பாடுகின்றன. அது ஏதோ ஓர் உள்ளுணர்வின் தூண்டலாகவே தோன்றுகிறது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டதும் பாட்டுப் பாடுவது குறைகிறது. காரணம் ஆணுக்கு, வெளியே சுற்றித் திரிந்து இரை தேடி எடுத்து வர வேண்டிய பணிச்சுமை அதிகரிக்கிறது.

## காலையில்தான் பாட்டு

பெரும்பாலான பறவைகள் கிழக்கு வெளுக்கத் தொடங்கும்போது பாடத் தொடங்குகின்றன. அப்போதும் ஒவ்வொரு பறவையினமும் ஒவ்வொரு குறிப்பிட்ட கணத்தில்தான் பாட்டை ஆரம்பிக்கின்றன. மாலையில் அவை கூடுகளுக்குத் திரும்பும் நேரத்தில், மீண்டும் கச்சேரி உச்ச ஸ்தாயியில் தொடங்கும். ஆனால், காலை வேளையில் நடப்பதைவிடச் சற்று கடினமான சுரங்களுடன் இருக்கும். அதில் இசையொலியைவிட, சளசளப் புக் கூச்சலே அதிகம். ஆற்றங்கரை அரச மரங் களில் மாலை நேரங்களில் பலவிதமான பறவை கள் தத்தம் கூடுகளில் அமர்ந்துகொண்டு சத்தம் போடும். அதை இசையென்று வகைப்படுத்த மிக வும் தாராளமான மனநிலை தேவை.

சில பறவைகள் விடியற்காலையில் மட்டும் பாடும். ஆந்தைகளும் கோட்டான்களும் இருட்டில் மட்டுமே குரல் கொடுக்கும். அதை இசையாக யாரும் குறிப்பிடுவதில்லை. அலறல் என்றுதான் சொல்லுவார்கள். ஆனால், பெண் ஆந்தைகளுக்கு அது கானமாயிருக்கும்.

இருள் பிரிவதற்கு முன்பே கண் விழித்துவிடும் பறவைகள், வானத்தில் பெரும் உயரத்துக்கு எழும்பிச் சூரியனின் முதல் செங்கதிர்கள் பூமியின் தரையில் படுவதற்கு முன்பாகவே எதிர்கொண்டு வரவேற்றுப் பாடத் தொடங்கும். வானம்பாடிகள் காலையிலும் பாடும், மாலையிலும் பாடும். நைட்டிங்கேல் பறவையும் இரு வேளையும் பாடும் பழக்கமுள்ளது. எல்லாப் பறவைகளுமே தமக்குரிய குரல் வளத்துடன் பாடுகின்றன. மனிதர்கள்தான் அவற்றை இசை, சளசளப்பு, கூச்சல் என்றெல்லாம் வகைப்படுத்துகின்றனர். இயந்திரங்களும் வாகனங்களும் இயந்திரமாகிவிட்ட மனிதர்களுமாக மாறி விட்ட இன்றைய அதிகாலையும் சூழல் மாற்றமும் அந்தப் பறவை ஒலிகளைச் சிறைவைத்து விட்டன.

# விதைத்தனர் குண்டை எம்மேல்...

விழுதுகளின் பழுதினால்
வீழ்ந்ததில்லை இவ்விருட்சம்
வெட்டுண்டே வீழ்ந்தோம்
விஷம்கொண்ட வாள்களினால்

கோழைகள் என்பதினால்
கோயிலுக்குள் புகவில்லை
பொதுமக்கள் நாமெனவே
பொதுவிடத்திற் புகுந்திட்டோம்

புதைத்திட எண்ணும்
வதைத்திடும் கைமுணுக்கள்
விதைத்தனர் குண்டை எம்மேல்
வீழ்ந்தோம் செத்தும் சாகாமலும்
கதைத்து என்ன பயன்
கழிந்துவிட்டது கனகாலம் இல்லை
இலக்கியமாய் இருந்த இனம்

இல்லாமல் போகுதப்போ
சொல்லாமலே எமைக
கொல்லாமல்க் கொல்கின்றார்
எல்லோருமெழுந்து உரிமைகோராவிடில்
எல்லாமேயழிந்து ஊர் கம ஆகிவிடும்

வடித்ததில்நாட்டம் இறக்கி வடித்ததில்நாட்டம்
வரிகளில் எழுதஇயலா பல அரிகண்டத்தில்
நாட்டம் துடிப்புவேண்டும் இனம்பற்றி
படித்தவனோ படிக்காதவனோ

அடித்தே பறிக்கின்றார்
அரசேனச் சொல்கின்றார்
அப்பன்காணி அப்பப்பன்காணி
அழுதுபுலம்பியும் அரசதைக்கேட்கவில்லை
விழித்திடு எம்மினமே

சத்தியசீலன் அன்ரன்
அருள்வண்ணன்



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 80 | 120 | 80 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 120 | 180 | 140 | 100 | 100 | – | 70 |
| கரட் | 240 | 240 | 240 | 180 | 200 | 200 | – | 140 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 200 | 120 | 200 | 120 | 120 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 240 | 240 | 200 | 220 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 180 | – | 140 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 100 | 120 | – | 100 |
| பூசணி | 180 | 140 | 120 | 140 | 160 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 200 | 200 | 260 | 180 | 250 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 120 | 120 | 80 | – | 50 |
| கீரை | 25 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 700 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 60 | 60 | – | 60 |
| கோவா | 160 | 140 | 180 | 120 | 160 | 180 | – | 120 |
| வெண்டி | 100 | 80 | 140 | 120 | 100 | 80 | – | 60 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 240 | 160 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 240 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 40 | 40 | 25–30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 150 | 140 | 160 | 140 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 250 | 240 | 300 | – | 260 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 150 | – | – | 300 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 280 | 380 | 600 | – | 300 |




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 550 | 500 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 1000 | 650 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 400 | 300 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 400 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 370 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 150 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 150 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 200 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | 700 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |

# கச்சான் அல்வா



**தேவையான பொருள்கள்**

வறுத்த உடைத்த கச்சான் - ஒரு கப்
சக்கரை - முக்கால் கப்
உப்பு - தேவையான அளவு
நெய் - 3 மேசைக்கரண்டி

**செய்முறை**

மிதமான சூடான அடுப்பில் அடி கனமான சட்டியை வைக்கவும்.
சட்டி சூடானதும் நெய்யை விட்டு சர்க்கரையைப் போட்டு, நன்றாக சர்க்கரை கரைந்து வரும் வரை கிளறி விடவும்.
சர்க்கரை கரைந்து கம்பிப் பதம் வந்ததும், உப்பு, கச்சான் ஆகியவற்றைப் போட்டு கலக்கவும்.
கலவை திரண்டு வரும்போது இறக்கி நெய் பூசிய தட்டில் பரவி ஆறவிடவும்.
இளஞ்சூட்டில் வந்ததும் துண்டுகளாக வெட்டி விடவும்.
விரும்பினால் எள்ளும் சிறிதளவு சேர்க்கலாம்.
இந்தக் கச்சான் அல்வா செய்வதற்கு சர்க்கரைக்குப் பதிலாக சீனியையும் சேர்க்கலாம்.

## நாளை

ஆடி-03
திங்கட்கிழமை – 18.07.2016
திதி: சதுர்த்தசி பி.இ.05.22 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப,04.04
ராகுகாலம்: 07.30-09.00 வரை
சுபநேரம்: 12.00-01.30 வரை




- மின்அழுத்தி மீது அசிங்கமாக ஒட்டிக் கொண்டிருக்கும் அழுக்கை போக்குவதற்குமுதல் மின் அழுத்தியை மின்னிணைப்பில் இணைத்துக்கொள்ளுங்கள். பின்பு அது சூடேறியவுடன் ஒரு மெழுகுதாளில் உப்பை நிறையத் தூவி விடுங்கள். சூடாக இருக்கும் மின்அழுத்தியை ஒரு தாளின் மீது தேய்க்கவும். மின்னழுத்தி மீது அசிங்கமாக ஒட்டிக் கொண்டிருக்கும் அழுக்கை இது போக்கிவிடும்.
- உப்பு, பேக்கிங் சோடா மற்றும் பாத்திரம் கழுவும் சோப்பைக் கொண்டு பாத்திரங்கள் கழுவினால் பாத்திரங்கள் பள பள என ஜொலிக்கும்.
- காய்கறி வெட்ட பயன்படுத்தப்படும் மரத்தட்டு அழுக்கு நிறைந்து காணப்பட்டால், அதில் சிறிது உப்பு, பிழிந்த எலுமிச்சைக்கோது மற்றும் வெந்நீர் ஊற்றிக் கழுவினால் அதன் கறை காணாமற் போய்விடும்.
- விரிசல் விழுந்த முட்டையை துடைக்க இனி காகித துண்டுகளை பயன்படுத்தத் தேவையில்லை. விரிசல் விழுந்த பாழாகியுள்ள முட்டையின் மீது உப்பைத் தடவி 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை காத்திருக்கவும். பிசு பிசுவென இருக்கும் பகுதிகள் மணல் தூசுகளாக மாறிவிடும். இனி அவைகளை சுலபமாக துடைத்து எடுத்து விடலாம்.
- வடிகால்கள் சுத்தமாக்க, கால் கப் பேக்கிங் சோடாவுடன் கால் கப் உப்பைக் கலந்து, இயற்கையான வடிகால் துடைக்கும் கலவை யாக பயன்படுத்தலாம். இந்தக் கலவையை வடிகாலில் ஊற் றுங்கள், பின் அரைக் கப் வெள்ளை வினாகிரியை அதில் ஊற்ற வும் பின்பு 15 நிமிடங்கள் அப்படியே விட்டு விடுங்கள். பின்பு சுடு நீ ஊற்றி அனைத்தையும் கழு விடுங்கள்.
- சிவப்பு வைன் கறையை துடைச் கறை ஏற்பட்ட உடனேயே அவ றின் மீது உப்பை தூவி விட்டு நிமிடங்கள் வரை காத்திருக்கவு பின்பு அதன்மீது குளிர்ந்த நீ தெளித்து கறை நீங்கும் வ நன்றாகத் துடைக்கவும்.

# முரளிக் கிண்ணத்துக்கு முரளிதான் முதல் எதிரி

இலங்கை –ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான தொடருக்காக ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முரளி நியமிக்கப்பட்டுள்ளமையானது இலங்கை அணிக்கு மட்டுமல்லாது அந்த அணியின் ஒட்டுமொத்த ரசிகர்கள் வயிற்றிலும் புளியைக் கரைக்கும் விதமாகவே அமைந்துள்ளது.

இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய அணி 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும், 2 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரிலும் விளையாடவுள்ளது. கிரிக்கெட் உலகில் தோன்றிய ஆகச் சிறந்த இரு சுழல்பந்து வீச்சாளர்களான முரளி, வோர்ண் இருவரையும் பெருமைப்படுத்தும் விதமாக இந்த அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரிருக்கு முரளி – வோர்ண் கிண்ணம் என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த இரு பெயர்களும் தற்போது ஆஸ்திரேலியாவுக்குச் சாதமாக அமைந்துள்ளதுதான் பரிதாபம்.

ஆஸ்திரேலிய அணி நீண்ட தொடர்களுக்குச் செல்லும்போது, விளையாடச் செல்லும் நாட்டின் ஆடுகளங்கள், பலங்கள், பலவீனங்கள் பற்றி அறிவதற்காக அந்த நாட்டின் வீரர்களையே குறுகிய காலப் பயிற்சியாளராகவும், ஆலோசகராகவும் நியமிக்கும். சில வாரங்களுக்கு முன்னர். இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட வீரராக சமரவீர ஆஸியின் துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இவரது நியமனம் பலருக்கும் தூக்கிவாரிப் போட்டது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப்போல தற்போது முரளிதரன் ஆஸியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மொத்தத்தில் துடுப்பாட்ட நுணுக்கங்கள் சமரவீரவாலும் பந்துவீச்சு நுணுக்கங்கள் முரளியாலும் கட்டவிழ்க்கப்படவுள்ளன. இவர்கள் இருவரையும் ஆலோசகராகவும் பயிற்சியாளராகவும் கொண்ட ஆஸ்திரேலிய அணியின் முன்பு, இலங்கை ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தனது பெயரைத் தாங்கி விளையாடவுள்ள இலங்கைக்கு முரளியே வில்லனாக மாறியுள்ளமை கொஞ்சம் பரிதாபம்தான்.






## டோனிக்கு அல்வா

ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று, இந்திய அணித் தலைவர் டோனிக்கான ஒப்பந்த தொகையை வழங்காமல் ஏமாற்றியதால் அவருக்கு ரூ.20 கோடி வரை (இந்திய மதிப்பில்) இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணி பார்த்த தலைவர்களில் ஆகச் சிறந்தவராகக் கருதப்படும் டோனி, டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும், இவரது மதிப்பு இன்னும் குறையவில்லை. இதனால் விளம்பர ஒப்பந்தங்களும் இன்னும் சரியவில்லை. கடந்த 2013ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் நிறுவனம் ஒன்று டோனியுடன் 3 ஆண்டுகள் ஒப்பந்தம் செய்தது. ஆனால் ஒப்பந்த தொகையை அந்த நிறுவனம் சரியாகச் செலுத்தவில்லை. கடந்த மார்ச் மாதம் தான் கடைசியாக தவணை கொடுத்தனர்.

இப்படி தாமதம் செய்வதால் டோனிக்கு ரூ.20 கோடி வரை இழப்பு ஏற்பட்டதாம். இந்த ஒப்பந்தம் இன்னும் நடைமுறையில் இருப்பதால் இந்த நிறுவனத்துக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டதாக தெரிகிறது.

பிரகாஸ்



## அதிக வயதில் சதம்; மிஸ்பாவின் சாதனை

கடந்த 82 ஆண்டுகளில் அதிக வயதில் டெஸ்ட் சதம் அடித்த வீரர் என்ற பெருமையை பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் பெற்றார்.

லோட்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றுவருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கு அந்த அணியின் தலைவரான மிஸ்பா சதம் அடித்து நம்பிக்கை கொடுத்தார். அவர் 114 ஓட்டங்களைப் பெற்றார். இந்தச் சதத்தின் மூலம், கடந்த 82 ஆண்டுகளில் அதிக வயதில் (வயது - 42) டெஸ்ட் சதம் அடித்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். 1934ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் பஸ்ரி ஹென்றின் தனது 45 வயதில் சதம் அடித்ததே இன்றுவரை சாதனையாக உள்ளது.

## சொந்த மண்ணின் தொடர்களுக்காக பாகிஸ்தானின் பெரும் நடவடிக்கை

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, வெளிநாட்டில் இருந்து தனது நாட்டுக்கு விளையாட வரும் வீரர்களுக்கு பாதுகாப்பு வழங்க நான்கு குண்டு துளைக்காத நவீன பஸ்களை வாங்கியுள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் சென்றிருந்தபோது துப்பாக்கியை ஏந்திய மர்ம நபர்கள் சிலர் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சென்ற பஸ் மீது தாக்குதல் நடத்தினர். இதில் ஆறு இலங்கை வீரர்கள் காயம் அடைந்தனர். ஆறு பாதுகாப்பு வீரர்களும், இரண்டு பொதுமக்களும் இறந்தனர். இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தின் பின்னர் பாகிஸ்தானுக்கு தமது அணியை அனுப்ப அனைத்து கிரிக்கெட் சபைகளும் மறுத்தன. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பெரும் வருமான இழப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு அணிகளை வரவழைக்கும் விதமாக நான்கு குண்டு துளைக்காத பஸ்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வாங்கியுள்ளது.

# என்ன கொடுமை சேர்...!

(39 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்துக்குள் வந்து ஆசனத்தில் அமர்ந்த போதுதான் என் அன்புக்காதலி இயற்கை என்னை அழைக்கத் தொடங்கினாள். இன்று அவசர அவசரமாக வந்ததன் விளைவு, அவசரமாக மலசலகூடத்தை நோக்கி ஓடினேன்.

என்ன கொடுமை மலசலகூடக் கதவு இறுகப்பூட்டியிருந்தது. தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கமைய எனது அவசரத்தை வெளிக்காட்ட இருமுறை தட்டிவிட்டு அலுவலகத்தைச் சுற்றி நடக்கத் தொடங்கினேன். அப்போதுதான் அவதானித்தேன். இதுவரை அலுவலகத்தைச் சுற்றிக் கொண்டிருந்த பொறுப்பதிகாரியைக் காணவில்லை. எனது விழிகள் பொறுப்பதிகாரியின் கதிரையை எட்டிப் பார்த்தது. அங்கும் இல்லை; ஆக பொறுப்பதிகாரியையும் அழைத்துவிட்டாள் இயற்கை. அவருக்குமா...? ஒருமாதிரி அவர் வெளியில் வர நான் உள்ளே சென்றேன். என்ன கொடுமை மாயவா? காலையில் சூரியன் எப்.எம்இல் ராசிபலன் சொல்லும்போதே சொன்னவங்கள் "திண்டாட்டம்" என்று. ஒற்றைச் சொல்லில் சொன்னாலும் அம்சமாக சொல்லியிருக்கிறாங்கள். தண்ணீர்க்குழாயில் தண்ணீர் வரவில்லை. இப்படியும் சோதனைகள் வருமா? சோதனையிலும் சிறிய வெளிச்சம். நன்றி "டயலொக்" நன்றி என்று கூறியவாறு அலுவலக உதவியாளனாக இருக்கும், என்றும் அபயக்கரம் நீட்டும் கரனுக்கு போன் எடுத்தேன்.

"ஹலோ! கரன்! நான் ரொய்லெட்டுக்குள்ள.. தண்ணீர் வரவில்லை மோட்டரைப் போடு" என்றேன். "ஐயோ அண்ணை! இன்றைக்கு அது வேலை செய்யவில்லை என்றான்". "அடப்பாவி, இப்ப என்னடா செய்ய?" "கொஞ்சம் பொறுங்கோ! ரோட்டுக் கிணத்தில தண்ணி அள்ளிக்கொண்டு வாறன். ஆனால் உதுக்குள்ள இருக்கிற வாளிக்கு கைபிடி இல்லை. முன் கடையில பொறுப்பதிகாரியிட்டை சொல்லிப்போட்டு வாளி ஒன்று வேண்டி தண்ணி எடுத்துக்கொண்டு வாறன் அண்ணை"

நாசமாகப் போக! இவன் வாளி வேண்டி தண்ணி.. ஐயகோ! ம் ம் ம் இருப்பம் வேற வழி! நேரம் போய்க் கொண்டிருந்ததே தவிர தண்ணியைக் காணவில்லை. எனக்குத் தெரியும், உவன் ஓ.ஐ.சி. (பொறுப்பதிகாரி) வாளிக்கு லெற்றர் கேட்டிருப்பான். கிழட்டுப்பயல். அதுதான் இவ்வளவு நேரம் எடுக்கிறதுபோல. எதுக்கும் திரும்ப ஒருதரம் போன் எடுப்பம்...

"ஹலோ! கரன் என்னடா செய்கிறாய்?" கிசு கிசுப்பான குரலில் "அண்ணை சத்தம் போடாதேயுங்கோ பெரிய ஐயா வந்து நிற்கிறார்" ஐயகோ! ஐயகோ! "அந்த மனுசன் இன்றைக்கென்று ஏன் வந்ததுடா?" அதுவோ! பிங்கர் பிறின்ட் வடிவா பாவிக்கினமோ என்று பார்க்கவாம்! அவனது கதையினூடு அங்கு பெரிய ஐயாவின் குரலும் கேட்டது.

"உவர் கோபி எங்கே?" மிக பவ்வியமாக ஓ.ஐ.சி பதிலளித்துக்கொண்டார், "அவர் வந்துவிட்டார்? ஆனால் காணவில்லை?" என் மனதுக்குள் யோசித்தேன் அடப்பாவிகளா இவ்வளவு காலமும் நான் வந்து அரை மணித்தியாலத்துக்கு பிறகு வாறனீங்கள்! இப்ப நீங்கள் நல்ல பிள்ளைகள், நான்? சத்தமா கரனிடம் சொன்னேன். "எடேய் சொல்லேன்டா அவர் ரொய்லெட்டுக்குள்ள என்று" பதிலில்லை. ம்ம் நான் தானே போன் எடுத்தது. அதுதான் சிவப்பு பட்டனை அழுத்தாமலே பொக்கற்றுக்குள்ள வைச்சிட்டான் பாவிப்பயல்.

அதற்கிடையில் பெரிய ஐயாவின் குரல் "எனக்குத் தெரியும்! அவர் வந்து மெசினில கையை வைச்சிட்டு சந்தைக்குப்போயிருப்பார். வரட்டும் அவர்! நானே காலையில் போய் பிங்கர் பிரின்டில கைவைச்சிட்டு இங்க வாறன். நீங்கள் எனக்கு கணக்கு விடுகிறீங்கள் எனக்கு தெரியும்தானே, உங்களைப்பற்றி உங்களுக்கு தருகின்ற சலுகைகளை எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்கிறனீங்கள் என்று?" குமுறினார்.

பாவம் அந்த மனுசன் என்ர கஸ்டம் அவருக்கு தெரியாது. ஊரில நடக்கிறதை வைச்சு எனக்கு விழுகிறது. மனதில் ஒரு சினிமா பாட்டுத் தான் ஞாபகத்துக்கு வந்தது.

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை என்னைச் சொல்லிக் குற்றமில்லை காலம் செய்த கோலமடி...

திடீரென்று மின்னல் மின்னியது ஆகா துளித்துளியாக தண்ணீர்க்குழாயில் விழுந்த நீர் வாளியை நிரப்பிவிட்டிருந்தது. இதுவல்லவோ ஆனந்தம். மிக அவதானமா காரியத்தை முடித்துக்கொண்டு வெளியில் வந்து அலுவலகத்துள் நுழைந்த என்னைப்பார்த்த பெரிய ஐயா "ஏன் இப்படி இருக்குறீங்க பாருங்க? இப்படி வியர்த்து... இடையில கள்ளத்தனமாக வெளியில போய்வருகிறதெண்டால் இப்படித்தான் வியர்க்கும்"

வெளிக்கு போய் வந்தபடியால்தான் வியர்க்குது. ஆனால் எந்த வெளி என்பதுதான் பிரச்சினை அசடுவழிய சிரித்தபடி நின்றேன். "சரி சரி! இனிமேலாவது ஒழுங்கா வேலையை செய்யுங்கோ" என்றபடி பொறுப்பதிகாரியைப் பார்த்து ரொய்லெட் எங்கே? எனக்கேட்டார். என் தலை தானா நிமிர்ந்தது வாய் தானாகவே திறந்தது "உங்களுக்குமா?" என்றது. சேர் கொஞ்சம் பொறுங்கோ நேற்றுத்தான் மோட்டர் பழுதாகப்போனது. வாளியில தண்ணீர் எடுத்துக் கொண்டு வாறம் என்ற ஓ.ஐ.சி. பாய்ந்து கிளம்பியபடி தம்பி கரன் வாளி ஒன்று... என்பதற்குள்ளாவே கரன் விழுந்தடித்துக்கொண்டு கடைக்கு ஓடினான். பெரிய ஐயா அலுவலகத்தை சுற்றிப்பார்க்க வெளிக்கிட்டுக்கொண்டிருந்தார் வாளி வரும்வரை. நான் உடனடியாகவே நல்லதொரு காரியத்தில் இறங்கினேன். அது என்னவென்றால் அடிக்கடி இயற்கை அழைப்போர் நலன்புரி சங்கத்தின் கிளை ஒன்றை எமது அலுவலகத்தில் ஆரம்பிப்பது. சங்கத்தில் அவசரத்துக்கு ஒரு வாளி வேண்டுமளவுக்காவது காசு இருக்க வேணும், அதுதான் அதன் அண்மைய இலக்கு.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 429

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | |
| 7 | | | | ■ | 8 | | ■ |
| 9 | | | ■ | 10 | | | 11 |
| ■ | | ■ | 12 | | | ■ | |
| 13 | | 14 | | | ■ | 15 | |
| | ■ | 16 | | ■ | 17 | | ■ |
| 18 | 19 | | ■ | 20 | | | 21 |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:......................................................

பூரணமான தபால் விலாசம்: ......................................

..........................................................................

கையொப்பம்:.........................................................

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**இடமிருந்து வலம்**

1. தப்பிதம்
4. பத்திரிகை தங்கியிருப்பது இவனில்
7. குற்றச்சாட்டை மற்றவர் மீது சுமத்துதல்
8. ஒன்றாக்கு
9. மயானம்
10. முற்காலத்தில் பெண்கள் காலில் அணிந்த அணிகலன்
12. கை
13. பாவனை
15. கவிதை யாப்பவன்
16. படிப்பை மேற்கொள்
17. ஒரு தரப்பு
18. கூற...
20. இந்த மரத்தில் இருந்துதான் பஞ்சு எடுக்கப்படுகிறது.
22. மீண்டு வரல்
23. இரும்பில் பிடிப்பது

**மேலிருந்து கீழ்**

1. பேய்
2. ஆசிரியரை இப்படியும் விளிப்பதுண்டு
3. பூக்கொய்யும் கூடை
5. அனைத்தும்
6. பயணிக்கத் தக்க ஒரு வாகனம்
10. தலை
11. குதிரை
12. கெண்டை மீன்
13. சொந்தக்காரன்
14. பட்டணம்
15. தலையை முண்டத்தோடு இணைப்பது
17. வழிப்படுத்துபவர்
19. உயிர்ப்பின் ஆரம்பநிலை
20. தந்தம்
21. செல்வம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 427இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) முப்பது (4) செம்பு (6) கும்பல் (7) மதிப்பு (9)வசதி (11) திரிபு (12) கும்மி (13) விடை (14) பாசி (16) கடைதல் (18) விடுதி (19)விலைவாசி (21)புயல் (22)வில்வம்

**மேலிருந்து கீழ்**

(1) முழுமதி (2) பகுப்பு (3)தும்பு (4)செல்வம் (5) புத்தி (8) திரிசடை (10) சமிபாடு (12) குடை (13) வில்லை (15) சிதிலம் (16)கம்பு (17) தவில் (18) விசில் (20) வாவி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 427 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
யு.யுடித் துஷானா,
'பாசிக் நிறுவனம்', நீதிமன்றம் அருகில்,
முல்லைத்தீவு.

**2 ஆம் பரிசு**
வே.நிவேதிகா,
புதியபூமதி, இடைக்காடு,
அச்சுவேலி.

**3 ஆம் பரிசு**
லோஜி செந்திலிங்கம்,
இல.189, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
துஷானு தவேந்திரராஜா,
திருக்குடும்ப ஆலய அருகாமை,
மல்வம், உடுவில், சுன்னாகம்.

**5 ஆம் பரிசு**
சு.அகிலேஷ்,
'மீன பவனம்'
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

**பாராட்டுப் பெறுவோர்**

ஈ.தர்மிதன்,
தரம் 9C, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்

செல்வி.கை.பிருதுவி ,
சரஸ்வதி வித்தியாலய வீதி,
மயிலியோடை, கரவெட்டி வடக்கு.

ஆ.ஜெயராணி,
சிவகுலவீதி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**

**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**

4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.429
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(27.07.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.429இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 31.07.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 427இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



# இந்த வாரம்

**17.07.2016 முதல் 23.07.2016 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

பெரும்பாலான கிரகங்கள், அளப்பரிய நன்மை தருவர். மனதில் நம்பிக்கை வளரும். சமயோசித செயலால், சிரமம் விலகும். உடன் பிறந்தவர்களிடம் அன்பு செலுத்துவீர்கள். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்களின் நற்செயல், பெருமை தேடித்தரும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி, கருத்து ஒற்றுமையுடன் செயற்படுவார். தொழில், வியாபாரத்தில், போட்டி குறையும். பண வரவில் இருந்த தாமதம் விலகும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பெண்கள் தாராள பண வரவால், விரும்பிய பொருளை வாங்குவர். மாணவர்கள் நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெறுவர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரன் மட்டுமே நன்மைதருவர். நல்லவர்களின் உதவி நம்பிக்கை தரும். பணிகளில் கவனமாக இருக்க வேண்டும். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும். புத்திரர்கள், தங்கள் செயற்றிறன் மேம்பட, உங்களிடம் ஆலோசனை கேட்பர். அதை நல்ல முறையில் எடுத்துச் சொல்லுங்கள். குடும்பத் தேவை அதிகரிக்கும். வாழ்க் கைத் துணைவர் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பார். பணியாளர்களின் பணித்திறன் அதிகரித்து சலுகை பெறுவர். பெண்கள், உறவினர்களின் நன் மதிப்பைப் பெறுவர். மாணவர்களுக்கு, நட்பு விடயத்தில் கவனம் தேவை.

## கடகம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மையுண்டு. மனதில், இனம் புரியாத கவலை ஏற்படலாம். பேச்சில், நிதானமாக இருப்பது நல்லது. உங்கள் செயற்றிறனை வளர்த்துக் கொள்ள, சந்தர்ப்பம் கிடைக்கும். சேமித்த பணம் சில வகைகளுக்குச் செலவாகும். வாகனப் பாதுகாப்பில் அதிக கவனம் வேண்டும். உடல்நலத்திற்காக செலவிட வேண்டிய சூழல் வரலாம். மனைவியின் கருத்து, குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தாமதமின்றி சரி செய்தால், பிரச்சினை தீர்ந்துவிடும். பணியாளர்கள், நிர்வாகத்தை அனுசரித்துச் சென்றால்தான், சலுகைகளைப் பெற முடியும்.

## மிதுனம்

சுக்கிரன், ராகு, சனி, செவ்வாய் வியத்தகு நற்பலன் தருவர். மனதில் நிம்மதி நிறைந்திருக்கும். எதிர்பார்ப்புகள் எளிய முயற்சியால் நிறை வேறும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் செயற்றிறன் மேம்பட்டு, குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். நோய் தொந்தரவு விலகும். புதிய சொத்து வாங்க அனுகூலம் உண்டு. மனைவி உங்கள் செயல் பரிமளிக்க, நல்ல ஆலோசனை சொல்வார். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திப் பணிகளைத் திறம்பட செய்வீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். பெண்கள் மாணவர்கள் பாதுகாப்புக் குறைந்த இடங்களுக்குச் செல்லக்கூடாது.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நன்மை கிடைக்கும். மனதில் குழப்பம் ஏற்படலாம். பழகியவர்களிடம் சுவ உதவி கேட்டுச் செல்வதை தவிர்க்க வேண்டும். வீட்டில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும். வாகனத்தில் செல்லும் போது பாதுகாப்பு அவசியம். புத்திரர் நல்வழியில் நடந்து பெருமை சேர்ப்பர். பூர்வசொத்தில் ஓரளவு பணம் கிடைக்கும். உடல்நலத்தில் சிறு பாதிப்பு ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள். பணியாளர்கள் அலுவலகத்தில் விண்ணப்பித்த கடன் கிடைக்கத் தாமதமாகலாம்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளன. இனிய நினைவுகள் புத்துணர்வு தரும். புதிய திட்டங்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி வளரும். புத்திரர்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வர். வழக்கு விவகாரங்களில் சுமுகத் தீர்வு கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். வராது என நினைத்து, உறவினர்களுக்குக் கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவி அதிக பாசம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

## துலாம்

ராகு, குரு, புதனால் நன்மை ஏற்படும். உடன்பிறந்தவர்கள் பாசம் கொள்வர். மனதில் நம்பிக்கை வளரும். வாகனம் இயக்கும் போது மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரர் படிப்பு செயற்றிறனில் மேம்படுவர். இஷ்ட தெய்வ அருளால், சில நன்மைகள் நடக்கும். பயணங்கள் நல்லவிதமாக அமையும். அறிமுகமில்லாத பெண்களிடம் அதிகம் பேச வேண்டாம். மனைவியின் செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிந்து சலுகைகளைப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறி பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர்.

## தனுசு

புதன், குரு, சுக்கிரன், கேது வியத்தகு நற்பலன் வழங்குவர். தாமதமான பணிகளை எளிதில் நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் புகழ்ந்து பேசுவர். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை சேர்ப்பர். பரம்பரைச் சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். மனைவியின் நல்ல செயல்களால் முன்னேற்றம் ஏற்படும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பணியாளர்கள் கைநிறைய சலுகை பெறுவர். பெண்கள் குடும்ப நலனுக்காக புதிய திட்டங்களை வகுப்பர். மாணவர்கள் படிப்புடன் பிற துறைகளிலும் முன்னேறுவர்.

## விருச்சிகம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். உங்கள் பேச்சு மற்றவர்களுக்கும், உங்களுக்கும் சிரமம் தரலாம். கனிவாகப் பேசவும். குடும்பச் செலவுகளுக்கான பணத்தேவை அதிகரிக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டம் மதித்து செயற்படுவது பணிப்பாதுகாப்பைத் தரும். மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே நல்ல மதிப்பெண் பெற முடியும்.

## மகரம்

சூரியன், சனி, செவ்வாய் சுப பலன் தருவர். முழு மனதுடன் பணிபுரிவீர்கள். நற்பெயரும், புகழும் கிடைக்கும். தாய்வழி உறவினர்களின் வருகை வீட்டில் மகிழ்ச்சி தரும். புத்திரர்களுக்கு, நண்பர்களின் ஆலோசனை உதவி கிடைக்கும். வழக்கு, விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். மங்கல நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் செயற்பாடு உங்களுக்கு இலாபம் தரும். தொழில், வியாபாரம் செழித்து, சமூக அந்தஸ்துக் கூடும். பணியாளர்கள் அதிக சம்பளம் பெறும் முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபடுவர். பெண்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு பெறுவர். மாணவர்கள் படிப்பில்ஆர்வம் கொள்வர்.

## மீனம்

சந்திரன், சுக்கிரன், ராகு தாராள பலன் தருவர். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். பணிச்சுமை அதிகரிக்கும். புத்திரர்கள், உங்களிடம் அதிக அன்பு கொள்வர். நோய்த் தொந்தரவு குறையும். நண்பர்களுக்குக் கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து, திட்டங்களை வகுப்பீர்கள். வழக்கு, விவகாரங்களில் நல்ல தீர்வு வரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, அனுபவஸ்தர்களின் அறிவுரை வழி வகுக்கும். பணியாளர்கள், புதிய தொழில் நுட்பங்களைக் கற்று முன்னேறுவர். மாணவர்கள் நண்பர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாகப் படிப்பர்.

## கும்பம்

புதன், குரு, சந்திரனால் நன்மை உண்டு. எதிர்கால நலன் பற்றிச் சிந்திப்பீர்கள். உங்கள் பேச்சாலேயே சில காரியங்களைச் சாதித்துவிடுவீர்கள். பணிகளை நினைவுபடுத்தி நிறைவேற்றுவீர்கள். வெளியூர்ப் பயணத்தில் மாற்றம் இருக்கும். புத்திரர்கள் அறிவாற்றலில் சிறந்து விளங்குவர். உடல்நிலை ஆரோக்கியம் பெறும். விருந்து, விசேசங்களில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்குப் பணியிடத்தில் நற்பெயர் கிடைக்கும். பெண்கள் குடும்பப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் நிதானம் வேண்டும். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

# நூற்றாண்டுகளை கடந்து குருநகர் மண்ணில் அருள் மழை பொழியும் கார்மேல் அன்னை ஆலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

யாழ். புனித மரியன்னை பேராலயத்தின் துணைப் பங்குகளில் ஒன்றான குருநகர் கார்மேல் அன்னை ஆலய பெருவிழாவானது நேற்றைய தினம் கொண்டாடப்பட்டதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது. இந்தப் பெருவிழாவின் திருநாள் திருப்பலியை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் கலாநிதி ரி.ஜே. கிருபாகரன் அடிகளார் நிகழ்த்தினார். மேலும் நற்கருணை வழி பாட்டை தமது குருத்துவத்தின் 40 ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரித் திருச்சபையின் வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளார் நடத்தினார்.

கார்மேல் மாதா சபைத் தலைவரும் கார்மேல் ஆலய பங்கு மகனுமாகிய அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் கருத்துத் தெரிவிக்கும் போது கடந்த 25 வருடங்களாக மரத்தால் அமைக்கப்பட்ட கர்த்தர் சொரூபத்தை வைத்து மக்கள் வழிபாடு ஒன்றை நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது. முதல் வெள்ளி தினங்களில் மாலை நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டு வருகிறது. ஏராளமான மக்கள் தவறாது இந்த கர்த்தர் வழிபாட்டில் கலந்துவருகிறார்கள் என்றார்.

யாழ். புனித மரியன்னை பேராலய பங்குத் தந்தையும் யாழ். மறைக்கோட்ட முதல்வருமாகிய ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளார் இந்தக் கட்டுரைக்கான தகவல்களை வழங்கினார். மேலும் தகவல்கள் கார்மேல் அன்னை ஆலய இளைஞர் ஒன்றிய 5 ஆவது ஆண்டு சிறப்பு மலரில் கலையார்வன் எழுதிய ஆக்கத்தில் இருந்து பெறப்பட்டது.

**மேதகு கென்றி யுலன் அமதி ஆண்டகை காலத்தில் குருநகர் கார்மேல் அன்னை ஆலயம்**

யாழ். மறைமாவட்டத்தை மேதகு ஹென்றி யுலன் அ.ம.தி. ஆண்டகை (1893 - 1919) பரிபாலித்து வந்த காலத்தில் கத்தோலிக்க சமயப்பணி ஆற்றுவதற்கென 1906 ஆம் ஆண்டில் உத்தரிய மாதா கூட்டம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார் என அறிய வருகிறது. குருநகர் புனித கார்மேல் அன்னையின் ஆலயத்துக்கான அங்குரார்ப்பண ஆரம்ப நிகழ்வு இதுவே ஆகும் எனக் கருதவேண்டி உள்ளது. சவிரியப்பா என்பவர் ஆலயத்துக்கென அன்பளிப்பாக வழங்கிய காணியுடன் அதற்கு அருகில் அமைந்திருந்த காணியும் மக்களின் பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்டது. அந்தக் காணியில் பரிசுத்த கார்மேல் மாதா சிற்றாலயமும் அதற்கு இணைந்ததாக உத்தரிய மாதா கூட்ட அங்கத்தவர்கள் கூடுவதற்கென பெரியதொரு மண்டபமும் கட்டுவதற்கு அதிமேற்றிரானியார் மேதகு டொன்டன்வில் ஆண்டகையால் 1906 இல் அத்திபாரம் இடப்பட்டது. இந்தக் கார்மேல் அன்னை ஆலயமும் அதனோடு இணைந்த மண்டபமும் 1913 இல் கட்டிமுடிக்கப்பட்டு குருநகரில் அமைந்த ஒரேயொரு மண்டபம் என்ற பெருமையோடு திறந்து வைக்கப்பட்டது. கட்டிமுடிக்கப்பட்ட திகதிக் குறிப்பானது பழைய மண்டபத்தின் முகப்பிலே காணப்பட்டது.

உத்தரிய மாதா கூட்டம் 1906 இல் ஆரம்பிக்கப்பட்டதும் ஓலையினால் வேயப்பட்ட சிறிய மண்டபத்தில் சவரியப்பா பாடசாலை என்ற பெயரில் ஆண்களுக்கான பகல் நேர பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டது. கார்மேல் அன்னை ஆலயத்துக்கான காணியை சவரியப்பா அன்பளிப்பாக வழங்கியமையால் இவரின் பெயர் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. வயது வேறுபாடின்றி பலரும் இந்தப் பாடசாலையில் இணைந்து கல்வி கற்றனர். சவரியப்பா பாடசாலை பல ஆண்டுகள் தொடர்ந்து சிறப்பாக இயங்கி வந்த பின்னர் யாழ். நகரில் பல பாடசாலைகள் தோற்றம் பெற்றமையால் இந்தப் பாடசாலை படிப்படியாக தரம் குறைந்து கொண்டு போனது. 1942 இல் பங்குப் பணியாற்றிய லூயி யோசேப் அடிகளார் 1906 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அப்போது சோபை இழந்திருந்த உத்தரிய மாதா கூட்டத்தை மீள் உருவாக்க எண்ணி அதனை கார்மேல் மாதா சபை எனப் பெயர் மாற்றம் செய்தார். கார்மேல் மாதா சபையின் பணியாக இரவு நேரப் பாடசாலை நடத்தப்பட்டது. இது குருநகர் வாழ் கல்விமான்கள் பலருக்கு ஊக்குவிப்பாக இருந்தது. கார்மேல் மாதா சபையினர் கலை மூலம் ஆன்மிகத்தை வளர்ப்பதற்கு என கார்மேல் மாதா சபா மற்றும் கீதா வாக்கிய சபா போன்ற குழுக்களை இயக்கி வந்தது. இதனால் கத்தோலிக்க சமயம் சார்ந்த பல மேடை யேற்றங்கள் நிகழ்த்தப்பட்டு ஆன்மிக வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யப்பட்டது. இதற்குச் சான்றாக அந்த ஆலயத்தில் பின்னர் அழிவுற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்ட அரங்கப்




பொருள்களும் மேடை அமைப்புக்கான பெரிய மேசைகளையும் அதற்குத் துணை புரியும் விதமாக அமைந்த பெரிய வசதியான மண்டபத்தையும் குறிப்பிடலாம்.

> நூற்றாண்டுகளைக் கடந்து குருநகர் மண்ணில் அருள் மழை பொழியும் கார்மேல் அன்னை தொடர்ந்தும் தம் அருள் வளங்களைப் பொழிந்து தமிழ் மக்கள் அனைவரையும் பாதுகாப்பாராக.

**கார்மேல் மாதா சபை பணியாளர்களுக்கு உத்தரியம் அணிவிக்கும் சடங்கு**

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத்தில் இயங்கிவந்த இந்த கார்மேல் மாதா சபை பணியாளர்களின் பணியைக் கௌரவிக்கும் முகமாக உத்தரியம் அணிவிக்கின்ற ஒரு சிறப்புச் சடங்கானது ஒவ்வொரு ஆண்டும் கார்மேல் அன்னை ஆலயத்தில் இடம்பெற்று வந்துள்ளது. உத்தரியம் என்பது றிபன் துணியினால் கழுத்தில் அணியக் கூடியதாக அமைக்கப்பட்டு. அதில் செப்பு உலோகத்தினால் நீள் வட்ட வடிவில் செய்யப்பட்ட அன்னையின் திருவுருவம் இணைக்கப்பட்டிருக்கும். இதனை அணிபவர் நெஞ்சினிலே அன்னையின் திருவுருவம் காணத்தக்க விதமாக தொங்கிக்கொண்டிருக்கும். இது கார்மேல் மாதா சபையின் ஆரம்ப நிலை அங்கத்தவர்களுக்குரிய உத்தரியம் ஆகும். இதனை விட கார்மேல் மாதா சபையின் நீண்ட காலம் பணியாற்றியோர், சிறப்புப் பணியினை ஆற்றியோர் என்போரை கௌரவிப்பதற்கு வெள்ளியினாலான அன்னையின் திருவுருவம் கொண்ட உத்தரியமும் அதனை விட உயர்ந்த மூன்றாம் நிலையில் இருப்போருக்கு தங்கத்தினாலான அன்னையின் திருவுருவம் கொண்ட உத்தரியமும் வழங்கப்படும். ஆரம்ப நிலையில் இருக்கும் அங்கத்தவர் தவிர இரண்டாம் மூன்றாம் நிலை அங்கத்தவர்கள் மூப்பர் என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டு வந்துள்ளார்கள். இவர்கள் இறக்கும் போது அவர்களது உத்தரியம் அணிவிக்கப்பட்டு கார்மேல் ஆலயத்தில் விசேடவழிபாடுசெய்யப்பட்டுஅந்தஉத்தரியத்துடனேயே அவர்கள் அடக்கம் செய்யப்படுவது வழக்கமாய் இருந்திருக்கிறது. 1968 ஆம் ஆண்டின் பின்னர் கார்மேல் மாதா சபையினருக்கு உத்தரியம் வழங்கி கௌரவிக்கின்ற இந்த முறையானது பல இடையூறுகளால் தடைப்பட்டுப் போனதாக அறிய வருகின்றது.

**ஜூலை மாதம் 16 ஆம் திகதி மாலை கார்மேல் அன்னையின் பெருவிழா**

ஆரம்ப காலங்களில் ஆடி மாதம் 16 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் ஞாயிறு தினங்களில் திருவிழா கொண்டாடப்பட்டுள்ளது. இந்தக்காலத்தில் மூன்று நாள்கள் மட்டுமே நோவினையும் திருவிழாவும் இடம் பெற்றுள்ளது. வழமையான கார்மேல் அன்னையின் திருவுருவமானது பவனியாக மட்டுப் படுத்தப்பட்ட வீதிகளால் எடுத்துவரப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கார்மேல் அன்னையின் நாலடி உயர பெரிய சொரூபமானது பவனியாக எடுத்து வரப் பட்டதோடு அதற்கான பவனிப் பாதையும் விரிவுபடுத்தப்பட்டதாக இருந்திருக்கிறது. இவ்வாறு 16 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் ஞாயிறு தினங்களில் திருவிழா கொண்டாடப்படும் போது ஆடி மாதம் 25 ஆம் திகதி குருநகரில் கொண்டாடப்படுகின்றன புனித யாகப்பரின் திருநாள் நோவினைகளில் மக்கள் பங்கு கொள்ள முடியாயது என்பதை கவனத்தில் கொண்டு ஆடி மாதம் 16 ஆம் திகதிக்குப் பின்னர் வரும் ஞாயிற்றுக்கிமை திருவிழா கொண்டாடும் வழக்கம் மாற்றம் பெற்றது.

கார்மேல் அன்னை ஆலயத் திருவிழா நோவினைகளை ஆரம்ப காலத்தில் பாச்சு வலை கொண்டடி ஆகிய குடும்பங்களை சேர்ந்தவர்களே முன்னின்று நடத்தி வந்தார்கள். பின்னர் இந்த நடைமுறையில் மாற்றம் காணப்பட்டது. ஆடி மாதம் ஒன்பதாம் திகதி நவ நாள் தொடங்குவதாகவும் மேற்படி இரு குடும்பத்தினரும் வசிக்கின்ற வீதிகளின் பெயரில் அந்த வீதிகளில் இருப்போர் சீட்டிழுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு நவ நாள்களை முன்னின்று நடத்தும் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. முதலாம் நாள் கொண்டடி வீதியைச் சேர்ந்தவர்களும் இரண்டாம் நாள் மவுன்காமல் வீதியைச் சேர்ந்தவர்களும் தொடர்ந்து அடப்பன் வீதியைச் சேர்ந்தவர்களும் இறுதியாக இரக்கிள மேசன் பகுதியைச் சேர்ந்த வர்களுக்கு இரண்டு நாள் நோவினைகளும் வழங்கப்பட்டு ஏழாவது நாள் பொது நோவினையாகக் கொண்டாடப்பட்டது. 1900 ஆம் ஆண்டு முதல் குரு நகரை சேர்ந்த சுவாம் பிள்ளை குடும்பத்தினரின் நிதி உதவியுடன் குருநகர் ஆசாரியார் அமிர்தநாதர் யேசுதாசன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட 12 அடி உயர மான சித்திரத்தேரில் அன்னையின் பவனி நடை பெற்றுவருகிறது. நாட்டு அசாதாரண நிலை காரணமாக சில காலங்களில் மாலை நேரத்தில் நடைபெறும் அன்னையின் பவனிக்குப் பதிலாக காலை நேரத்திலும் பவனி இடம் பெற்றுள்ளது.

**1983 ஆம் ஆண்டு ஆலயமும் அதனோடு இணைந்திருந்த பழைய மண்டபமும் புனரமைப்பு**

ஜூலை மாதம் 10 ஆம் திகதி 1983 ஆம் ஆண்டில் புனித மரியன்னை பேராலய பங்குத்தந்தையாக இருந்த மறைந்த ஜே.பி.இ.செல்வராஜா அடிகளாரின் காலத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டதோடு அதனோடு இணைந்திருந்த பழைய மண்டபம் உடைக்கப்பட்டு நவின வசதிகளுடன் கட்டப்பட்டு 2004 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. ஆர்.எக்ஸ்.சகாயநாயகம் அடிகளார் காலத்தில் மே மாதம் 13 ஆம் திகதி 2013 ஆம் ஆண்டு மின்னல் தாக்கி குருநகர் கார்மேல் அன்னை ஆலயம் சேதத்திற்கு உள்ளானது. ஜூலை 16 ஆம் திகதி 2013 ஆம் ஆண்டு யாழ். மறை மாவட்ட குரு முதல்வராய் இருந்த தற்போதைய யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் அடிகளார் ஆலயத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார். பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி 2015 ஆம் ஆண்டு அப்போதைய யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இவ் ஆலயத்தை ஆசீர்வதித் துத் திறந்து வைத்தார்.

5 மாதங்களுக்கு முன்னர் பங்குப் பணியைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளார் புனித கார்மேல் ஆலய பங்கு மக்கள் அனைத்து விடங்களையும் கேட்டு ஒப்புதல் பெற்று அமைதியான அணுகுமுறையோடு சிறப்பான விதமாக ஆலய வழிபாடுகளையும் திருவிழாவையும் நடத்துகிறார்கள் என்று மகிழ்ச்சி தெரிவித்தார். நூற்றாண்டுகளைக் கடந்து குருநகர் மண்ணில் அருள் மழை பொழியும் கார்மேல் அன்னை தொடர்ந்தும் தம் அருள் வளங்களைப் பொழிந்து தமிழ் மக்கள் அனைவரையும் பாதுகாப்பாராக.

மருத்துவர் எம்.அரவிந்தன்

**கேள்வி:**

**எனது வயது 30 ஆகும். நான் திருமணம் செய்து 2 வருடங்களாகின்ற போதிலும் கர்ப்பம் தரிப்பது தாமதமாகி வருகின்றது. அண்மையில் மேற்கொண்ட தைரொயிட் ஹோர் மோன் பரிசோதனையின்படி எனது தைரொயிட் ஹோர்மோன் சுரப்பானது குறைவாகவுள்ளதாக குடும்ப வைத்தியர் கூறியிருந்தார். இது பற்றி விளக்கிக் கூறவும்?**

**பதில்:**

கர்ப்பம் தரித்தல் தாமதமாவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். பெண்ணொருவரின் தைரெயிட் ஹோர்மோன் சுரப்பானது குறைவாக இருக்கும் போது கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட நேரிடுகின்றது. தைரொயிட் சுரப்பானது குறைவாக இருக்கும் போது உடற்பருமன் அதிகரித்தல், சோம்பல், நித்திரைத்தூக்கம், மலச்சிக்கல், குளிரைத் தாங்க முடியாமை மற்றும் மாதவிடாயின் போது அதிகளவு குருதி வெளியேறுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான குணங்குறிகள் இருப்பவர் மற்றும் கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினைகளுடையவர்கள் தங்களது தைரொயிட் ஹோர்மோன் சுரப்பை பரிசோதிப்பது மிகவும் அவசியமாகும். இரத்தப் பரிசோதனையின் மூலம் இலகுவாக இதனை அறிந்து கொள்ள முடியும்.

இப்பரிசோதனையை மேற்கொள்வதற்கு உணவு அருந்தாமல் இருக்க வேண்டியது அவசியமற்றதாகும்.

தைரொயிட் சுரப்பானது குறைவாக இருப்பவர்கள் தைரொக்ஸின் மருந்தை உள்ளெடுப்பது மிகவும் அவசியமாகும். உங்களைப் போன்ற கர்ப்பம் தரிப்பதில் பிரச்சினைகள் உள்ள பெண்கள் தைரொக்ஸின் குளிசையை மருத்துவர் கூறிய அளவில் உள்ளெடுக்கும்போது கர்ப்பம் தரிக்கின்ற வாய்ப்பு அதிகரிக்கின்றது. கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற பெண்ணொருவரில் TSH எனப்படுகின்ற தைரொயிட் ஹோர்மோனின் அளவை சாதாரணமான ஒருவரை விடக் குறைந்த நிலையில் பேணுவது மிக அவசியமாகும். தைரொக்ஸின் குளிசையை (மருத்துவர் பரிந்துரை செய்த அளவில்) காலை வேளையில் வெறும் வயிற்றில் உள்ளெடுத்தல் வேண்டும். அதன் பின்னர் 30 நிமிடங்களுக்கு தேநீர் போன்ற ஆகாரங்களையோ, உணவையோ உள்ளெடுக்காது இருத்தல் அவசியமாகும்.

நீங்கள் கர்ப்பவதியாகுவதை உறுதிப்படுத்திய பின்னர் (சிறுநீரில் HCG பரிசோதனை மூலம்) உடனடியாகவே தைரொக்ஸின் குளிசையின் அளவை அதிகரித்துக் கொள்வது மிக அவசியமாகும். (உ.ம் 25Mg அளவால் அதிகரிக்க வேண்டும். 50 Mg தைரொக்ஸின் மாத்திரை எடுப்பவர் அதனை 75 Mg ஆக அதிகரிக்க வேண்டும்) நீங்கள் முடிந்தளவு விரைவாக மருத்துவரை சந்திப்பது அவசியமாகும்.

கர்ப்பத்திலுள்ள சிசுவின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியில் முதல் மூன்று மாதங்கள் மிக முக்கியமான கால கட்டமாகும். இச்சிசுவின் வளர்ச்சியானது தாயின் தைரொக்ஸின் அளவிலேயே தங்கியிருக்கின்றது. எனவே குறிப்பிட்ட அளவில் கர்ப்பவதியொருவர் தைரெர்க்ஸினை உள்ளெடுக்காதவிடத்து குழந்தையின் உடல் மற்றும் மூளை வளர்ச்சியானது பாதிப்படைய நேரிடலாம்.

கர்ப்பகாலத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை தைரொயிட் ஹோர்மோனின் அளவைப் பரிசோதித்து தைரொக்ஸின் குளிசையின் அளவைத் தேவையேற்படின் மாற்றுவது அவசியமாகும்.

கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற மற்றும் கர்ப்பிணியான பெண்கள் அவர்களுக்கு தைரொயிட் சுரப்புக் குறைபாடு இருக்குமிடத்து மேற்குறிப்பிட்ட விதத்தில் தங்கள் நோயின்மீது சிரத்தையாக இருத்தல் மிகவும் அவசியமாகும். இதன் மூலம் தங்களுக்கும் குறிப்பாக பிறக்கப் போகும் பிள்ளைக்கும் பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதியியல்,
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்து

மருத்துவர் பொ.ஜெசிதரன்

வாழ்வை இலகுவாக்க அறிமுகமாகிய பிளாஸ்ரிக் பொலித்தீன் பாவனையானது இன்று மனித வாழ்வின் இருப்பையே கேள்வியாக்கி நகரின் அழகையும் சுற்றுச் சூழல் சுகாதாரத்தையும் பாதிக்கும் பொருளாக மாறியுள்ளது. இலகுவில் உக்கும் தன்மையற்ற அதன் இயல்பு காரணமாக படிப்படியாக சூழலில் சேர்ந்து சூழலின் இயல்பைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது இதன் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய கட்டாயநிலை இன்று மனித குலத்திற்கு எழுந்துள்ளது. குளப்படுக்கைகளிலும் வெள்ளநீர் ஓடும் வடிகால்களிலும் சேரும் இப்பிளாஸ்ரிக் பொருள்கள் மண்ணினுள் ஒரு படையாக உருப்பெறுவதால் வெள்ளநீர் புவியீர்ப்பின் காரணமாக மண்ணினுள் வடிந்து செல்ல முடியாத தன்மை ஏற்படுகிறது. இதன் காரணமாக நிலக்கீழ் நீர்வளம் குறைவதாகவும் வடிந்து செல்ல முடியாத நீர் மேற்பரப்பில் தங்கி வெள்ளப் பெருக்குகள் ஏற்பட வழிவகுப்பதாகவும் அறியப்பட்டுள்ளன. சென்ற வருடம் இந்தியாவில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கு இதுவும் ஒரு காரணமாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் வயல் நிலங்களின் உயிர்த் தன்மையும் உயிர் வகைகளின் பல்வகைத் தன்மையும் ஆபத்துக்குள்ளாக்கப் படுவதாக சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கால் நடைகளினால் உண்ணப்படும் பொலித்தீன்கள் குறிப்பாக சொப்பின் பைகள் அவற்றின் குடலினுள் சிக்குண்டு குடல் அடைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் அவை சடுதியாக இறக்கக் காரணமாக அமைகின்றன. சுடு உணவுப்பொருள்களை பரிமாறுவதற்கு இவற்றை பயன்படுத்தும்போது இவற்றிலுள்ள இரசாயனங்கள் கரைந்து உணவுடன் கலந்து உடலினுள் சேர்ந்து உடல் கலங்களின் கட்டுப்பாடற்ற பெருக்கத்திற்கு வழி வகுத்து நாளடைவில் அதிகளவில் புற்றுநோய் (கான்சர்) கட்டிகளை உருவாக்குவதாகவும் உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அத்துடன் பிறப்புக் குறைபாடுகள் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் நாளமில்லா சுரப்பிகளின் சீர்குலைவு வளர்ச்சி மற்றும் இழையங்களின் மீளுருவாக்கம் என்பவற்றிலும் தாக்கங்கள் ஏற்படுகின்றன.

**பொறுப்புடன் சூழல் நலம் பேணிடுவோம்**

எவர் எதைக் கூறிய போதும் இவற்றின் பாவனை குறைந்து செல்வதாக இல்லை. எமது சோம்பல் மனப்பான்மையும் சுற்றுச் சூழல் மீதான அக்கறையின்மையும் இயற்கை நேயமின்மையும் இதற்கு காரணம். நாளாந்தம் எம் நாட்டில் 400 தொடக்கம் 500 தொன் பொலித்தீன்கள் கழிவுகளாக உருவாக்கப்படுவதாகவும் நாளொன்றுக்கு உணவு பொதியிடலுக்காக மட்டும் பத்து மில்லியன் லஞ்சீற்கள் பாவிக்கப்படுவதாக அரச தகவல்கள் கூறுகின்றன. பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை எரியூட்டுவது நல்ல கழிவகற்றல் முறையல்ல. இவற்றை எரியூட்டும்போது உருவாகும் டயயொக்சீன் மற்றும் யூரான் எனும் உடலுக்கு தீங்கு செய்யும் வாயுக்கள் வெளியேற்றப்படுகின்றன. இவை சுவாசம், தோல் சம்பந்தமான பல நோய்களை ஏற்படுத்துகின்றன.

எந்தப் பைகளையும் எடுத்துச் செல்லாது சந்தைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வந்த அடுத்த நொடியிலேயே எத்தனை சொப்பிங் பைகள் கழிவுகளாக எங்கள் வீடுகளில் உருவாகின்றன என்பது எம் அனைவருக்கும் அனுபவத்தில் உணர்ந்த உண்மையாகும்.

பிளாஸ்ரிக் பொலித்தீன் பாவனையைக் குறைத்து நடைமுறை வாழ்வில் எந்தெந்த வழிகளை கடைப்பிடிக்கலாம்?

1. பாடசாலைகளுக்கோ, அலுவலகங்களுக்கோ வைத்தியசாலைகளுக்கோ உணவை எடுத்துச் செல்வதற்கு லஞ்சீற் பாவிப்பதை தவிர்த்து சாப்பாட்டுப் பெட்டிகளைப் பயன்படுத்துதல்.
2. வைத்தியசாலை மற்றும் பொது இடங்களுக்கு வருகை தரும் மக்களும் மற்றும் பணிபுரியும் ஊழியர்களும் அவ்வளாகத்தினுள் பொலித்தீன் பாவனையைக் குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குதல்.
3. ஆன்மிக நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் பொலித்தீன் அலங்கார சோடனைகளைத் தவிர்த்து பாரம்பரிய அலங்கார சோடனைகளைப் பயன்படுத்துதல் .
4. அரசியல் கூட்டங்களில் ரெஜிபோம், பிளாஸ்ரிக், பொலித்தீன், அலங்காரவளைவுகள், சோடனைகள் மற்றும் பதாகைகளைத் தவிர்த்து அவற்றுக்குப் பதிலாக பருத்தித்துணியாலானவற்றைப் பயன்படுத்துதல்.
5. வீதிகளில் கட்டப்படும் மரண நிகழ்வை அறிவிக்கும் பிளாஸ்ரிக் பனர்களைத் தவிர்த்து துணிபனர்களை பயன்படுத்தல் .
6. அரச, தனியார் நிறுவனங்களில் நிகழும் ஒன்று கூடல்கள், ஒருங்கிணைப்பு நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் கப் (One day Cup) பாவனையை நிறுத்துதல், தவிர்த்தல்.
7. திருமண மண்டபங்களிலும் பிளாஸ்ரிக் கப் பாவனையை நிறுத்துதல்.
8. விழாக்களின்போது விருந்தினர்களுக்கு அணிவிப்பதற்கு சந்தன பூமாலைகளை ஒழுங்குபடுத்துதல் அல்லது பெருந்தன்மையுடன் மாலைகளைத் தவிர்த்தல்.
9. பொது இடங்களிலும் வைத்தியசாலை போன்ற இடங்களிலும் இவ்வகை கழிவுகளை சேகரிக்கும் தொட்டிகளை மக்களுக்கு இலகுவில் தெரியும் வண்ணம் அமைத்தல் மற்றும் சேகரிக்கப்படும் இக்கழிவுகளை முறையாக அகற்றுதல்.
வைத்தியசாலையின் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல், பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல்களை முடியுமானவரை வைத்தியசாலைக்குள் கொண்டு வருவதைத் தவிர்த்தல்.
10. மங்கல மற்றும் அமங்கல நிகழ்வுகளின்போது பிளாஸ்ரிக் போத்தல் குடிபானங்கள், பிளாஸ்ரிக் கப் குடிபானக் குழாய்களை (Staw) முடியுமானவரை தவிர்த்து கண்ணாடிப் பாத்திரங்களையோ, சில்வர், செரமிக் கோப்பைகளையோ பாவித்தல்.
11. விழாக்களின்போது உணவுப் பொதி செய்வதற்கு ரெஜிபோம் பெட்டிகளையோ லஞ்சீற்களையோ பாவிப்பதனைத் தவிர்த்தல்.
12. சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத துணியிலான, மட்டையிலான, பைகளைப் பாவிக்க அறிவுறுத்துதல்,
13. சிற்றுண்டிச் சாலைகளில் பிளாஸ்ரிக் கோப்பை, பிளாஸ்ரிக் தட்டுக்களில் உணவு வழங்குவதை தவிர்த்தல்.
14. தென்னம் நார் தயாரிப்பிலான தூரிகைகள் துடைப்பங்களை சுத்தப்படுத்துவதற்கு பாவித்தல். இதனைக் குறைந்தது அரச அலுவலகங்களிலாவது நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும்.
15. பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளை பிளாஸ்ரிக் மீள் சுழற்சி ஆலைகளுக்கோ சேகரிப்பாளர்களுக்கோ வழங்குதல். யாழ்ப்பாணத்தில் கல்லுண்டாய்ப் பகுதியில் இயங்கி வரும் யாழ்.மாநகரசபையின் வீரியம் மீள்சுழற்சியகத்திடமும் கையளிக்க முடியும்.

அரச, தனியார் வைத்தியசாலை விடுதிகளில் கழிவுகளாக சேரும் சேலைன் (Saloin) போத்தல்கள், வயர்கள் (IV Sets) என்பவற்றை தனியாகச் சேகரித்து மீள்சுழற்சிக்கு வழங்குதல்.

இவற்றை எம்வாழ்வில் கடைப்பிடிக்க முயற்சிப்பதுடன் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவதன் மூலமே இதன் தாக்கத்திலிருந்து நாம் மீள முடியும். பிளாஸ்ரிக், பொலித்தீன் எம் பிரதேசத்தில் அறிமுகமாகிய அன்றைய தினத்திலிருந்து இன்றுவரை எம் சூழலை ஆக்கிரமித்துள்ள அவற்றை அகற்றிட மீள்சுழற்சி ஆலைகளை உருவாக்கிடும் இத்தருணத்தில் அவற்றின் அபரிமித பாவனையைக் குறைத்திடவும் முயற்சி எடுத்தால் தான் அவற்றினால் ஏற்படவுள்ள நீண்டகால தாக்கங்களிலிருந்து எம் எதிர்கால சந்ததியை காப்பாற்றிட முடியும். எம் அடுத்த சந்ததிக்கு நல்ல சுற்றுச் சூழலைக் கையளித்திட முடியும். அல்லாது விட்டால் பலவர்ண பிளாஸ்ரிக் அரக்கனின் இரசாயனக் கரங்களினுள் எமது எதிர்காலச் சந்ததியின் வர்ணக் கனவுகள் அனைத்தும் சிக்கி சின்னா பின்னமாகிவிடும்.

சிந்திப்போம்! ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம்!!

சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.





வவுனியா, தவசிகுளம் கிராமத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஒருவருக்கு, சுயதொழில் மேம்பாட்டை மேம்படுத்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனால் சைக்கிள் வழங்கப்பட்டது. (ஐ)




வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால், முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மூன்று பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஐ)



மடு பாலம்பிட்டி சிறி முத்துமாரி அம்மன் ஆலய கொடியேற்ற நிகழ்வின்போது, ஆலய நிர்வாகத்தின் வேண்டுகோளை ஏற்று, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன், ஆலயத்தின் தேவைக்கென ரூபா அறுபதாயிரம் பெறுமதியுடைய சாதனங்களை வழங்கி வைத்தார். (ஐ)



வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கத்துக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அண்மையில் சென்று குறித்த சங்கத்துக்கு நிரந்தரக் காணியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சங்கத்தலைவர் ரி.கே.இராஜ லிங்கத்துடன் கலந்துரை யாடலை மேற்கொண்டார். வர்த்தகர் சங்கத் தலைவர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரிடம் மனு ஒன்றையும் கையளித்ததுடன், பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னத்தையும் வழங்கி வைத்தார். (ஐ)



புங்குடுதீவு இளந்தமிழர் மன்றமும், ஊரதீவு சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய மாபெரும் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ)





யுத்த காலப் பகுதியில் முற்றாகச் சேதமடைந்த பளை வேம்பொடுகேணி வீரபத்திரர் ஆலயம் பொதுமக்களின் பங்களிப்புடன் புனர மைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ஐ)



உலக சிறுவர் நலன் காப்பகத்தால் முத்துஐயன்கட்டு வலதுகரை கிராமத்தில் நடத்தப்பட்டு வரும் மாலை நேர கல்வி நிலையமான இளந்தளிர் கல்வி நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு, கல்வி நிலைய வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)



குப்பிளான் விக்கினேஸ்வரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அதிபர் எஸ்.காராளசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் தலைமை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு சிறப்பித்தார். (ஜ)



கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய தரம் 3 மாணவர்கள் 'செயற்பட்டு மகிழ்வோம்' போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், வலய மட்டத்தில் இரண்டாம் ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஜ)



வடமாகாண பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாகாண மட்ட முன்னோடிப் பரீட்சை அண்மையில் நடைபெற்றது. அமல தியாகிகள் திருச்சபையின் அனுசரணையுடன் நடைபெற்ற பரீட்சையின்போது சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் சபையின் அருட்தந்தை பரீட்சைக்கான வினாத்தாள்களை விநியோகித்து ஆரம்பித்து வைத்தார். (ஜ-9)



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம், அமைக்கப்படவுள்ள வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி சனசமூக நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கனகேஸ்வரன மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர்.



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் இனிய வாழ்வு இல்லச் சிறார்களுக்கு சுருதிப் பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ஜ)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகோற்சவம் அண்மையில் இடம்பெற்றது. திருவிழாவின் போது பழமைமிக்க குதிரை வாகனத்தில் வேட்டைத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா ஆகிய காட்சிகளின் போது....



வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இடம் பெற்றது. க.சி.தவராசா தலைமையில், பொ. மோகனால் அடிக்கல் நடப்பட்டது.

# லசந்த கொலை விவகாரம் புலனாய்வு அதிகாரி கைது

கொழும்பு, ஜூலை 17

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இராணுவ புலனாய்வுத்துறை சார்ஜன் மேஜர் தர அதிகாரி கைது செய்யப்பட்டார். கொலை தொடர்பில் இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 20 பேரிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அதிகாரி நேற்றுமுன்தினம் மாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

லசந்தவின் கொலையுடன் குறித்த அதிகாரி தொடர்புபட்டுள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்யப்படுவதும், விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதும் இராணுவத்தினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற-4)







## பாடசாலை செல்லாத மாணவர்கள் இனங்காணப்பட்டு மீள இணைப்பு

### வலி. தென் மேற்குப் பிரதேசத்தில்

கொழும்பு, ஜூலை 17

பாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்லாத மாணவர்கள், இடைவிலகும் மாணவர்களை மீண்டும் பாடசாலையில் சேர்க்கும் செயற்பாட்டில் வலி.தென் மேற்குப் பிரதேசத் தில் 12 மாணவர்கள் இனங்கா ணப்பட்டனர். அவர்கள் அன்றே பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலுக்கமைய சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரின் வழிகாட்டலின் கீழ் செயலகத்தைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள சகாய புரம், நுணசை ஆகிய கிராமங்களில் 320 வீடுகளில் நடத்திய சோதனையில் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்த 12 மாணவர்கள் இனங்காணப்பட்டனர்.

வறுமை காரணமாகப் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருந்த நிலையில் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் இனங் காணப்பட்டு மீண் டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள காக்கைதீவு, உயரப்புலம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி கருதிப் பல உதவிகள் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-115)






# துருக்கியின் இராணுவப் புரட்சி முறியடிப்பு

## 200 பேர் வரையில் சாவு; ஆயிரம் பேருக்கு மேல் காயம்

இஸ்தான்புல், ஜூலை 17

துருக்கியில் முன்னெடுக்கப்பட்ட மிகப் பெரிய இராணுவப் புரட்சி மக்களின் ஆதரவுடன் சில மணி நேரங்களில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இராணுவப் புரட்சியால் 200 பேர் வரையில் உயிரிழந்தனர். ஆயிரத்து 153 பேர் வரையில் காயங்களுக்கு உள்ளாகினர் என்று பன்னாட்டு ஊடகமான பி.பி.சி. செய்திச் சேவை துருக்கியின் உள்ளூர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டது.



ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயன்றனர் என்று குற்றம் சுமத்தப்படும் ஆயிரத்து 563 படையினர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டனர். இவர்களுள் 29 தளபதிகளும் அடங்குகின்றனர்.

**நள்ளிரவில் கைப்பற்றப்பட்ட ஆட்சி**

துருக்கி ஜனாதிபதி எர்டோகனுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவத்தின் ஒரு பிரிவு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டது. துருக்கியை கைப்பற்றி விட்டோம் என்று ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் அரச தொலைக்காட்சியில் அறிவித்தனர்.

துருக்கியில் ஜனநாயகத்தை சீரழிக்கும் அரசிடம் இருந்து ஆட்சி கைப்பற்றப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் அறிவித்தனர். முக்கிய விமான நிலையங்கள் மூடப்பட்டன. சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. துருக்கியின் முக்கிய நகர்களான அங்காரா, இஸ்தான்புல்லுக்குள் இராணுவ டாங்கிகள் பிரவேசித்தன. இராணுவ விமானங்கள், உலங்கு வானூர்திகள் முக்கிய நகரங்களில் உயரே பறந்தன. துப்பாக்கிச் சூடு நடந்தது. நாடு முழுவதும் அசாதாரண சூழ்நிலை நிலவியது. நள்ளிரவில் இந்தச் சம்பவங்கள் நடந்தன.

துருக்கியை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது என்று நள்ளிரவில் திடீரென வெளியான தகவல்களை துருக்கிய அரசு ஆரம்பத்தில் மறுத்தது. அப்படி எதுவுமில்லை என்று தெரிவித்தது. சில நிமிடங்களிலேயே துருக்கி அரசு இராணுவக் கிளர்ச்சியை ஒப்புக் கொண்டது.

**புரட்சியை முறியடிக்க அறைகூவல்**

இராணுவத்தின் ஆட்சிக் கவிழ்ப்புக்குத் துணை போகாத ஏனைய பிரிவுகள் மற்றும் பொலிஸார் இணைந்து ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தேசத்துரோக நடவடிக்கை, மக்களின் சக்தியைவிட வேறு பெரிய சக்தியில் எனக்கு நம்பிக்கை கிடையாது, ஆட்சிக் கவிழ்ப்புச் சதியை முறியடிக்க வீதிக்கு வருமாறு அறைகூவல் விடுக்கின்றேன் - என்று ஜனாதிபதி எர்டோகன் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஜனர்திபதியின் அழைப்பை ஏற்று நள்ளிரவு என்றும் பாராமல் பொதுமக்கள் வீதிக்கு இறங்கினர். பல லட்சம் பேர் திரண்டனர். தேசியக் கொடிகளை ஏந்தியவாறு இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் குதித்தனர். ஆட்சிக் கவிழ்ப்புக்கு துணைபோன இராணுவத்தினரின் டாங்கிகளைப் பொதுமக்கள் கைப்பற்றினர். பொதுமக்கள், ஜனாதிபதி ஆதரவு இராணுவம், பொலிஸ் இணைந்து நடத்திய முறியடிப்புச் சமரால் சில மணி நேரங்களில், இராணுவப் புரட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**சரணடைந்த இராணுவம்**

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் தங்களது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைந்தனர். போர் டாங்கிகளை வீதிகளின் நடுவே நிறுத்திவிட்டு தமது கைகள் இரண்டையும் தூக்கிக் கொண்டு வந்து பொலிஸாரிடம் அவர்கள் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்கள் உள்ளிட்ட ஆயிரத்து 563 பேர் ஜனாதிபதி ஆதரவுப் படைகளால் கைது செய்யப்பட்டனர். இராணுவத்தின் உயர் தளபதிகளில் 29 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

(ற-5)

# இலங்கை அபிவிருத்திக்கு சீனா உதவிகள் வழங்கும்

## சீனத் தூதரகத்தின் வர்த்தக ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

சீன அரசு இலங்கைக்கு அனைத்து வழிகளிலும் தொடர்ந்து உதவும் என உறுதியளித்தது.

இவ்வாறு தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விடயங்களுக்கான அமைச்சு தெரிவித்தது.

சீனத் தூதரகத்தின் வர்த்தக ஆலோசகர் வாங்க் யிங்கி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

சீனத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த சீன மொழிப் பயிற்சி மையத் திறப்பு விழாவில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சீனா நெருங்கிய நட்பு நாடு என்ற வகையில் அனைத்து அபிவிருத்திப் பணிகளிலும் பங்கெடுக்கும். சீன மொழிக் கற்கை நிலையம் சுற்றுலாத்துறையை மேம்படுத்த உந்து சக்தியாக இருக்கும் - என்று நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய கொள்கை மற்றும் பொருளியல் விவகார அமைச் சர் நிரோன் பெரேரா தெரிவித்தார்.

(ற-4)




# நெருக்கடிகளைச் சமாளிக்கவே ஜெனிவாவில் அரசு உடன்பட்டது

## முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 17

நெருக்கடிகளைச் சமாளித்துக் கொள்வதற்காகவே சர்வதேச விசாரணைக்கு அரசு ஜெனிவாவில் கைச்சாத்திட்டது. அதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற தார்மீகக் கடமையில் அல்ல.

இவ்வாறு தெரிவத்தார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் நடைபெற்றது என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிபதிகள் அல்லது வெளிநாட்டு சட்டவாளர்களைக் கொண்ட விசாரணைப் பொறிமுறைக்கு அரசு ஜெனிவாவில் கையெழுத்திட்டது.

நாட்டின் மூலச் சட்டத்தில் நீதித்துறை அதிகாரத்தை மீறிச் செயற்படும் அதிகாரம் யாருக்கும் வழங்கப்படவில்லை. இலங்கையின் அரசமைப்பை மூலச் சட்டமாகக் கொண்டே நாட்டின் அனைத்துத் துறைகளும் நிர்வகிக்கப்படுகின்றன.

சட்டவாக்கல் சபைக்கும், நீதித் துறைக்கும் இடையே பகிரப்பட்டுள்ள அதிகாரம் முக்கியமானது. மக்கள் ஆணையின்படி சட்டவாக்கல் சபைக்கு சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் காணப்படுகின்றது. ஆனால் அவற்றை நடைமுறையாக்கும் அதிகாரம் நீதித் துறைக்கே உள்ளது.

சட்டங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்தும்போது உயர் நீதிமன்றின் வியாக்கியானம் கோரப்படுப்படவேண்டும் - என்றார்.

(ற-4)

# என் மனைவியையும் கைது செய்வார்கள் போலுள்ளது

## பதறுகின்றார் மகிந்த எம்.பி.

கொழும்பு, ஜூலை 17

என்னை மட்டுமல்ல. எனது மனைவியைக்கூடக் கைது செய்வார்கள் போலுள்ளது.

இவ்வாறு கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச.



நிதி மோசடிக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரது மகனான நாமல் ராஜபக்சவைச் சிறையில் நேற்றுச் சந்தித்தார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சிரந்தி ராஜபக்சவின் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என்று மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் காமினி லியாங்கொட அண்மையில் தெரிவித்தார். ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது அந்த அமைப்பு டொலருக்கு வேலை செய்யும் இயக்கம் என்று மகிந்த விமர்சித்தார்.

(ற-4)

# சூட்டுக்கொலை

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். பிலியந்தலை ஜாயா மாவத்தையில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.வாகனமொன்றில் இருந்த நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் உயிரிழந்தவர் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெறுகின்றன. (வ)

## கார் விற்பனைக்கு

TATA INDICA KC ... இலக்க கார் (சிவப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 076 7171280

## சின்ன வெங்காயம் விற்பனைக்கு

அளவெட்டியில் நடுகைக்குரிய சின்ன வெங்காயம் 10 அந்தர் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மூர்த்தி-077 8604493

## அறை வாடகைக்கு

யாழ் ஸ்ரான்லி வீதியில் இணைந்த குளியலறையுடன் அறை வாடகைக்கு (பெண்களுக்கு மட்டும்)

தொடர்பு: 077 758 5412

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பற் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு

**கோல்டன் பாம்**
**இல.77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

## வேலையாள்கள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
நடமாடும் பாண் வாகனம் ஓடுவதற்கும் சாரதிகள் தேவை.

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணி லேன், கொக்குவில் கிழக்கு.

## Envelops Die Cutting Machine

ஆங்கில வனுவுடைய அச்சு
For Envelop Die Cutting

077 736 6946

## Envelopes Pasting Machine

உறைகள் கட்டும் இயந்திரம்.
*பூரண தானியங்கி
* உறைகளை ஒட்டுதல்
* Bag ஒட்டும் இயந்திரம்

077 736 6946

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சைவ போசன மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை.(சைவ போசனமற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

077 214 6513

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலைசெய்யக் கூடிய படித்த அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 077 159 5826

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் புடைவை கடைக்கு வேலையாள்கள் தேவை.
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தகது.

தொடர்பு: 076 6561 884

## வேலை வாய்ப்பு

சாவகச்சேரியில் இயங்கும் ஹார்ட்வெயர் விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் - எழுதுநர் தேவை.
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 983 7175/ 077 755 8984

## Vacancies

முன்னனி ஆங்கில பாடசாலையான BIS இன் வவுனியா, யாழ்ப்பாணம், மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு முழு / பகுதிநேர ஆசிரியர்கள் வரவேற்கப்படுகின்றனர்

Full Part time **English Teachers**

பகுதிநேர ஆசிரியர்கள் சனி, ஞாயிறு தினங்களில் பணிக்கமர்த்தப்படுவர்

ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்
email : bisvavuniyainfo@gmail.com
271, Mannar Rd, Vavuniya.
Tel : 076-6646744

## பணியாளர்கள் தேவை

கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சிவ குரு காட்வெயர் நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த லொறிச் சாரதிகள், கணினி அனுபவம் உள்ள கணக்காளர், கணக்கு ஆய்வாளர் தேவை. தொலைபேசியிலோ, நேரிலோ உடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: 077 7722305

குறிப்பு: லொறிச் சாரதிகளுக்கு மாதாந்தம் ரூபா 50,000/= மேல் சம்பளமாக வழங்கப்படும்.

கரடிப்போக்கு சந்தி, சிவகுரு காட்வெயர்.

## கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

**150 - வீட்டுப்பணிப் பெண்கள்**

1100 Qrs / சம்பளம் : Rs.44000/-

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வசதி,உணவு வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம் • வேலை நேரம் ஒரு நாளைக்கு 12 மணிநேரம்
- கிழமைக்கு ஒரு நாள் லீவு வழங்கப்படும்
- 2 வருட முடிவின் பின் இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும்
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

அனைத்து செலவுகளும் இலவசம் !!



1 QRS = Rs.40.00

max adz

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 2928-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.
Tel : 0112552598|0112506900 |0773074744 |0727500002
E - Mail : rodneyagency@hotmail.com

## பணியாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர், சிட்டை எழுதுநர் மற்றும் மேற்பார்வையாளர் ஆங்கிலம் தெரிந்தவர் தேவை.

077 361 1282

## காணி விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் ராமசாமிப்பரியாரி சந்தியிலிருந்து 10 மீற்றர் தொலைவில் 3 பரப்புக் காணி சுற்றுமதிலுடன் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு.

077 029 2546

## கடைகள் வாடகைக்கு உண்டு

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக NSB வங்கியுடன் இணைந்த , தேநீர் கடைக்கு ஏற்றவாறும் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.

077 394 4912

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள வீடொன்றுக்கு சமையல் வேலை செய்வதற்கும் வீட்டைப் பராமரிப்பதற்கும் பணிப்பெண் ஒருவர் தேவை.
சம்பளம் 15,000/= - 20,000/= வரை

077 361 1282

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு தச்சு வேலையாள்கள், ஸ்பிறே பெயின்ரர் ,கூலி வேலையாள்கள் உடன் தேவை.
பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்ச்சியான வேலையும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்பு: லிப்றா மர தளபாட நிலையம்
249,4/4 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 7585412

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கும் Golden Group Advertisment & Marketing நிறுனத்தில் பதவி வெற்றிடங்கள்.

1. வெளிக்கள உத்தியோகத்தர் 2. விற்பனை பிரதிநிதி
3. விநியோகஸ்தர்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
அனுபவம் அற்றவர்களுக்கு பயிற்சியளித்து உள்வாங்கப்படுவர்.
குறிப்பு:- கொடுப்பனவு நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
வயதெல்லை 18-38
தகைமை :- G.C.E (O/L)
முந்தும் 12 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இல. 38, பற்றிக்ஸ் வீதி, (சென்.சாள் பாடசாலைக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
077 621 9536, 077 9987 699

## பதவி வெற்றிடம்

யாழ் நகரில் மையப்பகுதியில் இயங்கும் முன்னணி நட்சத்திர Hotel ஆன Tilko Jaffna City Hotel இல் பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- வரவேற்பாளர்
- வரவேற்பு உதவியாளர் (BELL BOY)

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

077 330 6985

## ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்-நயினாதீவு காணி சுற்றுமதில் அமைப்பதற்கான கேள்வி கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வல்லிக் காட்டு காணிப்பகுதிக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான கேள்வி இத்தால் கோரப்படுகின்றன.

1. இதற்கான கூறுவிலைப் படிவங்கள் கோயிலின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 31.07.2016 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னதாக ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள்ளோ அல்லது 'செயலாளர்' ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு எனும் தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்க முடியும். தபால் உறையின் இடது மூலையில் கூறுவிலை எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

**அன்னையின் பணியில்**
**பொ.அன்பரசன், செயலாளர்**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் நயினாதீவு.**

care

## End of Project Evaluation – Expression of Interest

1. CARE International Sri Lanka was established in 1950 with a focus on food security and maternal and child health. Today, we work to address the root causes of poverty and marginalization of vulnerable groups by providing skills training to youth and livelihood assistance to communities.

   CARE is implementing the INTEGRATE project for the successful reintegration of Sri Lankan returnees from India and Australia into their communities in Killinochchi, Mullaitivu, Vavuniya and Mannar Districts in the Northern Province.

2. **Overall objective of the consultancy**

   The end of project evaluation will assess the progress of the project against stated objectives and deliverables. The objectives of the evaluation are:

   a. To assess the performance of the project and identify key outcomes and challenges.
   b. To document lessons learnt.
   c. To provide recommendations for future project implementation.

   The target audiences of the evaluation report are CARE Australia and CARE SriLanka, implementing partners, key service providers, government stake holders, and the donor organization.

**3.Scope and methods of the work**

The evaluation will adopt mixed methods approaches (both quantitative and qualitative) to the evaluation. The evaluator should:

- **Review project documents:** This will include project proposal, M&E plan, progress reports, donor reports, baseline survey report, and mid-term review report.
- **Adopt a consultative and participatory approach:** This will include field visits to project sites and focus group discussions, individual interviews with communities, project beneficiaries, and consultation with government institutions in four districts namely Kilinochchi, Mullaitivu, Vavuniya and Mannar, to collect first-hand information. The consultant will also interview CARE project staff, and CARE Australia staff.

The methodology is subject to further discussion and will be finalized in consultation with CARE.

**4.Expected outcome and deliverables**

The expected deliverables include a. **Evaluation Plan**, b. **Preliminary Findings Presentation**, c. **Draft Report**, d. **Final Report**. The evaluation is expected to commence by 3rd of August 2016 and should be completed by 16th September 2016, including the submission of final report.

**5.Submission of Expression Of Interest**

A detailed TOR can be obtained by emailing to Paramasingam.Ambikaitharan@care.org . Interested consultants are invited to submit detailed proposal outlining the proposed methodology along with activity plan and budget. Detailed curriculum vitae of consultant/s should be included as an appendix to the proposal which must be submitted electronically to: Paramasingam.Ambikaitharan@care.org *not later than 25 July. 2016.*

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பொன்னையா



அரசபுரம் பூநகரியைச் சேர்ந்த கந்தையா பொன்னையா 16.07.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற வர்களான நாகன்-செல்வி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுலோசனா தேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ரஞ்சித பவானி மற்றும் தயாபரன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற சுகிர்தாவின்(வவா) அன்பு மாமனும் மதிநிலா (சிந்தா), நிலவன், நலந்திகா ஆகியோரின் பேரனும் சின்னத்தம்பி, தங்கராசா, இராசமணி, தங்கமணி, தவமணி, சண்முகராசா (கிளி), செல்வராசா, நடராசா (குஞ்சுதம்பி), தியாகராசா (சாந்தம்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் பாக்கியம், இந்திராதேவி, சிவலிங்கம், மகாலிங்கம், தங்கமணி, புனிதவதி, தனராஜலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.07.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மறவன்புலோவில் உள்ள அவரது மைத்துனியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனிப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மறவன் புலோ மத்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி இராஜேஸ்வரி ஜெயபாலினா
**(ரோவாணி ரீச்சர் -ஓய்வு பெற்ற ஆசிரியை)**



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஜெயபாலினா நேற்று (16.07.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னப்பு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜெயபாலினாவின் அன்பு மனைவியும், கௌரி பாலினியின் (யாழ். நல்லூர். மங்கையற்கரசி வித்தியாலயம்), தாயாரும், கோஷ்வரனின் மாமியும், ஹனுஜா (யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), கிரிஸோத்மன் (யா/ பரியோவான் கல்லூரி), கபிஷோத்மன் (யா/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், தில்லைநடேசு, காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், பத்மாவதி ஆகியோரின் சிறிய தாயாரும், குகணேஸ்வரி (பவளம்), இரத்தினம் (மலர்), காலஞ்சென்ற பராசக்தி, குமாரவேலு ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக் கிழமை 160, முடமாவடி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**160, முடமாவடி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 461 8099, 0765465600**

### கந்தையா கிருஷ்ணபிள்ளை



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணபிள்ளை நேற்று (16.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற புஸ்பவதியின் பாசமிகு கணவரும் பேரின்பநாதன், காலஞ்சென்ற திலகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாநிதி, தேவி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி, குழந்தைவேல், பொன்னம்மா, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிஷாந்தன், துஷ்யந்தன், நிஷாந்தினி, துஷ்யந்தினி, சுவீசன், கௌசிகா, சிந்துஜா, நர்மிளா ஆகியோரின் அன்புப் பேரனும் விஷாலியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பேரின்பநாதன்(மகன்)**
**077 3513274**
**077 5255279**

**பனிக்கர் லேன்,**
**திருநெல்வேலி.**

## காங்கேசனில்

இருந்து இடம்பெயர்ந்த மக்கள் 26 வருடங்களுக்கு மேலாக நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் காணிகள் இல்லாதவர்களில் ஒரு தொகுதியினருக்கு காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத் துக்குச் சொந்தமான காணியைப் பங்கீடு செய்து வழங்க கொழும்பு அரசு முடிவெடுத்தது. புதிய காணிகளில் வீடு களை அமைத்துக் கொடுக்கும் திட்டம் மீள்குடியேற்ற அமைச்சினால் முன்னெடுக்கப்படுகிறது. வீடுகளின் கட்டுமானப் பணிகள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, படையினர் 45 நாள்களுக்குள் வீடுகளை நிர்மாணித்து முடிப்பர் என்று அறிவித்தார். இந்தத் திட்டத்தின் கீழ் நூறு வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இராணுவத்தைச் சேர்ந்த மேசன், மின்னிணைப்பாளர், குழாய் பொருத்துநர், தச்சுத் தொழிலாளர் என்று அனைத்து பிரிவினரும் ஒரே நேரத்தில் களமிறக்கப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரே நேரத்தில் நூறு வீடுகளையும் இராணுவத்தினர் நிர்மாணிப்பதனால், அதற்குரிய மூலப்பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் மாவட்டச் செயலகம் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-வ,5)

## நிர்வாகத்தில்

அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலர்களை இடமாற்றம் செய்யுமாறு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ். அரச அதிபருக்குக் கடிதம் அனுப்பிய இராஜாங்க அமைச்சர் ஒருவரே, தற்போது அவர்களில் ஒருவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இடைநிறுத்துமாறும் வலியுறுத்துகிறார் என நம்பகரமான வட்டாரங்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தன.

"மாவட்டத்தில் தற்போது கடமையாற்றி வரும் 4 பிரதேச செயலர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, இவர்களை இடமாற்றம் செய்யுமாறு மாவட்டச் செயலகத்துக்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் கடிதம் அனுப்பினார். பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு அவர்களை இடமாற்றம் செய்யவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். சில மாதங்களுக்கு முன்னரே இந்தக் கடிதம் இராஜாங்க அமைச்சரினால் அனுப்பி வைக்கப்பட்டது. அவர் குறிப்பிட்டவர்களில் ஒருவருக்கு அண்மையல் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது. அதையடுத்து அந்த அதிகாரி இராஜாங்க அமைச்சரின் உதவியை நாடினார். அமைச்சரும் அவருக்காகப் பரிந்துபேசிக் கொண்டு, இடமாற்றத்தை இடைநிறுத்துமாறு உயர் அதிகாரிகளிடம் வலியுறுத்துகிறார்" என்று தெரிவித்தார் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர். (உ-வ,5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### ஞானசவுந்தரிஅம்மா சிவசுப்ரமணியசர்மா



அச்சுக்கூடவீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானசவுந்தரிஅம்மா சிவசுப்ரமணியசர்மா நேற்று (16.07. 2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரஐயர்-நாகரத்தினம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியசர்மாவின் பாசமிகு மனைவியும் தேவமனோகரி (முகாமைத்துவ உதவியாளர்), ஜெயதுர்க்கா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரிலோகநாயகி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மங்களேஸ்வரசர்மாவின் அன்பு மாமியாரும் சாதனாவின் அன்புப் பேர்த்தியாரும் சிவகடாட்சசர்மா (ஓய்வு பெற்ற தொலைத் தொடர்புப் பரிசோதகர்), காலஞ்சென்ற ரங்கேஸ்வரி, ஜெயதாம்பாள், விஜயாம்பாள், அமிர்தாம்பாள், சிவானந்தசர்மா (தொலைத் தொடர்புப் பரிசோதகர்), சிவராமலிங்கசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.07.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்துத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை, உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானியார் கோவிலடி,**
**அராலி மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**பிள்ளைகள்,**
**மருமகன், பேர்த்தி**

### திருமதி றோஸ் வினிவிறட் பரமானந்தன்

**பிறப்பு: 26.04.1957**
**இறப்பு: 16.07.2016**



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் வினிவிறட் பரமானந்தன் நேற்று (16. 07.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராயப்பு-அன்னம்மா தம்பதிகளின் மூன்றாவது மகளும் பரமானந்தனின் பாசமிகு மனைவியும் கமிற்றனின் பாசமிகு தாயாரும் றாஜினி, றஞ்சினி, சாந்தினி, செல்வ ராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி திரேஷா புஸ்பம், மேரிஜோசபின், காலஞ்சென்ற மேரிகில்டா மற்றும் அருட்சகோதரி ஜெம்மா, மேரிலீலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (18.07.2016) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பண்டத்தரிப்பு யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சில்லாலை.**

**தகவல்:**
**இ.பரமானந்தன் (பஞ்சண்ணன்-கணவர்)**
**(சில்லாலை ஆனந்தா ஸ்ரோஸ் உரிமையாளர்)**
**077 1855553**

## நாடு முழுவதும்

க்கு முன்னர் விவரங்களைச் அனுப்புமாறு நடுவண் அரசின் மூன்று அமைச்சுக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

2016ஆம் ஆண்டு பாதீட்டின் அடிப்படையில், இடைத்தரகர்கள் மூலம் பொருள்களின் அசாதாரண விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முறையான வேலைத் திட்டத்தை முன்னெடுக்கிறது. அரசும், தனியார் துறையும் இணைந்து மொத்த வியாபார நிறுவனத்தை அமைக்க திட்டமிட்டுள்ளன. இதன் மூலம் நாட்டின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் விதமாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட ஏனைய நுகர்வுப் பொருள்களின் கையிருப்பைப் பேணுவதன் ஊடாக சில்லறை வியாபார நிலையங்களுக்கு குறைந்த பட்ச விலைகளுக்கு தொடர்ச்சியாக வழங்க முடியும்.

அரசும் தனியார் துறையும் இணைந்து மொத்த வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விரும்பும் உள்நாட்டு வியாபார நிறுவனங்கள் தமது முன்மொழிவுகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.

இதனைவிட, அத்தியாவசிய உணவுப் பொருள்களை தட்டுப்பாடின்றி நியாய விலையில் வழங்க தனியார் துறையினரின் சிறப்பு வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதற்கு விரும்புவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமது வர்த்தக நிலையங்களுடன் இணைத்து, அரச அனுசரணையின் கீழ் தனியார் துறையின் விசேட வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதற்கு விரும்பும் தனியார்துறை நிறுவனங்கள், மொத்த அல்லது சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு வர்த்தக நிறுவனங்கள் விண்ணப்பிக்க முடியும். இதில் தேர்வு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்படும் வர்த்தக நிலையங்களுக்கு அரசினால் வசதிகள் வழங்கப்படும். கடனடிப்படையில் பொருள்கள் விநியோகித்தல், விற்பனை மற்றும் கணக்கிடுதல் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப ஒத்துழைப்பு, கணினி வசதி, தன்னியக்க டெலர் இயந்திரம், அரசு வழங்கும் ஏனைய கவர்ச்சிகர சந்தை வசதி என்பன வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள், த.பெ.இல. 1529, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு - 01 என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-5)

## கூட்டாட்சியே

எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

வடக்கு - கிழக்கு மக்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. அங்குள்ள அரசியல்வாதிகளே அதனைத் தெரிவிக்கின்றனர் என்று மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேயநாயக்கா கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

இது குறித்து மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினரும், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவருமான சி.தவராசா தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் நடந்த மக்கள் கருத்தறியும் குழுவின் அமர்வுகளில் நான் முழுமையாகப் பங்கேற்றிருந்தேன். குழுவின் முன்னால் கருத்துத் தெரிவித்த தமிழ் மக்களில் பெரும்பாலானோர் கூட்டாட்சி முறைமையே தீர்வு என்று தெரிவித்தனர். எழுத்துமூலமான கருத்துக்களிலும், வாய்மூல கருத்துகளிலும் அவர்கள் இதனைத் தெளிவாக வலியுறுத்தினர் - என்றார்.

"வடக்கு - கிழக்கில் மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களிலும் கூட்டாட்சி முறைமையில் அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்று பலரும் வலியுறுத்தியிருந்தனர். வடக்கு - கிழக்கு இணைப்புக்கு வடக்கில் பெருமளவில் ஆதரவான கருத்துக்கள் பகிரப்பட்டன. கிழக்கில் முஸ்லிம்களும் - சிங்களவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதேவேளை, கிழக்குத் தமிழர்கள் இதற்கு ஆதரவான நிலைப்பாட்டை அழுத்திப் பதிவு செய்யவில்லை - என்றார் மக்கள் கருத்தறியும் குழு வின் மற்றொரு உறுப்பினரும், சட்டத்தரணியுமான செல்வக்குமாரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடந்த கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். (உ-வ,5)

## யாழ். பல்கலையை

மன்ற உறுப்பினர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். எனினும் இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் எந்த இறுதி முடிவும் எடுக்கப்பட்டது குறித்து அறிவிக்கப்படவில்லை.

முன்னதாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சிங்கள தமிழ் மாணவர்கள் இடையே நேற்று நிகழ்ந்த அடிதடியில் 15பேர் காயங்களுக்கு உள்ளாகினர். விஞ்ஞானபீடத்தில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. இதையடுத்து பீடம் இழுத்து மூடப்பட்டது. மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்தது. பொலிஸாரின் உதவியுடன் சிங்கள மாணவர்கள் விடுதியைவிட்டு இரவிரவாக வெளியேறினர்.

புகுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வின் ஆரம்பத்தில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சி தொடர்பில் எழுந்த கருத்து மோதல் பின்பு அடிதடி சண்டையாக மாறியது. கைகளாலும் தடிகள் பொல்லுகளாலும் இரு தரப்பினரும் அடிபட்டுக்கொண்டனர். கட்டடத்தின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

சம்பவ இடத்திற்குப் பொலிஸார் உடனடியாக விரைந்தனர். காயமடைந்த மாணவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதுடன் பல்கலைக்கழகச் சூழலில் பாதுகாப்பையும் பலப்படுத்தினர். சில நிமிட நேரங்கள் மட்டுமே நீடித்த இந்த அடிதடியால் விஞ்ஞான பீட முன்புறம் போர்க் களம் போன்று காணப்பட்டது. கற்கள், தடிகள், பொல்லுகள், சைக்கிள்கள் என்பன சிதறிக்கிடந்தன.

“விஞ்ஞான பீடத்துக்கு வழமைபோன்று இந்தமுறையும் முதலாம் வருடத்துக்குப் புது முக மாணவர்களை சம்பிரதாயபூர்வமாக வரவேற்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதற்கான ஏற்பாட்டுக்குழுவும் அமைக்கப்பட்டே நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால் திடீரென நேற்று(நேற்றுமுன்தினம்) சிங்கள மாணவர்கள் வந்து வரவேற்பில் கண்டிய நடனத்தையும் இடம்பெற வைக்க அனுமதி கேட்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் நிறைவுசெய்துவிட்டதனால், அதற்குள் புதிதாக கண்டிய நடனத்தைச் சேர்க்கமுடியவில்லை என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் திட்டமிட்டபடி நேற்று முற்பகல் நிகழ்வு ஆரம்பித்தது. தவில் நாதஸ்வர இசையோடு வழமை போன்று பீடாதிபதி முன்செல்ல ஏனையவர்கள் தொடர்ந்து சென்றனர். நிகழ்வு மண்டபத்தை நெருங்கும்போது, சிங்கள மாணவர்கள் திடீரென வந்து தாம் கண்டிய நடனத்தை நிகழ்த்தவுள்ளதாகத் தெரிவித்தனர். ஏற்பாட்டின்படி அதற்கு முன்னரே அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு அனுமதி வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

மேல்மாடியில் நிகழ்வு இடம்பெறுவதால் கீழ்மாடியில் தாம் கண்டிய நடனத்தை ஆடவுள்ளதாகத் தெரிவித்தனர். அதன்போதே இருதரப்பினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அந்த முரண்பாடு தீர்க்கப்பட்டு சுமுகநிலை ஏற்பட்டது. பின்னர் ஏனைய பீடங்களிலிருந்து மாணவர்கள் சிலர் வந்ததனால் மீண்டும் பிரச்சினை ஆரம்பித்தது. அதன்பின்னரே இருதரப்பினருக்கும் இடையே முரண்பாடு கைகலப்பாக மாறி தாக்குதலில் ஈடுபட்டனர்” என்று விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலால் பல்கலைக்கழக கட்டடம் ஒன்றின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. மாணவர்களும் சிதறுண்டு ஓடி இரண்டு தரப்பாகப் பிரிந்து நின்று தாக்குதல் நடத்தினர். தாக்குதல்களால் பலர் காயமடைந்தனர்.

அதனையடுத்துக் கலகம் அடக்கும் பொலிஸார் விஞ்ஞான பீட வாசலில் குவிக்கப்பட்டனர். முதன்மை வாயில்வரை பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். பொலிஸார் சிலர் பல்கலைக்கழகத்தின் உள்ளே சென்று முரண்பட்டவர்களை விலக்கிவிட்டனர். பொலிஸார் உள்ளே செல்வதனைக் கண்ட தமிழ் மாணவர்கள் கையில் வைத்திருந்த விக்கெட் உள்ளிட்ட ஆயுதங்களை வீசிவிட்டுச் சென்றனர். ஆனால் சிங்கள மாணவர்கள் பொலிஸாருக்கு முன்னாலும் விக்கட், கம்பிகளுடன் காணப்பட்டனர். காயமடைந்தவர்கள் பொலிஸ் வாகனத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அதன்பின்னர் பல்கலைக்கழக துணைவேந்தர் குறித்த பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார். பீடத்தை மூடுமாறும் அந்தப் பீடத்தின் சகல வருடங்களையும் சேர்ந்தவர்களை விடுதிகளிலிருந்து வெளியேறுமாறும் அவர் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணை மேற்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,101)

## யு.என்.டி.பி

பப்பட்டது.

அத்துடன், இந்த வேலைத் திட்டங்களுக்கான ஆலோசகரை நியமிக்குமாறு ஒருவரது பெயரை முதலமைச்சர் பரிந்துரைத்தார். எனினும் ஆலோசகரை முதலமைச்சர் பரிந்துரைக்க முடியாது என யு.என்.டி.பி. தெரிவித்தது. இதனால் அந்த நிதி ஒதுக்கீட்டுக்கான வேலைத்திட்டங்கள் சர்ச்சையில் அகப்பட்டுக் கிடப்பில் போடப்பட்டன.

இந்த நிலையில் அந்த நிதியை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயலகத்துக்கான பணிகளுக்கு வழங்குமாறு, அதன் தலைவர் சந்திரிகா குமாரதுங்க கேட்டிருந்தார். தற்போது அந்த நிதியிலிருந்து 750 மில்லியன் டொலர் நிதி நல்லிணக்க செயலகத்துக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## பதவி வெற்றிடங்கள்

சர்வதேச ரீதியில் இயங்கி வரும் எமது பல்தேசிய கம்பனியானது (DMI) தனது கிளைகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கவுள்ளோம்.

O/L or A/L படித்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

அனுபவம் அவசியமற்றது.

வயதெல்லை 18-31

மேற்பார்வையாளர், முகாமைத்துவ உதவியாளர், விற்பனைப் பிரதிநிதிகள்.

தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 077 230 2795, 077 556 6224, 0777 009 820

## துயர் பகிர்கின்றோம்



வண்ணார்பண்ணை
காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப் பிள்ளையார்
தேவஸ்தான அறங்காவலரும்
உரிமையாளரும் ஆகிய

### லயன் சரவணமுத்து ஸ்ரீநிவாசன்

(ஓய்வுநிலை
முகாமையாளர்-இலங்கை வங்கி,
பான் ஏசியா வங்கி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

காட்டுத்துறை பிள்ளையார் கோயில்
ஆதன குடியிருப்பாளர்கள்
S.K. கணேசவேல், S. சுரேஸ்குமார்,
திருமதி S. இரஞ்சிதமலர், திருமதி B. இந்திராதேவி

## மரண அறிவித்தல்

### திருமதி தேவி குகதாசன்



முதலியார்வளவு, இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவி குகதாசன் நேற்று (16.07.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகலிங்கம்-சோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகம்-சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற குகதாசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் மனோகரன் (உடுப்பிட்டி), காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் கௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மீராதேவி (ஆசிரியை, யா/புனித தெரேஸா மகளிர் கல்லூரி அச்சுவேலி), சிறிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் இராமலிங்கம், திருமதி இரதி திருப்பரங்கிரிநாதன் மற்றும் காலஞ்சென்றவர்களான நெல்லைலிங்கம், அபயலிங்கம் ஆகியோரின் சகோதரியும் காசன்(கனடா), கபீஸ் (கனடா), லாருஜன், கனிஸ்கா, ஹேமிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலியார் வளவு,
இமையாணன், உடுப்பிட்டி.

தகவல்:
குகதாசன் மனோகரன் 077 7879737
கௌரி சிறிதரன் 0019055545262

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி சாம்பசிவம்



யாழ். வேலணையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் கண்டியில் வசித்து வந்தவருமாகிய திருமதி தவமணி சாம்பசிவம் கடந்த (14.07.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சாம்பசிவத்தின் அன்பு மனைவியும், சந்திரகுமாரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கண்டி), பூாஸ்கரன் (லண்டன்), வசந்தகுமாரி (முன்னாள் ஆசிரியை-பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், கருணாகரன் மற்றும் விஜயகுமாரி (சுவிஸ்), சாந்தகுமாரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,காலஞ்சென்ற சோமசேகரம், சேனாதிராசா (இத்தாலி), கிருஸ்ணபிள்ளை (இலங்கை), குலசிங்கம் (இலங்கை), கமலாதேவி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேந்திரன் (லண்டன்), இந்திரதேவி (லண்டன்), மனோகரன் (பிரான்ஸ்), தனலட்சுமி (இத்தாலி), வசீகா (ஜேர்மனி), கோவிந்தராஜன் (சுவிஸ்), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், விஜிதரன், சயந்தன், காயத்திரி, துர்க்கா, அஜந்தன், சுகிந்தன், கிசாந்தன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், துசித்தா, ரம்மியா, திவ்வியா, ராகுலன், தட்சாயினி, அபிராமி, ரமணா, அபிநயா, அனோஷ், பகலவன் பொய்கை, ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், வைஷ்ணவி, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் .இறுதிக்கிரியை அன்னாரது வட்டக்கச்சி இல்லத்தில் நாளை (18.07.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 22, கட்சன் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

# மாகாணமட்டத் தடகளத் தொடரில் நேற்றுமட்டும் பத்துச் சாதனைகள்

யாழ்ப்பாணம், ஜுலை 17

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்றுமட்டும் பத்துச் சாதனைகள் படைக்கப்பட்டன.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தின் சார்பாகக் களமிறங்கிய என்.கிஜஸ்ரன் 2 நிமிடங்கள், 7 செக்கன்கள், 6 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனை படைத்தார், சென். ஜோன்ஸ் வீரர் ஏ.அனோயன் கடந்த 2011 ஆம் ஆண்டு 2 நிமிடங்கள், 9 செக்கன்களில் இலக்கை அடைந்தமையே இதுவரை சாதனையாக இருந்தது.

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டலில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தின் சார்பாக களமிறங்கிய ஏ.அபிக்சன் 58 செக்கன்கள், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனையை நிலைநாட்டினார். கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையை 2014 ஆம் ஆண்டில் பிரதிநித்துவம் செய்த ஜெ.தனுஜன் ஒரு நிமிடம் 3 மில்லி செக்கன்களில் அடைந்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு உயரம் பாய்தலில் ராமநாதபுரம் அ.த.க. பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பி.பவித்திரா கடந்த வருடம் 1.51 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து படைத்திருந்த தனது சாதனையை இம்முறை 1.52 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தானே முறியடித்தார்.

17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான முப்பாய்ச்சலில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.வை. ஜெனிதா 11.20 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் படைத்தார். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வி.ஜெகமகிழினி 2011ஆம் ஆண்டு 10.47 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்ததே சாதனையாக இருந்தது.

19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஆரணி 5.34 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து புதிய சாதனை படைத்தார். முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரியைக் கடந்த 2014ஆம் ஆண்டு பிரதிநிதித்துவம் செய்த ஜெ.நிதர்சனா 5.21 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் தட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பி.பிரியங்கா 2 நிமிடங்கள் 30 செக்கன்கள், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனை படைத்தார். பூவரசன்குளம் மகா வித்தியாலயத்தைக் கடந்த வருடம் பிரதிநிதித்துவம் செய்த கே.நேர்மதி 2 நிமிடங்கள் 36 செக்கன்கள், 3 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் எம்.நிலோயன் 23 செக்கன்கள் 4 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனையைத் தனது பெயரில் எழுதினார். யாழ். மத்திய கல்லூரியின் ஜெ.அபிமன் (2015ஆம் ஆண்டு), மன்னார் மத்திய மகா வித்தியாலயத்தின் எஸ்.அமலதாஸ் (2014 ஆம் ஆண்டு இருவரும் 23 செக்கன்கள், 5 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தமையே இதுவரை சாதனையாகக் கருதப்பட்டது.

21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தின் சார்பாகக் களமிறங்கிய எஸ்.வி.மார்க் 13.96 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து சாதனை படைத்தார். 2008 ஆம் ஆண்டு குறித்த வித்தியாலயத்தின் எஸ்.ரெயினோல்ட் சூசை 13.65 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்ததே சாதனையாக இருந்தது.

21வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய எம்.சார்ளி அன்ரனி, கடந்த வருடம் பி.லவணன் (அருணோதயக் கல்லூரி) என்பவரால் படைக்கப்பட்ட 3.80 என்ற பெறுபேற்றைத் தகர்த்து 3.90 உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு நீளம் பாய்தலில் மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அனித்தா 3.2 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் படைத்தார். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைக் கடந்த வருடம் பிரதிநிதித்துவம் செய்த எம்.கமலினி 2.96 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்ததே இதுவரை சாதனையாக இருந்தது. (ம-23)

## தடகளத்தில் இன்று

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்டப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகின. நான்காம் நாளாகிய இன்று 15 வயது ஆண்கள் பிரிவில் ஈட்டி எறிதல், 100 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆகியனவும் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி, நீளம் பாய்தல், 400 மீற்றர் ஓட்டம், குண்டு எறிதல் 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

17வயது ஆண்கள் பிரிவில் 1500 மீற்றர் ஓட்டம், 110 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும் பெண்கள் பிரிவில் 1500 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் சட்டவேலி, ஈட்டி எறிதல், 400 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

19 வயது ஆண்கள் பிரிவில் முப்பாய்ச்சல், 1500 மீற்றர் ஓட்டம், 110 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் பெண்கள் பிரிவில் 1500 மீற்றர், 100 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், தட்டெறிதல், கோலூன்றிப் பாய்தல், 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

21 வயது ஆண்கள் பிரிவில் குண்டு எறிதல், 1500 மீற்றர் ஓட்டம், 110 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும், பெண்கள் பிரிவில் உயரம் பாய்தல் 1500 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் சட்டவேலி, 400 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் நடைபெறவுள்ளன. (ம-422)

## வழித்துத் துடைத்தது ஹாட்லி

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று பதக்கங்களையும் ஹாட்லி கைப்பற்றியது.

ரி.அபிசாந்த் 44.77 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கத்தைக் கைப்பற்றினார். பி.ஆனந்த் 44.4 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், எம்.அபிராம் 40.13 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)



மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு நீளம் பாய்தலின் போது...




## வர்ணச் சான்றிதழுடன் தங்கம் வென்றது கிளிநொச்சி மத்தி.

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் வர்ணச் சான்றிதழுடன் தங்கம் வென்றது கிளிநொச்சி மத்திய கல்லூரி.

கிளிநொச்சி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.டென்சிகா 2 நிமிடங்கள், 34 செக்கன்கள், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.மேரி ஜான்சி 2 நிமிடங்கள், 36 செக்கன்கள், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், தட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த என்.நிவேதியா 2 நிமிடங்கள், 39 செக்கன்கள், 6 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## நெல்லியடி மத்திய கல்லூரிக்கு ஈட்டி எறிதலில் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி தங்கம் வென்றது.

நெல்லியடி மத்திய கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய வி.மதுரன் 49.27 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கம் வென்றார். நவாலி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.வினுசன் 44.89 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் சென். லோறன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் சார்பாகக் களமிறங்கிய ஜெ.நிவேதன் 44.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-23)



# மகாஜனக் கல்லூரி தங்கத்தை வென்றது

மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரி தங்கத்தைத் தனதாக்கியது.

மகாஜனக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய சி.ஹெரினா 2.5 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச்சான்றிதழுடன் தங்கத்தை தனதாக்கினார். பளை மத்திய கல்லூரியின் ரி.திவ்யா 2.5 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், அருணோதயக் கல்லூரியின் ஆர்.ஜெனிசா 2.4 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலத்தையும் கைப்பற்றினர். (ம)

## மாகாணமட்ட தடகளத்தில் நேற்றுவரை

# மன்னார் முதலிடத்தில் யாழுக்கு பின்னடைவு

யாழ்ப்பாணம், ஜூலை 17

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் மன்னார் கல்வி வலயம் முதலிடத்தில் உள்ளது.

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டத் தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில்கடந்தவியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இரண்டாம் நாளின் முடிவில் யாழ். கல்வி வலயம் ஆதிக்கம் செலுத்திய போதிலும் மூன்றாம் நாளான நேற்று மன்னாரின் பக்கமே காற்றடித்தது. நாள் முடிவில் 369 புள்ளிகளைப் பெற்று மன்னார் கல்வி வலயம் முதலிடத்தைக் கைப்பற்றியது. மன்னார் கல்வி வலயத்துக்கும், யாழ். கல்வி வலயத்துக்கும் இடையே 19 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. இதன்படி யாழ். கல்வி வலயம் 350 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 261 புள்ளிகளுடன் வலிகாமம் கல்வி வலயம் மூன்றாமிடத்திலும், 245 புள்ளிகளுடன் வடமராட்சி நான்காமிடத்திலும், 182 புள்ளிகளுடன் கிளிநொச்சி ஐந்தாமிடத்திலும் உள்ளன. ஆறு முதல் 12வரையான இடங்களில் முறையே முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, மடு,தென்மராட்சி,வவுனியாவடக்கு, தீவகம் ஆகியன உள்ளன. தொடரின் நான்காம் நாள் இன்றாகும். (ம)



# நானூறு மீற்றர் ஓட்டம்; சென். ஜோன்ஸ் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டத் தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு 400 மீற்றர் ஓட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி தங்கம் வென்றது.

சென். ஜோன்ஸின் வீரரான எம்.நிலோயன் 51 செக்கன்கள் 8 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கம் வென்றார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் எஸ்.சாகித்தியன் 52 செக்கன்களில் இலக்கை அடைந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கம் வென்றார். மன்னார் பரிகாரி கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் சி.நிதர்சன் 54 செக்கன்கள் 2 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலம் வென்றார். (ம-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 19 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலின் போது ...

# உயரம் பாய்தலில் தங்கத்தை முருங்கன் ம.வித்தி வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முருங்கன் மகா வித்தியாலயம் தங்கத்தை தனதாக்கியது.

குறித்த பாடசாலையின் சார்பாக களமிறங்கிய ஐ.தனுஜன் 1.36 உயரத்துக்குப் பாய்ந்து தங்கத்தை வென்றார். பளை மத்திய கல்லூரியின் ஜி.மிதுர்சன், பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தின் சரண்யன்தாஸ் இருவரும் 1.33 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினர். (ம)

# கோண்டாவில் இந்து தங்கத்தை வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தலில் கோண்டாவில் இந்துக் கல்லூரி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

குறித்த கல்லூரியின் சார்பாக களமிறங்கிய கே.டிலுக்சன் தங்கப்பதக்கத்தையும், கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் சார்பாக களமிறங்கிய ஏ.அஜித் வெள்ளிப் பதக்கத்தையும், மடு பெரியகுங்சுக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் சார்பாக களமிறங்கிய எஸ்.அஜந்தன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# நானாட்டான் ம.வி. தங்கம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 17

பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்துக்கு தங்கம் கிடைத்தது.

நானாட்டான் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய பி.தீபா 2 நிமிடங்கள், 53 செக்கன்கள், 38 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். பாரதி வித்தியாலயத்தின் வீராங்க்னைகளான பி.மகிழ்நிலா 3 நிமிடங்கள், 3 செக்கன்கள், 68 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், என்.யாழிசை 3 நிமிடங்கள், 10 செக்கன்கள், ஒரு மில்லி செக்கனில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# தட்சணாமருதமடு அ.த.க. பாடசாலைக்கு சாதனையுடன் தங்கப்பதக்கம் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் தட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சாதனையுடன் தங்கத்தைப் பெற்றுக்கொடுத்தார் பி.பிரியங்கா.




வவுனியா பூவரசன்குளம் மகா வித்தியாலயத்தின் வீராங்கனையான கே.நேர்மதி கடந்த வருடம் 2 நிமிடங்கள் 36 செக்கன்கள் 3 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து படைத்திருந்த சாதனையை நடப்பு வருடத்தில் 2 நிமிடங்கள், 30 செக்கன்கள் 9 மில்லி செக்கன்களில் தகர்த்து புதிய சாதனையை படைத்தார் பி.பிரியங்கா. கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த விதுசா 2 நிமிடங்கள் 38 செக்கன்கள் 2 மில்லி செக்கன்களில் அடைந்து வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். கற்கிடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மதுரா 2 நிமிடங்கள், 41 செக்கன்கள், 6 மில்லி செக்கன்களில் அடைந்து வெண்கலத்தைக் கைப்பற்றினார். (ம-23)

# முப்பாய்ச்சலில் தங்கம் வென்றது முருங்கன் ம.வி.

யாழ்ப்பாணம், ஜூலை 17

மாகாணமட்ட தடகளத்தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு முப்பாய்ச்சலில் முருங்கன் மகா வித்தியாலயம் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

குறித்த வித்தியாலயத்தின் சார்பாக களமிறங்கிய ஏ.வி.ஜஸ்மிதா 10.3 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். பளை மத்திய கல்லூரியின் ஜே.சுகிர்தா 10.18 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், நானாட்டான் மகா வித்தியாலயத்தின் வை.கயந்தினி 9.05 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

# சங்கா, மகேல ஓய்வின் பின்பும் இலங்கை பலமாக உள்ளதாம்

சங்கா, மகேல இருவரும் ஓய்வுபெற்றுவிட்ட போதிலும் இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வதென்பது சவாலான விடயம் எனத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித்.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 ரி–20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் எதிர் வரும் 26 ஆம் திகதி பல்லேகலயில் ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அணியின் ஜாம்பவான்களான சங்கா, மகேல இருவரதும் ஓய்வு நிச்சயம் இலங்கைக்கு பின்னடைவு. இதில் எள்ளிடத்திலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் சொந்த மண்ணில் இலங்கை பெரியளவிலான தடுமாற்றத்தை வெளிப்படுத்தாது. எமக்கு எதிரான தொடரில் சொந்தமண் பலம், அதிகப்படியான ரசிகர்கள் என்ற இரு விடயங்களும் இலங்கைக்குச் சாதகமாகவே இருக்கும். எனவே இலங்கையை வீழ்த்த நாம் கடினமான ஓர் முயற்சியை மேற்கொள்வது அவசியம் என சிமித் மேலும் தெரிவித்தார்.

சொந்த மண் இலங்கைக்கு சாதகமாக அமையும் என்று சிமித் தெரிவித்த போதிலும் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்ட ஆலோசகராக சமரவீரவும், பந்துவீச்சுப் பயிற்சியாளராக முரளியும் நியமிக்கப்பட்டுள்ளமையானது இலங்கையின் நுணுக்கங்களுக்கும் திட்டங்களுக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகிறது. (ம)



நடப்பு வருட சீசனுக்கான ரியல் மட்ரிட் அணியின் பயிற்சி முகாம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. கடந்த சீசனில் அத்லெட்டியோ மட்ரிட்டை வீழ்த்தி ரியல் மட்ரிட் சம்பியனாகியிருந்தது. (ம)

# வோர்னால் முடியாததை செய்துகாட்டினார் யாசீர்

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஐந்து இலக்குகளை வீழ்த்தினார் பாகிஸ்தானின் சுழல் வீரான யாசீர்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் குறித்த மைதானத்தில் நடைபெற்று வருகிறது.



முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்து 339 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 272 ஓட்டங்களுக்குச் சுருண்டது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பாக அதிகபட்சமாக யாசீர் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

கிரிக்கெட் உலகில் தோன்றிய ஆகச் சிறந்த சுழல் வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் வோர்ண் நான்கு தடவைகள் லோட்ஸ் மைதானத்துக்கு வந்தபோதிலும் ஒருமுறையேனும் ஐந்து இலக்கைக் கைப்பற்றவில்லை. ஆனால் யாசீர் 6 இலக்குகளை கைப்பற்றியமையை பலரும் பாராட்டி வருகின்றனர். (ம)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

BBA-xxxx தொடர் இலக்கமுடைய பஜாஜ் Discover 125 CC பச்சை சில்வர் கலர். 12000km ஓடிய நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 9216707

**உடனடி வேலை வாய்ப்பு**

- விளம்பரத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் அனுபவமும் உள்ள ஆண்,பெண் இருபாலருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.
- 6 மாத காலத்திற்குள் உங்கள் திறமையை பொறுத்து குறைந்தது 2 லட்சம் ரூபாயை பெறக்கூடிய வாய்ப்பு.
- தகுதி - O/L

V2 Travels and Tours (Pvt) Ltd.

5 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி வரும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டு நன்மை பெறுங்கள்.

0768226243 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

**JCB வாகனம் விற்பனைக்கு**

பதிவு : 2002

இடம்: மன்னார்

விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

077 910 9323

**க.பொ.த. (உயர்தரம்) 2016 தமிழ் மாபெரும் கருத்தரங்கு**

விரிவுரை - A.K. கீர்த்திராஜன்
B.A (Hons), M.A (Hons) in Tamil
19/07/2016 - செவ்வாய் - காலை 08.00 மணி
NEC - ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

* இன்றுமுதல் பதிவுகளை மேற்கொள்ளவும்
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
* இறுதிப் பரீட்சைக்கு எதிர்பார்க்கும் வினாக்கள் மாத்திரம்

**சிறுநீரகம் தேவை**

34 வயது சிறுநீரக நோயாளிக்கு O+ இரத்த வகை உடைய சிறுநீரகம் தேவை. 45 வயதுக்கு உட்பட்ட ஆண் / பெண் ஆகியோரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

076 968 8250

**ரூ.50,000/= இற்கு மேல் மாத வருமானம் பெற**

ஐஸ்கிறீம் மெசின்



ரெயின்போ ஜெலி ஐஸ்கிறீம்

ஓரே இயந்திரத்தில் 3 வகையான சுவைகள்

விற்பனைக்கு உகந்த இடங்கள்
- கூல்பார்,ஸ்நெக் பார்
- ஹோட்டல்,ஸ்கூல் கென்டீன்
- பேக்கரி,பார்மசி
- குரோசரி,சுப்பர்மார்க்கட்

தமிழில் தொடர்புகொள்ள - 0773918870

WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

max adz

**KU Education IELTS @ British College,Nallur**

IELTS } Life A1-B1,Academic & General

அடிப்படை ஆங்கிலத்திலிருந்து IELTS வரை தனிப்பட்ட முறையிலும் கற்கக் கூடிய ஒரே ஒரு பிரித்தானிய ஆங்கிலக் கல்லூரி தற்போது நல்லூரில்.

British College of Business and Languages

நல்லூர்.(முத்திரைச்சந்தியடி) Call :0777-302882

021-3208342 /0777302882 | www.kugroup.info

Spoken English -இலக்கண வேதனையின்றி கற்கலாம்

**IELTS**

100% சித்தி உத்தரவாதத்துடன்

திருமணமாகி U.K செல்வோர்

A1, B1, Life Skills

For Student Visa Candidates

Academic / General

SPOKEN ENGLISH

0777 066000 / 44, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் அவர்களின் ஏற்பாட்டில்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள்**

எதிர்வரும் ஆவணி மாதம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கில் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான கௌரவ ஈ.சரவணபவன் அவர்களது ஏற்பாட்டில் சரவணபவன் அறக்கட்டளையும், புலமைச்சுடரும் இணைந்து நடாத்தும் விசேட இலவசக் கருத்தரங்குகள் பின்வரும் இடங்களில் இடம்பெறவுள்ளன.

| | | |
|---|---|---|
| 17.07.2016 (ஞாயிறு) | ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி | (மு.பகல் 8.30– பி.ப 3.30) |
| | பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை | (மு.பகல் 8.30– பி.ப 3.30) |
| 18.07.2016 (திங்கள்) | காரைநகர் யாழ்ரன் கல்லூரி | (பி.பகல் 2.30– பி.ப 5.30) |
| 19.07.2016 (செவ்வாய்) | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி | (மு.பகல் 8.30– பி.ப 3.30) |
| | சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி | (மு.பகல் 8.30– பி.ப 3.30) |

**இக் கருத்தரங்கில்**

- இலங்கையின் மூத்த முன்னணி ஆசிரியர் கொழும்பு **திரு. பி. அம்பிகைபாகன்** (புலமை ஆசான்)
- யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர் **திரு.வே.அன்பழகன்** (யாழ். கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை)
- வவுனியா, யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் **திரு. என்.எஸ். தீபன்** (யா. மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)
- புலமைச்சுடர் கையேட்டின் வளவாளரும், பொறுப்பாசிரியருமான **திரு. து. திலீப்குமார்** (கொழும்பு / விவேகானந்தாக் கல்லூரி)

ஆகியோர் வளவாளராகப் பங்குபற்றி வழிகாட்டல்களை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்களின் பெற்றோர்கள் அத்தியடி பிள்ளையார் கோவிலடி, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனது அலுவலகத்துக்குச் சென்று பதிவினை மேற்கொள்ளவும் இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- மேலதிக தொடர்புகளுக்கு 021 2051395 அல்லது 021 4927422 அல்லது 0716361361.

குறிப்பு:- அனைத்து மாணவர்களும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது ஆசிரியர்களுடன் வருகை தரவும்.

சரவணபவன் அறக்கட்டளையும் புலமைச்சுடர் ஆசிரியர் குழுவும் — கருத்தரங்கு ஏற்பாட்டுக்குழு

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.